ஜேம்ஸ் மாட்டி சேஸ்

MISSION TO SEINNA

பூவின் வாசம் புரியும்



கண்ணதாசன் பதிப்பகம்



பூவின் வாசம் புரியும்

Mission To Sienna

ஜேம்ஸ் ஹாட்லி சேஸ்

தமிழில்:

சுதாங்கன்

மின்னூல் ஆக்கம் - தமிழ்நேசன்
www.tamilebooks.net
www.tamilnesan1981.blogspot.in

கண்ணதாசன் பதிப்பகம்

23, கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
போன் : 2433 2682

கிளைகள்: கோவை ❖ பாண்டி ❖ மதுரை ❖ வேலூர்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஜேம்ஸ் ஹாட்லி சேஸ்

சியன்னாவுக்கு அதிரடிப் பயணம்

–ஆபத்தான ஆமையைத் தேடி

இரக்கமற்ற கொலையாளி அவன்; தடயங்கள் இல்லாமல் தவறு செய்வான்; மர்மமான அந்த மனிதன் தன்னை ஆமை என்று அழைத்துக்கொண்டான். ஐரோப்பிய நாடுகளின் காவல் துறைக்கும் இங்கிலாந்தின் ஸ்காட்லாந்து யார்டு என்ற போலீசாருக்கும் அவன் ஒரு சவாலாக இருந்தான். வலையில் சிக்காத அந்த ஆமையைக் குறிவைத்தார் டான் மிக்லெம் என்ற அமெரிக்கக் கோடீஸ்வரர். ஆமையைத் தேடி அதன் இருப்பிடமான சியென்னாவுக்குச் சென்றபோது அவருடைய கிடுக்கிப் பிடியில் ஆமை சிக்கியதா?

ஜேம்ஸ் ஹாட்லி சேஸ்

இந்தத் தலைமுறையின் இணையிலாத் திகில் எழுத்தாளர் என்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர். சிக்கலான, வசீகரமான கதையமைப்பும் தோட்டாக்கள் பறக்கும் துப்பாக்கி யுத்தங்களும் நிறைந்த அவரது படைப்புகளுக்கு நிகராக, இன்னொருவர் இனிமேல்தான் எழுத வேண்டும்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

திகில் எழுத்தாளர்களின் தலைவன்-கேப் டைம்ஸ் வஞ்சகக் கலையின் வல்லவன் - நியூ ஸ்டேட்ஸ்மென் இவரைப் போல் போலிகள் பலர் உண்டு; ஆனால் இவர்தான் பேரரசர் - திசன் (சிட்னி)

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அத்தியாயம் ஒன்று

கொலைக்கு முன்னோட்டம்

கடை வாசலில் நின்றபடியே அந்தச் சதுக்கத்தின் கிழக்குப் பகுதியைப் பார்த்துக் கொண்டிருந்தார் போலீஸ் காரர் எல்லியட்.

அந்த நவம்பர் மாத இரவில் மழை ஓயாமல் பெய்து கொண்டிருந்தது. மணி பதினொன்றைக் கடந்திருந்தது. அந்த மழை நேரத்தில் அங்கே ஆள் நடமாட்டமே இல்லை.

கடந்த மூன்று மணி நேரமாக விடா மழை. சாக்கடை களில் நீரின் சத்தமான ஓட்டம். தெரு விளக்குகளிலிருந்து சொட்டுச் சொட்டாகத் தண்ணீர். தண்ணீரில் விளக்கு களின் ஒளிபட்டு நடைபாதையில் மஞ்சள் சிதறல்கள். ஈரத்தின் உக்கிரத்தை குளிர்காற்று அதிகப்படுத்தியது. எல்லியட்டுக்கு வீட்டு ஞாபகம் வந்தது. தன் அறையின் வசதியையும் நெருப்பின் கதகதப்பையும் நினைத்துப் பார்த்தார். மனைவியைப் பற்றிய யோசனையும் உண் டானது. மனைவியும் தன்னைப்பற்றி யோசிப்பாள் என்பது அவர் நம்பிக்கை.

மேகத்தில் விரிசலை எதிர்பார்த்து, மேலே கரிய வானத்தைப் பார்த்தார்.

''பாஸ்லென் ஹோட்டலுக்கு எப்படிப் போகணும்?'' குரல் அவருடைய கவனத்தைக் கலைத்தது; அது பெண் குரல்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

எல்லியட் பார்வையைத் திருப்பி அந்தப் பெண்ணைப் பார்த்தார். அவருக்கு எதிரே இருந்தாள் அவள். தெரு விளக்கின் வெளிச்சத்தை மறைத்துக் கொண்டிருந்த அவளைச் சரியாகப் பார்க்க முடியவில்லை. வெள்ளை மழைக் கோட்டும் அழுத்தமாகப் பதிந்த தொப்பியும் அணிந்திருந்தாள். அவளுடைய வலது கையில் தோலால் செய்யப்பட்ட ஹோல்டாலும், ஒரு கான்வாஸ் பையும் இருந்தன.

ஸ்பானிஷா, இத்தாலியா என்றறிய முடியாத ஒரு உச்சரிப்பு. எல்லியட்டுக்கு அதை அறிந்துகொள்ளும் மொழியறிவு இல்லை.

"பால்ஸென் ஹோட்டலுக்குப் போகவேணுமா?"

"ஆமாம்."

"வலது பக்கமாக நூறு கஜம் போனால் பால்ஸென் ஹோட்டல்".

கடைவாசலை விட்டு விலகி வந்து அவர் வழிகாட்டினார். அவர் காட்டிய வழியில் அந்தப் பெண் திரும்பி நின்றாள். இப்போது விளக்கு வெளிச்சம் அவள் முகத்தில் விழுந்தது.

அவளுக்கு இருபத்தைந்து அல்லது இருபத்தாறு வயது இருக்கலாம் என்று முடிவு செய்தார் எல்லியட். தொப்பிக்கு வெளியே பரவியிருந்த கூந்தல் செம்பொன் நிறத்தில் இருந்தது. மங்கலான அந்த வெளிச்சத்தில் கண்கள் நிறம் மரகதப் பச்சையாகத் தெரிந்தது. இரவும் இளம்பெண்ணின் தோற்றமும் சேர்ந்து அவருக்குச் சூடேற்றியது. இத்தனை வருடங்களாக இது இல்லாத அனுபவம்.

"நன்றி" சொல்லிவிட்டு அவள் நகர்ந்தாள்.

"ஒரு நிமிடம், மிஸ்" என்றார் எல்லியட். "நீங்கள் லண்டனுக்குப் புதியவரென்றால் பால்ஸென் ஓட்டலைப் பத்தி உங்களுக்கு நான் சொல்லணும்" என்றார் அவர்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவள் சதுக்கத்தின் மறுபக்கத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவர் சொன்னதைக் கவனித்தாளா என்று தெரியவில்லை.

''அந்த இடம் சரியில்லை. உங்களைப் போன்ற இளம் பெண்கள் அங்கே தங்கக்கூடாது'' என்று தொடர்ந்தார் எல்லியட்.

அந்தப் பெண் அவரைப் பார்த்தாள்.

''நன்றி. நான் அங்கே தங்கப் போறதில்லை. குட் நைட்'' என்றாள் அவள்.

வேகமாக நடந்து அந்த மழைக்குள் சென்ற அவளை எல்லியட் கடுப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்.

பளிச்சிட்ட அவரது மேலாடைக்குள் ஒருமுறை அவருடைய தோள்கள் எழுந்து இறங்கின. 'நாம சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டோம்' அவர் நினைத்தார். அதற்குமேல் அவருடைய வேலை அல்ல. அவள் யார், எங்கிருந்து வந்திருக்கிறாள் என்று அவருக்குள் யோசனை ஓடியது. பால்ஸென் ஓட்டலுக்கு ஏன் போக வேண்டும். இந்த மாகாணத்தில் எந்தக் கேள்வியும் கேட்காமல் மணிக்கணக்கில் வாடகை வசூலிப்பார்கள். மற்ற ஓட்டல்களும் அப்படித்தான். ஆனால் பால்ஸென் ஓட்டல் இந்த மாதிரி விஷயங்களுக்குப் பேர் போனது.

அவர் தலையசைத்துக் கொண்டார். இந்த மாதிரிப் பெண் தவறு செய்வதில்லை. பதினைந்து வருடங்களாக இதே தொழில் அது தந்த அலுப்பினால் தனக்கு இந்த மாதிரியான எண்ணங்கள் ஏற்படுகின்றன என்று தன் யோசனைக்குத் தடை போட்டார். சாலையில் வழி கேட்கும் ஒவ்வொருவருக்காகவும் தான் கவலைப் பட ஆரம்பித்தால் அந்தப் பளுவைத் தாங்க முடியாது போய் விடும். இரவையும் ஈரத்தையும் துணையாக வைத்துக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கொண்டு நடந்த அவருடைய மனதிலிருந்து அந்தப் பெண்ணின் அழகு மறையவே இல்லை.

ஜாக் டேல் பால்ஸென் ஓட்டலில் இரவு நேர குமாஸ்தா. பருமனான தோற்றம் கொண்ட முதியவர் அந்த அழுக்கான வரவேற்பறையின் குறுக்கே நடந்து, சுழலும் கதவுகள் வழியாக வெளியேறி மழைக்குள் போவதை ஜான்டேல் பார்த்துக் கொண்டிருந்தார்.

மெலிந்து போயிருந்த தோள்களை அவர் குலுக்கிக் கொண்டார். ஒருவேளை அந்த முதியவர் ஏதாவது ரயில் வண்டியைப் பிடிக்கப் போகலாம். ஏன் தாமதம் என்று மனைவி கேட்கும்போது அவர் என்ன பதில் சொல்லுவார் என்று ஜான் டேல் யோசித்துப் பார்த்தார். பொதுவாகவே வயதானவர்களும், திருமணமானவர்களும்தான் பால்ஸென் ஓட்டலைத் தேடி வருகிறார்கள்.

படிக்கட்டிலிருந்து ஒரு பெண் இறங்கி வந்தாள். அவள் அணிந்திருந்த மோசமான கோட்டு அங்கங்கே நனைந் திருந்தது. சிறிய உதடுகளும் கடுமையான பார்வையும் உடைய அவளை அழகி என்று சொல்ல முடியாது.

ஜான் டேலின் மேசையில் மை ஊறிப்போன அட்டை ஒன்று இருந்தது. அந்தப் பெண் சாவியை அட்டை மீது வீசினாள். கூடவே கசங்கிப் போன பவுண்ட் நோட்டு ஒன்றும் விழுந்தது.

பவுண்ட் நோட்டை எடுத்து மேசை டிராயருக்குள் போட்டுக் கொண்டார் டேல். ''மீண்டும் வெளியே போறாயா?'' என்றார் அவர். ''மழை மோசமாய் அடிக்குது'' என்றார்.

''மழையில் போய்த்தான் ஆகணும். வாடகை வீட்டுப் பணமே இன்னமும் வசூலாகலை. இந்த மழை இப்படியே பெய்ஞ்சா நான் என்ன செய்யமுடியும்?'' என்றாள் அவள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

டேல் அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டார்.

''எதுவும் மாறாது'' என்று சொன்ன டேல் சாவியை அதற்கான இடத்தில் மாட்டினார். ''மழை இல்லேன்னா இன்னொரு காரணம்'' என்றார்.

''நீ ஏன் பேசமாட்டே'' என்று அந்தப் பெண் வெடித் தாள்.

''மழையில் மணிக்கணக்கா நிக்க வேண்டிய வேலை உனக்கில்லை'' என்றாள் அவள்.

''கிளம்பு. உன்னால எனக்குத் தொல்லைதான்'' என்றார் அவர்.

படிவழியாக இறங்கி மழைக்குள் அவள் போவதைப் பார்த்து அவர் தோள்களைக் குலுக்கிக் கொண்டார். பிறகு 'ஈவினிங் ஸ்டாண்டர்ட்' நாளிதழை எடுத்தார். கால்பந்து தொடர்பான செய்தியைப் படித்துக் கொண்டிருந்தபோது, வெள்ளை மழைக் கோட்டு அணிந்த பெண் உள்ளே வந்தாள்.

அவளை நிமிர்ந்து பார்த்தார். அடடா, என்ன அழகு. ஒளியிழந்த தன் பற்களைக் கொண்டு ஒரு புன்னகையை உருவாக்கினார்.

''திரு. கிராண்டர் இருக்காரா?'' என்று அந்தப் பெண் கேட்டாள். அந்தப் பச்சைக் கண்கள் அவரையே உற்றுப் பார்த்தது.

''ஆமாம் இருக்கார். முதல் மாடி. ரூம் நெம்பர் 26. உங்களை மேலே வரச் சொன்னார்.''

அவள் திரும்பி, அந்த அறையைக் கடந்து சுறுசுறுப்பாகப் படிக்களில் ஏறினாள்.

டேல் சத்தமில்லாமல் விசிலடித்துக் கொண்டார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இந்த மாதிரியான அழகிக்கு க்ராண்டரிடம் என்ன வேலை? போயும் போயும் க்ராண்டரிடமா? அவளிடம் ஒரு ஹோல்டால் இருந்ததே. ஒரு மணி நேரத்தில் அவள் இறங்கி வராவிட்டால் க்ராண்டருக்குப் போன் செய்ய வேண்டும்.

வெளிச்சம் குறைவாக இருந்த தாழ்வாரத்தில் நடந்து அந்தப் பெண் 26ஆம் எண் அறைக்கு வந்தாள். கதவுக்கு அருகே காத்திருந்த அவள், உறைபோட்ட கையால் கதவைத் தட்டினாள்.

கதவு திறந்தது. க்ராண்டர் வழியில் நின்றிருந்தார்.

"வந்துட்டியா?" என்று சொல்லிக்கொண்டே க்ராண்டர் அவளை முழுமையாகப் பார்த்தார். "உன்னைத்தான் எதிர்பார்த்துக்கிட்டிருந்தேன்" என்றார் அவர்.

அந்தப் படுக்கையறை பெரியதாக இருந்தது; முதலில் க்ராண்டரும் அவரைத் தொடர்ந்து அந்தப் பெண்ணும் உள்ளே போனார்கள்.

அறையிலிருந்தது ஒரு பெரிய மேசை. குவிக்கப்பட்ட மேசை விளக்கின் வெளிச்சத்தில் அங்கிருந்த காகிதங்கள் தென்பட்டன. அறையின் மற்றப் பகுதிகளில் வெளிச்ச மில்லை. க்ராண்டரால் அந்தப் பெண்ணையோ அந்தப் பெண்ணால் கிராண்டரையோ சரியாகப் பார்க்க முடிய வில்லை.

"இது ஒரு மோசமான ராத்திரி" என்றார் க்ராண்டர். "உன் மழைக் கோட்டைக் கழட்டிக் கொடு. அதைக் குளியலறையில் காயப் போடறேன்" என்றார்.

வெள்ளை மழைக்கோட்டையும், தொப்பியையும் கழற்றி அவரிடம் கொடுத்தாள். நெருப்புக்கு மேலே வைக்கப்பட்டிருந்த நிலைக் கண்ணாடியை நோக்கி நகர்ந்தாள் அவள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நனைந்திருந்த ஆடைகளை எடுத்துக் கொண்டு க்ராண்டர் குளியலறைக்குச் சென்றார். போகும் வழியில் அறை விளக்கிற்கான ஸ்விட்சைப் போடவும் அறையில் ஒளி சூழ்ந்தது.

ஒரு நாற்காலி மேல் மழைக்கோட்டை சாவகாசமாகப் போட்டுவிட்டு குளியலறையின் வாசலில் நின்றபடி க்ராண்டர் அவளைப் பார்த்தார்.

என்னை நன்றாகப் பார், சிகப்புக் கூந்தல் அழகியே, உனக்கு எவ்வளவு துணிச்சல் இருக்கிறது என்று இப்போது தெரிந்துவிடும் என்று நினைத்துக்கொண்டார்.

அழகாக மெலிந்திருந்த கால்களைக் கணப்பில் காட்டிக் கொண்டிருந்தாள் அவள். சிகரெட்டு கொளுத்துவதற்காக முயற்சி செய்து கொண்டிருந்தவள் அவரை நிமிர்ந்து பார்த்தாள். அறைவிளக்கின் வெளிச்சம் அவருடைய முகத்தில் பரவியிருந்தது.

காசினோ போரில் க்ராண்டருக்கு முகத்தில் காயங்கள் ஏற்பட்டன. வெடித்துச் சிதறிய பீரங்கிக் குண்டுகள் அவருடைய முகத்தை அடையாளமில்லாமல் செய்து விட்டன. ப்ளாஸ்டிக் சர்ஜரி மருத்துவர்கள் மிகவும் பொறுமையாக வேலை செய்தனர். அவர்கள் ஆரம்பித்த போதிருந்த வடிவத்தைப் பார்த்தால் அவர்களின் சாதனையை ஒரு அற்புதம் என்று சொல்லிவிடலாம்; அதைக் கிட்டத்தட்ட ஒரு மனித முகமாக அவர்கள் மாற்றி விட்டனர். அவருடைய இடது கண்ணை ஒரு கறுப்பு அட்டை மறைத்திருந்தது. மெலிதான உதடுகள் கீழ் நோக்கி வளைந்து சில கீழ்வரிசைப் பற்களைக் காட்டின. மொத்தத்தில் இடியாப்பம் சுடுகிறவன் பாதியில் கைவிட்டது மாதிரியிருந்தது அந்த முகம்.

காயத்தின் வடு ஆறியபிறகு வந்தால் இன்னும் சில அறுவைச் சிகிச்சைகள் செய்யலாம் என்று மருத்துவர்கள்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சொல்லியிருந்தனர். ஒரு வருட காலத்தில் ஓரளவு சரி செய்துவிடலாம் என்று அவர்கள் உத்தரவாதம் கொடுத்தனர்.

ஆனால் க்ராண்டர் போகவில்லை; போக வேண்டு மென்று நினைத்தாலும் அதற்கான நேரமில்லை. அல்ஸ் கோனியின் லண்டன் ஏஜென்டாக நியமிக்கப்பட்டவுடன் க்ராண்டர் முகத்திற்கான சிகிச்சையை மறந்துவிட்டார். மாதக்கணக்கில் மருத்துவமனையில் இருப்பதால் எந்த லாபமும் இல்லை. அல்ஸ்கோனியின் தொடர்பால் வரும் வரும்படியை இதற்காக இழக்க முடியாது. தன்னுடைய தோற்றத்தைவிட அல்ஸ்கோனியின் தொடர்பு முக்கியம் என்று முடிவெடுத்தார் க்ராண்டர்.

முதலில் சில மாதங்கள் கஷ்டமாக இருந்தது. ஆனால் நாளடைவில் தன்னைப் பார்த்தவர்கள் சலிப்போடு முகத்தைத் திருப்பிக் கொள்வதில் க்ராண்டருக்கு குரூர மான மகிழ்ச்சி ஏற்பட்டது. இப்போது இந்தப் பெண் பார்க் கிறாள். அவளுடைய சங்கடத்தைக் காண க்ராண்டருக்கு ஆசை.

க்ராண்டர் நினைத்தது நடக்கவில்லை. அவள் அதிர்ச்சி யடையவில்லை, முகத்தைத் திருப்பிக் கொள்ளவுமில்லை. வெறுப்போ, அசூயையோ இல்லாமல் அவர் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

''இதற்குமேல் அவர்களால் ஒன்றும் செய்ய முடி யலையா?'' என்றாள் அவள். ''அல்லது உனக்குப் பொறுமை இல்லையா?''

க்ராண்டருக்குள் ஒரு அமில ஆறு ஓடியது. அவளை நடுங்க வைக்கலாம் என்ற நினைப்பு தோல்வியடைந்தது. அவளுடைய வெண்மையான கழுத்தைப் பிடித்து இழுத்து, தலையை சுவரில் மோத வேண்டும் போல மனசு துடித்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''உனக்கென்ன அதைப்பத்தி?'' என்றார் க்ராண்டர். ''என் முகத்தை நான் பார்க்கிறேன். நீ உன் வேலையைப் பார்.''

''என்னோடு பேசும்போது மரியாதையா பேசு.'' எச்சரித்தாள் அவள்.

க்ராண்டர் கோபத்தை அடக்கிக் கொண்டார். என்ன செய்துவிட்டோம். இவளை எப்படியாவது கவர வேண்டும் என்று நினைத்திருந்தோம். இந்த மாதிரி உறுமுவதால் அது நிறைவேறாது. அல்ஸ்கோனியின் இயக்கத்தோடு இவள் மூலமாகத்தான் தொடர்பு கொள்ள வேண்டும். தான் செய்திருக்கும் ஏற்பாடுகளைக் காண்பதற்காக அவள் இத்தாலியிலிருந்து வந்திருக்கிறாள். அவளுக்கு திருப்தி ஏற்பட்டால் அவருக்குப் பதவி உயர்வு கிடைக்கலாம். அவர் இரண்டு வருடங்களாக அல்ஸ்கோனியின் இயக்கத்தில் வேலை செய்கிறார். தான் இதுவரை செய்த வேலை முக்கியமானதல்ல என்பதை அவர் சமீபத்தில் தெரிந்து கொண்டார். அது ஒரு உபதொழில் மாதிரிதான். இப்போது லண்டனில் தன்னுடைய நடவடிக்கைகளைத் தொடங்க வேண்டுமென்று அல்ஸ்கோனி திட்டமிட்டிருக்கிறார். இதுதான் க்ராண்டருக்கான வாய்ப்பு.

''ஸாரி'' என்றார் க்ராண்டர். ''என் முகத்தைப் பத்திப் பேசினா எனக்குக் கோபம் வருது. எல்லோருக்கும் அப்படித்தான். உட்காரு. ஏதாவது மதுபானம்?''

''தாங்க்ஸ். வேண்டாம்'' என்றாள் அவள்.

மேசையருகே வந்து ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள் அவள். நேர்த்தியாகத் தைக்கப்பட்ட கறுப்பு அங்கியை அணிந்திருந்தாள். தங்க இலைகள் கோர்த்த சங்கிலி கழுத்தை அலங்கரித்தது.

க்ராண்டர் உட்கார்ந்தார். உட்காரும்போதே இருட்டான பகுதியை அவர் தேர்ந்தெடுத்தார். சிகரெட்டைப்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பற்ற வைக்கும் போது, அவள் தன் முகத்தைப் பார்க் காதபடி திருப்பிக் கொண்டார்.

''இந்த வேலையைச் செய்றதுக்கு ஆள் கிடைச் சுட்டானா?'' அவள் கேட்டாள்.

''ஆள் கிடைச்சுட்டான். அவனைக் கண்டுபிடிக்க கொஞ்ச நாளாயிடுச்சு. ஆனால் அவன்தான் சரியான ஆள்'' என்று சொல்லிக் கொண்டே க்ராண்டர் கைக்கடிக் காரத்தைப் பார்த்தார். ''இன்னும் சில நிமிஷத்தில் அவன் வந்துடுவான். நீ அவனைப் பார்க்க விரும்புறேன்னு நினைச்சேன்'' என்றார் அவர்.

''எந்தக் குறையும் இருக்கக்கூடாது'' என்று சொல்லிக் கொண்டே தன்னுடைய பச்சைக் கண்களால் அவருடைய ஒரு கண்ணை நேரடியாகப் பார்த்தாள் அவள். ''இதுதான் முதல் முறை; முதல் முயற்சி எப்போதும் ஜெயிக்கணும்'' என்று சொல்லிவிட்டு சிகரெட்டிலிருந்த சாம்பலைத் தட்டிவிட்டாள். ''நீ கண்டு பிடிச்சிருக்கிற ஆள் யார்?''

''அவன் பெயர் எட் ஷாபிரோ'' என்றார் க்ராண்டர். போலீஸ் ரிகார்டுகளில் அவன் பெயர் இல்லை. சர்க்கஸில் இருந்தான் முதலில். அங்கே கத்திகளை எறிவதில் கில்லாடி. அவன் சரியான ஆள். அதனால அவனை செலக்ட் பண்ணேன். போருக்குப் பிறகு அவன் சர்க்கஸிலிருந்து வெளியேறிட்டான். எனக்காகக் கொஞ்சம் கடத்தல் வேலைகள் செய்திருக்கான். இப்போது தனியாகத் தொழில் செய்யணும்னு ஆசைப்படறான். சீக்கிரமா ஒரு படகு வாங்கணுமாம். நாம கொடுக்கிறதா சொன்ன பணத்தைக் கேட்டதும் கவுந்துட்டான்.''

''காரியத்தைக் கெடுத்துட மாட்டானே?''

''இதைச் செய்யக்கூடிய ஒரே ஆள் அவன்தான்.''

''இதுவரை என்ன செய்திருக்கிறாய்?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''பணத்திற்கான ஓலையை செவ்வாய்க் கிழமையே அனுப்பிட்டேன். இன்னக்கி ராத்திரி ஷாபிரோ அந்த வீட்டுக்குப் போவான். காலை உணவு சாப்பிடும் அறையில் ஆமையையும் ஒரு குறிப்பையும் வைச்சுடுவான். நாளை ராத்திரி ஒன்பது மணிக்கு பணத்துக்காக ஒரு ஆளை அனுப்புவேன்'' என்று சொல்லிக் கொண்டே வந்து நிறுத்தினார் க்ராண்டர். ''ஒரு விஷயம் எனக்குப் புரியலை. ஒருவேளை அவன் பணம் கொடுத்துட்டால்?''

''அதைப் பத்தி நீ கவலைப்பட வேண்டாம். அவன் கொடுக்கப் போறதில்லை. அவனை மாதிரி ஆட்களை மிரட்ட முடியாது.''

''அப்படின்னா சரி. அவன் பணம் கொடுத்துட்டா கதை கந்தலாகிவிடும்.''

''அவன் கொடுக்க மாட்டான்.''

''அப்படியானால் ஷாபிரோ ஒன்பதே காலுக்குத் தயாராக இருப்பான். நீ கத்தியைக் கொண்டு வந்தாயா?''

பக்கத்தில் சாய்ந்து தரையிலிருந்த ஹோல்டாலை அவள் இழுத்துக் கொண்டாள்.

பையைத் திறப்பதற்காகக் குனிந்தபோது அவளுடைய வளைவுகளை அவர் உற்றுப் பார்த்தார். அவருக்கே வெறுப்பாய் இருந்தது. இவ்வளவு அழகான பெண்கள் அவருக்குக் கிடைப்பதில்லை. சரியில்லாத சமாசாரங்கள் தான் அவருக்கு.

பையிலிருந்து எடுத்த மரப்பெட்டியை அவள் மேசை மீது வைத்தாள். பெட்டியைத் திறந்து அகலமான அலகும் பளுவான வேலைப்பாடுமுள்ள கைப்பிடியும் கொண்ட கத்தியை எடுத்தாள். மரத்தால் செய்யப்பட்ட கைப்பிடி அது. க்ராண்டர் அதை எடுத்துப் பார்த்தார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''இது ரொம்ப ஆபத்தானது'' என்ற க்ராண்டர் ''இதை வைத்தே போலீஸார் நம்மைக் கண்டுபிடிச்சிடுவாங்களே?'' தொடர்ந்தார்.

''இது எங்களுடைய ஸ்பெஷல் தயாரிப்பு. இதை வைச்சு நம்மைக் கண்டுபிடிக்கவே முடியாது'' என்றாள் அவள்.

''இது அவசியமா?'' என்று இழுத்தார் க்ராண்டர்.

''எது அவசியமா?'' என்றாள் அவள் எரிச்சலோடு.

''ஆமை, கத்தி, எச்சரிக்கை ஓலை.''

''நிச்சயமா இவை எல்லாமே அவசியம். நமக்கு பப்ளிசிடி வேணும். ஆமை என்பது பத்திரிகைக்காரர் களுக்குப் பரபரப்பு ஏற்படுத்துவதற்காக. இந்த விஷயம் தலைப்புச் செய்தியாகணும். அது ரொம்ப முக்கியம். ஃபெரன்சிக்கு அடுத்த ஆளைத் தேர்வு செய்துட்டோம். அவருக்கு எச்சரிக்கை ஓலை அனுப்பிய உடனே அவர் தயங்காமல் பணம் கொடுத்து விடுவார். இந்தத் திட்டம், ஃபிரான்சு, இத்தாலி மற்றும் அமெரிக்காவில் கைகொடுத் திச்சு. இங்கேயும் அது வேலை செய்யும்.''

''இது முடிஞ்சுட்டா, அடுத்தவர்களையும் நானே கவனிக்கலாமா?'' கேட்டார் க்ராண்டர்.

''அப்படித்தான்'' என்றாள் அவள்.

''உன் பெயர்கூட எனக்குத் தெரியலை. அல்லது அதையும் கேட்கக்கூடாதா?'' கேட்டார் க்ராண்டர்.

''என்னை லோரெலி என்று கூப்பிடலாம்.''

''லோரெலி அழகான பேர். நீ இயக்கத்தில் நீண்ட காலமா இருக்கியா?'' என்றார் க்ராண்டர்.

''ஷாபிரோவுக்குப் பணம் கொடுக்கும்படி எனக்கு உத்தரவு'' என்றாள் அவள். ''வேலையை முடித்த பிறகு அவனை எங்கே பாக்கறது?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

க்ராண்டரின் தலைக்குள் ரத்தம் பாய்ந்தது.

''நீ எதுக்குக் கொடுக்கணும். நான்தான் அவனை வேலைக்கு வச்சேன். என்கிட்ட கொடு. நான் கொடுத்துடறேன்.''

''அவனை எங்க பாக்கறது'' என்று க்ராண்டரை உற்றுப் பார்த்தபடியே அவள் மறுபடியும் கேட்டாள்.

''இது எனக்குப் புரியலை. அவங்க என்னை நம்பலையா?''

''நீ உத்தரவுப்படி நடக்கலைன்னு அவங்ககிட்ட சொல்லிடலாமா?'' என்று கேட்ட குரல் மிரட்டலாக இருந்தது.

''இல்ல. அப்படி எதுவும் இல்ல'' க்ராண்டர் அவசரமாக மறுத்தார்.

''அவனை எங்க பாக்கறது?'' கேட்டாள் அவள்.

''25, ஏதென்ஸ் தெரு, அது ஸோஹோவில இருக்கு'' சொல்லிய க்ராண்டர் தன்னுடைய கோபத்தை சிரமப்பட்டு மறைத்துக் கொண்டார்.

அப்போது தொலைபேசி ஒலித்தது; க்ராண்டர் எடுத்தார்.

''உங்களைப் பார்க்கறதுக்கு ஒருத்தர் வந்திருக்கார். அவரை மேல அனுப்பலாமா?''

''அனுப்பலாம்.''

டேல் தொடர்ந்தார். ''அந்தப் பெண்ணுக்கு ஒரு அறை வேணுமா? உங்களுக்குப் பக்கத்திலேயே கொடுத்துடலாம்.''

க்ராண்டர் லோரலியிடம் கேட்டார் ''நீ இங்க தங்கப் போறீயா?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவள் தலையசைத்தாள்.

''அவங்க இங்கே தங்கப் போறதில்லை'' என்றார் க்ராண்டர் தொலைபேசியில்.

''அது உன் துரதிருஷ்டம்'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார் டேல்.

க்ராண்டர் தொலைபேசி ரிசீவரை வேகமாக வைத்தார்.

எட் ஷாபிரோவுக்கு மெலிந்த உயரமான உடல்; வளைந்த மூக்கு, கருமையான நிறம் மற்றும் சிறிய கண்கள். அந்தக் கண்கள் அடிக்கடி அலைபாய்ந்து கொண்டிருந்தன. அவர் வெள்ளைக் கோடுகள் உடைய கறுப்பு ஸூட் அணிந்திருந்தார். உள்ளே கறுப்புச் சட்டையும் வெள்ளை டையும். இடது கண்ணை மறைத்தபடி இரண்டு பக்கமும் வளையக்கூடிய விளிம்புகள் உடைய தொப்பி.

வரவேற்பு மேசை மேல் சாய்ந்து கொண்டிருந்த ஷாபிரோவின் வாயில் ஒரு சிகரெட் தொங்கிக் கொண் டிருந்தது. அவன் வாயிலிருந்து வெளிவந்த விஸ்கி வாடை டேலைத் தாக்கியது.

முகச் சுளிப்போடு தலையைத் திருப்பிக் கொண்டார் டேல். ''மேலே போ, அறை எண் 26'' என்று சொல்லி ''கடையைக் காலி செய்துவிட்டாயா?'' என்று கேட்டார்.

ஷாபிரோவின் நீண்ட கை டேலின் சட்டையைப் பிடித்து, உலுக்கிய வேகத்தில் டேலின் தலை ஆடியது.

''வாயை மூடு- இல்லாட்டி உன் அழுக்குப் பற்கள் காணாமப் போய்விடும்'' என்றான் ஷாபிரோ.

டேல் அசையாமல் நின்றார், அவருடைய முகம் வெளுத்துவிட்டது. ஷாபிரோவின் கொடூரமான பார்வையை அவரால் தாங்க முடியவில்லை.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சட்டையை உதறிவிட்ட ஷாபிரோ, தொப்பியைக் கீழே இழுத்துக் கொண்டான்; அறைக்கு நடுவே நடந்து படிகளில் ஏறினான்.

தன்னை திடப்படுத்திக் கொள்வதற்காக ஷாபிரோ மாலை முதல் குடித்துக் கொண்டிருந்தான். இதுவரை பல குற்றங்களைச் செய்தவன்தான் என்றாலும் கொலை செய்ததில்லை. ஆனால் கடந்த இரண்டு மாதங்களாக விசைப்படகு வேண்டும் என்கிற எண்ணம் அவனை அரித்துக் கொண்டிருந்தது. இதைப் போல இன்னொரு வாய்ப்புக் கிடைக்காது. அவன் விரும்பும் படகுக்கான விலை ஆயிரம் பவுண்டு. அதைக் கொடுக்க க்ராண்டர் தயாராக இருக்கிறான். இதை நழுவவிட்டால் படகு கை மாறிப் போய்விடும்.

''இதற்கு மேல என்னால் காத்திருக்க முடியாது'' என்று சொல்லிவிட்டார் விசைப்படகின் உரிமையாளர். ''உனக்கு உதவணும்னுதான் நினைக்கிறேன். ஆனால் அவன்கிட்ட ரொக்கமாக இருக்கு. அடுத்த வெள்ளிக் கிழமைக்குள் நீ பணம் தரணும். இல்லாட்டி இது அவனுக்குத்தான்.''

ஷாபிரோவால் அந்தப் படகை விட்டும் கொடுக்க முடியாது; ஆனால் கொலை என்றதும் நாடி நரம்பெல்லாம் ஆடிவிடுகிறது. சிக்குவதற்கான வாய்ப்பே இல்லை என்கிறான் க்ராண்டர். ஆனால் ஷாபிரோவுக்கு போலீஸாரின் திறமை பற்றிய மதிப்பீடு இருந்தது. தன்னுடைய கழுத்தைப் பற்றிய அக்கறையும் அவனுக்கு இருந்தது. கொலை என்பது நம்மைத் திருப்பித் தாக்கக் கூடியது. அதுவும் நாம் தப்பித்துவிட்டோம் என்று நினைக்கும் போதுதான் மாட்டிக் கொள்வோம்.

ஷாபிரோவின் சந்தேகங்களை க்ராண்டர் ஒதுக்கித் தள்ளினார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''யோசிச்சுப் பார்'' என்றார் க்ராண்டர். ''நீ அவர்களிடம் சிக்கியதே இல்லை. உன்னுடைய விரல் ரேகைகள் அவர்களிடம் இல்லை. நான் சொல்றபடி செய்துட்டா உன்னை யாரும் பார்க்க மாட்டாங்க. இதில் கவலைப்படறதுக்கு என்ன இருக்கு?''

ஆனால் அந்தத் திட்டத்தை யோசிக்க, யோசிக்க ஷாபிரோவின் சந்தேகம் அதிகமாகின. அந்த வீட்டை விட்டு வெளியேறும் போது யாராவது தன்னைப் பார்த்து விடலாம். கொலைகாரனென்று தான் தேடப்படுவதை நினைத்தால் அவனுக்கு அடி வயிறு கலங்கியது. அதற்காகத் தான் அவன் குடிக்க ஆரம்பித்தான். சில ரவுண்டு விஸ்கிகள் உள்ளே போனதும் வீரம் வெளியே வந்தது. படகு பற்றிய நினைப்பு வந்தது. வேலையை முடித்தவுடன் ஃபால்மவுத் துறைமுகத்திற்குப் போய், படகை வாங்கிக் கொண்டு ஃபிரான்சுக்குத் தப்பிவிடலாம்.

படியேறும்போது, வேலையை வெற்றிகரமாக முடிக்க வேண்டும் என்ற நினைப்புதான் இருந்தது. அறை எண் 26க்கு வீராப்பாக நடந்தான். வாசலில் நின்றபடி லோரெலியைக் கவனித்தான். அவளும் அவரைப் பார்த்தாள்.

''உள்ளே வந்து கதவை மூடு'' என்று ஒலித்தது க்ராண்டரின் குரல்.

ஷாபிரோ கதவை மூடினான். முதலில் லோரெலியையும் க்ராண்டரையும் பார்த்தவன் பிறகு க்ராண்டரையும் லோரெலியையும் கவனித்தான். இந்த அழகிக்கு இங்கே என்ன வேலை? டையை சரிசெய்து கொண்டவன் ஓரக் கண்ணால் பார்த்தபடியே அசட்டுச் சிரிப்பு சிரித்தான்.

க்ராண்டர் எழுந்து நின்றார்.

''எட், போதும். அவள் நம்மோடு வேலை செய்யறா'' என்றார் க்ராண்டர்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஷாபிரோ மேசைக்கருகே வந்தான். அவனுடைய புன்னகையில் அசடுத்தனம் அதிகமிருந்தது.

''சரி, சரி, அது நல்லதுதான். பெண்ணே நாம் இருவரும் சேர்ந்து செய்ய வேண்டியது அவசியம்'' என்றான் ஷாபிரோ.

லோரெலியின் பச்சைக் கண்கள் அவனை எச்சரித்தன. ''உன்னை ஏதாவது கேட்டால் மட்டுமே நீ வாயைத் திறக்கணும்'' என்றாள் லோரெலி.

''என்னிடம் இதெல்லாம் நடக்காது'' என்றான் ஷாபிரோ.

க்ராண்டரின் கை, ஷாபிரோவின் முகத்தில் பாய்ந்தது. ஷாபிரோ தள்ளாடினான்.

சமாளித்துக்கொண்ட ஷாபிரோ, அசையாமல் க்ராண்டரை முறைத்தான்.

''உட்கார், வாயை மூடிக்கொள்'' என்ற க்ராண்டரின் குரலில் வெப்பம் இல்லை. ஆனால் அவருடைய கண்கள் தணல் போல் சிவந்திருந்தன.

ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு ஷாபிரோ உட்கார்ந்தான். தன்னுடைய முகத்தைத் தடவிக் கொண்டான்.

''இன்னொரு தடவை இந்த மாதிரி செய்யாதே'' என்றான் கிராண்டரைப் பார்த்து.

''வாயை மூடு'' என்றார் க்ராண்டர்.

''இவன் சரிவர மாட்டான்'' என்றாள் லோரெலி. அந்த அறையில் அவர் இல்லாததுபோல அவள் பேசினாள். ''இவன் குடிச்சிருக்கான். இவனுக்குத் தைரியமில்லை. தவிர இவங்கிட்ட ஒரு கட்டுப்பாடும் இல்லை.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''இந்த வேலையை இவன் செய்வான். இல்லைன்னா நான் இவனைக் கொன்னுடுவேன்'' என்றார் க்ராண்டர். ஷாபிரோவுக்கு அடிவயிற்றைக் கலக்கியது. க்ராண்டர் சொன்னதைச் செய்வார் என்று அவனுக்குத் தெரியும்.

''ஒரு நிமிஷம் பொறுமையா இரு...'' என்று சொல்ல வந்தவன் க்ராண்டர் தன்னை முறைப்பதைப் பார்த்து வாயை மூடிக் கொண்டான்.

''நான் சொன்னதைக் கேட்டாயா? நீ இதை ஒழுங்காகச் செய்யலைன்னா நான் உன்னைக் கொன்னுடுவேன்.''

''நான் சரியாகச் செய்யமாட்டேன்னு யார் சொன்னது'' என்றான் ஷாபிரோ. அவன் குரல் கம்மியிருந்தது.

அகன்றதாக இருந்த அந்தக் கத்தியை எடுத்து ஷாபிரோ விடம் கொடுத்தார் க்ராண்டர். கைப்பிடி ஷாபிரோ விடமும் கத்தி க்ராண்டரிடமும் இருந்தது.

''இதைத்தான் நீ பயன்படுத்தணும். உன்னால் என்ன செய்யமுடியும் என்பதை அவளுக்குக் காட்டு.''

ஷாபிரோ கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டான். அதனுடைய கூர்மையான பகுதியைப் பெருவிரலால் தடவியவுடன் அவனுக்குள் ஒரு மாற்றம் ஏற்பட்டது. முகம் இறுக்கமானது. உடல் விறைப்பானது, கண்கள் கூர்மையாக மாறிவிட்டன.

''என்ன அழகு, என்ன அழகு'' என்று அவன் முணு முணுத்துக் கொண்டான்.

கத்தியை உயரே தூக்கி வீசி அது கீழே வரும்போது லாகவமாக அதன் கைப்பிடியைப் பிடித்தார்.

''உன் திறமையை அவள் பார்க்க வேண்டும்'' என்றார் க்ராண்டர்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஷாபிரோவின் பார்வை அந்த அறையை அளந்தது. தன்னுடைய வீச்சுக்கு ஏற்ற பொருள் எதுவும் அவனுக்குக் கிடைக்கவில்லை. எழுந்து நின்ற ஷாபிரோ, தன்னுடைய பாக்கெட்டிலிருந்து ஒரு சீட்டுக் கட்டை எடுத்தான். அதிலிருந்து ஏஸ் டைமண்டைப் பிரித்து எடுத்தான். கைக்கடிகாரத்தில் ஓட்டிக் கொண்டிருந்த சூவிங்கம்மால் அந்தச் சீட்டை சுவரில் ஒட்டினான்.

அறையின் மறுபக்கத்திற்குச் சென்றான். சீட்டு இருந்த இடம் இருட்டான பகுதி. அதை லோரெலியால் பார்க்க முடியவில்லை. மேசைமேல் கைகளை வைத்துக் கொண்டு அதில் முகத்தைப் பதித்தபடி ஷாபிரோவைக் கவனித்தாள் அவள்.

கத்தியைக் கையில் வைத்து சமநிலையாக்கிக் கொண்ட ஷாபிரோ, விருட்டென்று அசைந்து அதை வீசினான். துப்பாக்கிக் குண்டைப் போல அது சுவரை நோக்கிச் சென்றது.

மேசை விளக்கைத் திருப்பினார் க்ராண்டர். அதன் ஒளி சுவரில் விழுந்தது.

சீட்டிலிருந்த டைமண்டைத் துளைத்துக் கொண்டு சுவரில் பதிந்திருந்தது அந்தக் கத்தி.

''பார்த்தியா, இருபது முறை முயற்சி செய்தாலும், இருபது முறையும் இவனுக்குத்தான் வெற்றி'' என்றார் க்ராண்டர்.

லோரெலி அமைதியானாள்.

''ஆமாம். நிச்சயமா முடியும்'' என்றாள் அவள்.

பெருமிதமாக நடைபோட்ட ஷாபிரோ சுவரிலிருந்த கத்தியை அகற்றினான்.

''இந்த நாட்டில் இதுபோல செய்யக்கூடியவன் எவரும் இல்லை. இப்ப என்னால முடியும்னு நம்பறியா?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''உன்னால் முடியும். நீ உறுதியாக இருந்தா.''

''அதைப்பற்றிக் கவலை வேண்டாம். நான் நல்லாத்தான் இருக்கிறேன். பணம் எப்போது கிடைக்கும்? எனக்குக் கொஞ்சம் பணம் வேணும்.''

அவள் அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

''அவன் பிணமான பிறகு உனக்குப் பணம் வந்து சேரும். அதற்கு முன்னால் கிடைக்காது'' அவள் எழுந்து நின்றாள்.

''நாளைக்கு ராத்திரி 11.30 மணிக்கு நான் 25, ஏதென்ஸ் தெருவில் இருப்பேன். அப்ப நீ எனக்கு விவரமான ரிப்போர்ட் தரணும்.

ஷாபிரோ ஏதோ சொல்ல வாயெடுத்தான். ஆனால் க்ராண்டரின் அசைவைப் பார்த்து அடங்கிவிட்டான்.

''எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு'' என்ற லோரெலி தொடர்ந்தாள். ''நான் போகவேண்டும். நாளை பகலில் நாம் சந்திக்கலாம். என்னுடைய மழைக்கோட்டு வேண்டும்.''

க்ராண்டர் குளியலறைக்குச் சென்று மழைக் கோட்டையும் தொப்பியையும் எடுத்து வந்தார். அவள் தொப்பியை அணிந்து கொண்டு நிலைக்கண்ணாடியில் கூந்தலைச் சரி செய்யும் வரை இருவரும் அமைதியாக இருந்தனர்.

''எந்தத் தவறும் நடக்கக் கூடாது'' என்று சொல்லிக் கொண்டே அவள் மழைக் கோட்டை மாட்டிக் கொண்டாள்.

''எல்லாம் சரியா நடக்கும்'' என்றார் க்ராண்டர்.

அவள் ஹோல்டாலை எடுத்துக் கொண்டு கதவருகே சென்றாள்.

''நீதான் அதுக்குப் பொறுப்பு'' என்று சொல்லிவிட்டு, அவள் வெளியே போய்விட்டாள். கதவு மூடப்பட்டது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அத்தியாயம் இரண்டு

ஆபத்தான ஆமை

மழையால் நனைந்திருந்த பிக்காடில்லி வழியாக கறுப்பு பென்ட்லே காரை ஓட்டிச் சென்றார் ஹேரி மேஸன். காரை மீண்டும் கழுவ வேண்டும் என்பது அவருடைய கவலை. இன்றைக்கு இது இரண்டாவது முறை. ஒரு முறை என்பது பரவாயில்லை. அது வேலையின் ஒரு பகுதியாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால் இரண்டு முறை என்பது அதிகபட்சம். இந்த நாட்டிலோ எப்போதும் மழை பெய்துகொண்டேயிருக்கிறது.

ஹேரியின் பக்கத்தில் இருந்த டான் மிக்லெம் முன்பக்கமாக நகர்ந்தான்.

''அங்க பாருங்க திருமதி ஃபெரென்சி'' என்று அவர் சொன்னவுடன் ஹேரியின் எண்ண ஓட்டம் கலைந்தது. அவளுக்கு லிஃப்ட் தேவைப்படலாம் என்று சொல்லிக் கொண்டே கண்ணாடியை இறக்கினார்.

ஹேரி வண்டியை நடைபாதையை நோக்கிச் செலுத்தினார்.

கறுப்பு வெள்ளைக் கட்டம்போட்ட மழைக்கோட்டும் சிறிய கறுப்புத் தொப்பியும் அணிந்த பெண் ஒருத்தி நடைபாதையில் டாக்சிக்காகக் காத்திருந்தாள். மெல்லிய உடலும், வெண்ணிற மேனியும் கொண்ட அவளுடைய கண்கள் பெரியதாக ஊதா நிறத்தில் இருந்தன. டான்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவளைப் பார்த்துக் கையசைத்தார். அவளுடைய தோற்றம் கவலையைக் காட்டியது.

காரிலிருந்து இறங்கி மழையில் நடந்த டான் ''ஜூலியா'' என்று அழைத்தார். ''நீங்க எங்க போகணும்?''

அவரைப் பார்த்தவுடன் அந்தப் பெண்ணின் முகத்தில் மகிழ்ச்சி.

''நீங்கள் ஃபிரான்சு நாட்டுக் கடலோரத்தில் இருப்பீங் கன்னு நினைச்சேன்'' என்றாள் அவள்.

''இன்னும் சில வாரங்கள்ள போகணும். மழையில் நனையாமல் காரில ஏறிக்கோ.'' பின் கதவைத் திறந்து ஜூலியா உட்காருவதற்கு வழி செய்தார்; தானும் ஏறிக் கொண்டார்.

''நீ என்ன பண்ணிக்கிட்டிருக்கே? இப்ப எங்க போறே?''

''உன்னைப் பார்த்ததில ரொம்ப சந்தோஷம், டான்'' என்று சொல்லிக் கொண்டே தன் மெல்லிய விரல்களால் அவருடைய கையைத் தொட்டாள். ''நீ இங்க இல்லைன்னு நினைச்சேன். அதனாலதான் உன்னைக் கூப்பிடலை. உன்னோடு பேசணும். கிடோவைப் பத்திப் பேசணும்.

''என் வீட்டுக்கு வர்ரியா?'' என்று கேட்டார் டான்.

அவருடைய கண்கள் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தன. ''1 மணி வரை எனக்கு வேலையில்லை. இப்ப மணி 11.45தான். இல்லைன்னா பெர்க்லியல வண்டியை நிறுத்தலாம்.''

''உன் வீட்டுக்கே போகலாம்'' என்றாள் ஜூலியா. ''மத்தியான சாப்பாட்டுக்கு கிடோ காத்திருப்பார்.''

''வீட்டுக்குப் போலாம் ஹேரி'' என்றார் டான். வெள்ளையடிக்கப்பட்டு ஆலிவ் பச்சை ஜன்னல்களோடு

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

உடைய வீடு ஒன்று கடந்த ஆறு வருடங்களாக லண்டனில் டானுடைய இல்லமாக இருக்கிறது. அப்பர் ப்ரூக் மியூஸின் எல்லையில் இருக்கும் அந்த வீட்டை நோக்கி ஹோரி வாகனத்தைச் செலுத்தினான்.

''கிடோ நல்லா இருக்காரா?'' என்று கேட்டார் டான்.

ஜூலியா வலிந்து ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண்டாள்.

''அவர் நல்லாவே இருக்கார். நேத்து உன்னைப் பத்திப் பேசிக்கிட்டிருந்தார். அவருடைய கம்பெனியைப் பத்தி உனக்குத் தெரியுமே... அதன் இயக்குநராக உன்னை நியமிக்க விரும்புகிறார். இப்ப அது முக்கியமில்லை. அவரே அதைப் பத்தி உன்னிடம் பேசுவார். அவர் நிறைய திட்டங்கள் வெச்சிருக்கார்...'' என்று சொல்லிக் கொண்டே போனாள்; பேச முடியாமல் கண்ணாடி வழியாக வெளியே பார்த்தாள்; அவளுடைய விரல்கள் மடிந்து குவிந்திருந்தன.

டான் சிகரெட்டைப் பற்ற வைத்தார்; அவருடைய புருவங்கள் உயர்ந்தன; பிரச்சினை என்ன என்பதை அவர் யோசித்துக் கொண்டிருந்தார். 'கிடோவுக்கு ஏதாவது ஒரு பெண்ணுடன் தொடர்பு இருக்கோ?' அது சாத்தியமில்லை. கிடோவுக்கு ஜூலியா மீதுள்ள காதல் அவருக்கு நன்றாகத் தெரியும். ஆனால் ஆண் பெண் உறவுகளைப் பற்றி எதுவும் நிச்சயமாகச் சொல்ல முடியாது.

அப்பர் ப்ரூக் மீயூஸ் பகுதியின் 25ஏ எண்ணுள்ள வீட்டில் வண்டி நின்றது. ஹாரி இறங்கி, கதவைத் திறந்தார்; ஜூலியாவுக்கு சல்யூட் அடித்தார். அவள் அதை சரியாகக் கவனிக்கவில்லை என்பதில் ஹாரிக்கு வருத்தம்.

பெரியதாக இருந்த வரவேற்பறைக்கு ஜூலியாவை டான் அழைத்துச் சென்றார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''உட்காரு ஜூலியா'' என்றார் டான். ''ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொள். அமைதியாக இரு. ஷெர்ரி அல்லது மார்ட்டினி வேண்டுமா?''

''எனக்கு ஷெர்ரி பிடிக்கும்.''

டான் அழைப்பு மணியை ஒலிக்கச் செய்தார். ஒரு சிகரெட் பெட்டியை எடுத்து வந்து ஜூலியாவின் அருகிலுள்ள மேசையில் வைத்தார்.

ஜூலியாவின் சிகரெட்டை அவர் பற்றவைக்கும்போது செர்ரி அறைக்குள் வந்தான். செர்ரி, டானுடைய பட்லர், அதாவது வேலையாள்.

செர்ரி பருமனான உடல்வாகும் உயரமும் உடையவன்; இளஞ்சிவப்பு நிறம்; மடிப்புகளுடைய சிகப்பு முகவாய். அவளை ஒரு ஆர்ச் பிஷப் என்று பலர் நினைத்திருக் கிறார்கள். அவனுடைய வயது அறுபதுக்கு மேல் என்றாலும் அவன் சுறுசுறுப்பாகத்தான் இருக்கிறான்.

''சாப்பிட்டிங்களா, ஐயா'' என்று கேட்டுக் கொண்டே அவர் உள்ளே வந்தார்.

''திருமதி ஃபிரென்சிக்கு ஒரு ஷெர்ரி வேண்டும். எனக்கு சோடாவோடு ஐஸ் போட்டு விஸ்கி.''

''நிச்சயமா ஸார்,'' என்று சொல்லிவிட்டு ஜூலியாவின் பக்கமாகத் தலையைத் தாழ்த்தினான் செர்ரி. அவளை அவன் முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. பொதுவாக அவனுக்கு அமெரிக்கப் பெண்களைப் பிடிக்காது என்றாலும் ஜூலியா ஒரு விதிவிலக்கு; குறிப்பிட்ட சூழ்நிலையில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று அவளுக்குத் தெரியும். தவிர அவள் பணக்காரி. செர்ரியின் அங்கீகாரத்தைப் பெற இந்த இரண்டு தகுதிகளும் மிகவும் அவசியம்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

விஸ்கியைக் கொடுத்துவிட்டு செர்ரி அமைதியாக வெளி யேறினான். டான் கால்களை நீட்டிக் கொண்டார்; ஜூலியாவைப் பார்த்து ஆதரவாகப் புன்னகைத்தார்.

''சரி சொல்லு. உன்னுடைய நடவடிக்கை விசித்திரமாக இருக்கு. கிடோ ஏதாவது ஒரு குட்டியோடு ஓடிட்டாரா?''

''அதெல்லாம் இல்லை. அது மாதிரி ஏதாவது நடந்தால் அதை நானே சமாளிப்பேன். அது இல்லை. நான் நிஜ மாகவே பயந்திருக்கேன். கிடோவுக்கு பயங்கரமான ஒரு மிரட்டல் கடிதம் வந்திருக்கு.''

டான் கவலைப்பட்டபடி எதுவும் இல்லை என்றதும் அவரது முகத்தில் மலர்ச்சி ஏற்பட்டது.

''என் அருமை ஜூலியா, இது மாதிரி விஷயங்கள்ள நீ பயப்படக்கூடாது. கிடோ போன்ற வசதியானவர்களுக்கு எப்போதும் இந்த மாதிரி கடிதங்கள் வரத்தான் செய்யும். நாட்டில மறை கழண்டவங்க நிறைய பேர் இருக்காங்க. இதை எல்லாம் பொருட்படுத்தக்கூடாது.''

''ஆனால் அதில ஒரு அபாயம் இருக்கிறது. இவன் பத்தாயிரம் பவுண்டு கேட்கிறான். இன்று இராத்திரிக்குள்ள பணம் தராட்டி கிடோவைக் கொலை செய்து விடுவதாக அவன் மிரட்டறான். எனக்குப் பயமாயிருக்கு.''

டான் முகத்தைச் சுளித்துக் கொண்டார்.

''பத்தாயிரமா? அவன் ஒரு பேராசைக்காரன். அந்தக் கடிதம் உங்கிட்ட இருக்கா?''

''கிடோ அதைத் தூக்கி எறிஞ்சுட்டார். அதை அவர் மதிக்கவேயில்ல. போலீஸிடம் போகலாம்னு நான் சொன்னேன். ஆனால் அவருக்கு அதில விருப்பமில்லை. அவர் எவ்வளவு பிடிவாதக்காரர்னு உனக்குத் தெரியும். இந்த ஆமை ஒரு பயித்தியக்காரனாக இருக்கணும் அல்லது யாரோ விளையாட்டுக் காட்டுகிறார்கள் என்கிறார் அவர்.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''ஆமையா? எந்த ஆமை?''

''அந்தக் கடிதத்தில் ஆமைன்னு கையெழுத்து இருந்தது.''

டான் பலமாகச் சிரித்தார்.

''சரி, சரி, அவன் ஒரு பயித்தியக்காரன்தான். அவன் பாம்பு, ஓநாய் என்று கையெழுத்துப் போட்டிருந்தால், அவனை நம்பலாம். ஆனால் ஆமை... ஜூலியா இந்த விஷயத்தைப் பெரிசு படுத்த வேண்டாம். கிடாவோடு குதிரைப் பந்தயம் ஆடறவங்க யாராவது வேடிக்கை காட்டுகிறார்கள்னு நினைக்கிறேன்.''

ஜூலியா தலையசைத்து மறுப்பு தெரிவித்தாள்.

''கிடோ அப்படித்தான் சொல்றார். ஆனால் எனக்கு நம்பிக்கை இல்லை. எனக்குக் கவலை அதிகமாகிக்கிட்டே போகுது. இன்றிரவு பணத்தைக் கொடுத்தாகணும். இன்னிக்குக் காலை'' என்று சொல்லிக் கொண்டே வந்தவள் நிறுத்தி உதடுகளைக் கடித்துக் கொண்டாள்.

''இன்று காலையில் என்ன நடந்தது?''

ஜூலியாவின் உடல் ஒருமுறை நடுங்கி அடங்கியது.

''காலை உணவின்போது அந்தத் தரையில் ஏதோ ஒண்ணு போறதைப் பார்த்தேன்; எலியாக இருக்கும்னு நினைச்சேன். ஆனால் எனக்கு அதிர்ச்சி. அங்க ஒரு ஆமை இருந்தது. அதனுடைய முதுகில ஒரு காகிதம் ஒட்டப் பட்டிருந்தது; அந்தக் காகிதத்தில தட்டச்சு செய்யப்பட்ட கடிதம். 'இன்றிரவு ஒன்பது மணிக்கு ஒரு ஆள் வந்து பத்தாயிரம் பவுண்டைப் பெற்றுக் கொள்வான்' என்று அந்தக் கடிதத்தில எழுதியிருந்தது. பணம் கொடுக்காட்டி கிடோ கொலை செய்யப்படுவார். டான், எனக்கு ரொம்ப பயமாயிருக்கு.''

''இது கொஞ்சம் ஓவராக இருக்கு. ஆமை எப்படி வீட்டுக்குள்ள வந்தது?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''எனக்குத் தெரியாது? போலீஸைக் கூப்பிடும்படி கிடோரைக் கெஞ்சினேன். ஆனால் அவர் செய்யலை. இது செய்தித்தாள்களில் வந்தால் எல்லோரும் தன்னைக் கேலி செய்வாங்கன்னு அவர் நினைக்கிறார். அவருடைய குணம் உங்களுக்குத் தெரியுமே'' என்றாள் ஜூலியா.

டான் மோவாயைத் தடவினார்.

''இன்னிக்கி ராத்திரி உங்க ரெண்டு பேருக்கும் என்ன ப்ரொகிராம்?''

''ரேடியோவில் ஒலிபரப்பாகும் இசை நாடகத்தைக் கேட்கப் போறோம். இந்த மிரட்டலைப் பற்றிப் போலீசில் சொல்ல வேண்டாமா?''

டான் தயக்கத்துடன் தலையாட்டினார்.

''ஜூலியா, கிடோவுக்கு விருப்பமில்லாதபோது அதை செய்யக் கூடாது. இந்த மாதிரி செய்தி நாளிதழ்களில் வர்றது கிடோவுக்கு நல்லதல்ல. போலீசுக்குச் சொல்றதுனால என்ன லாபம்? வீட்டுக் காவலுக்கு அவர்கள் ஒரு போலீஸ்காரரை அனுப்பலாம். ஆனால் மாட்டிக் கொண்டிருப்பவனை ஒரு போலீஸ்காரரால் தடுக்க முடியாது. நாம் தற்காப்புக்காகச் சில நடவடிக்கைகளை எடுக்கலாம். ஆபத்து இல்லை என்று எனக்குத் தெரியும். இருந்தாலும் உன்னுடைய கவலையை நான் புரிஞ்சுக் கிறேன். நானும் ஹேரியும் இன்றிரவு அங்கே வறோம். நான் எதேச்சையாக வந்ததாக கிடோவிடம் சொல்றேன். நீ பயப்படாம இரு. நான், ஹேரி மற்றும் கிடோ இருக்கும்போது ஒரு பயித்திக்காரனைச் சமாளிப்பது பெரிய விஷயமில்லை. என்ன சொல்றே?'' என்றார் டான்.

ஜூலியாவின் முகம் இறுகியது.

''இது முட்டாள்தனமானதுதான். இருந்தாலும் நீயும் ஹேரியும் வந்தால் எனக்குத் தெம்பாக இருக்கும். வீட்டில்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

டிக்ஸனும் எதெலும்தான் இருக்கிறார்கள். எதுவும் நடக்காவிட்டாலும், நீ இருந்தால்...''

டான், இருக்கையை விட்டு எழுந்தார்.

''நான் எட்டு மணிக்குப் பிறகு வருகிறேன்; எதைப் பற்றியும் கவலைப்படாதே. நன்றாகச் சாப்பிடு; இந்தப் பிரச்சினையை மனதிலிருந்து எடுத்துவிடு.'' பேசிக் கொண்டே அவர்கள் வெளியறைக்கு வந்தனர். ''இன்றிரவு உன்னைப் பார்க்கிறேன்.''

அன்பான தோற்றத்தோடு செர்ரி அங்கே வந்தார்.

''திருமதி ஃபெரன்சிஸ் உங்களுக்காக ஒரு டாக்ஸி சொல்லியிருக்கிறேன். அது இப்போது வந்துவிடும்'' என்றார் செர்ரி.

ஜூலியா அவரைப் பார்த்துப் புன்னகைத்தாள். அவள் தைரியமாக இருப்பதைப் பார்த்து டானுக்கு மகிழ்ச்சி.

''நன்றி, செர்ரி'' என்றாள் ஜூலியா. டானைப் பார்த்து ''நீங்கள் இன்றிரவு எங்களோடு இருப்பீர்கள் என்பது எனக்குப் பெரிய ஆதரவு'' என்றாள்.

''நீ மிகவும் கவலைப்படுகிறாய்'' என்ற டான், ''உன் மனதை விட்டுக் கவலையை எடுத்துவிடு'' என்றார்.

அவளை ஏற்றிக் கொண்ட டாக்ஸி அகன்றது. டான் வரவேற்பறைக்குச் சென்று கோப்பையை காலி செய்தார்; ஜன்னலுக்கு அருகே நின்றிருந்த அவரது முகத்தில் சுருக்கங்கள் இருந்தன.

ஆமை.

இது ஏமாற்று வேலையா? அல்லது வேறு ஏதாவது விஷயமா? கிடோவின் நண்பர்கள் ஏதாவது விளையாடுகிறார்களா? டானுக்கு சந்தேகமாக இருந்தது. ஏதாவது ஒரு பயித்தியக்காரன் இதைச் செய்கிறானா?

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஒரு நிமிட யோசனைக்குப் பிறகு, தொலைபேசியை எடுத்து அரசாங்க எண் வொயிட் ஹால் 1212-ஐ டயல் செய்தார். சிறப்புப் படை போலீஸின் தலைமை சூப்ரென் டென்டென்ட் டிக்ஸ் என்பவரின் எண் அது. ஆமையைப் பற்றி அவரிடம் கேட்கலாம். டிக்ஸ் மதிய உணவிற்காக வெளியே சென்றிருப்பதாகவும் ஆறு மணிக்குத்தான் மீண்டும் வருவார் என்றும் டானுக்குச் சொல்லப்பட்டது.

''பரவாயில்லை'' என்ற டான், ''விஷயம் ஒண்ணுமில்லை'' என்றபடி இணைப்பைத் துண்டித்தார்.

மரியன் ரிக்பி வரவேற்பறைக்குள் வந்தாள். அவள் டானுடைய செயலாளர்; அழகான பெண்மணி.

''சர். ராபர்டோட ஒரு மணிக்கு மதிய உணவு என்பதை மறந்திடலையே?'' என்றாள் மரியன்.

''இல்லை. இன்றிரவு எனக்கு ஏதாவது வேலை இருக்கா?''

''திரைப்படத்தின் தனிக்காட்சி. நீங்கள் வருவதாகச் சொல்லியிருக்கீங்க'' என்றாள் மரியன்.

''அதுவா, அவங்கள கூப்பிட்டு என்னால் முடியாதுன்னு சொல்லிடுறியா? எனக்கு ஆமை என்பவரோடு அப்பாயின் மெண்ட் இருக்கிறது. திரைப்படத்தை விட இதில் திகில் அதிகம் இல்லையா?''

கிடோ ஃபெரன்சி உயரமானவர்; நிறம் சிகப்பு. சமீபத்தில் அவரும் ஜூலியாவும் போர்ட்ஃபினோவில் உல்லாசப் பயணம் செய்து திரும்பியிருந்தனர். அதன் விளைவாக அவருடைய அழகிய முகம் கறுத்துப் போயிருந் தது. பலூனைப் போல புடைத்திருந்த கிண்ணத்தில் அன்போடு ஊற்றினார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''என்னை ஏமாற்றிவிட்டோம் என்று நினைக்க வேண்டாம்'' என்று சொல்லிக் கொண்டே டம்ளரை டானிடம் கொடுத்தார். இந்தப் பக்கம் போகும்போது, விஸ்கிக்காக இங்கே வந்தீர்கள் என்பதை நான் நம்ப மாட்டேன். என்னைப் பாதுகாப்பதற்காக ஜூலியா உங்களைக் கூப்பிட்டிருக்கிறாள். அதுதானே உண்மை?''

டான் பதில் பேசவில்லை.

''வெளிநாட்டுக்காரராக இருந்தாலும் கிடோவின் ஆங்கிலம் அற்புதமாக இருக்கிறது. நீ என்ன சொல்கிறாய் ஜூலியா?'' என்ற டான் ''இதில் பாதி அளவுக்காவது நான் இத்தாலிய மொழி பேசினால் நன்றாக இருக்கும்'' என்றார் டான்.

''இத்தாலிய மொழியைத் தாய்மொழி போல நீங்கள் பேசுகிறீர்கள்'' என்றாள் ஜூலியா.

கிடோ அவளை அனுசரணையாகப் பார்த்தார்.

''இதுவும் உதவாது. டான் எவ்வளவு அழகாக இத்தாலிய மொழியைப் பேசியும் பயனில்லை'' என்று சொல்லிக் கொண்டே கிடோ, டான் இருந்த சோபாவுக்கு எதிரே உட்கார்ந்தார். ''உண்மையை ஒப்புக் கொள். இங்கே வந்து என்னைப் பாதுகாக்க வேண்டும் என்று ஜூலியா கேட்டுக் கொண்டாள். நீங்க வந்தது எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால் இந்தக் கோமாளியை நம்பறதா சொல்லாதீங்க. யார் அவனை நம்புவார்கள்? பத்தாயிரம் பவுண்டு. அந்தப் பணத்தை நான் எப்படி உருவாக்குவேன் என்று இந்த ஆமை நினைக்கிறது?''

டான் சிகரெட்டைப் பற்றவைத்தார்.

'' அதை நான் அப்படியே நம்பவில்லை. ஆனால் சில ஆபத்தான பயித்தியக்காரர்கள் இங்கே இருக்கிறார்கள். ஆனால் இந்த ஆளு இந்த காமெடியை ரொம்ப தூரம்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நீட்டறான். அந்த ஆமையும் அதன் மேல் ஒட்டப் பட்டிருந்த கடிதமும் எங்கே? நான் அதைப் பார்க்க வேண்டும்.''

''நீங்கள் அதைப் பார்க்கலாம். ஆமை டிக்ஸனிடம் இருக்கிறது'' என்ற கிடோ மணியடிப்பதற்காக எழுந்தார். ''அந்தக் கடிதம் என் மேஜையில் இருக்கிறது.''

கடிதத்தை எடுப்பதற்காக மேஜை டிராயரைத் திறந்தபோது கிடோவின் வேலையாள் டிக்ஸன் உள்ளே வந்தார். டிக்ஸன் முன்னாள் கடற்படை வீரர். அந்த உடல் அமைப்பு இப்போதும் தொடர்கிறது.

''அந்த ஆமையைக் கொண்டு வா. அதை டான் பார்க்க வேண்டுமாம்'' என்றார் கிடோ.

''கொண்டு வருகிறேன்'' என்று கூறிய டிக்ஸன் டானைப் பார்த்து விளக்கமாகத் தலையசைத்தார்.

''அந்தக் கடிதம் எங்கே, இந்த டிராயரில் தானே வைத்திருந்தேன். ஜூலியா, நீ எடுத்தாயா?'' என்று கேட்டார் கிடோ.

''இல்லை. நான் பார்க்கிறேன். உங்களால் எந்தப் பொருளையும் தேட முடியாது'' என்று சொல்லிக் கொண்டே அவள் எழுந்தாள்.

''நமக்குக் கல்யாணம் ஆன பிறகு எதையும் கண்டுபிடிக்க முடியாமல் போகிறது. அதனால் ஒன்றும் நஷ்டமில்லை. நமக்குத் தேவையான பொருளை ஜூலியாவே எடுத்துக் கொடுத்துவிடுகிறாள்'' என்று சொல்லிச் சிரித்தபடியே கிடோ உட்கார்ந்தார்.

''அது இங்க இல்ல. முதல் கடிதத்தைத் தூக்கி எறிஞ்ச மாதிரியே இதையும் எறிஞ்சிட்டீகளா'' என்றாள் ஜூலியா.

''இல்லை. மேல் டிராயரில்தான் வைச்சேன்.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அதற்குள் டிக்ஸன் உள்ளே வந்தார்.

''மன்னிக்க வேண்டும் ஐயா, இந்த ஆமையை நீங்கள் எடுத்தீர்களா?'' என்றார் டிக்ஸன்.

டான் அறையில் ஒரு அசாதாரணமான சூழ்நிலை உரு வானதைக் கவனித்தார்.

''நான் ஆமையை எடுக்கலை'' என்றார் கிடோ.

''மன்னிக்கணும். நான் வைத்திருந்த பெட்டியில ஆமை இல்லை.''

''அதுவாகவே வெளியே வந்திருக்கலாம்'' என்றார் டான்.

''இல்லை. அந்தப் பெட்டியின் மேலே ஒரு மூடியைப் போட்டிருந்தேன். யாரோ அந்த ஆமையை எடுத்துப் போயிருக்கணும்.''

''நல்லது டிக்ஸன். பரவாயில்லை. இது வீட்டுக்குள் சுத்தி வராதபடி பார்த்துக்கோங்க'' என்றார் கிடோ.

''சரி, ஐயா'' என்றபடி டிக்ஸன் வெளியேறினார்.

டான் ஜூலியாவைப் பார்த்தார்; அவளுடைய முகம் வெளுத்திருந்தது.

''யாரோ ஒருத்தர் தடயங்களை அகற்றிட்டாங்க'' என்றார் கிடோ. அவருடைய பேச்சிலேயே அவர் அதிர்ச்சியடைந்திருப்பது தெரிந்தது.

''யாரோ ஒருவன் இங்கே வந்திருக்கிறான்'' என்றாள் ஜூலியா.

''நீ என்ன நினைக்கிறாய், டான்'' என்றார் கிடோ.

''இந்தக் கோமாளி ரொம்பவும் விளையாடுறான். கிடோ, நாம் போலீசுக்குச் சொல்வது நல்லது'' என்றார் டான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கிடோவுக்குத் தயக்கம் ஏற்பட்டது. ஆனால் அவர் ஒத்துக் கொள்ளவில்லை.

''இல்லை. போலீசுக்குப் போகக் கூடாது. இதனால் ஏற்படற பப்ளிசிடியைத் தாங்க முடியாது. என் நிறுவனத்தை அது பாதிக்கும். போலீசைக் கூப்பிட வேண்டாம்'' என்றார் கிடோ.

''நீங்கள் முதலிலேயே போலீசுக்குப் போயிருக்கணும். உங்களுக்கு ஆபத்து...'' என்று ஜூலியா சத்தம் போட்டாள்.

''ஜூலியா, பதட்டப்படாதே'' என்றார் டான் பொறுமையாக. கிடோ சொல்வதில் அர்த்தம் இருக்கிறது. இந்த மாதிரி விஷயங்களை பத்திரிகைகள் பெரிதுபடுத்தி விடும். கிடோ இங்கே பத்திரமாக இருக்கிறார். அவர் தனி ஆள் இல்லை. நான் இருக்கிறேன். கூப்பிட்டபோது வருவதற்கு டிக்ஸன் இருக்கிறார். தவிர, கிடோவுக்குத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தெரியும் என்பதை மறந்துவிடாதே. வீட்டுக்கு வெளியே ஹேரி இருக்கிறார். நடப்பதைப் பற்றி ஹேரியிடம் சொல்லியிருக்கிறேன். அவரும் எச்சரிக்கையாக இருக்கிறார். போலீசை அழைத்தாலும் நம்மைவிட அதிகமாக அவர்களால் எதுவும் செய்ய முடியாது...''

அலமாரியிலிருந்த கடிகாரத்தில் ஒன்பது மணி அடிக்கவே டான் நிறுத்திக் கொண்டார்.

ஜூலியாவுக்கு மூச்சு வாங்கியது.

''பணத்தை வாங்கிக் கொள்ள ஒன்பது மணிக்கு ஆள் வரும் என்று அந்தக் கடிதத்தில் இருந்தது'' என்ற ஜூலியா, கிடோவின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

''ஜூலியா பயப்படுவதற்கு எதுவும் இல்லை. யாரும் வரமாட்டாங்க'' என்றார் கிடோ.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே வாசல் மணி ஒலித்தது; அதிர்ச்சியில் ஜூலியாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

கிடோ அவளை அணைத்துக் கொண்டார்; டானைக் குறிப்பாகப் பார்த்தார்.

அந்த மூவரும் அசைவில்லாமல் இருந்தார்கள்; டிக்ஸன் வரவேற்பறையைக் கடந்து கதவைத் திறப்பதைக் கேட்டார்கள். யாரோ பேசும் சத்தம் கேட்டது, பிறகு டிக்ஸன் உள்ளே வந்தார்.

"உறையிடப்பட்ட விஷயத்திற்காக ஒரு ஆள் வந்திருக் கிறார்" என்றார் டிக்ஸன். "அவன் ஒரு உறையிடப்பட்ட பெட்டிக்காக வந்திருப்பதாகச் சொல்றான். அது என்ன?"

ஜூலியாவின் உடல் நடுங்கியது. முகம் வெளுத்திருந்தது.

"நான் அவனை விடமாட்டேன்" என்று பாய்ந்த கிடோவை டான் தடுத்தார்.

"இங்கேயே ஜூலியாவோடு இருங்க. அவனை நான் பார்த்துக்கிறேன்" என்று சொல்லிவிட்டு டான் கதவருகே சென்றார்; டிக்ஸன் அவரைப் பின் தொடர்ந்தார்.

வரவேற்பறையின் வெளிச்சத்தில் ஒரு பதினாறு வயதுப் பையன் நின்றிருந்தான். அவன் கொரியர் நிறுவனத்தின் உடை அணிந்திருந்தான்.

"தம்பி, நீ எதுவும் தவறான முகவரிக்கு வரலையே?" என்று டான் கேட்டார்.

"இல்லை, ஐயா" என்ற அந்தப் பையன் ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்தான். "திரு. ஃபெரன்சி, தி கிரெஸ்ட், ஸ்பானி பார்ட்ஸ் அவென்யூ, ஹாம்ப்ஸ்டெட், ஒரு பார்சலை வாங்கி வர வேண்டும். இதுதானே தி கிரெஸ்ட்?"

"அது சரி. இந்த பார்சலை நீ எங்கே எடுத்துட்டுப் போகப் போறே?"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''பிக்காடெல்லி ஹோட்டலுக்குப் போகணும். அங்க மான்ட் கோமரி என்பவர் காத்திருப்பார். அவரிடம் கொடுத்துவிட்டு கையெழுத்து வாங்கணும்'' என்றான் அந்தப் பையன்.

டான் பையனைக் கவனித்தார். அவனைப் பார்த்தால் உண்மையைச் சொல்வதாகத் தெரிந்தது.

''மான்ட் கோமரியை எப்படிக் கண்டுபிடிப்பே?''

பையன் குழப்பமாகிவிட்டான்.

''அவர் வெள்ளை மழைக் கோட்டும் கறுப்புத் தொப்பியும் அணிந்திருப்பார். ஏன், ஏதாவது பிரச்சினையா?''

இல்லை என்பது மாதிரி டான் தலையசைத்தார்.

''இல்லை. நான் பார்சலைக் கொண்டு வரேன். நீ இங்கேயே இரு'' என்று சொல்லிவிட்டு டிக்ஸனைப் பார்த்து ''நாம சமையலறைக்குப் போகலாம்'' என்றார். இப்போது டிக்ஸனும் குழப்பமாகிவிட்டார். டானும் டிக்ஸனும் சமையலறைக்குச் சென்றனர்.

கதவை மூடிய பிறகு டான் கூறினார். ''பழைய செய்தித் தாள்களை, ஒரு புத்தக அளவுக்கு மடித்து ஒரு பார்சலைத் தயார் செய்.''

டிக்ஸனுக்கு ஆச்சரியம், இருந்தாலும் சொன்னபடி செய்து பார்சலை டானிடம் கொடுத்தார்.

''இது நல்லா இருக்கு'' என்றார் டான்.

வாசலுக்குச் சென்ற அவர், பையனிடம் பார்சலைக் கொடுத்தார்.

''நீ செய்ய வேண்டியது இதுதான். பிக்காடெல்லி ஓட்டலுக்கு பத்து மணிக்கு முன்னால் போக வேண்டாம்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இது மிகவும் முக்கியம். திரு. மான்ட் கோமரியிடம் இந்தப் பார்சலைக் கொடுத்துக் கையெழுத்து வாங்கிக்கோ. ஆனால் பத்து மணிக்குத்தான். நான் சொல்றது புரியுதா?''

பையன் தலையசைத்தான்.

''செய்துவிடுகிறேன், ஐயா''

''நல்லது. நீ போகலாம்'' என்று சொல்லிய டான் ஒரு பவுண்டு நோட்டை அவன் கையில் வைத்தார்.

''இந்த மழைக்காலத்தில நீ செய்யற வேலைக்காக இது'' என்றார்.

பையனுக்கு ஒரே மகிழ்ச்சி.

''நீங்கள் சொன்னபடியே செய்கிறேன்'' என்றான். பையன் வெளியேறிய பிறகு டான் வரவேற்பறைக்கு வந்தார். கிடோவும் ஜூலியாவும் சோபாவில் அருகருகே உட்கார்ந்திருந்தனர். ஜூலி யாவின் பயம் இன்னும் விலகவில்லை; கிடோவின் கரத்தைப் பலமாகப் பிடித்துக் கொண்டிருந்தாள். கதவை மூடிவிட்டு கணப்பருகே வந்த டான் ''யாரோ ஒரு பயித்தியக்காரன்தான் இதைச் செய்றான். அவன் திரு. மான்ட் கோமாரியாக இருக்க லாம். உன்னிடமிருந்து பெறப்பட்ட பத்தாயிரம் பவுண்டுக் காக அவன் மிக்காடெல்லி ஓட்டலில் காத்துக்கிட்டிருக் கான். நான் ஒரு போலி பார்சலைத் தயார் செய்து அந்தப் பையனிடம் கொடுத்திருக்கேன். பையன் அதைக் கொடுக்கப் போறான். நாம் போலீசிடம் போகணும். அது அவசியம். இந்த மாதிரி ஆட்களை விட்டுவைக்கக் கூடாது. அவனை நிறுத்தாவிட்டால் மற்றவர்களைத் தொந்தரவு செய்வான். நான் டிக்ஸை அழைக்கிறேன். டிக்ஸ் அவனைப் பார்த்துக் கொள்வார்'' என்றார்.

கிடோ தோளைக் குலுக்கிக் கொண்டார்.

''சரி, போலீசுக்குச் சொல்லிடு'' என்றார் கிடோ.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

டான் தொலைபேசியை எடுத்தார். காதருகே ரிசீவரை வைத்திருந்தவர் சிறிது நேரத்திற்குப் பிறகு அதைக் கீழே வைத்துவிட்டார்.

இந்த விஷயத்தை விளையாட்டாக நினைத்துவிட்டோம் என்கிற பயம் அவர் முகத்தில் தெரிந்தது.

''இது இவ்வளவு சுலபமல்ல என்பதை நான் யோசித்திருக்கணும். இந்த இணைப்பு வேலை செய்யலை'' என்றார் டான்.

''யாராவது இதைத் துண்டிச்சுட்டாங்களா?'' என்றபடி ஜூலியா எழுந்து நின்றாள்.

''தெரியலை. டயல் டோன் இல்லை. வேறு போன் எங்க இருக்கு?''

''இந்தத் தெருவில் அரை மைல் போகணும். நீங்க போறீங்களா? இல்ல நான் டிக்சனை அனுப்பட்டுமா?''

டான் கணப்புக்கு முதுகைக் காட்டிக் கொண்டு நின்றார். வெகு நேரமாக தரை விரிப்பைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''கிடோ, அவசரப்படவேண்டாம். இதை நாம் அலட்சியப் படுத்திவிட்டோம். நாம் இருவருமே. நாம் கவனமாக இருக்கணும். தவறாக எதுவும் செய்யக்கூடாது'' என்றார் டான்.

''கிடோவுக்கு ஆபத்துங்கறீங்களா?'' என்றாள் ஜூலியா.

''எனக்குத் தெரியாது. ஆனால் அப்படி இருப்பதாக நினைத்துக் கொண்டு நாம் செயல்பட வேண்டும். நம்முடைய எதிரி காரியக்காரனாக இருந்தால் அவன் பீக்காடெல்லி ஓட்டலில் இருக்க மாட்டான். பையன் அந்தப் பார்சலை எடுத்துப் போவதைப் பற்றிச் சொன்ன போது எனக்கு இது தோன்றவில்லை. அவன் அந்தப்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பையனை வழியிலேயே மடக்கிவிடுவான். உங்கள் இருவரையும் பயமுறுத்த வேண்டும் என்று நான் நினைக்க வில்லை. ஆனால் நிலைமையை நாம் உணர வேண்டும். நம்முடைய ஆள் பலத்தைக் குறைக்கக் கூடாது. இந்த இடம் தனியாக இருக்கிறது; பக்கத்தில் வீடுகள் இல்லை; வீதி இருட்டாய் இருக்கிறது. அந்தப் பயித்தியக்காரன் நாம் தொலைபேசியைப் பயன்படுத்தாமல் இருக்க முயற்சி செய்யலாம். எல்லாம் அவனுடைய மனோநிலையைப் பொறுத்தது. அந்தப் பார்சலில் வெற்றுக் காகிதம்தான் இருக்கிறது என்பது தெரிந்தவுடன் அவன் என்ன செய்வான்? அத்தோடு விட்டுவிடுவானா அல்லது அவன் எச்சரித்தபடி செய்வானா?

கிடோ சிகரெட்டைப் பற்றவைத்தார்; அவருக்கு இதில் சுவாரஸ்யம் ஏற்பட்டது போலத் தெரிந்தது.

''இங்கே வரவேண்டும் என்கிற எண்ணம் இல்லாவிட்டால் அவன் தொலைபேசியைத் துண்டிக்க மாட்டான்'' என்றார் கிடோ.

டான் அதை ஆமோதித்தார்.

''ஆமாம். அவன் இங்கே வரலாம்.'' ஜூலியாவைப் பார்த்து அவர் புன்னகைத்தார். ''எல்லாம் நல்லபடியா நடக்கும். நீ பயப்படாதே. இந்த வீட்டில் வாட்ட சாட்டமான மூன்று பேர் இருக்கிறோம். வெளியே ஒருவர் இருக்கிறார்.''

''சரி'' என்ற ஜூலியாவால் உற்சாகமாகப் பேச முடியவில்லை. ''நாம் டிக்ஸனை அழைத்து விஷயத்தைச் சொல்லிடுவோம்'' என்றார் டான். ''நான் ஹாரியிடம் சொல்லப் போவதில்லை. இந்த வீட்டைக் கண்காணிக்க வேண்டும் என்பது அவனுக்குத் தெரியும். நான் அவனைப் பார்க்கப் போனால் அவரிருக்கும் இடம் மற்றவர்களுக்குத் தெரிந்துவிடும். சரியான நேரத்தில் அவன் சரியாகச்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

செயல்படுவான். இப்போது டிக்ஸனைக் கூப்பிடுவோம்'' என்றார் அவர்.

கிடோ மணியை ஒலிக்கச் செய்தார். டிக்ஸன் வந்தவுடன் நிலைமையின் தீவிரம் அவருக்கு விளக்கப் பட்டது. சொல்லப்பட்டதை டிக்ஸன் அமைதியாகக் கேட்டுக்கொண்டார்.

''நாம் மூன்று பேர் இருக்கும்போது அவனால என்ன செய்ய முடியும்? இருந்தாலும் நீங்கள் அனுமதிச்சால் நான் போலீசோடு தொடர்பு கொள்றேன்'' என்றார் டிக்ஸன்.

''வேண்டாம். நாம இங்கேயே இருப்போம். முதலில் இந்த வீட்டை முழுவதுமாகச் சோதனை செய்யணும். யாராவது உள்ளே வந்திருக்கலாம் அல்லது வர முயற்சி செய்யலாம். நீங்க இங்கே திரு. ஃபெரன்சியோடு இருக்கணும். நான் வீடு முழுவதும் பார்க்கிறேன்'' என்றார் டான்.

''நான் உன்னோடு வறேன்'' என்றார் கிடோ.

''வேண்டாம். நீ ஜூலியாவோடு இரு. டிக்ஸன், திரு. ஃபெரன்சியைக் கவனமாகப் பார்த்துக்கோ.''

''சரி, ஐயா'' என்றார் டிக்ஸன்.

கிடோ, தோள்களைக் குலுக்கிக் கொண்டார்.

''சரி, உங்கள் விருப்பப்படி செய்யுங்க. ஆனால் எச்சரிக்கையாக இருங்க'' என்று கூறியபடி கிடோ உட்கார்ந்தார். ஜூலியாவை அழைத்து ''வா கண்ணா, என்னோடு உட்கார், என்னுடைய கையைப் பிடிச்சுக்கோ. நாளைக் காலையில் இதுபத்தி பேசி நாம் சிரிக்கலாம்.''

டிக்ஸன் கணப்பருகே சென்று நெருப்பைக் கிளறும் துடுப்பைக் கையில் எடுத்தார்; அதை சமநிலையாக

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வைத்துப் பார்த்துத் திருப்தியடைந்தார்; கதவருகே சென்றார்.

''இங்கே யாரும் வர முடியாது, ஐயா'' என்றார் டிக்ஸன்.

''முடிந்தால் என்னைத் தள்ளிவிட்டு வரட்டும்.''

டான் முகத்தில் ஆமோதிப்பதாக ஒரு புன்னகை.

''நல்லது. நான் நீண்ட நேரம் எடுத்துக்கொள்ள மாட்டேன். கதவை மூடுங்க. நான் வரும்போது குரல் கொடுக்கிறேன்'' என்றார் டான்.

வீட்டில் ஒரு வேலைக்காரி இருக்கிறாள் என்ற யோசனை டானுக்கு ஏற்பட்டது. டிக்ஸனிடம் அவளைப் பற்றி விசாரித்தார்.

''அவள் சினிமாவுக்குப் போயிருக்கா ஐயா. பத்தரை மணிக்குத்தான் வருவா.''

''நல்லது. அப்படின்னா இதைத் தவிர மற்ற அறைகள்ளாம் காலியா இருக்கு இல்லியா?''

''அப்படித்தான், ஐயா.''

டான் கதவைச் சாத்தினார். வெளிச்சம் நிறைந்த அந்தக் கூடத்தில் நின்றபடி கவனித்தார். வீடு அமைதியாக இருந்தது. மாடியிலிருந்து ஒரு கடிகாரத்தின் ஓசை கேட்டது; சமையலறையிலிருந்து குளிர்பதனப் பெட்டியின் சத்தம் கேட்டது. சத்தம் போடாமல் வேகமாக மேல் பகுதிக்கு அவர் சென்றார்.

மாடியிலிருந்த ஆறு அறைகளையும் முழுவதுமாகப் பார்த்துவிட்டார்; ஒவ்வொரு அறையை விட்டு வெளி யேறும்போதும் அதைத் தாளிட்டார். அறைக்குள் யாரும் இருப்பார்கள் என அவர் எதிர்பார்க்கவில்லை, அங்கு யாரும் இல்லை. இருந்தாலும் அவருடைய மனநிலை

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

குழப்பமாக இருந்தது. ஆறாவது கதவைத் திறந்து மிக நேர்த்தியான குளியலறையைப் பார்த்தார். அங்கே யாரும் ஒளிந்துகொள்ள வசதியில்லை. நடைபாதைக்கு வந்து, கைப்பிடிக் கம்பியை நெருங்கிக் கீழே உள்ள கூடத்தைப் பார்த்தார்.

அப்போது, எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் வீட்டின் விளக்குகள் அணைந்தன.

மூச்சுத் திணறும் இருட்டில் அவர் முயற்சி இல்லாமல் இருந்தார்; கையோடு டார்ச் லைட் எடுத்துவரவில்லையே என்று யோசித்தார். கையால் கைப்பிடிக் கம்பியைத் தடவியபடியே படிக்கட்டை நோக்கி நடந்தார். ஒரு சில அடிகள் எடுத்து வைத்தவுடன் ஜூலியா அலறுவது கேட்டது.

கிடோ இருந்த அறையின் ஜன்னலுக்கு வெளியே, தோட்டத்தில் ஷாபிரோ காத்திருந்தார். ஒரு மைலுக்கு அப்பால் கிராண்டர் எலெக்ட்ரிக் கேபிளைத் தொட்டு மின்சார ஓட்டத்தைத் தடுப்பதற்காக அவர் காத்திருந்தார்.

ஷாபிரோவின் முகத்தில் வியர்வை வழிந்தது. அவனுடைய வலது கையில் அகலமான கத்தி இருந்தது. அறையின் ஜன்னல்களில் இருந்த திரை வழியாகத் தெரிந்த வெளிச்சம் திடீரென அணைந்துவிட்டது. அவன் விரல்களை ஜன்னலின் மரச் சட்டத்தின் கீழே கொடுத்துத் தூக்கினான்; பிறகு விலகிக் கொண்டான்.

லேசான காற்றில் ஜன்னலின் திரை அசைந்தது. பத்து வினாடிகள் ஷாபிரோ பொறுமையாக இருந்தான். பிறகு அந்தத் திரை விலக்கப்பட்டது.

திறந்திருந்த ஜன்னலுக்கு நேரே உயரமான மனிதர் ஒருவர் நின்றிருந்தார். மாலை நேர ஆடையில் இருந்த அவர் வெள்ளைச் சட்டை அணிந்திருந்தார். மேகத்தால்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மறைக்கப்பட்ட சந்திரனின் வெளிச்சம் அந்தச் சட்டையில் விழுந்தது.

ஷாபிரோ கத்தியைத் தூக்கி, கையை வீசினான்; கத்தி காற்று வழியாகப் பறந்தது; இவ்வளவு சுலபமாக இதுவரை இலக்கை எட்டியதில்லை.

கத்தி பாய்ந்த சத்தம் கேட்டது; அந்த மனிதர் கீழே விழுந்தார். ஷாபிரோ திரும்பி வீட்டின் பக்கமாக ஓடி, தன்னுடைய கார் இருக்குமிடத்தை அடைந்தான்.

இருட்டிலே அவன் செல்லும்போது, டான் படிகளில் இறங்கி வேகமாக வந்தார். அப்போது ஜூலியா மீண்டும் அலறினாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அத்தியாயம் மூன்று

கூந்தலின் நிறம் சிகப்பு

கிடோவின் பணி அறையில் கடந்த அரை மணி நேரமாக டான் உட்கார்ந்திருந்தார். அவருடைய விரல்களுக்கிடையே தேவையில்லாமல் ஒரு சிகரெட் புகைந்து கொண்டிருந்தது. இன்ஸ்பெக்டர் ஹோரோக்ஸ் உள்ளே வந்தார்; அவருடைய உடல்வாகு அளவுக்கு அதிகமாக இருந்தது.

''ஐயா,'' என்றார் ஹோரோக்ஸ் கதவைச் சாத்திய படியே. ''இதைப் பற்றி இன்னும் கொஞ்சம் பேசலாமா?''

''பேசலாம்'' என்றார் டான் உணர்ச்சியில்லாமல். கிடோவின் மரணத்தால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து அவர் இன்னும் விலகவில்லை. அவரைப் பொறுத்தவரை இப்போது அவருக்குத் தனிமை அவசியம்.

''நடந்ததைப் பற்றி நீங்கள் மறுபடியும் ஒரு தடவை விவரமாகச் சொல்லணும்'' என்றார் ஹோரோக்ஸ். கணப்பருகே வந்த அவர் தன்னுடைய பருமனான உடலை டானுக்கு எதிரே உள்ள நாற்காலியில் அமர்த்தினார்.

''சொல்றேன்'' என்றார் டான். தான் ஜூலியாவைச் சந்தித்தது, மிரட்டல் கடிதத்தைப் பற்றிக் கேள்விப்பட்டது, கிடோவைப் பாதுகாப்பதற்காக இங்கே வந்தது ஆகிய வற்றை விவரமாகக் கூறினார். ''இதை நான் தீவிரமாக எடுத்துக்கலை'' என்றவர் கணப்பில் எரியும் நெருப்பை

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

உற்றுப் பார்த்தார். ''அவருடைய சாவுக்கு நான் பொறுப்பாகிட்டேன். தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்குன்னு தெரியற வரை இது பிரச்சினை யாகும்னு நான் நினைக்கலை. அப்போதும் இவ்வளவு சீக்கிரமாக இது நடக்கும்னு எதிர்பார்க்கவில்லை. நானும் டிக்ஸனும் இருக்கும்போது ஆபத்து ஏற்படாதுனு நினைச்சேன். வெளியே என்னுடைய டிரைவர் வீட்டைக் கண்காணித்துக் கொண்டு இருந்தான்.''

''அந்த டிரைவர் எங்கே?'' என்று கேட்டார் ஹோரோக்ஸ்.

''தெரியவில்லை. வெளியே போய்ப் பார்த்தேன். அவனைக் காணோம். கொலைகாரனைத் தொடர்ந்து அவன் போயிருக்கலாம்.''

ஹோரோக்ஸிடமிருந்து உறுமல் சத்தம் வெளிப்பட்டது.

''அப்படி இருக்குமோ?''

''நான் அப்படித்தான் நினைக்கிறேன். நான் உடனடியாக வீட்டுக்குப் போகணும். அவன் என்னைத் தொடர்பு கொள்ள முயற்சி செய்யலாம்.''

''இன்னும் சிறிது நேரம்தான். சில முக்கியமான ஒன்றிரண்டு விஷயங்களை நான் கேட்கணும். கொலைகாரனை நீங்கள் பார்க்கலையா?'' என்றார் ஹோரோக்ஸ்.

''இல்லை. டிக்ஸனை திரு. ஃபெரன்சியோடு இருக்கச் சொல்லிட்டு நான் மாடிக்குப் போனேன். அங்கே ஒவ்வொரு அறையாத் தேடினேன். அப்போது விளக்குகள் அணைஞ்சது. திருமதி ஃபெரன்சி அலர்ற சத்தம் கேட்டது. நான் வேகமாகக் கீழே வந்து வரவேற்பறைக்கு வந்தேன். இங்கே முழு இருட்டாக இருந்தது. நான் வரும் போது குரல் கொடுப்பேன்னு டிக்சனிடம் சொல்லியிருந்தேன்;

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அதை அவசரத்தில் மறந்துட்டேன். நான் வெளியாள்னு நினைச்சு டிக்சன் என்னைத் தாக்கிட்டார். நாங்க கொஞ்ச நேரம் சண்டை போட்டோம். அவரை நினைவில்லாமல் செய்த பிறகுதான் என்னை விடுவித்தார். ஒரு டார்ச்லைட்டைக் கண்டுபிடிப்பதற்குள்ள கொலைகாரன் தப்பிவிட்டான். திறந்திருந்த ஜன்னலுக்கு அருகே திரு. ஃபெரன்சி விழுந்தருப்பதைப் பார்த்தேன். திருமதி. ஃபெரென்சி மயக்கமடைந்துட்டார். பிறகு இரண்டு போலீஸ்காரர்கள் வந்தாங்க. அதுக்குப் பிறகு நடந்தது உங்களுக்குத் தெரியும்.''

ஹோரோக்ஸ் தலையசைத்தார்.

''கொலைகாரன் விளக்குகளை அணைச்சுவிட்டான். பிறகு ஜன்னலைத் திறந்திருக்கான். திரு. ஃபெரன்சி காற்று வரதை உணர்ந்திருக்கணும். அல்லது அவன் ஜன்னலைத் திறப்பதைக் கேட்டிருக்கணும். அவர் ஜன்னலருகே போயிருக்கிறார். கொலைகாரன் அவருக்காகக் காத்துக் கிட்டு அங்க இருந்திருக்கிறான். அவர் திரையை விலக்கிய வுடன் அவன் கத்தியை வீசீட்டான்'' என்றார் ஹோ ரோக்ஸ்.

''போலீஸ்காரர்கள் எப்படி இங்கே வந்தாங்க? திருமதி. ஃபெரன்சி போட்ட சத்தம் அவங்களுக்குக் கேட்டதா?''

''இல்லை. அது அந்தக் கொரியர் பையனால். அவன் இங் கிருந்து வெளியேறியவுடன் யாரோ ஒருவன் அவனைக் கட்டையால் அடித்திருக்கிறான். ஆனால் பையன் சாமர்த்தியசாலி. அடிவாங்காமல் தப்பித்துவிட்டான். ஓடிய பையனை அவன் துரத்தியிருக்கிறான். பையன் அவனை சரியாகப் பார்க்கவில்லை; 'உயரமான ஆள், ஒல்லியான உடல்' என்று சொல்றான். இங்கிருந்தே ஓடிய பையன் அவசரப் போலீஸ் உதவிக்கு டயல் செய்துட்டான். எங்களுடைய வண்டி அவனை ஏற்றிக் கொண்டு இங்கே வந்தது. ஆனால் அதற்குள் எல்லாமே முடிஞ்சுட்டது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

டான் முன்நெற்றியைத் தேய்த்துக் கொண்டார். "டிக்சன் ஏதாவது சொன்னாரா? அவர் எதையாவது பார்த்தாரா?"

ஹோரோக்ஸ் இல்லையென்றார்.

"இப்போதுதான் அவரோடு பேசப் போகிறேன். உங்களிடமிருந்து வாங்கிய அடியிலிருந்து இன்னும் அவர் சரியாகவில்லை."

டான் தடுமாறினார்.

"இது என்னுடைய குற்றம்தான். நான் குரல் கொடுப்பதாகச் செரல்லியிருந்தேன். அதனால்தான் என்னைக் கடுமையாகத் தாக்கிவிட்டார், அவர் புலிபோலப் பாய்ந்தார்."

ஒரு போலீஸ்காரர் உள்ளே வந்தார்.

"மன்னிக்க வேண்டும், ஐயா, திரு. மிக்லெம்மைத் தேடி ஒரு பெண் வந்திருக்கிறார்."

"அவர் என்னுடைய செயலாளர். நான் உங்கள் போலீஸ்காரரிடம் அவரோடு பேசச் சொன்னேன். திருமதி. ஃபெரன்சியைத் தேற்றுவதற்கு அவர் உதவியாக இருப்பார்" என்று சொல்லிக் கொண்டே டிக்ஸன் எழுந்தார்.

"நல்லது. நீங்கள் செயலாளருடன் பேசும்போது நான் டிக்ஸனைக் கவனிக்கிறேன்" என்றார் ஹோரோக்ஸ்.

டான் வெளியே வந்து மரியனைப் பார்த்தார்.

"இங்கே பயங்கரமான சம்பவம் நடந்துவிட்டது. கிடோ கொலை செய்யப்பட்டுவிட்டார். ஜூலியா அதிர்ச்சியில் மயக்கமாகிவிட்டார். வேலைக்காரி அவரோடு இருக்கிறார். ஆனால் அவரால் அதிகம் பயனில்லை. நீ அவளைப் பார்த்துக் கொள்கிறாயா? நீ மருத்துவரை அழைக்கலாம். வேலைக்காரியிடம் பேசு. இதை உன் பொறுப்பில் விட்டுவிடுகிறேன்."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''நான் பார்த்துக் கொள்கிறேன். அவள் எங்கே?''

எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. எந்தப் பதற்றமும் இல்லை. மரியானுடைய தைரியம் டானுக்கு எப்போதும் ஆச்சரியம்தான். எந்தச் சூழ்நிலையும் அவளைப் பாதிப் பதில்லை. இதைவிட ஜூலியாவைப் பார்த்துக் கொள்ள வேறு ஆள் தேவையில்லை.

''மேல்படிக்கட்டுக்கு எதிரே உள்ள கதவு.''

மாடியின் படிக்கட்டுகளில் வேகமாக ஏறினாள். டான் நூலக அறைக்குள் சென்றாள். அங்கிருந்த சோபாவில் டிக்சன் படுத்திருந்தார், அவருக்கருகே இன்ஸ்பெக்டர் ஹோரோக்ஸ்.

''டிக்சன் என்னை மன்னிக்கவேண்டும். இது என் னுடைய தவறுதான். நீங்கள் கடமையைத்தான் செய்தீர்கள்'' என்றார் டான்.

''இல்லை. இல்லை. அது என்னுடைய தவறு. என்னுடைய மூளை வேலை செய்யவில்லை. இருட்டு என்னைக் குழப்பிவிட்டது. அது நீங்கள்தான் என்பதை நான் கவனித்திருக்க வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டே டிக்சன் எழுந்து உட்கார்ந்தார்.

''பரவாயில்லை'' என்றார் டான். இன்ஸ்பெக்டர் ஹோரோக்ஸைப் பார்த்து ''இன்ஸ்பெக்டர், நீங்கள் கேட்கலாம். நான் குறுக்கிடவில்லை'' என்றார்.

''திரு. மிக்லெம் மாடிக்குப் போனபிறகு என்ன நடந்தது என்பதைச் சொல்கிறீர்களா?'' என்றார் இன்ஸ்பெக்டர் ஹோரோக்ஸ்.

''ஐயா, நான் கதவருகே காவலாக நின்றேன். திரு. ஃபெரன்சி திருமதி ஃபெரன்சியோடு சோபாவில் உட்கார்ந் திருந்தார். திடீரென்று விளக்குகள் அணைந்துவிட்டன. திரு. ஃபெரன்சி எழுந்து நின்றார். ஜன்னல் திறந்திருப்பது

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பற்றி ஏதோ சொன்னார். திருமதி. ஃபெரன்சி அலறினார். திரு. ஃபெரன்சி திரையை விலக்குவதைக் கேட்டேன். வெளியே இருட்டாக இருந்தது, மழை பெய்து கொண்டிருந்தது. என்னால் எதையும் பார்க்க முடியவில்லை. ஒரு முட்டாளைப் போல இருட்டையே பார்த்துக் கொண்டிருந்தே [illegible] கதவு திறந்தது. வரும்போது குரல் கொடுப்பதாக திரு. மிக்லெம் சொல்லியிருந்தார். எனக்கு அது ஞாபகமிருந்தது. ஆகவே வேறு ஆள் வருவதாக நினைத்துவிட்டேன். அவரை அடித்துவிட்டேன். அவர் ஒரு குத்தில் என்னைப் படுக்க வைத்துவிட்டார்.''

''ஆக, திரு. ஃபெரென்சிக்கு என்ன ஆயிற்று என்பதை நீங்கள் பார்க்கவில்லை?'' என்று கடுப்போடு கேட்டார் ஹோரோக்ஸ்.

''இல்லை ஐயா, நான் பார்க்கவில்லை.''

டான் தோள்களை உயர்த்திக் கொண்டார். எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. அவர் ஹாரியை நினைத்தார்.

''தொலைபேசி வேலை செய்கிறதா?'' என்று ஹோரோக்ஸைக் கேட்டார்.

''இல்லை.'' என்றார் ஹோரோக்ஸ். ''அந்தக் கம்பியை எந்த இடத்தில் அறுத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை.''

''அப்படியானால் நான் என் இடத்திற்குப் போகிறேன். என்னுடைய டிரைவர் என்னைத் தொடர்புகொள்ள முயற்சி செய்யலாம். ஏதாவது தகவல் இருந்தால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்.''

''அப்படி ஏதாவது தெரிந்தால், மகிழ்ச்சி.''

டிக்ஸனைப் பார்த்து தலையசைத்துவிட்டு டான் மாடிப் படிகளில் ஏறினார். ஜூலியாவின் அறையில் கதவைத் தட்டினார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மரியன் கதவைத் திறந்தாள்.

''டாக்டர் வருகிறார். அவளுக்கு நினைவு திரும்ப வில்லை'' என்றாள் மரியன்.

''அவளோடு இரு. நான் வீட்டுக்குப் போகிறேன். ஹாரி அந்தக் கொலையாளியைப் பார்த்திருக்கலாம். அவர் என்னோடு பேச விரும்பலாம்.''

''நான் இவளோடு இருக்கிறேன்.''

மரியனை விட்டு அகன்ற டான் தன்னுடைய பென்ட்லே காரை எடுத்துக்கொண்டு அப்பர் ப்ரூக் மியூஸுக்குச் சென்றார். வீட்டுக்கு அருகே வந்தவுடன் வாசல் கதவு திறந்தது; சொர்ரி வெளிப்பட்டார். டான் காரின் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். கம்பீரமாக தன்னை நோக்கி வந்த சொர்ரியைப் பார்த்து ''ஹாரியிடமிருந்து ஏதாவது தகவல் உண்டா?'' என்று கேட்டார்.

''அவர் அரைமணி நேரத்திற்கு முன் தொலைபேசியில் பேசினார். உங்களை உடனடியாக ஏதென்ஸ் தெருவுக்கு வரச் சொன்னார். பழைய காம்ப்டன் தெருவில் இடது பக்கம் இரண்டாவது திருப்பம் அது.''

''நன்றி'' என்றார் டான். காரைப் ப வடிவத்தில் திருப்பி இருண்டு போயிருந்த ஆளில்லாத தெருக்களில் வேகமாகச் சென்றார்.

ஏதென்ஸ் தெரு ஒரு முட்டுச் சந்து; குறுகலாக இருந்த தெருவில் ஒரே ஒரு தெருவிளக்கின் மங்கலான ஒளி.

இருட்டில் மறைந்தபடியே ஈரமான நடைபாதையில் அவர் வேகமாக நடந்தார். தெருவின் முடிவில் இருந்தது. ஹாரியை நோக்கி நடந்தார்.

''நல்ல வேளையாக நீங்கள் வந்துவிட்டீர்கள். கடந்த ஒரு மணி நேரமாக உங்களோடு பேச முயற்சி செய்கிறேன்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தொலைபேசி பூத்திலிருந்து தொடர்ந்து முயற்சி செய்தும் திரு. ஃபெரன்சியின் வீட்டோடு இணைப்பு இல்லை.''

''இங்கே என்ன நடக்கிறது?'' என்றார் டான்.

''திரு. ஃபெரன்சியின் வீட்டிலிருந்து ஒருவன் வெளி யேறுவதைப் பார்த்தேன். அவனைப் பின் தொடர்ந்தேன். அவன் எதிர்ப்பக்கமுள்ள வீட்டில் இருக்கிறான்.''

டான் சற்று நகர்ந்துகொண்டார்.

''எந்த வீடு?''

''சுவரு அருகே இருக்கும் வீடு.''

வீடு மூன்று தளங்களாய் இருந்தது. அது இருட்டில் இருந்தது. ஒவ்வொரு தளத்திலும் இரண்டு ஜன்னல்கள். முன்பக்கக் கதவு வரவேற்பு வளைவுக்குள் இருந்தது.

''வீட்டிலிருந்து வெளியேற வேறு வழி இருக்கிறதா?''

''இல்லை. அதைக் கவனித்துவிட்டேன்.''

''அவன் உள்ளேதான் இருக்கிறான். ஐந்து நிமிடங் களுக்கு முன் ஒரு பெண் இங்கே வந்தாள். அவள் வெள்ளை நிற மழைக் கோட்டும் காலுறையும் அணிந்திருந் தாள். இந்த இருட்டில் அவளைச் சரியாகப் பார்க்க முடியவில்லை.''

''அவன் எப்படி இருக்கிறான், ஹாரி?''

''ஒல்லியாக, உயரமாக, மூக்கு வளைந்திருக்கிறது. ஆடம்பரமான உடை.''

கொரியர் பையனும் அவனைத் தாக்கியவன் ஒல்லியாக உயரமாக இருந்ததாகச் சொல்லியிருந்தான். அவன்தான் இந்த ஆள்.

''இவனை எப்போது பார்த்தாய், ஹாரி?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"கொரியர் பையன் வெளியேறிய கால் மணி நேரத்தில், இவன் வீட்டின் பின்புறத்திலிருந்து வந்தான், தோட்டத்தில் நடந்து, சுவரைத் தாண்டினான், தெருவிலே ஓடினான். அங்கே மரங்களுக்குக் கீழே இருந்த ப்யூக் காரில் ஏறிக்கொண்டான். நான் அவனைத் தொடர்ந்து அந்தக் காரின் டிக்கியில் ஏறிக் கொண்டேன். அவன் காரை வேகமாக ஓட்டினான். என்னுடைய பயணம் சவுகரியமாக இல்லை. பழைய காம்ப்டன் தெருவில் இருக்கும் குண்டு வெடித்த இடத்தில் காரை நிறுத்தி விட்டு இங்கே வந்தான். நான் மிகவும் சிரமப்பட்டு அவனைப் பின் தொடர்ந்தேன். யாராவது வருகிறார்களா என்று திரும்பிப் பார்த்துக் கொண்டே வந்தான். ஆனால் அவன் என்னைக் கவனிக்க வில்லை. அது நிச்சயம். சாவியால் கதவைத் திறந்து வீட்டுக் குள் போனான். அதற்குப் பிறகு நான் அவனைப் பார்க்க வில்லை. இந்தப் பெண் கதவைத் தட்டியவுடன் அவன் கதவைத் திறந்தான்.

"பிரமாதம், ஹாரி. நான் அங்கே போய்ப் பார்க்கிறேன். நீ இங்கேயே கவனமாக இரு. எனக்கு ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டுமென்று உனக்குத் தெரியும். இவன் பயங்கரமானவன். இவன் ஃபெரன்சியைக் கொலை செய்துவிட்டான். அவனைத் தொடுவதில் சிக்கல் இருக்குமானால் தயங்காதே. அவனைத் தாக்க வேண்டு மென்றாலும் தாக்கு."

"திரு. ஃபெரன்சி இறந்துவிட்டாரா?" என்று அதிர்ச்சியோடு கேட்டார் ஹாரி.

"ஆமாம். அதைப் பற்றி பிறகு சொல்கிறேன். இப்போது எச்சரிக்கையாக இரு."

"உங்களுக்குப் பதிலாக நான் போகிறேனே" என்று சாதாரணமாகக் கேட்பது போல ஹாரி சொன்னார். இந்த ஜன்னலில் ஏறி இறங்கி உங்கள் உடையை அழுக்காக்கிக் கொள்ள வேண்டாம்."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''உனக்குச் சொல்லப்பட்டதைச் செய். கவனமாக இரு. அவன் தப்பிக்க முயன்றால் தடுத்துவிடு.''

''சரி. சுவரின் பக்கமாக இருக்கும் ஜன்னல் வழியாகப் போவது சுலபம். அந்தக் கதவில் ஒரு போல்ட் இருக்கிறது. அதை நான் கழட்டி விடுவேன். உங்களை தாங்கிக் கொள்கிறேன். கூரைக்குப் போய்விட்டு ஜன்னல் வழியாக உள்ளே போய்விடலாம்'' என்றார் ஹாரி.

அவர்கள் சுவருக்கு அருகே வந்தனர். ஹாரி விரல்களை இணைத்துக் கொள்ள மிக்லெம் அதில் கால் வைத்து நின்றார். ஹாரி தூக்கிவிட மிக்லெம் சுவரின் மேல் பகுதியைப் பிடித்துக் கொண்டார். ஹாரியின் தயவில் சுவருக்கு மேலே சென்றுவிட்டார்.

ஹாரி அவரைப் பார்த்துக் கையசைத்துவிட்டு தன்னுடைய இடத்திற்குச் சென்றுவிட்டார்.

குனிந்தபடியே டான் கூரையை நெருங்கினார். அவருடைய தலைக்கு வெளிச்சமில்லாத ஜன்னல் கண்ணாடி வழியாகப் பார்த்தபோது இருட்டான ஆளில்லாத அறை தெரிந்தது. ஜன்னலில் தாழ்ப்பாள் போட்டிருந்தது. அவர் சட்டைப் பையிலிருந்த பேனாக் கத்தியை எடுத்து ஜன்னலை மேலே தூக்கினார்; அது வழியாக உள்ளே நுழைந்தார். ஜன்னலை மூடினார். கதவருகே சென்றார்.

சிறிது நேரம் அங்கேயே இருந்தவர் கதவில் காதை வைத்துக் கேட்டார். எந்தவிதமான ஒலியும் இல்லை என்றவுடன் கைப்பிடியைத் திருகிக் கதவைத் திறந்தார்.

அது ஒரு நடைபாதை. பக்கத்திலிருந்த அறையிலிருந்து வெளிச்சம் அங்கே விழுந்தது. அந்த அறையில் நுழைந்தவர் படிக்கட்டின் மேல் பகுதிக்கு வந்தார். அங்கே சற்று கவனித்தார்.

கீழே இருந்த அறையிலிருந்து ஒரு ஆண் குரல் கேட்டது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"அது ரொம்ப சுலபமாக இருந்தது. அவன் ஜன்னலருகே வந்தான். நான் அவனைத் தீர்த்துவிட்டேன்" என்றது அந்தக் குரல்.

சத்தமில்லாமல் டான் படிகளில் இறங்கினார்.

"அவன் இறந்துவிட்டானா?" என்றது பெண் குரல்.

டான் கவனமாகக் கேட்டார். இந்தப் பெண் இத்தாலிக் காரி. படிகளின் கீழ்ப் பகுதிக்கு வந்தார். நடைபாதையின் ஓரத்திலிருந்த கதவு வழியாக அந்த அறையில் சிறிது வெளிச்சமிருந்தது.

"அவன் நிச்சயமாக இறந்துவிட்டான். என்னுடைய பணத்தைக் கொடு. நான் இங்கிருந்து தப்பிக்க வேண்டும்" என்றான் ஷாபிரோ.

"அவன் இறந்துவிட்டான் என்பதை நிரூபிக்க முடியுமா?" என்றாள் லோரெலி.

ஷாபிரோ அவளை முறைத்தான்.

"என்ன சொல்கிறாய்? என் மீது நம்பிக்கை இல்லை என்றால் நீயோ அங்கே போய்ப் பார்க்கலாம்."

"முட்டாளைப் போலப் பேசாதே. காலையில் செய்தித் தாள்களைப் பார்த்தபிறகுதான் உனக்குப் பணம் கொடுப்பேன். அதற்கு முன் கிடைக்காது."

டான் மெதுவாக முன்னேறி அறைக்குள் எட்டிப் பார்த்தார். அறையில் அதிகமாக எதுவும் இல்லை. இரண்டு நாற்காலிகள், உடைந்து போய், ஸ்பிரிங் வெளியே தெரியும் சோபா தவிர ஒரு தேயிலைப் பெட்டி. அதன்மேல் உள்ள பாட்டிலில் மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டிருந்தது. இரண்டு ஜன்னல்களிலும் அழுக்கான போர்வைகள் ஆணி வைத்து அடிக்கப்பட்டிருந்தன.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இவ்வளவையும் ஒரு நொடியில் பதிவு செய்து கொண்ட டான் அறையில் இருந்த இருவர் மீது கவனத்தைச் செலுத்தினார்.

அந்த ஆண் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். அவன் ஒல்லியாக உயரமாக இருந்தான். கருத்த அவனுடைய முகம் ஓநாயைப் போலிருந்தது. எதிரே இருந்த பெண்ணை அவன் முறைத்துக் கொண்டிருந்தான். அந்தப் பெண் சுவரின் மீது சாய்ந்து கொண்டிருந்தாள்; அவள் மீது மெழுகுவர்த்தியின் வெளிச்சம்.

அவள் சராசரிக்கு அதிகமான உயரம். வயது இருபத்தைந்து அல்லது இருபத்தி ஆறு இருக்கலாம். அவளுடைய அழகு மிரட்டலாக இருந்தது. முகம் வெளுத்திருந்தது. பெரிய உதடுகள் மிகவும் சிகப்பாகக் கண்ணைப் பறித்தது. ஆனால் அவளுடைய கூந்தல்தான் விசேஷம், அலை பாயும் கூந்தல் செக்கச் செவேலென்ற நிறத்தில். இந்த மாதிரியான கூந்தல் இப்போது இத்தாலியில் பார்க்க முடிவதில்லை.

அவளுடைய உதடுகளிலிருந்து ஒரு சிகரெட் தொங்கிக் கொண்டிருந்தது. கைகளை மார்புக்குக் குறுக்கே கட்டியிருந்தாள். மழைக்கோட்டு திறந்திருக்க, வெள்ளை ஸ்வெட்டரும் கறுப்புக் காலுறையும் தெரிந்தது.

''என்ன விளையாடுகிறாயா?'' என்றான் ஷாபிரோ.

''வேலையை முடித்தபிறகு பணம் கொடுக்கவேண்டும் என்பதுதான் எனக்கு உத்தரவு. நாளைக் காலை செய்தித்தாள்களைப் பார்த்துத்தான் நீ ஒழுங்காகச் செய்தாயா இல்லையா என்பது தெரியும்'' என்றாள் லோரெலி.

''எனக்கு இப்போதே பணம் வேண்டும் இப்போதே வேண்டும். எனக்காக ஒரு படகு காத்திருக்கிறது. பணம் கொடுத்தால்தான் தான் அதை வாங்க முடியும். நாளைக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

காலையில் நான் ஃபிரான்சில் இருப்பேன். அதற்குமுன் இன்றிரவே அந்தப் படகை வாங்க வேண்டும்.''

''உனக்கு ஏற்கெனவே சொல்லியாகிவிட்டது'' என்றாள் லோரெலி. கைகளை எடுத்து மழைக்கோட்டின் பாக்கெட்டுகளில் வைத்துக் கொண்டாள். ''உன்னோடு நான் வாதம் செய்யப் போவதில்லை.''

உலர்ந்து போன உதடுகளை ஷாபிரோ ஈரமாக்கிக் கொண்டான்.

''பெண்ணே நமக்குள் சண்டை வேண்டாம். என்னோடு வந்துவிடுகிறாயா? படகு வந்தவுடன் நான் புதுத் தொழிலைத் தொடங்கப் போகிறேன். உன்னை மாதிரி ஆள் இருந்தால் உதவியாக இருக்கும்.''

''அப்படியா?'' என்றாள் லோரெலி வெறுப்புடன். ''ஆனால் உன் போன்ற முட்டாளை என்னால் பயன்படுத்த முடியாது'' ஷாபிரோ சிரித்துக் கொண்டான்.

''பெண்ணே. நாம் நண்பர்களாகலாம். என்னை எட் என்று கூப்பிடு. நாம் தொழில் செய்துகொண்டே பல இடங்களுக்குப் போகலாம். லோரெலி, பணத்தோடு வந்துவிடு, என்ன சொல்கிறாய்?''

''உன்னுடைய பணம் நாளைக் காலையில் கிடைக்கும். நான் அதை எட்டு மணிக்கு எடுத்து வருகிறேன்'' என்றாள் கண்டிப்புடன்.

''நீ அப்படி நினைக்கலாம்'' என்று சொல்லியபடியே ஷாபிரோ உறுமினான். எழுந்து அந்த நாற்காலியை உதைத்தான். நாம் உன்னுடைய இடத்திற்குப் போகிறோம். அந்தப் பணத்தைக் கைப்பற்ற வேண்டும். உன்னைப் போன்ற ஓடுகாலிகளைத் திருத்தும் வழி எனக்குத் தெரியும்.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவள் சுவரின் மீது சாய்ந்தபடி இருந்தாள், அவளுடைய பச்சைக் கண்கள் பளபளத்தன, முகத்தில் அசைவே இல்லை.

''அப்படியா, உன்னைப் போன்ற எலிகளை அடக்கும் வழி எனக்கும் தெரியும்'' என்றபடி மழைக்கோட்டின் பாக்கெட்டிலிருந்து கையை எடுத்தாள். வெளியே வந்த ஆட்டோமெடிக் பிஸ்டல் ஷாபிரோவின் முகத்துக்கு நேரே நீட்டப்பட்டது.

''எனக்கு எதிரே வராதே'' என்றாள்.

ஒரு நொடியில் ஷாபிரோவுக்குக் காற்று இறங்கிவிட்டது. அவசரமாகப் பின்வாங்கினான்.

இதற்கு மேல் கேட்க டானுக்கு விருப்பமில்லை. படிகளில் சத்தமில்லாமல் ஏறி மேலே வந்தார். ஜன்னல் வழியாக வெளியேறி ஜன்னலை மூடினார். கீழே வந்து ஹாரியுடன் சேர்ந்து கொண்டார்.

''அந்தப் பெண் இப்போது வெளியே வருகிறாள். நான் அவளைப் பின் தொடரப் போகிறேன். நீ இங்கே இருந்து இந்த வீட்டைப் பார்த்துக் கொள். இப்போது அவன் வெளியே வரமாட்டான். அப்படி வந்தால் அவனை விட்டு விடாதே'' என்றார் டான்.

''சரி'' என்றார் ஹாரி.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே கதவு திறந்தது, அந்தப் பெண் வெளியே வந்தாள். அவள் கதவை மூடிவிட்டு பழைய காம்ப்டன் தெருவை நோக்கி நடந்தாள். இருட்டில் இருந்தபடியே, டான் அவளைப் பின்தொடர்ந்தார்.

அரைமணி நேரத்திற்குப் பிறகு ஹெப்பார்டு மார்க்கெட் தொலைபேசி பூத்திலிருந்து டான் இன்ஸ்பெக்டர் ஹோரொக்ஸோடு பேசினார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''இது மிக்லெம். என்னுடைய டிரைவர் அந்த வீட்டிலிருந்து வெளியேறியவனைப் பார்த்துவிட்டார். அவனைப் பின் தொடர்ந்து ஏதென்ஸ் தெரு 25ஆம் எண்ணுக்கு வந்துவிட்டார். இதில் ஒரு பெண்ணுக்கும் தொடர்பு உள்ளது. அவள் மார்கெட் மியூஸில் 2ஆம் எண்ணில் இருக்கிறாள். அவளுடைய இடத்தை நான் கண்காணிக்கிறேன். மேஸன் ஏதென்ஸ் தெருவில் இருக்கிறார்.

''அடடா, அபாரமான வேலை. இரண்டு இடத்திற்கும் போலீஸ் கார்களை அனுப்புகிறேன். நான் அங்கே பத்து நிமிடத்திற்குள் வந்துவிடுவேன்.''

''நல்லது'' என்றபடி டான் போனைக் கீழே வைத்தார்.

தொலைபேசி பூத்தை விட்டு வெளியே வந்தவர் அந்தப் பெண் தங்கியிருக்கும் இடத்தைப் பார்ப்பதற்கு வசதியான இடத்தை அடைந்தார். ஒரு காய்கறிக் கடையின் மாடியில் அவளுடைய இடம் இருந்தது.

அவளைப் பின் தொடர்வது சுலபமாக இல்லை. ஷாஃப்ட்பரி அவென்யூவிலிருந்து அவள் ஒரு டாக்சியில் வந்தாள். பிக்கா டெல்லியில் அவள் மறைவதற்குள் டான் இன்னொரு டாக்சியில் ஏறிக் கொண்டார். ஹாஃப் மூன் தெருவில் டாக்சியிலிருந்து இறங்கியவள் பிக்காடெல்லியின் பூங்கா வழியாக வந்து பார்க் தெருவில் நடந்தாள்; அவ்வப்போது திரும்பிப் பார்த்துக் கொண்டாள். டான் எப்படியோ அவளுக்குத் தெரியாமலே பின் தொடர்ந்தார். இறுதியாக, காய்கறிக்கடையில் பக்கத்துக் கதவில் நுழைந்து மாடிக்குப் போவதைப் பார்த்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு மாடி ஜன்னலில் வெளிச்சம் தெரிந்தது. டான் இருபது நிமிடங்கள் பொறுமையாக இருந்தார். பிறகு அந்தக் கட்டிடத்திலிருந்து வெளியேறுவதற்கு ஏதாவது வழி இருக்கிறதா என்று பார்த்தார். பிறகு தொலைபேசி பூத்துக்கு வந்து இன்ஸ்பெக்டரோடு பேசினார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவர் மீண்டும் தன்னுடைய இடத்திற்கு வந்தவுடன் இருட்டிலிருந்து இரண்டு போலீஸ்காரர்கள் வெளிப்பட்டனர்.

"திரு. மிகெலெம்?" ஒருவர் கேட்டார்.

"நீங்கள் மிகவும் சுறுசுறுப்பாய் வேலை செய்கிறீர்கள். அவள் அந்த வீட்டில் இருக்கிறாள்."

"ஆமாம்" என்றார் அந்தப் போலீஸ்காரர். "இன்ஸ்பெக்டர் ஹோரோக்ஸ் இங்கே வந்து கொண்டிருக்கிறார். அவர் எங்களை இங்கேயே இருக்கச் சொன்னார். பில், நீங்கள் ஹெர்ட்ஃபோர்ட் தெருவுக்குச் சென்று இந்த வீட்டிற்குப் பின்வழி இருக்கிறதா என்று பாருங்கள்."

அந்த போலீஸ்காரர் தலையசைத்துவிட்டுச் சென்றார்.

டான் சிகரெட்டைப் பற்ற வைத்தார். அவருக்குக் களைப்பாக இருந்தது. கிடோவின் மரணம் அவரைப் பாதித்துவிட்டது என்பது இப்போது தெரிய வந்தது.

அவரும் போலீஸ்காரரும் அந்த ஜன்னலையே அடுத்த பத்து நிமிடங்களுக்கு உற்றுப் பார்த்தனர். அப்போது இன்ஸ்பெக்டர் ஹோரோக்ஸ் தனது பெரிய உருவத்தோடு வந்தார், அவருடன் மூன்று போலீஸ்காரர்கள்.

"ஏதோ அதிர்ஷ்டம் அடிக்கிறது" என்றார் இன்ஸ்பெக்டர் ஹோரோக்ஸ். "என்ன நடக்கிறது?"

ஃபெரன்சி வீட்டில் ஒல்லியான மனிதனை ஹாரி பார்த்ததையும் அவனைப் பின்தொடர்ந்து ஏதென்ஸ் தெருவிற்கு வந்ததையும் டான் சுருக்கமாகத் தெரிவித்தார்.

"நான் அங்கே வருவதற்கு சில நிமிடங்களுக்கு முன் இந்தப் பெண் அங்கே வந்தாள். நான் உள்ளே சென்றேன். அவன் பெயர் எட். இவள் லோரெலி. அவன் அவளிடம் ஃபெரென்சி கொலைக்கான பணத்தைக் கேட்டுக் கொண்டிருந்தான்" என்று கூறிய டான் தான் கேட்டதை

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அப்படியே கூறினார். ''நாளைக் காலை எட்டு மணிக்கு அவள் அவனுக்குப் பணம் தரப் போகிறாள்.''

''எனக்கு நம்பிக்கையில்லை'' என்ற ஹோரோக்ஸ், ''திரு. மிக்லெம் அற்புதமாக வேலை செய்திருக்கிறீர்கள். நான் ஹார்ஸ்ட் மற்றும் மாடோக்ஸை ஏதென்ஸ் தெருவுக்கு அனுப்பியிருக்கிறேன். எனக்குத் தெரியாமல் அவர்கள் எதுவும் செய்ய மாட்டார்கள். இவள் என்ன சொல்லப் போகிறாள் என்பதைப் பார்ப்போம்.''

அந்த வீட்டின் வாசல் கதவு அலங்கோலமாக இருந்தது. உடன் வந்தவர்களைத் தயார்ப்படுத்திவிட்டு இன்ஸ்பெக்டர் கதவைத் தட்டினார்.

பதிலில்லை.

கதவில் ஓங்கி அடித்தவர், விலகி நின்றார்.

''சரி, நீங்கள் கதவைத் திறந்து விடுங்கள்.''

வாட்சாட்டமான இருவர் முன்வந்தனர்; அவர்களுடைய தோள்கள் அந்தக் கதவு மீது மோதின. மூன்றாவது முறை மோதியவுடன் கதவு உடைந்தது. செங்குத்தாக இருந்த படிகளில் போலீஸ்காரர்கள் ஓடினார்கள். டானும் ஹோரோக்ஸும் அவர்களைப் பின்தொடர்ந்தனர்.

''அவள் காற்றுப் பேயாக இருக்க வேண்டும். அல்லது காணாமல் போயிருக்கவேண்டும்'' என்றார் டான். மேலே திறந்து இருந்த இடத்தை அவர் சுட்டிக் காட்டினார். கூரை மூலமாக அவள் வெளியேறிவிட்டாள்.

ஒரு அறையிலிருந்து போலீஸ்காரர் வெளியே வந்தார்.

''இங்கு யாரும் இல்லை, ஐயா'' என்றார்.

ஹோரோக்ஸிடமிருந்து உறுமல் சத்தம் கேட்டது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"எல்லோருக்கும் தகவல் கொடு. அந்தப் பெண்ணைப் பிடிக்க வேண்டும். திரு. மிக்லெம் அவளுடைய உருவத்தைப் பற்றிச் சொல்வார்."

டான் கூறியதை எழுதிக் கொண்ட போலீஸ்காரர்கள், கீழே இருந்த தொலைபேசி பூத்தை நோக்கி விரைந்தனர்.

"அவள் உங்களைப் பார்த்திருக்கலாம்" என்றார் ஹோரோக்ஸ் கோபத்துடன். "கார் ரேடியோவில் ஹர்ஸ்டை அழைத்து இந்தப் பெண் தப்பிவிட்டாள் என்று சொல். அவரைக் கவனமாக இருக்கச் சொல். அந்தப் பெண் எட்டை எச்சரிக்கை செய்யலாம்."

டானும் ஹோரோக்ஸும் அந்த வீட்டைச் சுற்றிப் பார்த் தார்கள். அதில் ஒரு படுக்கையறை, ஒரு சமையலறை மற்றும் குளியலறை இருந்தது. ஹோரோக்ஸ் ஒருமுறை நோட்டம் விட்டார்.

"இங்கே எதுவும் கிடைக்காது. கைரேகைகளை மட்டும் எடுக்கலாம். நாம் ஏதென்ஸ் தெருவுக்குப் போகலாம்."

அந்த வீட்டில் காவலுக்கு இரண்டு போலீஸ்காரர்களை வைத்து விட்டு ஹோரோக்ஸ், டான் மற்றும் மூன்று போலீஸ்காரர்களும் ஒல்ட் க்ராம்டன் தெருவுக்கு போலீஸ் காரில் விரைந்தனர். ஏதென்ஸ் தெருவில் நுழைந்த நிமிடத்தில் இரண்டு போலீஸ்காரர்கள் இருந்தனர். ஹோரோக்ஸைப் பார்த்தவுடன் அவர்கள் விறைப்பாக நின்றனர்.

"ஹர்ஸ்ட் எங்கே" என்று கேட்டார் ஹோரோக்ஸ்.

"இதே தெருவில் இருக்கிறார்."

அந்த முட்டுச் சந்தில் ஹோரோக்ஸ் இறங்கினார்; அவரைத் தொடர்ந்து டான். ஹோ, சார்ஜன்ட் ஹர்ஸ் மற்றும் கான்ஸ்டபிள் மடோக்ஸ் ஆகியோர் அந்தத் தெருவில் இருந்தனர்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''நம்ம ஆள் உள்ளே இருக்கிறாரா?'' என்றார் ஹோரோக்ஸ்.

''அப்படித்தான் நினைக்கிறேன்'' என்றார் ஹர்ஸ்ட். உள்ளேயிருந்து எந்தச் சத்தமும் இல்லை. ஆனால் வீட்டிலிருந்து வெளியே போகும் வழி இது ஒன்றுதான்.''

''அவனைப் பிடித்துவிடலாம். கவனமாக இருங்கள் ஹர்ஸ்ட். அவன் ஆபத்தானவன். இந்தக் கதவு எப்படி?''

ஹர்ஸ்ட் தலையசைத்தார்.

''இரண்டு போல்டுகளும் ஒரு பூட்டும். அந்த ஜன்னல் வழியாக உள்ளே போய்விடலாம்'' என்ற ஹார்ஸ்ட், டான் பயன்படுத்திய ஜன்னலைக் காண்பித்தார்.

''சரி, நீங்கள் இருவரும் உள்ளே போய் அவனைப் பிடித்து விடுங்கள்'' என்றார் ஹோரோக்ஸ்.

டானும் ஹாரியும் காத்திருந்தார். உள்ளே போக வேண்டும் என்பது டானுடைய விருப்பம். ஆனால் ஹோரோக்ஸ் சம்மதிக்க மாட்டார் என்று டானுக்குத் தெரியும்.

மடோக்ஸ் தூக்கிவிட ஹர்ஸ்ட் கவரின் மேல் ஏறுவதை அவர்கள் பார்த்தனர். ஹர்ஸ்ட் கூரை மேல் ஏற மடோக்ஸ் அவரைப் பின்தொடர்ந்தார்.

இருட்டாயிருந்த ஜன்னலை டான் உற்றுப் பார்த்தார்; கண்ணாடிக்குப் பின்பக்கத்தில் ஒரு அசைவு தென்பட்டது.

''அவன் உங்களைப் பார்த்துவிட்டான்'' என்று சத்தம் போட்டார்.

ஹர்ஸ்ட் கூரையின் நடுப்பகுதியில் இருந்தார். ஒதுங்குவதற்கு இடமில்லை. அவரும் அந்த அசைவைப் பார்த்து விட்டார். குறுந்தடியை எடுப்பதற்காகக் கையை அசைத்தார். ஒரு வெளிச்சம் திடீரென ஏற்பட்டது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

துப்பாக்கி வெடிக்கும் சத்தமும் கேட்டது; ஜன்னலின் கண்ணாடி சிதறியது.

குறுந்தடியை விட்டபடி ஹர்ஸ்ட் கீழே உருண்டார்; அவரோடு மடோக்ஸ். கீழே விழாமல் மடோக்ஸ் அவரைப் பிடித்துக் கொண்டார். டானும் ஹாரியும் பாய்ந்தனர்.

"அவரை விட்டுவிடு" என்று டான் சத்தம் போட்டார்.

மீண்டும் துப்பாக்கி வெடித்தது. மடோக்ஸுக்கு அருகே ஒரு குண்டு பாய்ந்தது. அவர் ஹர்ஸ்டைக் கைவிட்டு கீழே குதித்தார். கூரையிலிருந்து நழுவிய ஹர்ஸ்டை டானும் ஹாரியும் பிடித்துக் கொண்டனர்.

ஹர்ஸ்டின் கழுத்தில் ஹாரி கைவைத்துப் பார்த்தார். அவருடைய விரல்களுக்கு ரத்த நாளம் தென்பட்டது.

"அவர் கதை முடிந்துவிட்டது" என்றார் ஹாரி.

சுவரின் பாதுகாப்பில் ஹோரோக்ஸ், டான் மற்றும் மடோக்ஸ் கூடினர். ஹர்ஸ்டுக்கு ஏதாவது செய்ய முடியுமா என்று பார்த்த ஹோரோக்ஸ் பருமனான தன் உடலைத் தூக்கிக் கொண்டு அந்தத் தெருவில் ஓடினார்.

டானும் ஹாரியும் ஹர்ஸ்டின் உடலை அவர்கள் முன்பிருந்த வரவேற்பு வளைவுக்குக் கொண்டு வந்தனர். மடோக்ஸ் அங்கு வந்தார். அவருக்கு மூச்சு வாங்கியது; முகம் வெளுத்திருந்தது.

"நாம் உள்ளே போகலாமா?" என்று தணிந்த குரலில் டானிடம் கேட்டார் ஹாரி.

"நீங்கள் இங்கேயே இருங்கள். இருவரும் இதில் தலையிட வேண்டாம். இது போலீஸ் வேலை" என்றார் மடோக்ஸ்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

டான் ''என்னால் அந்தக் கதவைத் திறக்க முடியும்'' என்றார். ''நான் சொல்வதைக் கேட்டீர்களா? நீங்கள் இதில் தலையிட வேண்டாம்'' என்றார் மடோக்ஸ்.

சிறிது நேரத்திற்குப் பிறகு ஹோரோக்ஸ் அங்கே வந்தார். ''கொஞ்ச நேரத்தில் அவனைப் பிடித்துவிடுவோம். அப்போது இதற்காக அவன் வருத்தப்படுவான்'' என்ற ஹோரோக்ஸ் டானைப் பார்த்து ''நீங்கள் கொடுத்த ஒத்துழைப்புக்கு நன்றி. இப்போது நீங்கள் வீட்டுக்குப் போய் விட்டால் நன்றாக இருக்கும்'' என்றார்.

டான் அவரை முறைத்துப் பார்த்தார்.

''என்ன, விளையாடுகிறீர்களா? நானும் ஹாரியும் இல்லையென்றால்...''

''அது எனக்குத் தெரியும். ஆனால் இங்கே மீண்டும் துப்பாக்கி வெடிக்கலாம். அது உங்கள் மீது பாய்வதற்கு நான் பொறுப்பாக முடியாது. என்ன நடக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவிக்கிறேன். ஆனால் இப்போது நீங்கள் வீட்டுக்குப் போக வேண்டும்.''

அவர் சொல்வதில் உள்ள நியாயத்தை டான் உணர்ந்தார். வெளியேறுவதற்கு அவருக்கு விருப்பமில்லை என்றாலும் தோள்களை உயர்த்திக் கொண்டார்.

''நல்லது, இன்ஸ்பெக்டர். வாழ்த்துகள். அவனை விட்டுவிடாதீர்கள்''

''அவன் தப்பமுடியாது. என்ன நடந்தது என்பதைப் பிறகு உங்களுக்குச் சொல்கிறேன்.''

''ஹாரி, நாம் போகலாம்.''

வரவேற்பு வளைவிலிருந்து வெளியேறி, டானும் ஹாரியும் ஓல்ட் க்ராம்ப்டன் தெருவை நோக்கி நடந்தனர்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"எனக்கு ஏமாற்றம்தான். அவன் பிடிபடுவதைப் பார்க்க வேண்டும்" என்றார் டான்.

"திருமதி ஃபெரன்சி எப்படியிருக்கிறார்?" என்று கேட்டார் ஹாரி.

"மோசமாகத்தான் இருக்கிறது. மரியம் அவரைப் பார்த்துக் கொள்கிறார்."

பென்ட்லி காரைத் திறப்பதற்குள், இரண்டு கார்களில் போலீஸ்காரர்கள் வருவதைப் பார்த்தனர்.

"எட் கதை முடிந்தது" என்றார் டான்.

"நாம் போய்விடலாம். துப்பாக்கிகள் வெடிக்கும்போது எல்லா வழியையும் அடைத்து விடுவார்கள்."

அங்கிருந்து அப்பர் ப்ரூக் மியூஸ் போகச் சில நிமிடங்கள் ஆயிற்று. அதற்குள் ஃபெரன்சி வீட்டில் நடந்ததை டான் ஹாரிக்குக் கூறினார்.

"இது ஒரு சதிகாரக் கூட்டம் போலத் தெரிகிறது" என்றார் ஹாரி.

டான் 25ஏ எண் வாயிலில் காரை நிறுத்தினார்.

"அப்படித்தான் தெரிகிறது. காரின் டாஷ்போர்டில் இருந்த கடிகாரத்தைப் பார்த்தார். ஒரு மணி பனிரெண்டு நிமிடங்கள்.

"நல்லது ஹாரி, காரை அதனிடத்தில் வைத்துவிட்டு நீங்கள் ஓய்வெடுக்கலாம். நாளைக்கு நிறைய வேலையிருக் கிறது."

முன் கதவைத் திறந்து கொண்டு வெளிப்பட்டு வரவேற் பறையில் நுழைந்தார். அங்கே சில சிக்கன் ஸாண்ட் விட்சுகளும், ஒரு விஸ்கி பாட்டிலும், ஐஸ் வாட்டரும் சில

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கோப்பைகளும் கணப்பருகே உள்ள மேசையில் தயாராக இருந்தன.

ஒரு கோப்பை விஸ்கியை உறிஞ்சி விட்டி அவர் உட்கார்ந்தார். நெருப்புக்குள் பார்த்தபடி பத்து நிமிடங்கள் இருந்தார். அவருடைய யோசனை ஜூலியாவைப் பற்றி, கிடோ இறந்துவிட்டார் என்பதை நம்ப முடியவில்லை. இது ஒரு பயங்கரக் கனவு போலத் தெரிகிறது.

தொலைபேசி மணி அவரை அதிர்ச்சியடையச் செய்தது. அவர் ரிசீவரை எடுத்தார்.

''திரு. மிக்லெம் இருக்காரா?'' என்று கேட்டது ஹோரெக்ஸ்.

''கெட்ட செய்தி. அவன் தப்பிவிட்டான்.''

''தப்பிவிட்டானா'' என்று சத்தம் போட்டார் டான்.

''ஆமாம். நாஸிகன் கதவை உடைத்து உள்ளே போனபோது பாதாள அறையில் ஒரு சுரங்கம் இருப்பதைப் பார்த்தோம்.

அது டீன் தெருவில் ஒரு இடத்திற்குச் சென்றது. அந்த வழியாக அவன் போயிருக்க வேண்டும்.

''இது சரியாயில்லை. ஆக இரண்டு பேரும் தப்பி விட்டார்கள்.''

''அவர்கள் எங்கேயும் போக முடியாது. ஒவ்வொரு துறைமுகம், விமான நிலையம், ரயில்வே நிலையம் எல்லா வற்றிலும் ஆள் வைத்திருக்கிறோம். அவர்கள் உருவத்தைப் பற்றிய வர்ணனை இருக்கிறது.''

''எனக்கு நம்பிக்கையில்லை'' என்றபடி டான் ரிசீவரைக் கீழே வைத்தார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பால்ஸென் ஹோட்டலின் வரவேற்பறையில் அந்தப் பெண் தயக்கத்தோடு வந்தாள். தூங்கிக் கொண்டிருந்த டேல் திடுக்கிட்டு எழுந்தார். கைக்கடிகாரத்தில் மணி நான்கு பதினான்கு. எழுந்து நின்றவர் கவுண்டருக்கு அருகே வந்தார். அந்தப் பெண்ணை வெறுப்போடு பார்த்தார்.

"அடடா, இவள் எங்கிருந்து வந்தாள்?"

அது சரியான அசடாக இருந்தது. நிறமோ கறுப்பு. முன்னே தெரியும் பற்கள். மர பிரேம் போட்ட கண்ணாடி. பச்சை மற்றும் சிகப்புக் கட்டம் போட்ட கம்பளிக் கோட்டு அணிந்திருந்தாள். கறுப்பு நிறத்தில் முடி. அதை நீல நிறத்தில் உள்ள பட்டுத் துணியால் கட்டியிருந்தாள்.

"உங்களுக்கு ரூம் வேண்டுமென்றால், சில பவுண்டுகள் வாடகை தர வேண்டும். அதையும் முன்பணமாகத் தரவேண்டும்" என்றார் டேல்.

"ஆமாம். எனக்கு ரூம் வேண்டும்" என்றாள் அந்தப் பெண்.

"நான் கடைசி ரயிலைத் தவறவிட்டேன்."

"உங்களிடம் லக்கேஜ் இல்லையென்றால் வாடகை மூன்று பவுண்டு. வேண்டுமென்றால் எடுத்துக் கொள்ளுங்கள்." அப்போது க்ராண்டர் அங்கே வந்தார்.

"சாவியைக் கொடுங்கள்" என்றார் க்ராண்டர்.

அந்தப் பெண் அவரைப் பார்த்தாள்.

"மன்னிக்க வேண்டும். எனக்கு லக்கேஜ் இல்லை என்பதால் வாடகை மூன்று பவுண்டு என்கிறார். அது சரிதானா?"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''அசிங்கம் பிடித்தவளே. நான் சொல்வது காதில் விழுகிறதா? உனக்குப் பிடிக்கவில்லை என்றால் வேறு இடம் பார்த்துக் கொள்'' என்றார் டேல்.

''அவளுக்கு ஒரு ரூம் கொடு'' என்றார் க்ராண்டர். தன்னுடைய சாவியைப் பெற்றுக் கொண்டார். 'வாடகை ஒரு பவுண்டு' என்றவர் அந்தப் பெண்ணைப் பார்த்து 'அவருக்கு ஒரு பவுண்டு கொடு' என்றார்.

மாட்டப்பட்டிருந்த சாவியை எடுத்து டேல் கவுண்டரில் போட்டார். எலி போன்ற முகத்தில் எந்த உணர்ச்சியு மில்லை.

''ரூம் 24'' என்று சொல்லிவிட்டு அவள் கொடுத்த பவுண்டு நோட்டைப் பெற்றுக் கொண்டார்.

''நானும் அதே தளத்தில்தான் இருக்கிறேன்'' என்றார் க்ராண்டர்.

ஓரக்கண்ணால் அவளைப் பார்த்தார். அவள் அகோரமாக இருந்தாள்.

ஆனால் அது அவருக்குப் பழக்கப்பட்டதுதான். ''நான் உனக்கு வழிகாட்டுகிறேன்.''

படிக்கட்டில் ஏறும்போது அந்தப் பெண் அவர் பின்னால் வந்தான்.

கவுண்டரில் இருப்பவரின் கண்ணில் படாத பகுதிக்குச் சென்றபிறகு அவள் ''ஷாபிரோவிடமிருந்து ஏதாவது சேதி உண்டா?'' என்று கேட்டாள்.

க்ராண்டருக்கு அதிர்ச்சி. திரும்பி அவளைப் பார்த்தார். அவள் முன்பக்கத்துப் பற்களை அகற்றிய பிறகுதான் அவருக்கு அடையாளம் தெரிந்தது.

''லோரெலி. என்னையே ஏமாற்றிவிட்டாயே.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''ஷாபிரோவிடமிருந்து தகவல் உண்டா என்று கேட்டேன்.''

''ஆமாம். இருக்கிறது'' என்று கூறிய க்ராண்டர் சாவியை நுழைத்துக் கதவைத் திறந்தார். ''நீ உள்ளே வரலாம்.''

அவள் அவரைப் பின்தொடர்ந்தாள். நெருப்புக்கு மேலே இருந்த கண்ணாடிக்கு அருகே சென்றாள்.

''போலீஸ் அவனைப் பிடித்திருக்கும்'' என்று சொல்லிக் கொண்டே நனைந்து போன மழைக்கோட்டை நாற்காலியில் போட்டார் க்ராண்டர். அவன் மோசமான நிலையில் இருக்கிறான். ஏதோ தவறு நடந்துவிட்டது. அது எங்கே என்பது அவனுக்குத் தெரியவில்லை.''

''அந்த முட்டாளை யாரோ பின்தொடர்ந்திருக் கிறார்கள். போலீஸ் என்னையும் பிடித்திருக்கும்'' என்ற லோரெலி பர்ஸிலிருந்து சிகரெட் பாக்கெட்டை எடுத்தாள். சிகரெட்டைப் பற்ற வைத்து புகையை க்ராண்டரிடம் ஊதினாள். ''நான் ஏதென்ஸ் தெருவிலிருந்து புறப்பட்ட போது உயரமான நல்ல உடல்வாகு உள்ள ஒருவன் என்னைப் பின்தொடர்ந்தான். அவன் போலீஸ் இல்லை என்பது நிச்சயம். என்னால் அவனைக் கழட்டிவிட முடியவில்லை. மார்க்கெட் மியூஸில் நான் வாடகைக்கு எடுத்த வீட்டுக்குப் போனேன். அவன் தொலைபேசி பூத்துக்குப் போனதைப் பார்த்தேன். இந்த உடைக்கு மாறிக் கொண்டு கூரை வழியாக வெளியேறி விட்டேன். சில நிமிடங்களுக்குப் பிறகு போலீஸ் வந்தது. அவன் யாரென்று தெரியுமா?

க்ராண்டர் 'இல்லை' என்றார்.

''ஷாபிரோ ஒரு போலீஸ்காரரைக் கொன்றுவிட்டான். அவனுக்குப் பணம் வேண்டுமாம். அவனை நாட்டுக்கு வெளியே கொண்டுபோவது மிகவும் சிரமம்.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

லோரெலி மேசைக்கு அருகே வந்து அமர்ந்தாள்.

''அவன் எங்கே இருக்கிறான்.''

''அவன் தன்னுடைய சிநேகிதியின் வீட்டில் இருக் கிறான். உனக்கு அவனைத் தெரிந்திருக்கலாம். கினா பாஸெரோ. ரோம் நகரத்தில் தலைவருக்காக அவள் ஏதோ ஒரு வேலை செய்திருக்கிறாள்.

லோரெலி தலையசைத்தாள்.

''எனக்குத் தெரியும். அவளை நம்பமுடியாது. அவள் தான் ஷாபிரோவின் சிநேகிதி என்பது எனக்குத் தெரியாது.''

''நம்பமுடியாது என்றால்?'' க்ராண்டர் கேட்டார்.

''அவளைப் போலீஸ் விசாரித்தால் விஷயத்தைக் கக்கிவிடுவாள். உன்னைப் பற்றி ஷாபிரோ அவளிடம் சொல்லியிருக்கிறானா?''

க்ரான்டரின் உடலில் நடுக்கம் ஏற்பட்டது. ''எனக்குத் தெரியாது. அவன் சொல்லியிருக்கலாம்.''

லோரெலி பையைத் திறந்து சிகப்புச் சீட்டு ஒன்றை எடுத்தாள். அதை க்ராண்டரிடம் கொடுத்தாள்.

''என்னுடைய பையை ஊஸ்டன் ரயில் நிலையத்தில் வைத்திருக்கிறேன். அதில் உள்ள இரண்டு விஷயங்கள் உனக்குப் பிடித்தமானவை. ஐந்து பவுண்டு கட்டுகளாக ஆயிரம் பவுண்டுகள். ஃபெரன்சியைக் கொலை செய்தவருக்கு அதைக் கொடுக்கும்படி எனக்கு உத்தரவு. நான் சொல்வது புரிகிறதா?''

க்ராண்டர் பேச முடியாமல் விழித்தார்.

''இன்னொரு விஷயம் என்ன?''

''நீ ஷாபிரோவுக்குக் கொடுத்த கத்தியின் நகல்.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

க்ராண்டர் அந்தச் சீட்டை மடித்து பாக்கெட்டில் வைத்துக் கொண்டார்.

''போலீசாரிடம் ஷாபிரோ பற்றிய வர்ணனை உள்ளது. அவனால் தப்பிக்க முடியாது. அவனைப் பிடித்தவுடன் உன்னைப் பற்றிச் சொல்லிவிடுவான்.''

''ஆமாம்'' என்றார் க்ராண்டர்.

''ஷாபிரோவால் நமக்கு எந்தப் பயனும் இல்லை என்று நினைக்கிறேன். நீ என்ன சொல்கிறாய்?'' என்றாள் லோரெலி.

''இனிமேல் இல்லை'' என்ற க்ராண்டர் ஓவர்கோட்டை எடுத்துக் கொண்டான். ''நீ ஓய்வெடுக்க வேண்டும். உன் அறை எதிர்ப்பக்கத்தில் இருக்கிறது.''

''நீ வரும் வரை நான் இங்கேயே இருக்கிறேன். கினா பாஸெரோ பற்றியும் ஏதாவது செய்ய வேண்டும். அவளை போலீஸ் எப்படியும் பிடித்துவிடும். அவள் எங்கே இருக்கிறாள் என்று உனக்குத் தெரியுமா?''

''இல்லை. நான் கண்டுபிடித்து விடுவேன்'' என்று சொல்லிக் கொண்டே க்ராண்டர் கதவுக்கருகே சென்றார். கதவுப் பிடியில் கைவைத்துக்கொண்டே ''அந்தப் பணத்தை என்ன செய்வது'' என்று கேட்டான்.

லோரெலி தனக்குத் தெரியாது என்பதுபோல உடலைக் குலுக்கிக் கொண்டாள்.

''அது ஷாபிரோவுடையது'' என்றாள் அவள்.

கோரமான க்ராண்டரின் முகத்தில் ஒரு ஓநாய்ப் புன்னகை தோன்றியது. ''அவனுடைய உயிலில் என் பெயரை எழுதும்படி நான் ஷாபிரோவுக்குச் சொல்கிறேன்'' என்றார் க்ராண்டர். கதவு சாத்தப்பட்டது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அத்தியாயம் நான்கு

நைட்கிளப் அழகி

மறுநாள் காலை பன்னிரண்டு மணி; டான் தன்னுடைய பணியறையில் இருந்தார். போலீஸ் ஸ்பெஷல் பிரான்ச் தலைமை சூபரென்டென்டென்ட் டிக்ஸ் வந்திருப்பதாக மரியன் அறிவித்தான்.

"டிக்ஸா? அவருக்கு என்ன வேண்டுமாம்?" என்று கேட்டார் டான், தன் முன்னிருந்த கடிதங்களில் கையெழுத் திட்டபடியே. 'அவர் என்னிடம் சொல்லவில்லை ஆனால் அவசரம் என்கிறார்"

"அவரைப் பார்க்க வேண்டுமா என்று யோசிக்கிறேன்" என்று டான் நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளினார் "எனக்குப் போலீசையே பிடிக்கவில்லை. அந்த இரண்டு பேரையும் அவர்கள் நழுவவிட்டார்கள்" டான் சிகரெட்டைப் பற்றவைத்தார். "ஜூலியாவைப் பற்றிய தகவல் உண்டா? மருத்துவமனைக்கு ஃபோன் செய்தாயா?"

"இப்போது தான் பேசினேன். இன்னமும் அவள் சரியாக வில்லை. மதிய உணவுக்குப் பிறகு அங்கே போய் விவரங்களைக் கேட்கிறேன்."

"அதைச் செய்தால் நல்லது. என்னுடைய கவலை அவளைப் பற்றித்தான்"

"சூபரென்டென்டென்ட் காத்திருக்கிறார்" என்றாள் மரியன்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''நல்லது. அவரை இப்போது பார்க்கிறேன்.''

தலைமை சூபரென்டென்டென்ட் டிக்ஸ் ஜாலியான ஆசாமி. சிவந்த முகம் உடையவர். வரவேற்பறையின் கணப்புக்கு எதிரே உள்ள நாற்காலியில் அவர் உட்கார்ந் திருந்தார். சிகரெட்டை அமைதியாக ஊதிக் கொண்டிருந் தார். உற்றுப் பார்க்கும் தன்மையுடைய கண்கள் அவருக்கு; அவை இப்போது பாதி மூடியிருந்தன. அவருக்கும் டானுக்கும் பலவருடப் பழக்கம்; நல்ல நண்பர்கள்.

''வந்து விட்டீர்களா?'' என்றார் டிக்ஸ் ''இந்த நாட்டிலுள்ள போலீஸையெல்லாம் சபித்துக் கொண்டிருப் பீர்களே?''

''ஆமாம், அப்படித்தான்'' என்றார் டான். நெருப்புக்கு எதிரே உள்ள நாற்காலியில் அவர் உட்கார்ந்தார்'' என்னுடைய வெறுப்புக்குக் காரணம் இருக்கிறது. அந்த இரண்டு பேரையும் தப்ப விட்ட உங்கள் போலீஸை நினைத்தால் எனக்குக் குமட்டுகிறது.''

டிக்ஸ் தன்னுடைய பெரிய தோள்களை உயர்த்திக் கொண்டார். ''அவர்களைப் பிடித்துவிடுவோம். இப்போது அவர்கள் பதுங்கி இருக்கிறார்கள். ஆனால் எப்படியும் அவர்கள் வெளியில் வந்தாக வேண்டும். அவர்களால் தப்பிக்க முடியாது.''

''எனக்கு நம்பிக்கையில்லை'' என்றார் டான் குப்பாக. ''அவர்கள் இப்போதே ஃபிரான்சுக்கோ, இத்தாலிக்கோ போயிருக்கலாம், உங்களை நினைத்து சிரித்துக் கொண்டி ருப்பார்கள். துறைமுகங்களையும் விமானநிலையங் களையும் கண்காணிப்பதில் பிரயோஜனமில்லை. அவர்கள் அப்படித்தான் போக வேண்டுமா? அவர்கள் விசைப்படகில் போயிருக்கலாம். அது மிகவும் சுலபம் என்று உங்களுக்குத் தெரியாதா?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''நல்ல வேளையாக அவர்களைப் பிடிப்பது என்னுடைய வேலை அல்ல'' என்றார் டிக்ஸ்.

''சரி இன்றைய வானிலை பற்றிப் பேசவா இங்கு வந்தீர்கள். உங்களுடைய வேலை என்ன? என்னை எதற்காகப் பார்க்க வேண்டும்? எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது'' என்று பொறுமையிழந்து பொருமினார் டான்.

டிக்ஸின் புருவங்கள் உயர்ந்தன.

''திரு. மிக்லெம் இன்று காலையிலேயே கோபமாக இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். உங்களைக் குறை சொல்ல முடியாது. போலீஸ் இதை சொதப்பிவிட்டது. இதற்குள் அவர்களைப் பிடித்திருக்க வேண்டும். போலீஸ் கமிஷனர் எங்களை வறுத்தெடுக்கிறார். உங்களைப் பார்ப்பதற்குக் காரணம் இருக்கிறது. ஆமையைப் பற்றிய தகவலை உங்களுக்குத் தரலாம் என்று வந்தேன்.''

டான் முகத்திலிருந்து கோபம் மறைந்தது.

''ஆமையைப் பற்றி என்ன தெரியும்? உங்கள் இலாக்காவிற்கும் அவனுக்கும் என்ன தொடர்பு?''

''அவனைப் பற்றி அதிக விவரமில்லை. ஆனால் என்னுடைய துறையோடு அவனுக்கு சம்பந்தம் இருக்கிறது'' என்றபடி டிக்ஸ் சவுகரியமாக உட்கார்ந்தார்.

நாற்காலியை விட்டு எழுந்த டான், சமாதானத்தின் அறிகுறியாக அலமாரியிலிருந்து இரண்டு கோப்பைகளை எடுத்து, விஸ்கியை ஊற்றினார். ஒரு கோப்பையில் தண்ணீர் சேர்த்து டிக்ஸிடம் கொடுத்தார்.

டிக்ஸ் அதை சந்தேகத்தோடு எடுத்தார் வாசனை பார்த்தார். அவரிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

''இவ்வளவு காலையில் இது கூடாது. இருந்தாலும் பாதகமில்லை நன்றி மிக்லெம்.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"இந்த ஆமையைப் பற்றிச் சொல்லுங்கள். எப்படியாவது அவனை என் பிடிக்குள் கொண்டுவர வேண்டும்."

"நாங்களும், ஃபிரஞ்சுக்காரர்களும், இத்தாலிக்காரர் களும், அமெரிக்கக்காரர்களும் அப்படித்தான் நினைக் கிறோம். இந்த விஷயத்தில் எங்கள் ஆட்கள் ஒழுங்காக வேலை செய்யவில்லை என்று ஒப்புக்கொள்கிறேன்" என்றார் டிக்ஸ். "ஆனால் இந்த குழப்பத்திற்கு நீங்களும் காரணம். ஹோரோக்ஸுக்கு ஆமையைப் பற்றித் தெரியாது, ஆனால் எனக்குத் தெரியும். நீங்கள் என்னோடு பேசியிருந்தால் கதை வேறு மாதிரி போயிருக்கும்."

"நான் உங்களுக்குச் சொல்வதாக இருந்தேன்" நீங்கள் அலுவலகத்தில் இல்லை. மீண்டும் கூப்பிடாதது என்னு டைய தவறுதான். ஆனால் இது இவ்வளவு தீவிரமாகும் என்று நான் நினைக்கவில்லை.

"விஷயம் தெரிந்திருந்தால் திரு. ஃபெரென்சியைக் காப்பாற்றி இருக்கலாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் முயற்சி செய்திருக்கலாம். ஆமை விஷயத்தை ஒரு தவறாக எடுத்துக் கொண்டு நீங்கள் மட்டுமல்ல. பாரிஸ் நகரத்துப் போலீஸ் அவன் ஒரு ஆபத்தில்லா பைத்தியம் என்று நினைத்தது. அதன் விளைவாக ரெனல்டோ புஸோனியின் உயிர் போய்விட்டது."

"புஸோனி? அவர் இத்தாலித் தூதரகத்தில் இருந்தாரே?"

"அவர்தான். ஆமையிடமிருந்து மிரட்டல் கடிதங்கள் வந்த பிறகு அவருடைய உடலை ஸீன் நதியிலிருந்து எடுத்தார்கள். இங்குள்ள இத்தாலிக்காரர்களும் மிரட்டப் படலாம் என்ற தகவல் எனக்கு வந்தது."

"ஆமை என்பது யார்?" டான் கேட்டார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''அவன் பயங்கரமான மிரட்டல் ஆசாமி; அவன் எதற்கும் துணிந்தவன்.''

''ஆக ஃபெரென்சி அவனுடைய முதல் கொலை இல்லையா?''

''இல்லை கடந்த பதினான்கு மாதங்களில் ஒன்பது கொலைகள். அமெரிக்காவில் இருவர்; பிரான்சில் மூன்று தவிர இத்தாலியில் நான்கு. இந்த நாட்டில் ஃபெரென்சி தான் முதல் பலி. பிரச்சினை என்னவென்றால் யார் ஆமைக்குப் பணம் கொடுத்திருக்கிறார்கள் என்று எங்களுக் குத் தெரியாது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஆண்களும் பெண்களுமாக சத்தம் போடாமல் அவனுக்குப் பணம் கொடுக்கிறார்கள். என்று நாங்கள் நினைக்கிறோம். நீங்கள் என்னிடம் ஃபெரென்சிக்கு ஆமையிடமிருந்து மிரட்டல் வந்திருக்கிறது என்று சொல்லியிருந்தால், நான் பணத்தைக் கொடுக்கச் சொல்லியிருப்பேன்'' என்றார் டிக்ஸ்.

''நீங்கள் நிஜமாகத்தான் சொல்கிறீர்களா? ஒரு போலீஸ் அதிகாரி சொல்லும் ஆலோசனையா இது.''

''அது நல்ல யோசனை. அவருடைய மனைவி லண்டன் மருத்துவமனையில் இருக்க மாட்டார். அவரும் உயிரோடு இருந்திருப்பார்''

''அது முக்கியமல்ல. போலீஸார் திரு. ஃபெரென்சியைக் காப்பாற்ற நாதியில்லை என்கிறீர்களா?''

''அதைத்தான் சொல்கிறேன். அதுதான் உண்மை. இங்குள்ள வி.ஐ.பிக்களைத் தவிர மற்றவர்களைப் பாதுகாக்கும் அளவுக்கு ஆள் பலம் இல்லை. ஆமை என்பவனுக்குப் பொறுமை இருக்கிறது. அப்போதோ, அடுத்தோ, நான் குறி வைத்த ஆளை முடித்து விடுகிறான். பகலிலும் இரவிலும் திரு. ஃபெரன்சிக்குப் பாதுகாப்பு கொடுத்திருக்க முடியாது. இத்தாலியத் தூதுவரின் ஆட்கள்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

யாராவது மிரட்டப்பட்டால் நாங்கள் பாதுகாப்பு கொடுப்போம். ஆனால் திரு. ஃபெரென்சி சாதாரணமான பிரஜை வாரக் கணக்கில் அவருக்குப் பாதுகாப்புத் தர முடியாது ஆமை எப்படி வேலை செய்கிறான் என்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். நீங்கள் மேசன் மற்றும் டிக்சன் ஆகிய மூவரும் ஃபெரென்சி வீட்டில் பாதுகாப்பாக இருந்தீர்கள். ஆனால் அவரைக் காப்பாற்ற முடியவில்லை'' டிக்ஸ் தன்னுடைய பைப்பைத் தட்டினார், அதன் உள்ளே ஊதினார், பிறகு அதை நிரப்பினார். ''தன்னுடைய மிரட்டலை நிறைவேற்றாவிட்டால் வரும் வரும்படி குறைந்து விடும் என்பது ஆமைக்குத் தெரியும். பணம் கொடு அல்லது பிணமாகி விடு என்பதுதான் அவனுடைய கோஷம். பணம் கொடுக்காவிட்டால் பிணமாகி விடுவோம் என்ற பயத்தில் எல்லோரும் அவனுக்குக் கொடுக்கிறார்கள்.''

''ஆனால் ஃபெரன்சிக்கு இதெல்லாம் தெரியாதே. ஆமை என்றால் அவருக்குப் புரியவில்லை''

''ஆமாம், உண்மைதான். ஆமை இங்கே தன்னுடைய நடவடிக்கைகளைத் தொடங்குகிறான். ஃபெரென்சியின் மரணத்திற்கு முன் ஆமையைப் பற்றி யாருக்கும் தெரியாது; ஆனால் இப்போது எல்லோருக்கும் தெரியும். பத்திரிகைகள் அவனைப் பற்றி எழுதிய பிறகு ஆமையைத் தெரியாதவரே இருக்க முடியாது. அடுத்த முறை ஏதாவது ஒரு பணக்காரருக்கு மிரட்டல் கடிதம் வரும் போது அவர் அதை விளையாட்டென்று நினைக்க மாட்டார். ஆமை இந்த நாட்டிற்கு வந்திருப்பதை விளம்பரப்படுத்தவே ஃபெரென்சி கொலை செய்யப்பட்டாரென்று நினைக் கிறேன்.''

''நீங்கள் தான் அவனைப் பிடிக்கவேண்டும்'' என்றார் டான். ''அதுதான் உங்கள் வேலை''.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"அது சுலபமல்ல. அவனைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை. கொலை செய்தவனைப் பிடித்தாலும் அவன் ஆமையாக இருக்க மாட்டான். அந்தச் சிகப்புக் கூந்தல் பெண்ணைப் பிடித்தால் அவள் ஆமையாக இருக்க மாட்டார். ஆமையால் ஏவப்பட்ட கொலைகாரன் ஒருவனை ஃபிரஞ்சுப் போலீசார் பிடித்து விசாரித்தார்கள். இருந்தாலும் அவர்களுக்கு எந்தத் தகவலும் கிடைக்க வில்லை. இருட்டாக இருந்த வீதியில் சந்தித்த நபர் தன்னிடம் இந்த வேலையைக் கொடுத்ததாக அவன் சொல்கிறான்; காரில் வந்தவன் காரில் இருந்தபடியே பேசியிருக்கிறான். கொலைகாரன் அவன் முகத்தைப் பார்க்கவில்லை. சொன்னதைக் கொலைகாரன் செய்திருக் கிறான். இந்த ஆமை ஒரு தலைவலி. கடந்த பதினான்கு மாதங்களாக அமெரிக்க, இத்தாலிய மற்றும் பிரெஞ்சு போலீசாருக்கு அவன் பெரிய சவாலாக இருக்கிறான். இப்போது நம்முடைய முறை."

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால், அவன் சிக்குவது மாதிரித் தெரியவில்லை." என்றார் டான்.

"திரு. மிக்லெம் உங்களுடைய உணர்வு எனக்குப் புரிகிறது. உங்களுடைய நல்ல நண்பரை இழந்து விட்டீர் கள். ஆனால் எங்களால் அதிசயங்களைச் செய்ய முடியாது. முடிந்ததை நாங்கள் நிச்சயமாகச் சொல்வோம். இது ஒரு பன்னாட்டு விவகாரம். அவன் இத்தாலியிலிருந்து இதை நடத்துகிறான் என்று நினைக்கிறேன்."

"ஏன் இத்தாலி?"

"இரண்டு காரணங்கள், ஆமையால் கொல்லப்பட்டவர் கள் அனைவரும் இத்தாலியர்கள். மற்றொரு காரணம் இது." தன்னுடைய பாக்கெட்டிலிருந்து தட்டையான பெட்டி ஒன்றை எடுத்தார் டிக்ஸ். அதில் அகலமான கத்தி இருந்தது; கைப்பிடியில் ஆழமான வேலைப்பாடு. "இந்தக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கத்திதான் திரு. பெரென்சியைக் கொன்றது. உங்களுக்கு ஏதாவது தெரிகிறதா?''

டான் கத்தியை எடுத்து காரணமாகப் பார்த்தார்.

''இந்த மாதிரி விஷயங்களில் எனக்குத் தேர்ச்சி இல்லை'' என்று சொல்லிக் கொண்டே அந்தக் கத்தியைப் புரட்டிப் பார்த்தார். இடைக்காலத்தில் இத்தாலியில் பயன்பட்ட கத்தியின் நகல் இது; பதிமூன்றாம் நூற்றாண்டாக இருக்கலாம். பிரான்ஸைச் சேர்ந்த பார்கெலோவில் இந்த மாதிரிக் கத்தியைப் பார்த்த ஞாபகம் இருக்கிறது.''

''அது சரிதான். அமெரிக்கா, பிரான்சு மற்றும் இத்தாலியைச் சேர்ந்த போலீசிடம் இந்த மாதிரி ஒன்பது கத்திகள் இருக்கின்றன. இவை எல்லாம் ஆமைக்கு பலியானவர்களின் உடலிலிருந்து எடுக்கப்பட்டவை. இந்தக் கத்திகள் தயாரிப்பு பற்றி விசாரித்தும் பயனில்லை.''

''லோரெலி என்ற சிகப்புக் கூந்தல் பெண் இத்தாலிக் காரிதான். அவளுடைய பேச்சிலேயே அது தெளிவாகத் தெரிந்தது'' என்றார் டான்.

''அது இன்னொரு அடையாளம்'' என்றார் டிக்ஸ்.

''ஏதோ கொஞ்சம் துப்புக் கிடைத்திருக்கிறது. இத்தாலி யர்களை மட்டும் தாக்குவது ஏன்? ஏதாவது அரசியல் காரணம் இருக்குமா? ஃபெரென்சி தீவிரமான ஃபாசிஸ்ட் எதிர்ப்பாளர் என்று எனக்குத் தெரியும். மற்றவர்களின் அரசியல் பின்னணி என்ன?

''அப்படி எதுவும் சொல்ல முடியாது. சிலர் ஃபாசிஸ்ட் எதிர்ப்பாளர்கள், சிலர் கிருத்துவ ஜனநாயகவாதிகள், அரசியல் பின்னணியை ஆராய்ந்து பார்த்ததில் எனக்கு எதுவும் கிடைக்க வில்லை''

''அவன் தன்னை ஆமை என்றழைத்துக் கொள்வது பற்றி யோசித்தீர்களா? யாரும் ஆமை என்ற பெயரைக் கேட்டுப்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பயப்படப் போவதில்லை. மிரட்டலுக்கு அது பயன்படாது. ஏன் ஆமை? அதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும். ஆமை மந்தமானது ஆபத்தில்லாதது; கொலைகாரனுக்கு நேர் எதிர் குணம். ஏதாவது ஒரு காரணம் இருக்க வேண்டும்.''

''நானும் அதை யோசித்தேன்; எனக்கு எதுவும் புலப்பட வில்லை. போலீசை ஏமாற்றுவதற்காகவே அந்தப் பெயர் வைத்திருக்கலாம்.''

''நான் அப்படி நினைக்கவில்லை. இன்னொரு விஷயம் பழங்காலத்துக் கத்தியை நகல் எடுப்பானேன்? இந்த மாதிரியான வேலைப்பாடுகள் இல்லாத கத்தியைப் பயன் படுத்தலாமே. ஆமை என்ற பெயரையும் வேலைப் பாடுடைய கத்தியையும் தன்னுடைய டிரேட் மார்க்காகப் பயன்படுத்துகிறான் என்று நான் நினைக் கிறேன். அதற்கான காரணத்தைக் கண்டுபிடித்தால் நாம் அவனைப் பிடித்துவிடலாம்.''

''அது சரிதான். ஆனால் அதை எப்படிக் கண்டு பிடிப்பது?''

டான் சிகரெட்டை நெருப்பில் எறிந்தார்.

''யோசிக்க வேண்டிய விஷயம். நான் உங்களை அவசரப் படுத்தவில்லை. எனக்கு நிறைய வேலை இருக் கிறது. நீங்கள் தகவலைக் கொடுப்பதற்காக மட்டும் வரவில்லை என்று நினைக்கிறேன்''

புகைக்கும் பைப்பை எடுத்து மூக்கில் உரசிக் கொண்டார் டிக்ஸ்.

''அதுவும்தான். வேறு காரணமும் இருக்கிறது. உங்களுடைய திறமையைப் பற்றி எங்களுக்குத் தெரியும். ட்ரகார்த் வழக்கிலும் நீங்கள் போன வருடம் நன்றாகச் செயல்பட்டீர்கள். ஃபெரென்சி உங்களுடைய நண்பர். ஒரு

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வேளை ஆமையைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று நீங்கள் முயற்சி செய்தால் நான் கொடுத்த தகவல் உங்களுக்கு உபயோகமாக இருக்கும். அவனைப் பிடிக்க வேண்டுமென்றால் சட்டவிரோத கும்பலில் இருந்து தகவலைப் பெறவேண்டும். இத்தாலியில் உங்களுக்குத் தொடர்பு இருக்கிறது; இங்கேயும் இருக்கிறது. நீங்கள் சேகரிக்கும் தகவல் எங்களுக்கும் உபயோகமாக இருக்கும்.

''நல்லது'' என்றார் டான். ''நான் என்ன செய்ய முடியும் என்பதைப் பார்க்கிறேன். ஆனால் எனக்கு அதிக நம்பிக்கை யில்லை. ரோம் நகரத்தில் எனக்குத் தெரிந்தவர்கள் சிலர் இருக்கின்றனர்; அவர்கள் உதவலாம். நான் உசேலியோடு பேசுகிறேன். நீங்கள் அவரைப் பார்த்திருக்கிறீர்களா? ஸோஹோவில் இருக்கும் டோர்கோலோடி உணவு விடுதி அவருடையது. அவர் பழைய கேடி; பல வருடங்களாக எனக்குப் பழக்கம். இங்கு உள்ள இத்தாலியர்களைப் பற்றி அவருக்குத் தெரியாத எதுவும் இருக்காது.''

''போரின் போது கறுப்பு மார்க்கெட் நடவடிக்கை களுக்காக அவனைப் பிடித்திருப்போம். ஆனால் அவன் சிக்கவில்லை.''

''அவ்வளவு தூரம் நீங்கள் வந்ததே அதிகம். நான் அவரோடு பேசுகிறேன். அவருக்கு ஏதாவது தெரிந்திருக் கலாம்'' என்றார் டான்.

அந்தக் கத்தியைப் பெட்டியில் வைத்து, பெட்டியைப் பாக் கெட்டில் வைத்துக் கொண்டார் டிக்ஸ்.

''இத்தாலிக்குப் போய் ஏதாவது கிடைக்கிறதா என்று பார்க்க முடியுமா? அங்கிருந்து தான் நமக்குத் தேவையான தகவல் கிடைக்கும் என்று நினைக்கிறேன்.

''என் அன்பான நண்பரே, ஆமையைத் தேடிக் கொண்டு இத்தாலி முழுவதும் என்னால் அலைய முடியாது. ஏதாவது

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஒரு மாவட்டத்தைச் சொல்ல முடியுமா? ஒரு நகரத்தைக் குறிப்பிட்டால் இன்னமும் சுலபமாக இருக்கும். அந்த மாதிரி தகவல் கிடைத்தால் நான் போகிறேன்.''

''இத்தாலியில் கொல்லப்பட்ட ஐந்து பேரும், ரோம், ஃபிளாரன்ஸ், படுவா, நேபில்ஸ் மற்றும் மிலானில் பலியானார்கள். இது மிகப் பெரிய பிரதேசம். இதற்கு மேல் எந்தத் தகவலும் இல்லை.''

''இந்த இடம் என்று கண்டுபிடிக்க இருவரும் முயற்சி செய்யலாம்'' என்று டான் சொல்லும்போது டிக்ஸ் எழுந்துவிட்டார். ''உங்களுக்குக் கிடைக்கும் தகவலை எனக்குச் சொல்லுங்கள்; நான் உங்களுக்குச் சொல்கிறேன்.''

சூபரின்டென்டென்ட் வெளியேறிய பிறகு, டான் நெருப்புக்கு எதிரே உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருந்தார். மதிய உணவு தயாராக இருக்கிறது என்று செர்ரி சொல்லும் வரை அவர் அங்கேயே இருந்தார்.

சராசரி இத்தாலியனை விட ஜியோர்ஜியோ உசெல்லி அதிக உயரம்; வயது எழுபத்து ஐந்து ஆனாலும் நேராகத் தான் நடந்தார். அவருடைய தீட்சண்யமான கண்கள் எப்போதும் எச்சரிக்கையுடன் இருந்தன.

டானுடைய தந்தைக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன் உசேல்லியைத் தெரியும். உசேல்லி வெனிஸ் நகரத்தின் காலேடி பபோரி பகுதியில் ஒரு உணவுவிடுதியை வைத்திருந்தார். பதினாறு வயதில் முதல் முறையாக வெனிஸ் நகரத்தின் உணவை டான் அங்கேதான் சுவைத்தார்; அவருக்கு உசேல்லி நெருக்கமாகிவிட்டார். முசோலினி ஆட்சிக்கு வந்தவுடன் உசேல்லி இத்தாலியை விட்டு வெளியேறி ஸோஹோவில் தங்கிவிட்டார். இத்தனை வருடங்களில் டானுக்கும் உசேல்லிக்கும் நட்பு நீடித்தது. இப்போது பிரபலமாகிவிட்ட உசேல்லியின் உணவு விடுதியில் டான் அடிக்கடி செல்வது வழக்கம்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அற்புதமான விருந்திற்குப் பிறகு, இப்போது டான் உசேல்லியின் தனியறையில் இருந்தார். நெருப்புக்கு முன் உட்கார்ந்திருந்த அவருடைய கையில் உயந்த ரக பிராண்டி; வாயில் இருந்த சுருட்டின் புகை முகத்தினை மறைத்துவிட்டது.

அவரும் உசேல்லியும் இருபது நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருந்தனர்; விஷயத்துக்கு வரலாம் என்று டான் முடிவு செய்தார்.

''திரு.ஃபெரென்சியின் மரணத்தைப் பற்றிக் கேள்விப் பட்டீர்களா?'' என்று திடீரென்று கேட்டார் டான்.

உசேல்லியின் கருத்த முகம் களையிழந்தது.

''கேள்விப்பட்டேன். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. திருமதி ஃபெரென்சி எப்படியிருக்கிறார்?''

''இன்னமும் மோசமாகத்தான் இருக்கிறது. இந்த விவகாரத்தில் போலீசுக்கு எந்தத் தகவலும் கிடைக்க வில்லை என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்.''

உசேல்லி தோள்களை உயர்த்தினார்.

''போலீஸ் விவகாரத்தில் எனக்கு அக்கறையில்லை''

உசேல்லியிடம் போலீசைப் பற்றிப் பேசக்கூடாது என்று டானுக்குத் தெரியும். உசேல்லி கறுப்பு மார்க்கெட்டில் பெரிய ஏஜென்டாக இருந்தார் என்றும் இப்போதும் வெளிநாட்டுக் கரன்சிகளில் விளையாடுகிறார் என்றும் டான் கேள்விப்பட்டிருக்கிறார்.

''கிடோ என்னுடைய சிறந்த நண்பர்களில் ஒருவராக இருந்தார்'' என்றார் டான். அவரைக் கொலை செய்தவனை நான் கண்டுபிடிக்க வேண்டும். இது தனிப்பட்ட விஷயம்.''

உசேல்லி ஆமோதித்தார்; இதை அவரால் புரிந்து கொள்ள முடியும். சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு டான்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கேட்டார். ''எனக்குத் தகவல்கள் வேண்டும். ஆமையைப் பற்றி உங்களுக்குத் தெரிந்ததை எனக்குச் சொல்லுங்கள்.''

இல்லை என்கிற முறையில் உசேல்லி தலையாட்டினார்.

''எனக்குத் தெரிந்தது கொஞ்சமே. அவன் ஆபத்தான வன் என்று எனக்குத் தெரியும். ஐந்தாயிரம் பவுண்டுக்கு மேல் வைத்திருக்கும் எந்த இத்தாலியனும் அவனிடமிருந்து தப்ப முடியாது. இத்தாலியில் அவன் பேரைச் சொன்னாலே நடுங்குகிறார்கள். இத்தாலியிலும் பிரான்சிலும் நூற்றுக் கணக்கான பணக்காரர்கள் அவனுக்குக் கப்பம் செலுத்து கிறார்கள்.''

''அவன் இத்தாலியில் இருக்கிறானா?''

''எனக்குத் தெரியாது.''

''அவனுக்காக சிலர் வேலை செய்கிறார்கள்; அதில் ஒருத்தி சிகப்புக் கூந்தலுடைய பெண். அவளை உங்களுக் குத் தெரியுமா? உசேல்லி இல்லையென்றார்.

''சிகப்புக் கூந்தல் பெண்ணை எனக்குத் தெரியாது. இப்போது யாரும் அந்த வர்ணத்தைப் பயன்படுத்து வதில்லை.''

''உயரமாக ஒல்லியாக ஒருவன், கறுப்பு நிறம், வளைந்த மூக்கு, ஆடம்பரமாக உடையணிந்திருக்கிறான், 'எட்' என்று அழைக்கிறார்கள்.''

உசேல்லி தன்னுடைய சுருட்டை அணைத்தார்.

''அது எட் ஷாபிரோவாக இருக்கலாம். அவர் இங்கே வருவதுண்டு.''

டான் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''அவன் வருமானத்திற்கு என்ன செய்கிறான்?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''ஒரு காலத்தில் சர்க்கஸில் கத்தி எறிபவனாக இருந்தான்.''

''அவனைந்தான் பிடிக்க வேண்டும்'' என்று சத்தமாகச் சொன்னார் டான். ''அவன் எங்கே இருக்கிறான்?''

''சில வாரங்களாக அவனைப் பார்க்கவில்லை. ஒரு வேளை அவனுடைய சிநேகிதி உங்களுக்கு உதவலாம்.''

''அவள் எங்கே இருக்கிறாள்?''

''அவள் பெயர் கினா பாஸெரோ; இத்தாலிக்காரி, ஐந்தாவது தெருவில் இருக்கும் ஃபுளோரிடா கிளப்பில் வேலை செய்கிறாள். அவளுக்குப் பணம்தான் முக்கியம் ஒரு ஐம்பது பவுண்டு கொடுத்தால் போதும், ஷாபிரோ இருக்கும் இடத்தைச் சொல்லிவிடுவாள்.''

''நல்லது நான் அவளோடு பேசுகிறேன். இந்தச் சிகப்புக் கூந்தல் பெண்ணின் பெயர் லோரெலி. அவளைப் பற்றிய தகவல் ஏதாவது கிடைக்குமா? அவளைப் பற்றிய தகவல் கொடுப்பவர்களுக்கு நூறு பவுண்டு கிடைக்கும்.''

உசேல்லா ஆமோதித்தார்.

''என்னால் முடிந்ததைச் செய்கிறேன்.''

டான் எழுந்து நின்றார்.

''இந்த கினா பாஸெரோவிடமிருந்து ஏதாவது கிடைக்கிறதா என்று பார்க்கிறேன். கிளப்பில் அவளுக்கு என்ன வேலை?''

''அவள் நடனக்காரி. நீங்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவர் சர்வசாதாரணமாகக் கொலை செய் கிறாள். அதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். அவர் களைப் பற்றி நீங்கள் விசாரிப்பது தெரிந்தால் உங்களைத் தீர்த்து விடுவார்கள்.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''என்னைப் பற்றிக் கவலைப்படவேண்டாம்'' என்றார் டான். ''நான் என்னைப் பாதுகாத்துக்கொள்கிறேன். அந்தச் சிகப்புக் கூந்தல் பெண்ணைப் பற்றிய தகவல் வேண்டும்.''

''நான் விசாரிக்கிறேன். ஷாபிரோவிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவன் மோசமானவன்.''

''நான் கவனமாக இருக்கிறேன். அற்புதமான விருந்திற்கு நன்றி, சில நாட்களுக்குப் பிறகு உங்களைப் பார்க்கிறேன்.''

''கொஞ்சம் பொறுமையாக இருக்கவேண்டும்; தகவல் கிடைப்பது சுலபமல்ல'' உசேல்லா டானைப் பார்த்தார். ''நான் கொடுத்த தகவல் எல்லாம், உங்களுக்காகத்தான் போலீசுக்கு அல்ல.''

''அப்படியே வைத்துக் கொள்கிறேன்'' என்றார் டான்.

உணவு விடுதியிலிருந்து வேகமாக நடந்து டான் ஐந்தாவது தெருவில் **புளோரிடா கிளப்** என்று ரத்தச் சிகப்பில் நியான் விளக்கு ஒளிரும் இடத்திற்கு வந்தார். அங்கே உறுப்பினர்களுக்கு மட்டும் என்று எழுதப்பட்டிருந்தது. சப்பைமூக்கோடு இருந்த காவலாளியிடம் ஒரு பவுண்டு கொடுத்து தற்காலிக உறுப்பினர் டிக்கட் வாங்கிக் கொண்டார்; அழுக்காக இருந்த கல் படிக்கட்டுகளில் இறங்கி சுமாராக இருந்த பாருக்கு வந்தார். பாருக்கு அந்தப் புறத்தில் முப்பது அல்லது நாற்பது மேசைகளும் மூன்று பேர் கொண்ட இன்னிசைக் குழுவும் நடனமாடுவதற்கான இடமும் இருந்தன.

பார் இருந்த இடத்தில் ஒரு விஸ்கி ஆர்டர் செய்தார். பொன்னிறக் கூந்தலோடு இரண்டு பெண்களும் அளவுக்கு அதிகமான தோள்களோடு கட்டம் போட்ட கோட் அணிந்த ஆணும் பாரில் ஜின்னை சுவைத்துக் கொண்டிருந்தனர். அவர்களின் பார்வை டானை ஆராய்ந்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

டான் அவர்களைப் பொருட்படுத்தவில்லை. ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டு சிறிது நேரம் விஸ்கியோடு விளையாடிக் கொண்டிருந்தார். உணவுப் பகுதியிலிருந்து இரண்டு பேர் பாருக்கு வந்தனர். விஸ்கியை முடித்துவிட்டு டான் மேசைகளுக்குச் சென்றார்.

ஒரு பியானோ கலைஞர், ஒரு சாக்ஸபோன் கலைஞர் மற்றும் டிரம் வாசிப்பவர் ஆகியோர் அரைமனதோடு வாசித்துக் கொண்டிருந்தனர். இசைக்கு ஏற்றபடி மூன்று ஜோடிகள் அசைந்து கொண்டிருந்தனர்; அதை நடனம் என்று சொல்ல முடியாது. விஸ்கிக் கோப்பையைக் கையில் வைத்தபடியே ஒருவன் தள்ளாடிக் கொண்டிருந்தான். அவனுடைய கூட்டாளி, தாமிர நிறக் கேசத்தோடும் சிகரெட்டோடும் அசைந்து கொண்டிருந்தான்.

மூலையில் இருக்கும் மேசையை டான் தேர்ந்தெடுத் தார். அவருக்கருகே சிறிய மேடை இருந்தது; அதில் கைப் பிடிக் கம்பி போட்டிருந்தது. அந்த இடத்தில் ஓயாமல் ஊதித் தள்ளிக் கொண்டு மூன்று பெண்கள் அக்கறையில் லாத பார்வையோடு அமர்ந்திருந்தார்கள்.

அழுக்கான கோட்டோடு ஒரு சர்வர் அருகே வந்தார். டான் 'விஸ்கி மட்டும்' என்றார்.

சர்வர் தலையசைத்துவிட்டுச் சென்றார்.

இன்னிசைக்கு ஒரு இடைவெளி. ஆடிக்கொண்டிருந்த ஜோடிகள் கைதட்ட மறந்தார்கள். அவர்கள் தங்களுடைய மேசைக்குச் சென்றனர். அசந்தர்ப்பமான அமைதி ஏற்பட்டது. உற்சாகமில்லாத இரவு கிளப்புகளில் புளோரிடா கிளப்புக்கு ஒரு விசேஷம் இருக்கிறது என்று டான் நினைத்தார்.

கம்பிக்குப் பின் இருந்த பெண்களில் கறுப்பாக, ரோஜாப்பூ அணிந்த பெண்தான் கினோபாஸெரோவாக

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இருக்கலாம் என்பது அவருடைய யூகம். குறைந்த பட்ச உடலமைப்பு. ஆனால் நேர்த்தியான கவர்ச்சியான அழகு அவளிடமிருந்தது. கண்களுக்குக் கீழே இருந்த கருவளையங்கள் அவளுடைய மனநிலையைக் காட்டிக் கொடுத்தன. கறுப்பு மற்றும் சிகப்பு கலந்த மாலைநேர உடை அணிந்திருந்தாள். அந்த ஆடையின் முன்பகுதி கவனமாக வெட்டப்பட்டு அதிலிருந்து இளமையான, திரண்ட மார்பகங்கள் எட்டிப் பார்த்தன. கைகளை மடியில் வைத்துக் கொண்டு அசைவில்லாமல் இருந்தாள் அவள். கண்கள் திறக்காமல் இருந்திருந்தால் அவள் தூங்குகிறாள் என்று சொல்லிவிடலாம்.

சர்வர் விஸ்கியைக் கொண்டு வந்தார், டான் அதற்கான பணத்தைக் கொடுத்தார். பொன்னிறக் கூந்தல் அழகிகள் இருவரும் டானுக்கு எதிரே வந்து அமர்ந்தனர்; அவரையே உற்றுப் பார்த்தனர். ஐந்து நிமிடங்கள் மெதுவாகக் கடந்தன. பிறகு பியானோக்காரர் வாசிக்கத் தொடங்கினார். மூன்றாவது சுற்றில் போனால் போகிறதென்று சாக்ஸபோனும் டிரம்ஸும் சேர்ந்து கொண்டன.

டான் மேடைக்கு அருகே சென்றார்.

தலையில் ரோஜா வைத்திருந்த பெண்ணைப் பார்த்து ''என்னோடு ஆடுவதற்கு உடலில் வலு இருக்கிறதா?'' என்று கேட்டார்.

மற்ற இருவரும் கிளுகிளுப்பாகச் சிரித்தனர், அவர்கள் பார்வையில் நேரடியாக அழைப்பு இருந்தது.

ரோஜாப்பூக்காரி எழுந்து வெளியே வந்தாள். அவளுடைய நடையில் உற்சாகமில்லை, விரும்பமின்மையை அவள் மறைக்கவில்லை. அவளைத் தன்னுடைய கைகளில் வளைத்துக் கொண்ட டான் நடனத் தளத்தில் நகர்ந்தார். அந்த நிலையில் அதிகமான அசைவு

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

களுக்கு வழியில்லை. தாளம் இழுபறியாக இருக்கும்போது நடனம் கேலிக் கூத்தாகிவிடுகிறது.

சில நிமிடங்கள் போராடிய பிறகு டான் ''இங்கே தான் ஈமக் கிரியைகள் செய்பவர்கள் ஓய்வெடுப்பார்கள் என்று நினைக்கிறேன்'' என்றார்.

அந்தப் பெண் எதுவும் பேசவில்லை. அவளுடைய அழகிய கேசத்தின் மேற்பகுதி மட்டுமே அவருக்குத் தெரிந்தது. தன்னுடைய முகத்தை அவருடைய தங்க டை கிளிப்பில் தேய்த்துக்கொண்டிருந்தாள் அவள்.

அவர்கள் அந்த இடத்திலேயே சுற்றி வந்தனர். ''நீ தூக்கத்தைத் தொடரலாம். உன்னுடைய கால்களை என் கால்கள் மீது வைத்து விட்டு அமைதியாக இருக்கலாம்'' என்றார்.

அவள் பின்புறமாக விலகி அவரை முறைத்தாள். அந்தக் கோணத்தில் அவளுடைய முன்னழகைப் பார்க்க முடியும் என்றாலும் பண்பாடு டானைத் தடுத்தது. அந்தப் பெண்ணின் கண்களில் இருந்த கருமை சலிப்பையும் களைப்பையும் காட்டியது.

''அப்படியே இருக்கட்டும் ஜாக்'' என்றாள் அவள். அவள் குரலில் எந்த உணர்ச்சியுமில்லை.

''சரி. நான் வேகமாகப் போனால் நீ சொல்லலாம்'' என்றார் டான்.

''நான் ஆடும் முறை உங்களுக்குப் பிடிக்கவில்லை யென்றால் என்ன செய்யலாம் என்பது உங்களுக்குத் தெரியும்'' என்றாள் அவள் விரக்தியோடு.

டான் ஆங்கிலத்திலிருந்து இத்தாலிய மொழிக்கு மாறினார். ''என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியும். ஆனால் இந்த இடம் சவுகரியப்படாது'' என்றார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சலிப்பு, களைப்பு எல்லாம் அந்த முகத்திலிருந்து வெளியேறிவிட்டது; கண்களில் உணர்ச்சி தென்பட்டது. அவளுடைய கவர்ச்சிகரமான சிவந்த உதடுகள் புன்னகைக் காக வளைந்தன.

''உங்களுக்கு எப்படித் தெரியும்? என்னிடம் இத்தாலிய மொழியில் பேசியதைக் கேட்டு பல வருடங்கள் ஆகிவிட்டது.''

''நான் மந்திரவாதி'' என்றார் டான், புன்னகையோடு. அவள் உதடுகளை ஈரமாக்கிக் கொண்டாள்.

''அப்படித்தான் தெரிகிறது.'' என்றாள் அவள்.

''இந்தக் கேவலமான ஆட்டத்தை நிறுத்தி விட்டு நாம் அடுத்த கட்டத்திற்குப் போகலாமா?''

''அது உங்கள் விருப்பம். ஆனால் ஒரு மணி நேரத்திற்கு ஒரு பவுண்டு செலவாகும்.''

''அதைப் பற்றிப் பரவாயில்லை'' என்ற டான் அவளை மேசைக்கருகே அழைத்து வந்தார். ''என்னிடம் பணமிருக் கிறது. என்ன வேண்டும் உனக்கு?''

அவள் ஷாம்பைன் ஆர்டர் செய்தாள். டானுக்கு மீண்டும் விஸ்கி. அது வந்த பிறகு அவள் இத்தாலியின் எந்தப் பகுதியைச் சேர்ந்தவள் என்று கேட்டார்.

''நான் நேபிள்ஸில் பிறந்தேன். ஒரு அமெரிக்க மாலுமியைத் திருமணம் செய்துகொண்டேன். அவனோடு லண்டனுக்கு வந்தேன். இரண்டு வார காலம்தான், அதற்குள் டாக்ஸி மோதி அவன் உயிர் போய்விட்டது.''

''கஷ்ட காலம்'' என்றார் டான்.

அவள் தோள்களை அசைத்தாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''அவனால் அதிகப் பிரயோசனமில்லை. அவன் போனதே நல்லது.''

''அப்போது உனக்கு இளமையான வயதாயிருந்திருக்க வேண்டும்.''

அவள் சிரித்தாள்.

''எனக்குப் பதினைந்து வயது. எங்கள் குடும்பத்தில் பதினெட்டுப் பேர். நாங்கள் நான்கு அறைகளில் இருந்தோம். அங்கிருந்து வெளியேறியதே நல்லது'' அவள் சிரித்தாள். ''நீங்கள் அமெரிக்கர் தானே, எப்படி இவ்வளவு அழகாக இத்தாலி பேசுகிறீர்கள்?''

என்னுடைய தந்தை பெரும்பாலும் பிளாரன்சில் இருந்தார். நானும் அவரோடு இருந்தேன். உன் பெயர் என்ன?''

''என்னை கினா என்று அழைக்கலாம்.''

அவள் நேபிள்ஸ் நகரத்தைப் பற்றி விவரித்தாள். அவளுடைய ஆர்வத்தைப் புரிந்து கொண்ட டான் குறுக்கே பேசவில்லை. ஷாம்பைன் பாட்டில் ஓரளவு காலி செய்த பிறகு அவள் சகஜ நிலைக்கு வந்தாள். அப்போது டான் கேட்டார். ''எட் எப்படியிருக்கிறார்?'' என்று.

அவள் புன்னகைத்தாள் என்றாலும் கண்ணிலிருந்து சிறிது கலக்கம் தெரிந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு புன்னகைக்கும் முயற்சியைக் கைவிட்டாள். அந்த முகம் உணர்ச்சியைக் கிழித்தது.

''எட்டைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?'' என்றாள். காட்டமாக.

''நான் அவரோடு பேசவேண்டும். நான் அவரைத் தேடுகிறேன். அவர் எங்கே இருகிறார்?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''எனக்கு எப்படித் தெரியும்'' அவள் பையை எடுத்துக் கொண்டாள். ''நான் போக வேண்டும். நாள் முழுவதும் உன்னோடு இருக்க முடியாது.''

''அர்த்தமில்லாமல் பேசாதே. நான் எட்டுக்காக ஒரு வேலை வைத்திருக்கிறேன். அதைத் தள்ளிப் போட முடியாது எட் எங்கே இருக்கிறார் என்று சொல்பவருக்கு ஐம்பது பவுண்டு தரப்படும்.''

அவளுடைய கண்களில் நிறமாற்றம் ஏற்பட்டது.

''அதாவது அவன் எங்கே இருக்கிறான் என்று சொன்னால் ஐம்பது பவுண்டு கொடுப்பீர்களா?'' என்றாள்.

''அவர் இருக்கும் இடத்தைக் காண்பித்தால் ஐம்பது பவுண்டு கொடுப்பேன். நீ கொடுக்கும் விலாசத்திற்கு அந்த விலை தருகிறேன்.''

அவருடைய நாக்கு உதடுகளைத் தடவியது.

''நிச்சயமாகக் கொடுப்பீர்களா? என்னிடம் ஐம்பது பவுண்டு இருந்தால் நான் ஊருக்குப் போய்விடுவேன்.''

''எட் எங்கே இருக்கிறார் என்பதைக் காண்பித்துவிடு. நீ ஊருக்குப் போகலாம், இது சத்தியம்.''

''நான் அவனைப் பார்த்துப் பல வாரங்களாகிறது. ஆனால் இருக்குமிடம் எனக்குத் தெரியும். பணத்தை எப்போது கொடுப்பீர்கள்?''

''சில மணிநேரங்களில் அது கிடைக்கும்.''

''நல்லது காசினோ தியேட்டர் வாசலில் ஒரு மணிக்கு என்னைச் சந்திக்கலாம். என்னால் பனிரெண்டு மணிக்கு முன் இங்கிருந்து வெளியேற முடியாது, தவிர அவன் இருக்குமிடத்தை நான் தெரிந்து கொள்ள வேண்டும்.''

''நீ இதைச் செய்வாயா?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''ஊருக்குப் போவதற்காக நான் எதையும் செய்வேன்'' என்றவள் ''அவனுக்கு ஏதாவது பிரச்சினையா?'' என்றாள்.

''அதைப் பற்றி நீ கவலைப்படுகிறாயா?'' அவள் இல்லை என்றாள்.

''அவர் இருக்குமிடத்தைக் கண்டுபிடி. ஆனால் நான் அவரைத் தேடுகிறேன் என்பதைச் சொல்ல வேண்டாம். அது மிகவும் முக்கியம்.''

''நான் சொல்ல மாட்டேன். அவன் ஒரு பயித்தியக் காரன், மிகவும் ஆபத்தானவன்'' என்றாள் கினா.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அத்தியாயம் ஐந்து

சியென்னா தேவாலயம்

ஓய்ட் காம்டன் தெருவில் டான் வேகமாக நடந்து கொண்டிருந்தார்; வீசியடிக்கும் மழையிலிருந்து தப்புவதற் காகத் தலையைக் குனிந்து கொண்டிருந்தார். அப்போது மணி ஒன்று ஐந்து. தன்னைத் தொடர்ந்து வரும் ஹாரியின் காலடி ஓசை அவருக்குத் தெளிவாகக் கேட்டது.

போலீசாரை அழைத்துப் போக மாட்டேன் என்று அவர் உசேல்லியிடம் சொல்லியிருந்தாலும் ஷாபிரோவைத் தனியாகச் சந்திக்க அவர் விரும்பவில்லை.

''இந்தப் பெண்ணுக்கு ஷாபிரோ தங்குமிடம் தெரியாமலிருக்கலாம். ஆனால் அவளுக்கு அவசரமாகப் பணம் வேண்டும். ஆகவே அவள் பொய் சொல்லலாம். நாம் கவனமாக இருக்க வேண்டும். தேவை ஏற்பட்டால் உள்ளே வரலாம்'' என்று அவர் ஹாரியிடம் சொல்லியிருந் தார்.

இருளாக இருந்த காசினோ தியேட்டருக்கு அருகே வந்தவுடன் அவர் திரும்பிப்பார்த்து ஹாரிக்கு சைகை காண்பித்தார். அருகில் இருந்த ஒரு கட்டிடத்தின் வாசலில் ஹாரி ஒளிந்து கொண்டான்.

காசினோவின் கூரைக்குக் கீழே வந்த டான் கைக் கடிகாரத்தைப் பார்த்தார். கின்ஸ் இன்னும் வரவில்லை; தன்னுடைய கோட்டை எடுத்து மழைத்துளிகளை உதறிக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கொண்டார்; சுவரில் சாய்ந்தபடியே சிகரெட்டைப் பற்ற வைத்தார் பொறுமையாகக் காத்திருந்தார்.

இரண்டு சிகரெட்டுகளுக்குப் பிறகு, கூரையிடப்பட்ட நடை பாதையில் உலவ ஆரம்பித்தார். இப்போது மணி ஒண்ணு பதினைந்து. கினாவுக்காக இன்னும் கால் மணி நேரம் காத்திருக்கலாம். கூரையின் மேல் விழும் மழைத்துளியின் ஓசை அமைதியைக் கலைத்தது. ஷாபிரோ ஆபத்தானவன் என்று உசேலி சொன்னது நினைவுக்கு வந்தது. கினா தன்னைக் காட்டிக் கொடுக்கிறாள் என்று ஷாபிரோவுக்குத் தெரிந்தால்...

டான் மீண்டும் கைக்கடிகாரத்தைப் பார்த்தார்; ஒன்றரைக்கு மூன்று நிமிடங்கள் இருந்தன. தெருவை கவனமாகப் பார்த்தவர் குறுக்கே வந்த ஹாரி இருக்கும் இடத்தில் வந்தார்.

''அவள் வருவதாகத் தெரியவில்லை. எனக்குக் கவலை யாயிருந்தது. அவள் பிடிபட்டிருக்கலாம்.''

''அவள் இருக்குமிடம் தெரியுமா?''

''இல்லை. ஆனால் கண்டுபிடித்துவிடலாம். இதற்குமேல் இங்கே இருப்பதில் பயனில்லை. நாம் புளோரிடா கிளப்புக்குப் போகலாம். அவள் இருக்குமிடத்தை அவர்கள் சொல்வார்கள்.'' மழையில் இறங்கி, அவர்கள் ஐந்தாவது தெருவுக்குச் சென்றனர்.

புளோரிடா கிளப்பின் நியான் விளக்கு அந்த நள்ளிரவிலும் ஒளி வீசிக் கொண்டிருந்தது; ஈரமான நடைபாதையில் சிகப்புச் சிதறல்கள்.

''இங்கே இரு. நான் பார்த்து வருகிறேன்'' என்றார் டான். படிகளில் இறங்கி வாயில் காவலாளி இருந்த இடத்திற்குச் சென்றார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

காவலாளி அவரைப் பார்த்து உறுமினான்.

''மூடிவிட்டோம். உள்ளே இருப்பவர்கள் வெளியே வருகிறார்கள்.''

''கினா இருக்கிறாளா?'' என்றார் டான்.

''அவள் வீட்டுக்குப் போய்விட்டாள்.

''நான் அவளைப் பார்க்கவேண்டும். ஆனால் முகவரியைத் தொலைத்துவிட்டேன்'' என்று சொல்லிக் கொண்டே அவர் ஒரு பவுண்டு நோட்டை எடுத்தார். ''அவளுடைய முகவரியைக் கொடுக்க முடியுமா?''

காவலாளி நோட்டைப் பார்த்தார்; மோவாயைத் தேய்த்துக் கொண்டார்; பிறகு தோள்களை உயர்த்திக் கொண்டார்.

மேசை டிராயரிலிருந்து ஒரு பழுப்பேறிய நோட்டுப் புத்தகத்தை எடுத்தவர், அவர் தேடினார். ''இந்த முகவரியிலிருந்து அவள் இடம் மாறிவிட்டாள் என்று நினைக்கிறேன்; இருந்தால் உங்கள் அதிர்ஷ்டம். போய்ப் பார்க்கிறீர்களா?''

''நிச்சயமாக'' என்றார் டான்.

''பீட்டர்ஸ் ரோடு 2ஏ, உங்களுக்குத் தெரியுமா?''

''அது சாரிஸ் கிராஸ் தெருவுக்கு அருகே இருக்கிறதா?'' என்று கேட்ட டான் பவுண்டு நோட்டைக் கொடுத்தார்.

''சரிதான்'' என்றபடி காவலாளி நோட்டை எடுத்துக் கொண்டார். ''இடது பக்கமாகப் போனால் கேம்ப்ரிட்ஜ் சர்க்கிளிலிருந்து இருபது கஜதூரம்.''

டான் தலையசைத்துவிட்டு படிகளில் ஏறினார்; மீண்டும் மழைக்கு வந்தார்.

ஹாரி அவரோடு சேர்ந்துகொண்டார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''ஒரு முகவரி கிடைத்திருக்கிறது. ஆனால் அவள் வீடு மாறியிருக்கலாம்; போய்ப் பார்க்கலாம்.''

ஐந்து நிமிடம் வேகமாக நடந்து பிறகு அவர்கள் பீட்டர்ஸ் சாலைக்கு வந்தனர். இரண்டு பக்கமும் கோடவுன்கள் இருக்கும் இருண்ட தெரு அது; சில சிறிய தொழிற்சாலைகளும் இரண்டு அல்லது மூன்று கிரேக்க உணவு விடுதிகளும் இருந்தன. 2ஆம் எண்ணில் குளியலறை சாதனங்களை விற்பனை செய்யும் நிறுவனம் இருந்தது; கட்டடத்தின் பக்கத்தில் குறுகலான சந்து. அந்த இருட்டில் ஹாரி டார்ச்சலைட்டின் வெளிச்சத்தை வீசினார்.

''இதுதான் 2ஏ என்றபடி உள்ளே சென்றார்.

டான் அவனைப் பின்தொடர்ந்தார்.

விரல்களால் டார்ச்சலைட்டை மறைத்த ஹாரி, கதவை ஆராய்ந்தார்; வரிசையாக இருந்த பழைய கட்டடத்தில் கை வைத்துத் தள்ளினார். ஆனால் கதவு உறுதியாகத் தாளிடப் பட்டிருந்தது.

டான் பின்னால் நகர்ந்து கட்டடத்தைப் பார்த்தார்; மேலே இரண்டு ஜன்னல்கள்; முதல் மாடியில் ஒன்று; இரண்டாம் மாடியில் ஒன்று, வெளிச்சமில்லை, கீழ் ஜன்னலில் திரை இல்லை.

''யாரையாவது எழுப்ப முடியுமாவென்று பார்க்கலாம்'' என்றார் டான்.

ஹாரி அழைப்பு மணியை அழுத்தினார். வீட்டிற்குள் மணி ஒலிக்கும் சத்தம் கேட்டது.

ஒரு நிமிட நேரம் அவர்கள் பொறுமையாக இருந்தனர்; மழை அவர்களை விடாப்பிடியாக நனைத்துக் கொண்டிருந்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''யாரும் உள்ளே இருப்பதாகத் தெரியவில்லை'' என்ற ஹாரி ''இப்போது என்ன செய்வது?'' என்று கேட்டார்.

''நாம் உள்ளே போகலாம். இதுதான் அவளுடைய வீடா என்று பார்க்க வேண்டும்.''

ஹாரி தாழ்ப்பாளைத் தடவிப் பார்த்தார்.

''இது பெரிய விஷயமில்லை. கைவசம் கம்பி வயர் வைத்திருக்கிறேன்'' டார்ச் லைட்டை டானிடம் கொடுத்துவிட்டு சாவித் துவாரத்தில் கம்பியை நுழைத்துத் துழாவினார்; சில நொடிகளில் அது வழிவிட்டது.

டான் கைப்பிடியைத் திருப்பி, கதவைத்திறந்தார்.

வழியில் துர்நாற்றம் மூக்கைத்துளைத்தது, ஹாரி கதவை மூடினார். டார்ச்லைட் வெளிச்சத்தில் படிக்கட்டுகள் தென் பட்டன.

சத்தமில்லாமல் டான் படியேறினார், அவரைத் தொடர்ந்து ஹாரி. படிகளில் முடிவில் இருந்த தளத்தில் ஒரு கதவு. கதவில் வெள்ளை பெயின்டால் தி ஆக்மே மேனஃபாக்சரிங் கம்பெனி என்று எழுதப்பட்டிருந்தது. அருகில் அடுத்த தளத்திற்கான படிக்கட்டுகள்.

''ஹாரி, நீங்கள் இங்கேயே இருங்கள்'' என்றார் டான். ''அவள் அடுத்த தளத்தில்தான் இருக்க வேண்டும்.''

அவர் படிகளில் ஏறினார். படிகளில் இருந்த விரிப்பு பலகாலமாக சுத்தம் செய்யப்படாதது என்று வாசனையில் தெரிந்தது. படிக்கட்டுகளின் முடிவில் சிகப்பு நிறம் பூசப் பட்ட கதவு; அதில் ஒளியிழந்த பித்தளைக் கைப்பிடி. விசிடிங் கார்டு வைப்பதற்கான இடம் காலியாக இருந்தது.

டான் கதவில் காதுவைத்துக் கேட்டார். சிறிது நேரம் அப்படியே இருந்தார். சத்தம் எதுவும் இல்லை என்று தெரிந்தவுடன் கைப்பிடியைத் திருப்பி கதவைத் திறந்தார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கதவு பூட்டப் பட்டிருக்கும் என்று நினைத்தவருக்கு அதிர்ச்சி; அது அப்படியே திறந்து கொண்டது.

கதவில் கைவைத்தபடியே டார்ச்லைட் ஒளியை அறைக்குள் செலுத்தினார். தங்க நிறக் கட்டம் போட்ட நிலைக்கண்ணாடி அவருக்கு எதிரே. அதற்குக் கீழே இருந்த மரப் பெட்டியின் மேல் ஒரு பூ ஜாடி; அதில் உலர்ந்து போன சூரியகாந்திப் பூக்கள். கண்ணாடிக்குப் பக்கத்தில் ஒரு கதவு இருந்தது. கண்ணாடியிலும் மரப்பெட்டியிலும் அழுத்தமாகத் தூசி படிந்திருந்தது.

கதவைத் திறந்த டான் அந்த அறைக்குள் நுழைந்தார். கண்ணாடிக்கு அருகில் இருந்த கதவைத் திறந்தார்.

அமைதியும் இருட்டும் அந்த அறையில் நிரம்பியிருந்தன. விளக்கிற்கான ஸ்விட்சைத் தேடி அதை அழுத்தினார். அறையின் நடுவிலிருந்த விளக்கு வெளிச்சமானது.

டானுக்கு எதிரே இருந்த படுக்கையில் விரிப்புகளில்லை. மூன்று கண்ணாடிகளை உடைய டிரசிங் மேசைக்கு எதிரே குஷன் வைத்த நாற்காலி. சுவரில் வால்நட் மரத்தால் செய்யப் பட்ட அலமாரி. நீலநிறத்தை இழந்துவிட்ட விரிப்பு தரையில். ஜன்னலைப் பார்த்தபடி ஒரு சோபா கம்பெட். அதில் வெளிர் நீல நிறத்தில் ஒரு விரிப்பு.

அந்தப் படுக்கையை டான் உற்றுப் பார்த்தார். படுக்கையில் எட் ஷாபிரோ ரத்த வெள்ளத்தில் கிடந்தாள். உதடுகள் விரிந்து பற்களைக் கோரமாகக் காட்டின. ரத்தக் கறை படிந்த விரல்கள் மார்பில் செருக்கப்பட்டிருந்த கத்தியின் கைப்பிடியை வலுவாகப் பிடித்திருந்தன.

தொட்டுப் பார்க்காமலே அவன் இறந்துவிட்டதை டான் தெரிந்து கொண்டார்.

கைப்பிடிக் கம்பியில் குனிந்தபடி 'மெதுவாக' ஹாரி, மேல வா'' என்றார் டான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஹாரி படிகளில் தாவி ஏறினார். டானின் முகத்திலிருந்த இறுக்கம் தான் அதற்குக் காரணம்.

''ஷாபிரே இங்கே இருக்கிறார். உயிர் போய்விட்டது. அவரைப் பாருங்கள்'' என்றார் டான்.

அவர்கள் படுக்கையறைக்குள் சென்றனர்.

ஹாரி அந்த உடலின் கையைத் தொட்டுப் பார்த்தார்.

''இவர் இறந்து சில மணி நேரம் ஆகிறது.''

''அந்தக் கத்தியைப் பார்த்தீர்களா? அது கிடோவைக் கொலை செய்த கத்தியைப் போலவே இருக்கிறது.''

படுக்கையை விட்டு விலகிய ஹாரி ''அவருடைய நண்பர்கள், இனிமேல் இவர் தேவையில்லை என்று முடிவு செய்துவிட்டனர்'' என்றார்.

''ஆமாம்'' என்றார் டான். வெளியே சென்றவர் அங்கிருந்த மேசையில் ஏராளமான பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள் இருந்தன.

''போலீஸ் வேட்டை முடியும் வரை இங்கேயே தங்கலாம் என்று நினைத்திருக்கிறான்'' என்ற டான் ''ஹாரி, நாம் வெளியேறலாம்'' என்றார்.

படிகளில் இறங்கி இருவரும் கீழே வந்தனர். மழை இடைவெளி இல்லாமல் பெய்து கொண்டிருந்தது. கதவை மூடிவிட்டு அவர்கள் பீட்டர்ஸ் சாலையை நோக்கி வேகமாக நடந்தனர்.

''போலீசாரிடம் சொல்லப் போகிறீர்களா? ஐயா'' என்று கேட்டார் ஹாரி.

''முதலில் கினாவைக் கண்டுபிடிக்க வேண்டும். அவளுடைய இருப்பிடம் பற்றி உசேல்லிக்குத் தெரிந்திருக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கலாம்.'' என்று டான் கைக்கடிகாரத்தைப் 'பார்த்தார். ''மணி இரண்டு. அவர் உறங்காமல் இருக்கலாம்.''

''உசேலி இன்னமும் உறங்கவில்லை. டான் கதவைத் தட்டியவுடன் அவரே திறந்தார்.

அகாலத்தில் வந்ததற்காக டான் மன்னிப்புக் கேட்டார். பிறகு ''நான் கினா பாஸெரோவைப் பார்க்க வேண்டும். அவள் எங்கே இருக்கிறாள் என்று தெரியுமா?''

''முதலில் நீங்கள் உள்ளே வரவேண்டும். இவ்வளவு நனைந்திருக்கிறீர்களே. கிளப்பில் பார்த்தீர்களா?''

உசேலியைத் தொடர்ந்து அவர்கள் அந்த அறைக்குள் நுழைந்தனர்.

''அவளை நான் கிளப்பில் பார்த்தேன். ஒரு மணிக்கு என்னைச் சந்திப்பதாகச் சொன்னாள். அவள் வரவில்லை. ஷாபிரோவைக் கொலை செய்துவிட்டார்கள். அந்தப் பெண்ணைப் பற்றிக் கவலையாயிருக்கிறது.'

உசேலியின் கண்கள் விரிந்தன.

''அவள் பீட்டர்ஸ் சாலையில் இருந்த வீட்டில் தங்கியிருந் தாள். ஆனால் இப்போது இடம் மாறிவிட்டாள் என்று கேள்விப் பட்டேன்...''

''அந்த வீட்டுக்கு நான் போனேன். அங்கேதான் ஷாபிரோவைக் கொலை செய்திருக்கிறார்கள்.''

''அந்தப் பெண்ணைப் பற்றிக் கவலைப்படுவதற்கு என்ன காரணம்?'' என்று கேட்டார் உசேலி.

''தகவல் கொடுப்பதற்காக அவளுக்கு ஐம்பது பவுண்டு கொடுப்பதாகச் சொல்லியிருந்தேன். என்னைச் சந்திப் பதாகச் சொன்னாள். அவளுக்கு அந்தப் பணம் மிகவும் அவசியம் என்றாள். ஆனால் அவள் வரவில்லை.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

உசேலியின் முகத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது.

''வெஸ்டர்ன் சாலையில், மிர்மோர் ஓட்டலில் அவள் இருக்கலாம். பீட்டர்ஸ் சாலை வீட்டிற்கு வருவதற்கு முன்பு அவள் அங்கே தங்கியிருந்தாள்.

''சரி, நான் அங்கே பார்க்கிறேன்'' என்ற டான் ஹாரியிடம் ''காரை எடுத்து வருகிறீர்களா?'' என்றார்.

ஹாரி சென்றபிறகு டான் ''ஜிவார்ஜியோ, இது சிக்கலாகிக் கொண்டே போகிறது.'' உசேலியின் மேஜை மீது அவர் உட்கார்ந்தார். ஷாபிரோ அந்த வீட்டில் ஒளிந்திருந்தான். அவனுடைய வழியிலேயே அவன் கணக்கைத்தீர்த்து விட்டார்கள். அந்தக் கத்தி மிகவும் வலிமையாகப் பாய்ந்திருக்கிறது; கைப்பிடி வரை உள்ளே இறங்கிவிட்டது.

உசேலியின் தோள்கள் உயர்ந்தன.

''போனால் போகட்டும், அவன் மிகவும் மோசமானவன்.''

''நான் போலீசுக்குத் தெரிவிக்க வேண்டும். சரிதானே'' என்றார் டான்.

''சரி தான்.''

''அந்தச் சிகப்புக் கூந்தல் பெண்ணைப் பற்றி ஏதாவது தகவல் உண்டா?''

''இன்னும் எதுவும் கிடைக்கவில்லை. நான் சிலரிடம் கேட்டிருக்கிறேன். ஆனால் அதற்கு சில நாட்கள் ஆகும்.''

பென்டலெ கார் வாசலில் வரும் சத்தம் கேட்டது.

''எனக்குக் கிடைக்கும் தகவலை போலீசிடம் சொல்ல மாட்டேன் என்று நீங்கள் நம்பலாம்.''

''எனக்குத் தெரியும். மிர்மோர் ஓட்டலில் இருக்கும் கிளார்க் உங்களுக்கு உதவலாம். அவருடைய பெயர்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

காவலினோ. நான் அனுப்பியதாக அவரிடம் சொல்லலாம்.''

''சொல்கிறேன். அப்புறம் உங்களுடன் பேசுகிறேன்.''

டான் வெளியே வந்து பென்டலே காரில் ஏறிக் கொண்டார். மழை பெய்வதில் மாற்றமில்லை. சில வேகமான நிமிடங்களுக்குப் பிறகு அவர்கள் வெஸ்டர்ன் சாலைக்கு வந்தனர்.

''இதுதான் அந்த ஓட்டல். சுமாராகத்தான் இருக்கிறது'' என்றார் டான். ஒரு பெட்ரோல் பங்கிற்கும் மருந்துக் கடைக்கும் நடுவில் மிர்மோர் ஓட்டலில் வாயில் ஒளித்து வைக்கப்பட்டிருந்தது. இரண்டு கண்ணாடிக் கதவுகளில் எழுதப்பட்டிருந்த பொன்னிற எழுத்துக்கள் அங்கங்கே அழிந்திருந்தன.

''எனக்காகக் காத்திருங்கள்'' என்று சொல்லிவிட்டு டான் மழையில் இறங்கிக் கொண்டார். ஆறு படிகளில் ஏறி, கதவைத் திறந்தவர் சுகாதாரமற்ற ரிசெப்ஷன் அறைக்குள் நுழைந்தார். பழமையான தோற்றத்துடன் நான்கு நாற்காலிகளும் ஒரு பிரம்பு மேசையும் அழுக்கான பித்தளைப் பாத்திரத்தில் ஒரு செடியும் அந்த அறையை அலங்கரித்தன.

அவருக்கு எதிரே ரிசப்ஷன் மேசை. மேசைக்குப் பின்பக்கத்தில் வரிசையாக சாவிகள் மாட்டப்பட்டிருந்தன. சில மாடங்களும் இருந்தன; மொத்தத்தில் ஒரு விளக்கு வெளிச்சம் கொடுக்கும் முயற்சியில் இருந்தது. கவுண்டரில் இருந்த வெள்ளைக்காரருக்குக் கடுமையான கேசம், கையில் மலிவுவிலை நாவலை வைத்துக் கொண்டு கொட்டாவியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்.

''மிஸ். பேஸெரோ இங்கே தங்கியிருக்கிறாரா?'' என்று கேட்டார் டான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அந்தக் கிளார்க் அவரை சந்தேகமாகப் பார்த்தார்.

''மன்னிக்க வேண்டும். இந்த இரவு நேரத்தில் அதைச் சொல்ல முடியாது. நீங்கள் நாளைக் காலையில் வந்தால்...

''நீங்கள் காவலினோ தானே, உசேலி உங்களைப் பார்க்கச் சொன்னார்.''

காவலினோவின் முகத்திலிருந்து சந்தேகம் விலகி சந்தோஷம் வந்தது.

''என்னை மன்னிக்க வேண்டும். உசேலி என்னுடைய நெருங்கிய நண்பர். மிஸ். பேஸெரோ இங்கேதான் தங்கியிருக்கிறார்.''

டான் ஒருமுறை மூச்சு வாங்கிக் கொண்டார்.

''நான் அவளோடு பேச வேண்டும். இது மிகவும் அவசரம்.''

காவலினோ கைகளை அகலமாக விரித்தார்.

''நீங்கள் காத்திருக்க வேண்டும், இது அவள் வரும் நேரம் தான்'' என்றபடி கைக்கடிகாரத்தைப் பார்த்தார். ''மணி இரண்டரை. தினமும் இவ்வளவு நேரம் ஆவதில்லை.''

''அவள் இங்கே இல்லையா?'' என்று டான் குறிப்பாகக் கேட்டார்.

''இல்லை, அவள் பனிரெண்டரைக்குப் பிறகு வெளியே போனாள், நண்பரிடமிருந்து அவளுக்கு அழைப்பு வந்தது.''

''எந்த நண்பர்?''

''மன்னிக்க வேண்டும், நீங்கள் ஏகப்பட்ட கேள்விகளைக் கேட்கிறீர்கள். இதற்கெல்லாம் பதில்...''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''என்னுடைய கேள்வி மிகவும் அவசரமானது. கினா பாஸெரோ ஷாபிரோவுடன் தொடர்பு உடையவள். ஷாபிரோ பாஸெரோவின் வீட்டில் கொலை செய்யப் பட்டார். பாஸெரோவுக்கு ஆபத்து. அதனால்தான் கேட் கிறேன். பாஸெரோவை அழைத்த நண்பர் யார்?''

''எனக்குத் தெரியாது'' காவலினோவின் கண்களில் மிரட்சி. அது ஒரு பெண். இதற்கு முன் நான் அவளைப் பார்த்தில்லை.

மிஸ் பாஸெரோ நள்ளிரவுக்குப் பிறகு கிளப்பிலிருந்து வந்தாள். யாரோ ஒருவரிடமிருந்து அவளுக்குத் தொலை பேசி அழைப்பு வந்தது. பனிரெண்டரைக்கு அவள் கீழே வந்தாள். வெளியே போகிறாயா என்று கேட்டேன். ஆனால் அவள் காதில் விழாத மாதிரி இருந்துவிட்டாள். அவள் வெளியே போனாள். நான் கதவருகே போய்ப் பார்த்தேன். அங்கே ஒரு கார் தயாராக இருந்தது. மிஸ் பாஸெரொ அந்தப் பெண்ணோடு பேசிக் கொண்டிருந் தாள்; அந்தக் காரில் ஏறிக் கொண்டாள். வண்டி போய் விட்டது.

டானுடைய முதுகெலும்பு சில்லிட்டு விட்டது.

''அந்தப் பெண் எப்படி இருந்தாள்?'' என்று டான் கேட்டதில் காவலினோ கலங்கிவிட்டார்.

''அவளை நான் சரியாகப் பார்க்கவில்லை. ஆனால் அவருடைய கூந்தல் விசித்திரமாக சிகப்பு நிறத்தில் இருந்தது.

டான் வெகுநேரமாக உற்றுப் பார்த்தார்.

''காவலினோ தொலைபேசியைக் கொடுங்கள்'' என்றார்.

காவலினோ தொலைபேசியை நகர்த்தினார்.

''ஏதாவது பிரச்சினையா?'' என்றார் காவலினோ.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"அதைத்தான் கண்டுபிடிக்கவேண்டும்" என்று சொல்லி யபடி டான் அவசரமாக எண் வொயிட்ஹால் 1212ஐ டயல் செய்தார்.

அந்த ஹம்பர் காரின் டிரைவர் இருக்கையில் லோரெலி உட்கார்ந்திருந்தாள், அவளுடைய கண்கள் மூட்டப்பட்டிருந் தன, கைகளால், காதுகளை மறைத்துக் கொண்டிருந்தாள்.

பழைய, பழுதுபட்ட கார் அது, ரைசிங் லாக்கிற்கு சில கஜ தூரத்தில் மரங்களுக்குக் கீழே அது நிறுத்தப் பட்டிருந்தது. இருட்டான இரவில் வெண்மையான பனி நதியை மறைத்து விட்டது.

வேலை சுலபமாக முடிந்துவிட்டது. கினா மிர்மோர் ஓட்டலில் இருக்கிறாள் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்கள் சியென்னாவில் சந்தித்து ஐந்து வருடங்கள் ஆகிவிட்டது. என்றாலும் கினா ஞாபகம் வைத்திருந்தாள். இத்தாலியில் வேலை இருக்கிறது என்று சொன்னவுடன் நம்பிவிட்டாள்; ஆர்வத்தோடு காரில் ஏறிக் கொண்டாள்.

க்ராண்டர் காரின் பின்பக்கத்தில் பதுங்கியிருந்தார். அவன் காலுறையில் ஈரமண்ணை நிரப்பி தயாராக வைத் திருந்தார். மிகவும் வலிமையாக கினாவின் மண்டையில் தாக்கிவிட்டார். அவள் லோரேலி மீது சரிந்து விட்டாள். லோரேலி நடுக்கத்துடன் விலகிக் கொண்டாள். க்ராண்டர் முன்பக்கமாக நகர்ந்து கினாவின் உடலை இருக்கைக்கு முன் தள்ளிவிட்டார்.

"சரி நேராகப் போ. எங்கே போக வேண்டும் என்பதை நான் சொல்கிறேன்."

அரைமணி நேரத்தில் அவர்கள் ரைசிங்ஸ் லாக் பகுதிக்கு வந்தனர். அப்போது மணி ஒன்றே கால். படகுகளை இழுத்துச் செல்லும் வழியில் ஆள் அரவமில்லை. க்ராண்டர் காரிலிருந்து இறங்கினார். மழையின் சத்தம் நதியின்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அசைவு மற்றும் காற்றில் நகரும் இலைகள் ஆகியவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தார். பிறகு காரிலிருந்து கினாவின் உடலை எடுத்தார்; ஈரமாகவும் சேராகவும் இருந்த பாதையில் அதை இழுத்துக்கொண்டே போனார்.

நினைவிழந்திருந்த அந்தப் பெண்ணை, தோள் உயரத்திற்கு உயர்த்தி நதியில் எறிந்த க்ராண்டர் சாவதான மாக நடந்தார். லோரெலி காத்துக்கொண்டிருந்தாள், காதுகளை மூடியபடி க்ராண்டர் கினாவைத் தூக்கி யெறியும் போது ஏற்படும் சத்தத்தை அவள் கேட்க விரும்பவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு க்ராண்டர் திரும்பி வந்தார். அவருக்கு மூச்சு வாங்கியது. அவருடைய கோட்டின் முன்பகுதி நனைந்திருந்தது.

"நகர்ந்து விடு. நான் ஓட்டுகிறேன்."

லோரெலி நகர்ந்து கொண்டாள். ஸ்டீரிங் வீலுக்கு எதிரே உட்கார்ந்து க்ராண்டர் பார்க்கிங் விளக்குகளைப் போட்டார், காரை நேராக ஓட்டிச் சென்று இடது பக்கமாகத் திரும்பி மெயின் ரோட்டில் சேர்ந்து கொண்டார்.

வண்டி லண்டனை நோக்கி வேகமாகப் போய்க் கொண் டிருந்தது. லண்டன் சாலை வரும் வரை அவரும் லோரெலியும் பேசிக் கொள்ளவில்லை. க்ராண்டர் திடீ ரென்று கேட்டார். "நீ இப்போது என்ன செய்யப் போகிறாய்?"

"வேலை முடிந்துவிட்டது. நான் திரும்பிப் போகிறேன். ரோம் செல்லும் விமானத்தில் பத்து மணிக்கு ஏற வேண்டும்."

"பரவாயில்லையா? விமான நிலையங்களை நிச்சயமாகக் கண்காணிப்பார்கள்."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''என்னுடைய பாஸ்போர்ட் கச்சிதமாக இருக்கிறது. என்னை அவர்கள் அடையாளம் காணமுடியாது.''

''அப்படிச் சொல்லாதே. இங்கே இருக்கும் போலீஸ் காரர்கள் புத்திசாலிகள்.''

''எனக்குக் கவலையில்லை.''

''ஃபெலிக்ஸிடம் நான் திறமையாகச் செயல்பட்டேன் என்று சொல்வாயா?''

''கட்டாயமாகச் சொல்கிறேன்'' என்றாள் லோரெலி.

க்ராண்டர் பக்கவாட்டில் திரும்பி அவளைப் பார்த்தார்.

''உனக்கு உற்சாகமில்லையே. நான் எப்படிச் செய்தேன் என்பதை அவசியம் அவரிடம் சொல்ல வேண்டும்.''

''உனக்கு நல்ல வருமானம் கிடைத்தது'' என்று லோரெலி கண்ணாடி வழியாக ஹெட்லைட் வெளிச் சத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

க்ராண்டர் முனகிக் கொண்டார். அடுத்த பத்து நிமிடங்களுக்கு பேச்சுவார்த்தையில்லை. ''இன்றிரவு பால்ஸென் ஹோட்டலில் தங்கப் போகிறாயா?'' என்று கேட்டார் க்ராண்டர்.

''அப்படியே செய்யலாம்'' என்றாள் அவள்.

அவர் அவளைப் பார்த்தார். அவருடைய கை கீழே வந்து அவளுடைய முட்டியைத் தொட்டது.

''நாம் ஒருவருக்கொருவர் உபயோகமாக இருக்கலாம்'' என்றார்.

தன்னுடைய கைப்பையால் அவருடைய புறங்கையில் அடித்தாள். அதிலிருந்த இரும்பு கிளிப் கையைக் காயப் படுத்தியது. அவர் அவசரமாகக் கையை எடுத்துக் கொண்டார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"எல்லா ஆண்களும் கடைசியில் இந்த இடத்திற்கு வந்து விடுகிறார்கள்." என்றாள் அவள் கோபமாக. "நீயாவது வித்தியாசமாக இருக்கக்கூடாதா?"

"ஏன்?" என்று கேட்ட க்ராண்டர் ரத்தம் வரும் இடத்தை உறிஞ்சினார். "நானும் மனிதன் தானே. என்னுடைய முகம்..."

"போதும். உன் பெருமையை நிறுத்து. உன்னுடைய முகத்தைப் பற்றி சொல்லவில்லை" என்றாள் அவள். கோபத்தில் க்ராண்டர் ஸ்டிரிங் வீலை இறுகப் பற்றிக் கொண்டார். அவளுடைய அழகிய வெண்மையான கழுத்தில் தன்னுடைய விரல்கள் அழுத்துவதைப் போல அவருக்கு ஒரு பிரமை.

அவர்கள் பேசிக் கொள்ளவில்லை.

மறுநாள் பகல் இரண்டரை மணிக்குத்தான் டான் படுக்கையை விட்டு எழுந்து பணியறைக்கு வந்தார். அவருடைய மேசையில் இருந்த கடிதங்களை மரியன் பார்த்துக்கொண்டிருந்தாள். நிதானமாக நடந்து சாய்வு நாற்காலியில் அமர்ந்த டானைப் பார்த்த அவள் சிரிக்க வில்லை. டானிடமிருந்து ஒரு முனகல் வெளிப் பட்டது.

"அடடா என்ன வேலை" என்றபடி தலையைக் கைகளில் ஏந்திக் கொண்டார். "இன்று காலை எட்டு மணிக்குத்தான் படுக்க முடிந்தது. இது தொடர்ந்தால் நான் பயித்தியக்கார விடுதிக்குத் தான் போகவேண்டும்"

"எனக்குத் தூக்கமே வேண்டாமென்று சில நாட்களுக்கு முன் நீங்கள்தான் சொன்னீர்கள்" என்று சொல்லிக் கொண்டே மரியன் கையில் சில கடிதங்களை எடுத்து வந்தாள். "இதைப் பார்க்கிறீர்களா?"

"நிச்சயமாக முடியாது. இன்று எந்த வேலையும் செய்ய மாட்டேன். அந்தக் கடிதங்களை வைத்துவிட்டு உட்கார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நான் உன்னோடு பேசவேண்டும்.''

மரியன் கடிதங்களை மேசை மீது வைத்துவிட்டு உட்கார்ந்தாள்.

''ஜூலியா எப்படியிருக்கிறாள்?'' என்றார் டான், கொட்டாவியை அடக்கியபடி.

''பரவாயில்லை. நாளை அவள் போலீசைப் பார்க்கலாம் என்று டாக்டர் சொல்கிறார், ஒரு வாரத்தில் வீட்டுக்குப் போகலாமாம்.''

''நல்லது. பிரஞ்சுக் கடற்கரையில் இருக்கும் நம்முடைய பங்களாவில் அவள் தங்கிக் கொள்ளலாம். ஹாம்ஸ்டட்டில் இருக்கும் வீட்டிற்கு அவள் போகவேண்டாம். மாற்றமும், வெயிலும் அவளுக்கு நன்றாக இருக்கும். இந்தக் கொலை விஷயம் தெரிகிற வரையில் நான் லண்டனை விட்டுப் போகமாட்டேன். இப்போதைக்கு அதில் எந்தத் தெளிவு மில்லை'' முதல் நாள் இரவில் நடந்ததை அவர் மரியனிடம் விவரித்தார். ''கினா காணாமல் போய் விட்டாள். போலீஸ் அவளைத் தேடுகிறது. ஆனால் அவர்களுக்கு எந்தத் தடயமும் கிடைக்கவில்லை. சிகப்புக் கூந்தல் பெண்ணை யோசித்தால் குழப்பமாக இருக்கிறது. அவள் ஆவியைப் போல ஆங்கங்கே வந்து மறைந்து விடுகிறாள்.''

''ஷாபிரோ ஏன் கொலை செய்யப்பட்டான்?'' என்றாள் மரியன்.

''போலீசாரிடம் அவனைப் பற்றிய வர்ணனை இருந்தது. அவன் பதுங்கியிருந்தான். அவனால் ஆபத்து என்று தெரிந்தவுடன் அவனையும் கொலைக்கூட்டம் தீர்த்துக் கட்டிவிட்டது என்கிறார் டிக்ஸ்.'' டான் சிகரெட்டைப் பற்ற வைத்தார். ''ஆமையைக் கண்டுபிடிப்பதுதான் எனக்குத் தெரிந்த ஒரே வழி. ஆமை இத்தாலியில் இருப்ப தாக டிக்ஸ் நினைக்கிறார்; எனக்கும் அதுதான் யோசனை. ஆமை பயன்படுத்தும் ஆயுதம் இத்தாலியி லிருந்து

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வருகிறது. ஆமை இத்தாலியர்களை மட்டுமே குறி வைக்கிறது. சிசப்புக் கூந்தல் பெண்ணும் இத்தாலிக்காரி தான். நான் இத்தாலிக்குப் போய் தகவல் திரட்ட வேண்டு மென்று டிக்ஸ் விரும்புகிறார். ட்ரெகாத் வழக்கிற்குப் பிறகு என்னுடைய திறமைகள் மீது அவருக்கு அபார நம்பிக்கை. அது சரிவராது. இத்தாலி முழுவதும் ஆமையைத் தேடி அலைய முடியாது. இது நகரமோ, மாவட்டமோ என்றால் நான் போகலாம்; ஆனால் எங்கே ஆரம்பிப்பது?''

''சியென்னாவில் தொடங்கலாம்'' என்றாள் மரியன். டான் அதிர்ச்சியடைந்தார்.

''சியென்னாவா? ஏன் சியென்னா?''

''நான் ஓரளவு ஆராய்ச்சி செய்திருக்கிறேன். இந்தக் கொலைகாரன் தன்னை ஏன் ஆமை என்று அழைத்துக் கொள்கிறான் என்பது உங்கள் கேள்வி. அதற்கான காரணத்தை நீங்கள் தேடுகிறீர்கள். சரித்திரம் மற்றும் குறியீடுகள் பற்றிய புத்தகங்களில் தேடிப் பார்த்தேன், இத்தாலிக்கும் ஆமைக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா என்று பார்த்தேன். சியென்னாவின் வரலாற்றில் அதனு டைய பதினேழு வார்டுகளில் ஒரு வார்டின் சின்னமாக ஆமை இருக்கிறது.''

''வார்டா, என்ன வார்டு''

''சியென்னா பதினேழு வார்டுகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு வார்ட்டிக்கும் ஒரு பெயர், ஒரு தேவாலயம் தவிர ஒரு கொடி இருக்கிறது. பெயர் என்பது மிருகத்தையோ பறவையையோ வைத்து ஏற்பட்டிருக்கிறது. ஓநாய், ஆந்தை, வாத்து மற்றும் ஆமை''

''அடடா, நான் யோசிக்கவில்லையே இதற்கும் பேலியோ என்ற குதிரைப் பந்தயத்திற்கும் தொடர்பு இருக்கிறதோ?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''இருக்கிறது பத்தாம் நூற்றாண்டு முதல் வார்டுகளுக்குள் போட்டி நடக்கிறது. அந்தந்த வார்டுகளைச் சேர்ந்த குதிரைக்கு அந்தந்த தேவாலயத்தின் ஆசிர்வாதம் உண்டு.

நாம் தேடுகிற விஷயம் இதுவாக இருக்கலாம். கொலையில் பயன்படுத்திய கத்தி இடைக்கால ஆயுதமாக இருப்பது இதனால் தான். கொலைகாரன் இடைக்கால சரித்திரத்தில் ஊறியவனாக இருக்க வேண்டும். நான் டிக்சோடு பேசுகிறேன். இத்தாலியப் போலீசார் இதைப் பற்றி யோசித்திருக்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். டிக்ஸ் என்னைப் பார்க்க முடியுமா என்று கேள்.''

மரியன் டிக்சின் அலுவலகத்து எண்களைச் சுழற்றினாள். ''அவர் உங்களுக்காகக் காத்திருக்கிறார்'' என்றாள்.

''சரி, நான் இப்போதே போகிறேன். மரியன் நீ ஒரு தொப்பியை வாங்கிக்கொள்; விலை பற்றிக் கவலை யில்லை, நான் கொடுத்துவிடுகிறேன். இந்த அழகான தலையைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவேண்டும்.''

''பரவாயில்லை அதற்காகத்தான் நான் சம்பளம் வாங்கிக் கொள்கிறேனே?'' என்றாள் மரியன்.

''இன்றிரவு என்னோடு உனக்கு விருந்து. அப்போது அந்தத் தொப்பியை அணிந்து வராவிட்டால் உனக்கு பிரச்சினைதான்.'' இருபது நிமிடங்களுக்குப் பிறகு டான் டிக்ஸின் அலுவலகத்தில் இருந்தார்.

''கினா பாஸெரோவைப் பற்றிய தகவல் உண்டா?'' என்று கதவை மூடிய படியே டான் கேட்டார்.

''இன்னமும் எதுவும் கிடைக்கவில்லை'' என்ற டானின் தோற்றத்தில் களைப்பும் கவலையும் தென்பட்டன. ''நீங்கள் ஏதாவது தகவல் வைத்திருக்கிறீர்களா?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கால்களை அகலமாக வைத்துக்கொண்டு டான் உட்கார்ந்திருந்தார். கைகள் தலைக்குப் பின்புறத்தில். ''நான் இத்தாலி போகவேண்டும் என்பதை இப்போதும் சொல் கிறீர்களா?''

டிக்ஸ் புருவங்கள் உயர்த்தினார்.

''அதைப் பற்றி நாம் ஏற்கெனவே பேசிவிட்டோம். நீங்கள்...'' ''நான் சொன்னது எனக்கு ஞாபகமிருக்கிறது. நீங்கள் என் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை.''

''இப்போதும் சொல்கிறேன், நீங்கள் போக வேண்டும். ஆமையைப் பற்றிய விவரங்களை நீங்கள் கண்டுபிடிக் கலாம்.''

''நல்லது நான் போவதாக முடிவு செய்துவிட்டேன். ஆனால் ஒரு நிபந்தனை. என் விருப்பப்படி ஒரு வாரம் நீங்கள் விட்டுவிட வேண்டும்.''

டிக்ஸ் தன்னுடைய பைப்பை எடுத்து, புகையிலையால் நிரப்பினார்.

''எனக்குப் புரியவில்லை விருப்பப்படி என்றால்?''

''எனக்கு ஒரு யோசனை இருக்கிறது. அதை ஆராய்ந்தபிறகு இத்தாலிய போலீசுக்குச் சொல்லலாம். குட்டையில் மீன்கள் அதிகமாகிவிட்டால் அசைவும் அதிகமாகிவிடும்.''

டிக்ஸ் நம்பிக்கை இல்லாமல் பார்த்தார்.

''இது ஒரு கொலை வழக்கு. உங்களிடம் ஏதாவது தகவல் இருந்தால்...''

''நான் யோசனை என்று சொன்னேன், தகவல் அல்ல. அதை ரகசியமாக வைத்திருக்கவில்லை. என்னுடைய செயலாளர் ஆமையைப் பற்றி சிறிது ஆராய்ச்சி செய்திருக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கிறாள். அதைத் தொடர்ந்து போனால் நமக்கு ஏதாவது கிடைக்கலாம். நீங்கள் சியென்னாவுக்குப் போயிருக்கிறீர்களா?''

டிக்ஸ் இல்லையென்றார்

''சியென்னா இடைக்காலத்து நகரம். அதை இன்னமும் அப்படியே வைத்திருக்கிறார்கள். வருடத்திற்கு இரண்டு முறை முக்கியமான சதுக்கத்தில் பாலியோ திருவிழா நடக்கிறது. பதினைந்தாம் நூற்றாண்டு உடையணிந்து ஆண்கள் ஊர்வலமாக வருகிறார்கள், தவிர குதிரைப் பந்தயம். ஒவ்வொரு வார்ட்டுக்கும் ஒரு குதிரை. நூற்றாண்டுகளாக சியென்னாவை பதினேழு வார்டு களாகப் பிரித்து வைத்திருக்கின்றனர். ஒவ்வொரு வார்ட்டுக்கும் தனிச் சின்னம், தலைவர், தேவாலயம், பழக்கம் மற்றும் கொடி உண்டு. வார்டுக்கு மிருகங்கள், பறவைகள் பெயரை வைத்திருக்கிறார்கள். ஒரு வார்டின் பெயர் ஆமை.''

டிக்ஸுக்கு இப்போது ஆர்வம் ஏற்பட்டது.

''இது ஒரு கற்பனைதான்; வெறும் யோசனைதான். ஆனால் நாம் தேடும் ஆதாரம் இதுவாக இருக்கலாம். இடைக்காலத்துக் கத்தியின் நகலைப் பயன்படுத்துபவனை நாம் தேடுகிறோம். அவன் பெயர் ஆமை. அவனுக்கும் மற்ற இத்தாலியர்களுக்கும் பிரச்சினை இருக்கிறது. இதோடு சியென்னாவைக் கோர்த்துக் கொள்ளலாம்.''

டிக்ஸ் சந்தேகத்துடன் தலையாட்டினார்.

''இது வெறும் யூகம்தானே.''

''அதனால்தான் ஒரு வார அவகாசம் கேட்கிறேன்'' டான் சொன்னார். ஆனால் இதைக் கவனமாகக் கையாளவேண்டும். இத்தாலிய போலீஸ் ஆமையைப் பற்றி சியென்னாவில் கேள்விகளைக் கேட்டால் ஆமை

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அங்கிருந்து மறைந்துவிடலாம். நான் அதிகமாகக் கிளறாமல் தகவலைச் சேகரிக்க முடியும். நான் சொல்வது புரிகிறதா?''

டிக்ஸ் முகவாயைத் தேய்த்துக் கொண்டார்.

சரி, நான் ஒத்துக் கொள்கிறேன். இத்தாலியப் போலீஸ் ஆமையைப் பற்றிய விளக்கத்தை ஏற்றுக்கொள்ளாது என்பதால் நீங்களே தகவல் திரட்டலாம். ஒரு வாரம் உங்களுக்காக. அதற்குப் பிறகு இத்தாலிக்குத் தகவல் கொடுத்துவிடுவேன் சரிதானே?''

''சரி'' என்றபடி டான் எழுந்தார். ''நான் புறப்படுவதற்கு மூன்று அல்லது நான்கு நாட்கள் ஆகும். ஏதாவது கிடைத்தால் உங்களுக்குச் சொல்கிறேன்.''

டிக்ஸ் எழுந்த போது தொலைபேசி ஒலித்தது. அவர் ரிசீவரை எடுத்து ஏதோ முனகினார். அவருடைய முகத்தில் ஏற்பட்ட மாறுதலை டான் கவனித்தார்.

''சரி நான் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு டிக்ஸ் ரிசீவரைக் கீழே வைத்தார். ''ரைசிங்ஸ் லாக்ஸ் பகுதியில் நதியிலிருந்து கினா பாஸெரோவின் உடலை எடுத்திருக் கிறார்கள். நதியில் போடுவதற்கு முன் அவளைத் தலையில் அடித்திருக்கிறார்கள்.''

''அடடா, இப்படி ஏதாவது ஏற்படும் என்று எதிர் பார்த்தேன்'' என்றார் டான்.

''நான் அங்கே போகவேண்டும். நீங்கள் வருகிறீர்களா?''

''இல்லை அவளை அடையாளம் காட்டுவதற்கு நிறையபேர் இருக்கிறார்கள். வார இறுதியில் ஊருக்குப் போவதற்கான ஏற்பாடுகள் நான் செய்ய வேண்டும்.''

''அது அவளுடைய பை'' என்று சொல்லிய டிக்ஸ் சுவரோமாக இருந்த பழைய சூட்கேசைக் காட்டினார். ''ஓட்டல் அறையிலிருந்து எடுத்து வந்தோம். அதில் உருப்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

படியாக எதுவும் இல்லை. இத்தாலியில் எடுத்த சில புகைப் படங்கள் இருக்கின்றன. இதன் தலைமை இத்தாலியில் இருக்கிறது. என்பதற்கான ஆதாரமாக இருக்கலாம். உங்களை எங்காவது இறக்கி விட வேண்டுமா?''

''என்னிடம் கார் இருக்கிறது. இந்தப் புகைப்படங்களை நான் பார்க்கலாமா?''

''பார்க்கலாம். எனக்காக மற்றவர்கள் காத்திருக் கிறார்கள். சியென்னாவில் ஜாக்கிரதையாக இருக்கவும்.''

அந்த சூட்கேசை எடுத்து மேசை மீது வைத்து டான் ஆராய்ந்தார். அதில் இருந்த காகித உறையைத் திறந்தார். அந்தப் புகைப்படங்களை மேசை மீது வைத்தார்.

எல்லா புகைப்படங்களிலும் கினா இருந்தாள், எல்லாம் பிரைட்டன் நகரில் எடுக்கப்பட்டவை; ஒரு புகைப்படத்தில் ஷாபிரோவோடு சந்தோஷமாகக் கைகோத்தபடி.

ஆனால் ஆறு புகைப்படங்கலில் டானுக்குத் தேவை யான விஷயங்கள் இருந்தன. அவை இத்தாலியில் எடுக்கப் பட்டவை. போகன்வில்லா கொடியோடு பூக்கள் நிறைந்த சுவரில் சாய்ந்தபடி கினா. படத்தின் பின்னணியில் பெரிய கட்டிடம். அதனுடைய கறுப்பு வெள்ளை மணிக் கூண்டைப் பார்த்தவுடன் தெரிந்துவிட்டது, அதுதான் சியென்னா தேவாலயம்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அத்தியாயம் ஆறு

கருங்காலி பூதம்

எப்படியும் ஆமையைப் பிடித்துவிடலாம் என்ற நம்பிக்கையில் டான் பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தார். அவருடைய அவசரத்தின் விளைவாக 25ஏ, அப்பர் ப்ரூக் ம்யூஸ் தன்னுடைய அமைதியான தன்மையை இழந்து வேகமாகச் செயல்பட்டது.

ஸ்காட்லாண்டு யார்டிலிருந்து அவர் திரும்பி வந்தவுடனேயே பரபரவென்று ஏற்பாடுகள்; மூன்று மணி நேரத்திற்குள் மரியன் லண்டன் விமான நிலையத்திற்குச் சென்று ரோமுக்குச் செல்லும் விமானத்தில் ஏறினாள்; அவளோடு சென்ரியும், ஓயாது மழை பெய்யும் லண்டனின் ஈரத்திலிருந்தும் பனியிலிருந்தும் தப்பித்துப் போவதில் சென்ரிக்கு ஏகப்பட்ட குஷி. சியென்னாவிலோ அல்லது அதற்கு அருகிலோ ஒரு மாளிகையை வாடகைக்கு எடுக்க வேண்டும் என்பது அவர்களுக்கு இடப்பட்ட உத்தரவு.

ஹாரி 25ஏ இல்லத்தைக் கவனித்துக் கொண்டார், டான் மீதமிருந்த கடிதங்களைப் படித்து குப்பைக் கூடையை நிரப்பினார். லண்டனில் தங்கும்போது அவரைத் தேடிவரும் அழைப்பிதழ்களை நிராகரித்தார்.

ஊருக்குப் போன இரண்டாம் நாளில், மரியன் தொலை பேசியில் தொடர்பு கொண்டாள். அன்று வியாழக்கிழமை. ஒரு மாளிகையை வாடகைக்கு எடுத்துவிட்டதாகவும்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

டான் சவுகரியப்பட்டபோது வரலாம் என்றும் அவள் தெரிவித்தாள்.

''சியென்னாவுக்கு வெளியே ஒரு மைல் தொலைவில், மலைமேல் இருக்கிறது இந்த மாளிகை'' என்றாள் அவள். அற்புதமான சூழ்நிலை. பக்கத்தில் வீடுகள் இல்லை, வீதியிலிருந்து வீட்டைப் பார்க்க முடியாது. வாடகை எக்கச்சக்கமாக இருந்தாலும் அதைப்பற்றி நீங்கள் யோசிக்க மாட்டீர்கள் என்பதால் ஒரு மாதம் வாடகைக்கு எடுத்திருக்கிறேன். தேவைப்பட்டால் மூன்று மாதங்களுக்கு நீடிக்கலாம்.''

சனிக்கிழமை மதியம் டானுடைய பென்ட்லெ கார் சியென்னாவுக்கு வெளியே உள்ள பாதையில் மெதுவாகப் போய்க்கொண்டிருந்தது. இரண்டு பக்கமும் ஆலிவ் மரங்கள், வளைந்து வளைந்து செல்லும் பாதை இறுதியில் ஒரு வரவேற்பு வளைவு, வழியெல்லாம் வண்ணப் பூக்கள் ஆகியவற்றைக் கடந்து சிகப்புக் கூரையும் பச்சை நிற ஜன்னல்களும் கொண்ட மாளிகையை அது அடைந்தது.

வீட்டிற்கு முன் ஹாரி வண்டியை நிறுத்தினார்; பெரிய கல் படிக்கட்டுகளில் இறங்கி வந்து சென்ரி கதவைத் திறந்தார். மரியாதையாகக் குனிந்திருந்த அவரது சிகப்பு முகத்தில் பூரணமான புன்னகை.

''சென்ரி, நீங்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள். இந்த மாளிகை அபாரமாக இருக்கிறது'' என்றார் டான்.

''இது மிகவும் சவுகரியமாக இருக்கிறது. மிஸ் ரிக்பி உங்களுக்காகக் காத்திருக்கிறார். பத்து நிமிடத்தில் மதிய உணவு தயாராகி விடும்.''

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு டான், மரியன், சென்ரி மற்றும் ஹாரி ஆகியோர் சியென்னாவைப் பார்த்தபடி இருக்கும் வெராந்தாவில் இருந்தனர்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

செர்ரியால் தயாரிக்கப்பட்ட உணவை அப்போதுதான் சுவைத்திருந்தனர்; நிரப்பப்பட்ட பன்றி இறைச்சி, கன்றின் இறைச்சி, வெள்ளைக் காளான் தவிர ஐஸ்கிரீம்; ஐஸ்கிரீமில் சர்க்கரைப் பாகில் ஊறவைக்கப்பட்ட பழங்கள். பிரம்பு நாற்காலிகளில் டானும் மரியனும்; பால்கனி கம்பியில் பின்புறத்தை அமர்த்தியபடி செர்ரி. முதலாளிக்கு எதிரே சமமாக உட்காரக்கூடாது என்பது செர்ரியின் கொள்கை. ஹாரியும் வெராண்டா கம்பியில், கைகளை முட்டியில் கோத்தபடி.

சுருட்டிலிருந்து வெளிவரும் புகையைத் தள்ளியபடி டான் ''அற்புதமான ஏற்பாடு இது'' என்றார். ''நம்முடைய தலைமையகத்திற்குச் சரியான இடம் இது. நாம் தேடும் மனிதன் இந்த சியென்னாவில்தான் இருக்கிறான், அது நிச்சயம். அவனைக் கண்டுபிடிக்க வேண்டும். நகரில் அங்கே இங்கே கேள்விகளைக் கேட்பதால் அது முடியலாம். ஆனால் அதைச் செய்யக் கூடாது. செய்தி அவனுக்குத் தெரிந்தால் அவன் தப்பிவிடுவான்.''

''நாம் என்ன செய்ய வேண்டும்?'' என்றார் ஹாரி பொறுமை யில்லாமல்.

''நீங்களும் செர்ரியும் இப்போது எதுவும் செய்ய வேண்டாம். இந்த மாளிகையை பராமரிக்க வேண்டும்; எப்போதும் இதே தரம் இருக்கும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்றபடி டான் செர்ரியைப் பார்த்தார். ''விருந்து அற்புதமாக இருந்தது. ஐரோப்பிய உணவுக் கலையின் நுட்பங்களை நீங்கள் மறக்கவில்லை'' என்றார்.

செர்ரிக்கு ஏகப்பட்ட பெருமை; வாயில் கைவைத்து இருமினார்.

''உங்களுக்கு இத்தாலிய மொழி தெரிந்திருந்தால் உங்களையும் ஊருக்குள் அனுப்பியிருப்பேன். அது இல்லை என்பதால் மிஸ் ரக்பியும் நானும் அந்த வேலையைச் செய்ய

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வேண்டும்'' என்றவர் மரியனைப் பார்த்தார். சியென்னா வின் வரலாறை மீண்டும் பார்க்க வேண்டும். உள்ளூர் புத்தக்கடைக்குப் போய் சியென்னாவின் வரலாறு பற்றிய புத்தகங்களை எல்லாம் வாங்கிவிடலாம். ஆமை வார்டு பற்றிய அதிகமான விவரங்கள் நமக்குத் தேவை. அந்த விவரங்கள் கிடைத்த பிறகு நாம் கேள்விகளைக் கேட்கலாம். ஆனால் அந்தக் கேள்விகள் அப்பாவி டூரிஸ்ட் கேட்பது போல் இருக்கவேண்டும், சியென்னாவின் வரலாறு பற்றிய கேள்விகளைக் கேட்கலாம். போலீஸ் காரரைப் போல கேட்கக் கூடாது.''

மரியன் தலையசைத்தான்.

''வியா பான்டனெட்டோவில் ஒரு புத்தகக்கடை இருக்கிறது. நமக்குத் தேவையானதெல்லாம் அங்கே கிடைக்கும்.''

''சரி, நாம் புறப்படலாம். ஹாரி நீங்கள் ஊருக்குள் வர வேண்டாம். உங்களை யாரும் பார்க்காமலிருப்பது நல்லது. இன்னொருவரைப் பயன்படுத்தும் நேரம் வரலாம், சொர்ரிக்கும் இது பொருந்தும். எப்படியும் நான் அவனைத் தேடுகிறேன் என்பது ஆமைக்குத் தெரிந்துவிடும். எனக்கு உதவியாக இருவர் இருக்கிறார்கள் என்பது அவனுக்குத் தெரிய வேண்டாம். புரிகிறதா?''

ட்ரெகார்த் வழக்கில் தன்னுடைய பங்கை மறக்காத சொர்ரி சற்று முன்னுக்கு வந்தார், அவருடைய முகத்தில் ஆர்வம் என்ற வெளிச்சம் ''நான் தயாராக வந்திருக்கிறேன்'' என்றார். என்னுடைய குச்சி தயாராக இருக்கிறது; குச்சிக்குள் கத்தியிருக்கிறது. சென்ற வருடம் வெனிஸ் நகரத்தில் அது பயன்பட்டது.''

பருமனான சொர்ரி கத்தியை வீசியபடி ஒரு முரடனை எதிர்கொள்ளும் காட்சி டானுடைய மனக்கண்ணில் தெரிந்தது. அவர் சிரிப்பை அடக்கிக் கொண்டார். ''எனக்கு

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஞாபம் இருக்கிறது. அதை உங்களோடு வைத்துக் கொள்ளுங்கள் சொர்ரி. எப்போது தேவைப்படும் என்று நமக்குத் தெரியாது.''

பெடோனியின் புத்தகக் கடையில் வாங்கிய புத்தகங்களைப் படிப்பதில் டான் மற்றும் மரியனின் பொழுது செலவானது. வெராண்டாவில் உட்கார்ந்தபடி, இயற்கைக் காட்சியை மறந்தபடி மணிக்கணக்கில் ஆமை பற்றிய விவரங்களைத் தேடினார்கள் அவர்கள்.

ஹாரி பெரும்பகுதி தோட்டத்தில் இருந்தார்; சமயத்தில் சொர்ரிக்கு உதவி செய்தார். மற்ற இருவரும் புத்தகத்தில் விவரங்களைத் தேடும் போது ஹாரியும் சொர்ரியும் தங்களுடைய வீரத்திற்கு எப்போது வேலை கிடைக்கும் என்று யோசித்துக் கொண்டிருந்தனர்.

இரண்டாவது நாள் மாலையில் டான் கொட்டாவியை மறைத்துக் கொண்டார்; புத்தகத்தைக் கீழே வைத்தார்.

''எனக்கு போர் அடிக்கிறது. இப்போதைக்கு இதை நிறுத்திவிடலாம். நான் நகரத்திற்கு நடந்து பார்க்கிறேன். மரியன் நீ என்னோடு வரலாம்.''

மரியன் உடன்படவில்லை.

''நான் முடிக்கப் போகிறேன்'' என்று கையிலிருந்த புத்தகத்தைக் காட்டினாள். ''சில மணி நேரங்களில் முடிந்து விடும். மீண்டும் நாளை இதைப் பார்க்க முடியாது.''

''உன்னுடைய கடமை உணர்வு அபாயகரமானது'' என்றபடி டான் நாற்காலியிலிருந்து எழுந்தார். ''சரி நான் ஒரு சிகப்புக் கூந்தல் பெண்ணாகப் பார்த்து சேர்த்துக் கொண்டு நகரத்தைச் சுற்றி வருகிறேன். முதல் வாய்ப்பு உனக்குக் கிடைக்கவில்லை என்பதற்காக வருத்தப்படக் கூடாது.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மரியன் வேகமாகக் கைவீசி அவரை வழியனுப்பினாள்.

''சியென்னாவில் சிகப்புக் கூந்தல் அழகி கிடைப்பது சிரமம்'' அவள் சொன்னாள்.

''சரி, கறுப்புக் கூந்தலுக்குக் கட்சி மாறுகிறேன். நீ இப்போதும் உன் முடிவை மாற்றிக் கொள்ளலாம்.''

''எனக்கு ஆசை காட்டவேண்டாம். இதை முடித்து விடலாம் என்றிருக்கிறேன்.''

தலையை ஆட்டியபடியே கீழே வந்து டான் காரை வெளியே எடுத்தார். இருட்டிலிருந்து வெளிவந்த ஹாரி அவரை ஆர்வத்தோடு பார்த்தார்.

''உங்களுக்கு அதிர்ஷ்டமில்லை ஹாரி, நீங்கள் என்னோடு வரமுடியாது'' என்றார் டான்.

''சரி'' என்றார் ஹாரி; புறங்கையால் மூக்கைத் தடவிக் கொண்டார்.

''செர்ரியோடு ரம்மி விளையாடுங்களேன்; சில்லறை யாவது கிடைக்கும்'' என்றார் டான்.

ஹாரி செறுமிக் கொண்டார்.

''நல்ல யோசனைதான். ஆனால் அந்தக் கத்தியை வைத்துக் கொண்டு சினிமாவில் வருவது போல் வீசிக் கொண்டிருக்கிறார் அவர். அது அதிகமானால் உடம்பைப் பாதிக்கும் என்று சொல்லிவிட்டேன்.''

டான் சிரித்துவிட்டார்.

''ஹாரி, அவரை விட்டுவிடுங்கள். அவரிடம் துணிச்சல் இருக்கிறது. கடந்தமுறை அந்தக் கத்தியை வைத்துக் கொண்டு நன்றாகவே சண்டை செய்தார்.''

வீட்டிலிருந்து வெளியேறிய டான் வீதிக்கு வந்தார். நிலவு வெளிச்சத்தில் ஒரு மைல் பயணம் செய்த பிறகு

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அலங்கார வளைவிற்கு வந்தார். அதில் 'சியென்னா உங்களுக்காக இதயத்தைத் திறந்து வைத்திருக்கிறது.' என்று எழுதப்பட்டிருந்தது.

காரைவிட்டு இறங்கிய டான் சதுக்கத்தை நோக்கி நடந்தார். மணி அப்போது ஒன்பதரை. குறுகலான வீதிகளில் மக்கள் காரணமில்லாமல் நடந்து கொண்டிருந்தனர், இரவு நேரத்துக் காற்றில் அவர்களுடைய குரல் நிரம்பி வழிந்தது; ஹாரன் ஒலிக்கும் கார்களுக்கு வழிவிட அந்தக் கூட்டத்திற்கு மனமில்லை.

மைதானத்தைக் கடந்த டான் ஒரு காபிக்கடையில் உட்கார்ந்தார்.

அவருக்கு முன்னே ஒரு அற்புதக் காட்சி. வருடத்திற்கு இரண்டு முறை குதிரைப் பந்தயம் நடக்கும் மைதானம் சிப்பி வடிவத்தில் இருந்தது; அதில் ஒளி வெள்ளம். பன்னிரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பொது மாளிகை முன்னூறு அடி கோபுரத்தோடு சேர்ந்து ஹாலிவுட் திரைப்படக் காட்சியாகத் தோன்றியது.

சியென்னாவில் காலத்தைப் பின்னோக்கி அழைத்துப் போவது சுலபம் என்று நினைத்தார் டான். தலைக்கவசங் களும் மார்புக் கவசங்கள் அணிந்தவர்களும் ஈட்டிக் கோடாரி ஏந்தியவர்களும் கைத்துப்பாக்கி வீரர்களும் இந்த சதுக்கத்தில் அணிவகுத்துச் சென்றால் அவர் ஆச்சரியப் பட்டிருக்க மாட்டார்.

களைத்துப்போன சர்வர், சுமையதிகமான தட்டோடு வந்து டான் கொடுத்து எஸ்பிரஸோ காபிக்கான ஆர்டரை எடுத்துக் கொண்டார்.

காத்திருக்கும்போது, டான் அருகில் இருப்பவர்களைக் கவனித்தார். எந்தப் பகுதியிலும் தவிர்க்க முடியாத அமெரிக்க டூரிஸ்டுகள், உரத்த குரலில் அரசியல் பேசும்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இத்தாலியர்கள் இருந்தனர். இரண்டு மேசைகளுக்கு அப்பால் ஒரு மிகப் பெரிய நீக்ரோ.

நீக்ரோவை டான் கவனித்தார். இவ்வளவு பெரிய உருவத்தை இதுவரை அவர் பார்த்ததில்லை; மைக்கலேன்ஜலோ சிற்பம் போன்ற அந்த உருவம் கருங்காலியில் செய்யப்பட்டது போல ஒரு அமைப்பு; தசைகளின் திரட்சி மிரட்டுவதாக இருந்தது.

உட்கார்ந்திருந்த நீக்ரோ நின்று கொண்டிருந்த சர்வரை விட உயரமாக இருந்தார். நீக்ரோவுக்கு முன்னால் அவருக்கேற்ற அளவில் சிகப்பு ஐஸ்கிரீம். கோட்டைக் கதவுகளைப் போலிருந்த தோள்களின் மேல் தோட்டா வடிவத்தில் ஒரு தலை; கழுத்து என்பதைக் காணவில்லை. பாய்வதற்குத் தயாராக இருப்பதைப் போன்ற ஒரு முகபாவம். ரத்தச் சிவப்பான கண்கள் நகர்ந்து கொண்டே யிருந்தன. டான் இருக்கும் திசையில் வந்த பார்வை அவரை ஒரு முறை ஆராய்ந்து வேறு பக்கம் திரும்பி மீண்டும் அவரிடமே வந்தது.

டான் நீக்ரோவைப் பார்த்ததும் நீக்ரோ பார்வையைத் திரும்பிக் கொண்டார். ஐஸ்கிரீமை ஸ்பூனால் எடுத்து பருமனான உதடுகளுக்குள் தள்ளினார்.

என்ன உருவம்! என்று நினைத்தார் டான். இவனோடு எந்த வம்பும் வைத்துக் கொள்ளக்கூடாது. இவனைக் கலவரப் பகுதியில் காவலுக்குப் போடலாம்.

சிகரெட்டைக் கொளுத்திய டான், நீக்ரோவை விட்டு பார்வையைத் திருப்பி மைதானத்தில் உலவிக் கொண்டிருக்கும் கூட்டத்தைப் பார்த்தார்.

அவருக்குக் கவலையாயிருந்தது. இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை, டிக்ஸ் தன் அறிக்கையை அனுப்ப நான்கு நாட்களே இருந்தது. இந்தப் புராதன

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நகரத்தில்தான் ஆமையின் தலைமையகம் எங்கேயோ இருக்கிறது என்பதில் அவர் உறுதியாக இருந்தார். ஆனால் அவரும் மரியனும் ஆராய்ந்த புத்தகங்களிலிருந்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. நாம் ஒழுங்கான வழியில் போகிறோமா என்று சந்தேகம் அவருக்கு ஏற்பட்டது. துணிந்து சில கேள்விகளைக் கேட்டுவிடலாமா? யாரிடம் கேட்பது? போலீசிடம் போனால் ஏன் கேட்கிறோம் என்பதைச் சொல்லவேண்டும், விளைவுகளும் வேறு விதமாக இருக்கும். புத்தகக்கடை உரிமையாளர் படோனி யிடம் கேட்கலாம். புத்தகங்களை வாங்கும்போது அவரிடம் பேசியிருக்கிறார். அந்த முதியவர் வாழ்நாள் முழுவதும் சியென்னாவில் இருப்பதாகச் சொல்லியிருந்தார். அவரிடம் கேட்டுப் பார்க்கலாம்.

டான் காபியை முடித்தார். எழுந்து நின்று நீக்ரோவைக் கவனித்தார். ஏழடிக்கு மேல் இருந்த அவருடைய தோற்றம் ஏற்படுத்திய சலசலப்பு நீக்ரோவுக்குப் பிடித்திருந்தது. ஓயாமல் பேசிக் கொண்டிருந்த அமெரிக்க டூரிஸ்டுகள் பேச்சை நிறுத்திவிட்டார்கள். இத்தாலியர்களும் வாய்ச் சண்டையை நிறுத்தி விட்டு நீக்ரோவையே பார்த்தனர்.

எக்காளமான பாவனையோடு ஒரு வெள்ளைத் தொப்பியை தலையில் வைத்துக்கொண்டார் நீக்ரோ. கிரீம் வண்ணத்திலிருந்த பட்டுச் சட்டையைச் சரிசெய்து கொண்டு கும்பலில் கலந்தார்.

கூட்டத்திற்கு மேலே நீக்ரோவின் தோள்களும் தலையும் தெரிந்தது. மைதானத்தைக் கடந்து இருண்டிருந்த வளைவு வழியாக குறுகலான சந்தில் அவர் மறைந்து போனார்.

டான் சர்வரை அழைத்து காபிக்கான பணத்தைக் கொடுத்தார். கொடுக்கும் போது இயல்பாகக் கேட்டார் "யார் இந்த நீக்ரோ? குத்துச் சண்டை வீரரா?"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"கடந்த ஆறு மாதங்களாக ஒவ்வொரு இரவிலும் அவர் தவறாமல் வருகிறார்; வந்து ஐஸ்கிரீம் சாப்பிடுகிறார். ஏதோ ஒரு மாளிகையில் வேலை செய்கிறார் என்று நினைக்கிறேன். யாராவது அமெரிக்கர்கள் வேலைக்கு வைத்திருக்கலாம். அவர் எதுவும் பேசுவதில்லை. நானும் எதுவும் கேட்பதில்லை. என்னைப் பொறுத்தவரை அவர் கெட்டவர்."

டான் சிரித்தார்.

"நீங்கள் சொல்வது சரியாக இருக்கலாம்" என்றபடி எழுந்து கொண்டார்.

நகரத்தின் தெருக்களில் நடக்கலாம் என்று நினைத்த டான் மைதானத்திலிருந்து வெளியேறினார். ஜனக்கூட்டம் நிறைந்த தெருக்களில் ஒரு மணி நேரம் நடந்த அவர் இதனால் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தார், தங்குமிடத்திற்குப் போய் அந்தப் புத்தகத்தை முடிக்க வேண்டும் என்ற எண்ணமும் ஏற்பட்டது. ஆனால் குளிரெடுக்கும் சந்துகளையும், பூதாகரமான கோதிக் கட்டடங்களையும் விட்டுப் போக மனதில்லை. அவரைச் சுற்றி நதியில் ஏற்படும் சுழல்கள் போல மனதில் அலைகள். இறுதியாக தன்னுடைய பென்ட்லெ காரை நோக்கிச் செல்லும்பது மணி பதினொன்றரை நெருங்கிக் கொண்டிருந்தது. கும்பலைத் தவிர்ப்பதற்காக தேவாலயத்தை நோக்கிச் செல்லும் செங்குத்தான பாதையில் நடந்தார்.

ஆளில்லாத பாதையில் அந்தக் குன்றில் அவர் நடந்தார். கற்கள் பதிக்கப்பட்ட நடைபாதையில் தெரு விளக்கின் மஞ்சள் வெளிச்சம் தெரிந்தது. அப்போது இருட்டான பகுதியிலிருந்து அந்தப் பெண் வந்தாள்.

டானுக்கு முன்னே ஐம்பது அல்லது அறுபது கஜதூரத்தில் அவள் நடந்தாள். பெரிய கட்டிடங்களின் நிழல் பகுதியிலே

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நடந்தவளை சரியாகக் கவனிக்க முடியவில்லை. ஒரு முறை வெளிச்சப் பகுதியில் வந்தவளை டான் கவனித்தார்.

அழகான வடிவமைப்போடிருந்த உடலில் வெள்ளை ஸ்வெட்டரும் கறுப்புகாலுறையும் அணிந்திருந்தாள்; அவளுடைய கூந்தலின் நிறமோ சிகப்பு.

டானுடைய இதயம் வேகமாக அடித்துக்கொண்டது. அவருடைய காலணியில் ரப்பர் அடிப்பக்கம் இருந்ததால் நடக்கும் போது சத்தம் ஏற்படவில்லை. இப்போது அந்தப் பெண் தென்படவில்லை என்றாலும் அவள் போய்க் கொண்டிருக்கிறாள், தன்னைக் கவனிக்கவில்லை என்பது அவருக்கு நிச்சயம்.

குன்றின் உச்சியில் ஒரு வளைவு இருந்தது. அந்த வளைவில் டெல்டுயூமோ சதுக்கத்தின் வெளிச்சம் தெரிந்தது. அந்தப் பெண் வளைவுக்குள் வந்தபோது சிகப்புக் கூந்தல் மீண்டும் அசைந்தது.

அவள் இடது புறமாகத் திரும்பி மறைந்தாள். டான் அவசரமாக ஓடினார். வளைவை நெருங்கும்போது ஒரு பெரிய உருவம் வழியில் நின்று அவரைத் தடுத்தது. எவ்வளவுதான் தைரியசாலியாக இருந்தாலும் நீக்ரோ குறுக்கே வந்தவுடன் டான் அதிர்ச்சியடைந்தார். ஒரு அடி பின்பக்கமாகச் சென்ற டான் எதிரேயிருந்த இருட்டு பூதத்தைத் தலைநிமிர்ந்து பார்த்தார்.

''நண்பரே, நெருப்பு இருக்கிறதா?'' என்றார் அந்த நீக்ரோ.

அந்தப் பெண் போய்விடுவாள் என்ற எண்ணத்தில் டான் பக்கவாட்டில் செல்ல முயற்சி செய்தார். ஆனால் அந்த நீக்ரோ வழிவிடுவதாக இல்லை.

டானுக்கு இரண்டு வழிகள்தான் இருந்தன. நீக்ரோவிடம் சிகரெட் லைட்டரைக் கொடுப்பது. ஆனால்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அந்தப் பெண் காணாமல் போய்விடுவாள். இரண்டாவது நீக்ரோவின் தாடையில் ஓங்கி அடிப்பது. ஆனால் அப்படி அடித்தால் தன்னுடைய விரல்கள் உடைந்துவிடும் என்ற பயமும் இருந்தது. டான் முதல் வழியைத் தேர்ந்தெடுத்தார். பாக்கெட்டிலிருந்து லைட்டரை எடுத்துக் கொளுத்தினார்.

நீக்ரோ பழுப்பு நிற சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டார். வெள்ளை முட்டையில் புதைக்கப்பட்ட கறுப்புக் கண்களில் சிரிப்பு.

''நன்றி, நண்பரே'' என்று சொன்ன நீக்ரோ ''உங்களை நிறுத்தியதற்கு மன்னிக்கவும்'' என்றார். இவ்வளவு கோரமான சிரிப்பை டான் இதுவரை பார்த்ததில்லை.

நீக்ரோ டானுக்கு வழிவிட்டு இருண்ட பாதையில் இறங்கிச் சென்றார்.

தங்குமிடம் நோக்கி காரைச் செலுத்திய டான், அங்கே இருந்த மதில்சுவரில் அருகருகே உட்கார்ந்திருந்த இருவரைக் கண்டார். அந்தக் குட்டையான சுவர் சியென்னாவைச் சுற்றியிருந்த நிலவு படர்ந்த மலைகளைப் பார்த்தபடி இருந்தது.

காரை மெதுவாகச் செலுத்தியவர் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார்.

''உங்களுக்குத் தூக்கம் வரவில்லையா?''

''மிஸ் ரிக்பியன் ஆராய்சியில் விவரம் கிடைத்திருக்கிறது. நாங்கள் உங்களுக்காகக் காத்திருக்கிறோம்'' என்றார் ஹாரி. அவருடைய குரல் உயர்த்திருந்தது.

ஹாரியம் மரியனும் கார் அருகே வந்தனர். ''நானும் உங்களுக்காக ஒரு சேதி வைத்திருக்கிறேன்'' என்றார் டான். ''காரில் ஏறிக் கொள்ளுங்கள். செர்ரி எங்கே?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''அவரை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டோம். தன்னுடைய வயது அவருக்குத் தெரியவில்லை'' என்றபடி ஹாரி காரில் ஏறிக்கொண்டார்.

''அது பெரிய குற்றமில்லை'' என்றார் டான், வண்டி வேகமாக மாளிகையை அடைந்தது.

''சேர்ரியை அழைத்து வாருங்கள். இது பொதுச் சபையில் சொல்ல வேண்டிய விஷயம்.''

ஹாரி சென்றபிறகு டான் மரியனிடம் கேட்டார். ''நீ நிஜமாகவே ஏதாவது கண்டுபிடித்துவிட்டாயா?''

''ஆமாம். அதுவும் கடைசியாக.''

ஹாரியைத் தொடர்ந்து சேர்ரி வந்தார். அவருடைய முகம் சிவந்திருந்தது, மூச்சு பெருமூச்சாக மாறிவிட்டது.

''எல்லோரும் உட்காரலாம்'' என்றார் டான். அவர் உட்கார்ந்தார். கைப்பிடிக் கம்பியில் சாய்ந்திருந்த சேர்ரியைப் பார்த்து அருகிலிருந்த நாற்காலியைக் காட்டினார். ''சேர்ரி, உட்காருங்கள்.''

''நீங்கள் சொன்னால் சரிதான்'' என்றபடி உட்கார்ந்தார் சேர்ரி, இருந்தாலும் அவருடைய முதுகு படியவில்லை.

''மரியன், என்ன கண்டுபிடித்தாய் என்று நீ சொல்லலாம்.''

''இது நாம் தேடும் தடயமாக இருக்கலாம். எனக்குக் கிடைத்திருக்கும் விவரம் முழுமையாக இல்லை. ஆனால் 1465ஆம் ஆண்டில் சியென்னாவில் இரண்டு வலிமையான பணக்காரக் குடும்பங்கள் இருந்திருக்கின்றன. இந்தக் குடும்பங்களின் தலைவர்கள் நிக்கோலா வாகா மற்றும் ஜகபோ கெங்கா, இருவரும் பரம விரோதிகள். ஆமை வார்டின் தலைவர்களாக இருவரும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.. தேர்தலில் கொடுமையான வன்முறை

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வெடித்தது. நான் புத்தகத்தில் படித்ததைச் சொல்கிறேன். குறைந்த மெஜாரிட்டியில் வாகா ஜெயித்தார். கெங்கா அவருக்கு எதிராக சதிசெய்து, வாகாவை சிறையில் தள்ளினார்.

வாகாவின் செல்வம் பறிமுதல் செய்யப்பட்டது; குடும்பம் வெளியேற்றப்பட்டது. கெங்கா வார்டின் தலைவராக ஆனார், வாகா கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார். இதைக் கேள்விப்பட்ட வாகாவின் மூத்த மகன் டேனியெல்லோ சபதம் செய்தார். அவரும் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களும் பிளாரன்சில் தங்கியிருந்தனர். இன்னமும் எத்தனை தலைமுறை ஆனாலும் தானும் தன்னைச் சேர்ந்தவர்களும் இந்த மரணத்திற்குப் பழி தீர்க்கும் வரை ஓய மாட்டோம் என்று சபதம் செய்தார். குடும்பத்தின் செல்வம் மீட்கப்பட வேண்டும், குடும்பத்தின் பெயரைக் கேட்டாலே ஒவ்வொரு இத்தாலியனும் நடுங்க வேண்டும் என்பதுதான் அந்த சபதம்.''

''ஆமாம். இதுதான் விஷயம். இது ஒரு பயித்தியக் காரனின் செயல் அல்ல. ஆமை என்பவன் வாகா குடும் பத்தைச் சேர்ந்தவனாக இருந்தால் இப்போது நடப்ப தெல்லாம் பழைய பகையின் விளைவுதான். அந்தக் குடும்பத்தைப் பற்றிய விவரம் ஏதாவது இருக்கிறதா?''

மரியன் இல்லையென்றாள்.

''வேறு புத்தகங்களில் அவர்களைப் பற்றிய விவரம் எதுவும் இல்லை.''

''நல்லது. நாளை ரிகார்டு ஆபீசுக்குப் போய் வேகா குடும்பத்தைப் பற்றிய தகவல் இருக்கிறதா என்று பார்க்கலாம்'' என்றபடி டான் சிகரெட்டைப் பற்ற வைத்தார். ''லோரெலி சியென்னாவில் இருக்கிறாள். நான் அவளைப் பார்த்தேன்'' என்றார். லோரெலியைப் பின்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தொடர முடியாமல் நீக்ரோ தடுத்ததைக் கூறினார். நீக்ரோவும் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவனா அல்லது எதேச்சையாக அங்கே வந்தானா என்பது தெரியவில்லை. அவனும் இவர்களோடு சேர்ந்தவன் என்று நான் நினைக்கிறேன், ஆனால் அது நிச்சயமில்லை, இங்கே தான் நீங்கள் இருவரும் திறமையைக் காட்டவேண்டும். வீடு தன்னைத்தானே பார்த்துக் கொள்ளும், நாம் நாலு பேரும் வெளியே சாப்பிட வேண்டியது தான்.''

ஹாரியின் முகம் மலர்ச்சியடைந்தது.

''இங்கு வந்ததிலிருந்து நாங்கள் கேள்விப்பட்ட விஷயங்களில் இதற்குத்தான் முதலிடம். நாங்கள் என்ன செய்யவேண்டும்?''

''அந்த நீக்ரோ ஒவ்வொரு இரவிலும் காப்பிக்கடைக்கு வருகிறான், நாளைக்கும் வருவான். அவன் எங்கே போகிறான் என்பதைப் பார்க்க வேண்டும். இதுதான் முதல் தாக்குதல். நீங்கள் பின் தொடருகிறீர்கள் என்பது அவனுக்குத் தெரியக்கூடாது. நீங்கள் இருவரும் அதற்கான திட்டத்தைத் தயார் செய்யுங்கள். சென்ரி காபிக் கடையிலும் ஹாரி மைதானத்தின் மறுபக்கத்தில் இருக்கும் கடையிலும் இருக்கலாம். நீக்ரோ புறப்படும்போது ஹாரி முன்பக்கமாகவும் சென்ரி பின்பக்கமாகவும் தொடரலாம். ஒரு மேப்பை வாங்கிப் படித்துக் கொள்ளுங்கள். அவன் முட்டாளல்ல. நீங்கள் பின் தொடருகிறீர்கள் என்று தெரிந்தால் அவன் உங்களைக் கழட்டிவிடுவான். சந்துபொந்துகளைத் தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது. அவன் தப்பக்கூடாது, அவன் உங்களைப் பார்க்கக் கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும்.''

''நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்'' என்றார் ஹாரி.

''எச்சரிக்கையாக இருங்கள். அவன் மோசமான ஆளாக இருக்கலாம்'' என்றார் டான். மரியனைப் பார்த்து ''நாளை

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நம்முடைய ஆராய்ச்சியைத் தொடரலாம். நாம் இருவர், ஹாரி மற்றும் செர்ரி, லோரெலியைத் தேடுவோம், அவளை சுலபமாக அடையாளம் காணமுடியும். யாராவது அவளைப் பார்த்தால் உடனே அவளைப் பின் தொடர வேண்டும். நீக்ரோவை விட அவள் முக்கியம். அவரும் எல்லா வித்தையும் தெரிந்தவள். நான் அவளை லண்டனில் பின் தொடர்ந்த போது அவள் என்னைக் கவனிக்கவில்லை என்று நினைத்தேன். ஆனால் அவள் என்னைப் பார்த்து விட்டாள்.''

''இது ஒரு சுவாரசியமான அனுபவம்'' என்றார் செர்ரி.

''இது சுவாரசியத்தை விட முக்கியமானது'' என்றபடி டான் எழுந்தார். இப்போது நாம் படுக்கப் போகலாம். நாளை நம்முடைய வேலை தொடங்குகிறது'' என்றார்.

மறு நாள் பகல் முழுவதும் டானும் மரியனும் சியென்னாவின் ரிகார்டு ஆபிசில் தேடினார்கள்; ஆனால் வாகா குடும்பத்தைப் பற்றிய விவரங்கள் எதுவும் கிடைக்க வில்லை. அனைத்துக் குறிப்புகளுடன் பிளாரன்சோடு நின்றுவிட்டன.

முதுகுவலியைச் சரி செய்வதற்காக முதுகை நேராக்கிக் கொண்ட டான் மரியனிடம் கூறினார்.

''அந்தக் குடும்பத்தின் உறுப்பினர்கள் யாரும் பிறகு சியென்னாவுக்கு வந்ததாகத் தெரியவில்லை. இதற்கு மேல் பிளாரன்ஸ் நகரத்தின் நிகண்டுகளைத்தான் பார்க்க வேண்டும். நீ பார்க்கிறாயா?''

மரியன் ஒப்புக் கொண்டாள்.

''போகிறேன். இன்னும் ஒரு மணி நேரத்தில் பிளாரன்சுக்கான ரயில் புறப்படும். வேகமாகப் போனால் நான் அதைப் பிடித்துவிடலாம். நான் அதைப் பிடித்து விடுகிறேன்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மரியனை ரயிலில் ஏற்றிவிட்டு டான் ஆறு மணிக்குப் பிறகு மாளிகைக்கு வந்தார். செர்ரியும் ஹாரியும் தனித்தனியாக நகரத்திற்குள் போயிருந்தனர்; லோரெலி அல்லது நீக்ரோவைக் கண்டு பிடிப்பது அவர்கள் வேலை.

டான் டிக்ஸ்க்கு டிரங்க் கால் புக் செய்தார், ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தார்; சோடா கலந்த விஸ்கியை வைத்துக் கொண்டு காத்திருந்தார். இருபது நிமிடங்களுக்குப் பிறகு தொலைபேசி மணி ஒலித்து.

''நாங்கள் ஓரளவு முன்னேறியிருக்கிறோம்'' என்று டான் டிக்ஸிடம் வாகா குடும்பத்தைப் பற்றிக் கூறினார். ''நீங்கள் இத்தாலிய போலீசுடன் தொடர்பு கொண்டு அந்தக் குடும்பத்தின் ஆண் வாரிசுகள் யாராவது இருக்கிறார்களா என்று கேட்க முடியுமா? ஆமைதான் அந்த வாரிசு என்று நான் நினைக்கிறேன். எதற்காகக் கேட்கிறோம் என்பதைச் சொல்லவேண்டாம்.''

''என்ன செய்ய முடியும் என்று பார்க்கிறேன். நீங்கள் சொல்வதில் வலு இருக்கிறது.''

''இங்கே முன்னேற்றம் என்றாலும் நான் நினைத்த அளவுக்கு இல்லை. அந்த அறிக்கையை மேலும் ஒரு வாரம் நிறுத்தி வைத்தால் நல்லது. இப்போது போலீஸ் தலையிட்டால் பட்சி பறந்துவிடும். நான் அவனைக் கண்டுபிடித்தால் உங்களுக்குச் சொல்கிறேன். அப்போது அவனைப் பிடித்துவிடலாம்.''

லோரெலியைப் பார்த்ததையும் நீக்ரோவைப் பற்றியும் சொல்லாமல் டான் மறைத்துவிட்டார். அது தெரிந்தால் டிக்ஸ் உடனே இத்தாலிய போலீசுக்குத் தெரிவித்து விடுவார்; அதை டான் விரும்பவில்லை.

''நல்லது. எனக்கு தேவையான ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''என்ன நடக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவிக் கிறேன். வாகா குடும்பத்தைப் பற்றிய விவரங்களை சேகரித்து விட்டு நாளை காலை பத்து மணிக்குள் என்னைக் கூப்பிடுங்கள்'' என்றபடி போனை வைத்தார் டான்.

சில நிமிடங்களுக்கு யோசித்தபடி இருந்தார் அவர். ஹாரியும் சொர்ரியும் நீக்ரோவைப் பார்த்துக் கொள்வார்கள். மைதானத்தின் பக்கம் போகாமல் இருப்பதே நல்லது. ஒரு முறை புத்தக்கடை பெடோனியிடம் பேசிப் பார்க்கலாம்.

கீழே இறங்கி காரிடம் சென்றார். வியா பான்டனோ டாவை அடைவதற்கு இருபத்தைந்து நிமிடங்கள் ஆயிற்று. காரை நிறுத்துவதற்கான இடத்தைத் தேர்வு செய்ய அதே அளவு நேரம் ஆயிற்று.

புத்தக்கடையில் கதவைத் திறந்து வெளிச்சம் நிறைந்த கடையில் அவர் நுழைந்த போது மணி ஏழரை.

கடையில் வாடிக்கையாளர்கள் இல்லை. வரலாற்றுப் பகுதிக்குச் சென்ற டான் புத்தங்களை புரட்டினார்.

கடையையும் அலுவலகத்தையும் பிரிக்கும் தடுப்பிற்குப் பின்புறமிருந்து வெளிப்பட்ட பெடோனி ''மாலை வணக்கம்'' என்றார். இத்தாலிய மொழியில் பேசிய அவர் ''நான் உங்களுக்கு உதவட்டுமா?'' என்றார்.

பெடோனிக்கு அறுபதுக்கு மேற்பட்ட வயது; நிறம் கறுப்பு, சிறிய பருமனான உடல்.பருமனான கண்ணாடி களுக்குப் பின்னால் இருந்த சிறிய கண்கள் கறுப்பாய் இருந்தன.

''இந்த நகரத்தின் 1400 முதல் 1600 வரையிலான வரலாற்றைப் பற்றிய புத்தகங்கள் வேண்டும். அது மாதிரியான புத்தங்கள் இல்லையே?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''கொஸெரெல்லி எழுதிய வரலாறு இருக்கிறது; அது அந்தக் காலத்தைப் பற்றியது தான். மரியானோ சரித்திரமும் அந்தக் காலத்தைப் பற்றியதுதான். ஆனால் அதில் அதிக மான விவரங்கள் இருக்காது'' ஒரு சிறிய ஏணியைக் கொண்டு வந்து அவர் அதில் ஏறினார். சில தொகுதிகளை எடுத்து வந்தார். ''இருவரில் கொஸெரெல்லி தான் சிறந்தவர்.''

''எனக்கு வார்டுகளின் வரலாறு வேண்டும்'' என்றார் டான். புத்தகத்தைப் பிரித்து அட்டவணையைப் பார்த்தார். கெங்கா அல்லது வாகா பற்றி அங்கே ஏதுவுமில்லை. ''வார்டுகளுக்குப் பெயர் எப்படி வந்தது, அவர்களுடைய தலைவர்கள் யார் ஆகிய விவரங்கள் எனக்கு வேண்டும்.''

பெடோனி கண்ணாடியை மூக்கின் மேல் ஏற்றிக் கொண்டார்.

''அது பற்றிய பகுதி மரியானாவில் இருக்கலாம்'' டான் இரண்டாவது தொகுதியைப் புரட்டிக் கொண்டிருந்தார். ''நேற்று நான் கதீட்ரல் நூலகத்தில் இருந்தேன். ஒன்றாம் ஜேம்ஸின் அரசவையில் பிக்கோலோமினி இருக்கும் படத்தை அங்கே பார்த்தேன். பிக்கோலோமினி ஸ்காட் லாந்திற்கு எப்படிப் போனார்?''

பெடோனிக்கு உற்சாகம் ஏற்பட்டது. சியென்னாவைப் பற்றிய தன்னுடைய அறிவை வெளிக்காட்டுவதுதான் அவருக்கு மிகவும் பிடித்தமான செயல் என்பது டானுக்குத் தெரியும். அடுத்த இருபது நிமிடங்களில் பிக்கோலோ மினியின் வாழ்க்கை பற்றிய விரிவுரை நிகழ்த்தப்பட்டது.

''1458 இல் அவர் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட போது சியென்னாவின் பிரபுக்கள் அரசில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்'' என்று சொல்லிக்கொண்டு போன வரை டான் இடைமறித்தார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''அது ஜகொபோ கெங்காவின் காலம் தானே?'' என்றார் டான். ''உங்களிடமிருந்து வாங்கிய புத்தகம் ஒன்றில் கெங்கா தன்னுடைய எதிரியிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றினார் என்று இருக்கிறது.'' பெடோன் இதைச் சொல்லும்போது டான் இடைமறித்தார்.

''அது ஜெகோபா கெங்காவின் காலம்தானே?'' அவர் கேட்டார்.

''நீங்கள் கொடுத்த ஒரு புத்தகத்தில் அவர் எதிரியிட மிருந்து அதிகாரத்தைப் பறித்ததாக இருந்தது.''

பெடோனியின் கண்களில் சுருக்கம் ஏற்பட்டது.

''ஜகோபா கெங்காவைப் பற்றி எனக்குத் தெரியாது.''

''அவரும் இன்னொருவரும் ஆமை வார்டின் தலைமைப் பதவிக்காகப் போட்டியிட்டனர். அவர் தேர்ந்தெடுக்கப்பட வில்லை. இன்னொருவரின் பெயர் வாகா என்று நினைக்கிறேன்.

பெடோனி தலையை ஆட்டினார்.

''இது ஏதோ முக்கியமில்லாத பகுதி, அதைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது.''

''பரவாயில்லை'' என்ற டான் தன்னுடைய ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டார். மரியானோ எழுதிய வரலாற்றை எடுத்தவர் ''இதை வாங்கிக் கொள்கிறேன். எனக்குத் தேவையானது இதில் இருக்கலாம்.''

''உங்களுக்குத் தேவையானதை நான் கொடுக்கிறேன்'' டான் கொடுத்த ஐந்தாயிரம் லிரா நோட்டுக்கு அவர் சில்லறை கொடுத்தார். ''உங்களுடைய பெயரையும் விலாசத்தையும் கொடுத்தால் உங்களுக்குக் கடிதம் எழுதுவேன்.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''வேண்டாம் நான் மீண்டும் வருகிறேன்'' என்றார் டான். ''பரவாயில்லை'' என்ற பெடோனி கதவைத் திறந்தார். எங்களிடம் மாதாந்திரப் பட்டியல் இருக்கிறது. அதை அனுப்பட்டுமா? நீங்கள் கான்டினென்டல் ஓட்டலில் தங்கியிருக்கிறீர்களா?

அவருடைய பதட்டத்தைப் பார்த்த டான் உஷாராகிவிட்டார். ''நான் மீண்டும் வருகிறேன். இரவு வணக்கம்''

குறுகலான தெருவில் அமைதியாகப் போய்க் கொண்டிருந்த மக்களோடு டான் கலப்பதை பெடோனி பார்த்துக் கொண்டிருந்தார். கதவை மூடியவர், திரையை இழுத்தார், பூட்டில் சாவியைத் திருப்பினார். தன்னுடைய அலுவலகத்திற்குச் சென்றார். அலுவலகம் சிறியதாக இருந்தது. தரை முதல் கூரை வரை புத்தகங்கள் அடுக்கப் பட்டிருந்தன. அறையின் நடுவில் உள்ள மேசையில் புத்தகங் களும் காகிதங்களும் இருந்தன; பச்சை வண்ணத்தில் மறைப்புடைய மேசை விளக்கும் இருந்தது.

கதவருகில் நின்ற பெடோனி மேசையின் மறுபுறத்தில் உட்கார்ந்திருந்த பெண்ணைப் பார்த்தார், அவளுடைய முகம் வெளுத்திருந்தது, கூந்தல் சிகப்பு நிறத்தில்.

''இவன்தான் நேற்றிரவு என்னைப் பின் தொடர்ந்த வனாக இருக்கும்'' என்றாள் அவள்.

பெடோனி நடுங்கினார்.

''இவன் போலீசாக இருக்குமோ'' என்றார் பெடோனி.

''முட்டாள் மாதிரி பேசாதே. அவனைப் பார்த்தால் போலீஸ் மாதிரி தெரிகிறதா?'' நாற்காலியை விட்டு எழுந்து அங்கே அவள் நடந்தாள். ''இவன் என்னை லண்டனில் பின்தொடர்ந்தவனாக இருக்கலாம். உருவம் அதே மாதிரி

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இருக்கிறது'' தொலைபேசி ரிசீவரை எடுத்து எண்களைச் சுழற்றி பேசினாள். ''வில்லீ ஒரு வேலை இருக்கிறது. முப்பந்தைந்து வயதுடைய உயரமான வலுவான அமெரிக்கன் ஒருவன், கறுப்பான சிறிய மீசை, வலது கன்னத்தில் Z வடிவத்தில் வடு இருக்கிறது. தொப்பி அணிய வில்லை. பச்சை லினன் ஸீட் அணிந்திருக்கிறான். அவன் யார் எங்கே தங்கியிருக்கிறான் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். தனியாக இருக்கிறானா உதவிக்கு ஆள் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். சுறுசுறுப்பாகச் செயல்பட்டால் இப்போதே அவனைப் பார்க்கலாம். புத்தகக் கடையை விட்டு இப்போதுதான் வெளியேறினான்.''

ரிசீவரைக் கீழே வைத்தவள் நாற்காலியில் இருந்த கோட்டை எடுத்து மாட்டிக் கொண்டாள் ''நான் போக வேண்டும் இது ஆபத்தாக மாறலாம்'' என்றாள்.

அவளுடைய கண்களில் தெரிந்த எச்சரிக்கையின் விளைவாக பெடோனிக்கு பயம் ஏற்பட்டு இதயம் வேகமாக அடித்துக் கொண்டது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அத்தியாயம் ஏழு

எதிரியின் கோட்டையில்

ஃபெலிக்ஸ்- பிரெஞ்சுப் போலீசாருக்கு மட்டும் அவருடைய மற்றப் பெயர்கள் தெரியும்- தனக்கு மிகவும் பிடித்தமான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தான். நெருப்புக்கு மேலே இருக்கும் நிலைக்கண்ணாடியில் தன்னுடைய உருவத்தை ரசித்துக் கொண்டிருந்தான். ஒரு சினிமா நடிகன் என்று சொல்லும் அளவிற்கு அவன் அழகு இருந்தது. கறுப்பான தலைமுடி, அகல விரிந்த முழு நீலக்கண்கள். கச்சிதமான உடலமைப்பு, வெய்யிலில் மெரு கேற்றப்பட்ட தோல் மற்றும் சிரிக்கும் போது மட்டும் வெளிப் பட்ட வரிசையான பற்கள்; மேல் உதடு பெரிதாக இருந்ததால் பற்களும் அவ்வளவாகத் தெரியவில்லை. பெண்களால் மறுக்க முடியாத அழகு அவனுடையது.

அவனுடைய வயது முப்பத்தி இரண்டு; அதில் ஆறு வருடங்கள் சிறைச்சாலையில் கழிந்துவிட்டன. பிடிபடுவதற்கு முன் பிரெஞ்சுக் கடற்கரையில் திரிந்தபடி பணக்காரர்களின் மாளிகையில் கொள்ளையடிப்பது அவன் வழக்கம். அவனுடைய சாதனை அபாரமானது. பதினாறு மாதங்களில் ஐம்பது மில்லியன் பிராங்க்ஸ் சேகரித்தான்; அதில் பெரும்பான்மையான தொகையை மாண்டே கார்லோ ஸ்போர்ட்டிங் கிளப்பில் இரண்டு முறை சூதாடித் தோற்றுவிட்டான். தன்னுடைய இழப்பை ஈடுகட்டுவதற்காக இருபத்தைந்து மில்லியன் பிராங்க்ஸ் மதிப்புள்ள ஒரு நெக்லஸ் மீது கண்வைத்தான். நெக்லசைத் திருடிய

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பிறகு அங்கிருந்த இரவுக் காவலாளியுடன் மோதல் ஏற்பட்டது. அதிருஷ்ட வசமாக அந்தக் காவலாளியைக் கொலை செய்யவில்லை. நெக்லசை விற்பதற்கு முயன்ற போது திருட்டுப் பொருள் வாங்குபவர் அதற்கு ஏழு மில்லியன் பிராங்க்ஸ் தருவதற்குத்தான் உடன்பட்டார். நெக்லசைப் பிரித்துவிட்டுதான் விற்க முடியும்; பிரித்தால் மதிப்பு குறைந்துவிடும் என்பது அவரது கொள்கை. காவலாளி தன்னைப் பற்றி வர்ணனையைப் போலீசிடம் சொல்லியிருப்பான் என்பதாலும், உடனடியாக பிரான்சை விட்டு வெளியேறவேண்டும் என்பதாலும் தொகையை உயர்த்தும்படி அந்த வியாபாரியிடம் கேட்டுக் கொண் டான். பித்தளைப் பூண்கள் உடைய தோல் கையுறை களைப் போட்டுக் கொண்டு, கேட்டுக் கொண்டான். கேட்டுக் கொண்டதற்குப் பலன் இல்லாத போது வியாபாரியைத் தாக்கிவிட்டான்.

இது தவறாகிவிட்டது. தாக்குதல் நடக்கும்போது வியாபாரியின் மனைவி போலீசுக்குச் சொல்லிவிட்டாள். வாழ்க்கையில் முதல் முறையாக ஃபெலிக்ஸ் பிரெஞ்சுச் சிறைச் சாலையைப் பார்த்தான்.

காவலாளியால் அடையாளம் காட்டப்பட்டு, வியாபாரி யால் காட்டிக் கொடுக்கப்பட்ட ஃபெலிக்ஸ் பேய்த்தீவு சிறையில் பதினைந்து ஆண்டுகள் இருக்கும்படி தண்டிக்கப் பட்டான். ஆறு வருட சிறைவாழ்க்கைக்குப் பிறகு ஃபெலிக்ஸ் அங்கிருந்து தப்பிவிட்டான். ரோம் நகரில் புகலிடம் தேடிய ஃபெலிக்சுக்கு ஏதாவது தவறு செய்தால் மாட்டிக் கொள்வோம் என்பது தெரியும். ஒரு நைட் கிளப்பில் தரகராக வேலை செய்த ஃபெலிக்ஸ் மிகவும் எச்சரிக்கையாக இருந்தான். அந்த கிளப்பில் தான் அவன் லோரெலியைச் சந்தித்தான்.

அவளைச் சந்திக்கும்வரை எல்லாப் பெண்களையும் அவன் விளையாட்டுச் சாதனமாகத்தான் கருதினான்,

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கொடுமையாகப் பயன்படுத்துவிட்டு அவர்களை வீசியெறிய வேண்டும் என்பது தான் அவனது குறிக்கோள். தன்னுடைய உடல் ஆசைகளைத் தீர்ப்பதைத் தவிர அவளுடைய அழகான தலையில் வேறு எண்ணங்களும் இருக்கின்றன என்பதை அவன் தெரிந்து கொண்டான். அவன் சைமன் அல்ஸ்கோனியோடு சேர வேண்டும் என்று சொன்னது அவள்தான், அந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்ததும் அவள்தான்.

லோரெலி உள்ளே வரும்போது அவன் தன்னுடைய டையைச் சரி செய்து கொண்டிருந்தான். அவளை வரவேற் பதற்காகத் திரும்பியவன் அவளுடைய தோற்றத்தைப் பார்த்தவுடன் அமைதியாகிவிட்டான். ''என்ன நடந்தது?''

லோரெலி கதவை மூடினாள், கோட்டைக் கழட்டினாள், நெருப்புக்கு அருகே வந்தாள்.

''லண்டனில் என் பின்னால் வந்து போலீசிடம் என்னைப் பற்றித் தகவல் கொடுத்தவனைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். நேற்று என்னை ஒருவன் பின் தொடர்ந்தான் என்பதைச் சொல்லியிருக்கிறேன். அதே மனிதன் பெடோனி புத்தகக் கடைக்கு வந்தான். சியென்னாவில் இருக்கும் வார்டுகளுக்குப் பெயரிடப் பட்டது பற்றித் தெரிந்து கொள்வதற்காகப் புத்தகத்தைக் கேட்டான். ஆமை வார்டு பற்றி அவன் குறிப்பிட்டான்.

ஃபெலிக்ஸ் இறுகிப் போனான்.

''அது நிச்சயமாக அதே ஆள்தானா?''

''கிட்டத்தட்ட, அதே உருவம், லண்டனிலோ, நேற்று இரவிலோ நான் அவன் முகத்தைப் பார்க்கவில்லை. ஆனால் அவன்தான் என்று நினைக்கிறேன்.''

''அவன் யார்?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''எனக்குத் தெரியாது. அவனுடைய அடையாளங்களை வில்லீயிடம் சொல்லி விசாரிக்கச் சொல்லியிருக்கிறேன்''

ஃபெலிக்ஸ் சிகரெட்டைக் கொளுத்திக் கொண்டு நெருப்புக் கருகே உட்கார்ந்தான்.

'' அவன் போலீஸ்காரனா?''

''இல்லையென்று நினைக்கிறேன். அவன் ஒரு அமெரிக்கன், பணக்காரன் அவன் கெங்கோ மற்றும் வாகா பற்றிக் குறிப்பிட்டான். அந்த வரலாறு அவனுக்குத் தெரிந்திருக்கிறது.'' அவள் கைகளைக் இறுக மூடிக் கொண்டாள். ''இது ஆபத்தானது என்று எனக்குத் தெரியும். நாம் ஏகப்பட்ட தடயங்களை விட்டு வைத்திருக்கிறோம். எப்படியும் கொஞ்சம் மூளை உள்ள யாராவது நம்மைப் பிடித்துவிடுவார்கள்.''

''பயப்படாதே'' என்றான் ஃபெலிக்ஸ். ''இதை நாம் சமாளிப்போம். இது வரை இது நமக்கு நல்ல பலன் கொடுத்திருக்கிறது. ஒரு காலத்தில் நானும் இது சரிவரும் என்பதை நம்பவில்லை. ஆனால் அல்ஸ்கோணி இதை இப்படித்தான் செய்ய வேண்டும் என்றான். பழைய கணக்குகளைத் தீர்ப்பதாக அவன் நம்புகிறான். நம்முடைய திறமையில் இவ்வளவு பெரிய மோசடியைச் செய்திருக்க முடியாது. விளம்பரம்தான் இதில் முக்கியம். பணம் எப்படிக் குவிகிறது பார். நமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.''

''நாம் பிடிபட்டால் இந்தப் பணம் பயன்படாது'' என்றாள் லோரெலி. ''இதுவரை கிடைத்ததே பெரிய விஷயம். இந்த அமெரிக்கன் நம்மைத்தான் தேடுகிறான் என்று நினைக்கிறேன். நாம் தப்பிக்கவேண்டிய நேரம் வந்து விட்டது.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''தப்பிப்பதா?'' என்றான் ஃபெலிக்ஸ், அவன் கண்களில் கோபம் தென்பட்டது.

''தப்பிப்பது என்றால் உனக்குத் தெரியாதா?'' என்று லோரெலி குரலை உயர்த்தினாள். நம்மைப் பிடிப்பதற்கு முன் நாம் இங்கிருந்து வெளியேறவேண்டும். லண்டனுக்குப் போகும் வரை எனக்கு நம்பிக்கை இருந்தது. கினாவின் கொலையில் சம்பந்தப் பட்டது பெரிய முட்டாள்தனம். அதற்காக என்னைத் தூக்கில் போடலாம். அவள் காரில் ஏறும் வரை நான் அதை உணரவில்லை, அதற்குள் எல்லாம் முடிந்துவிட்டது. என்னால் இரவில் தூங்க முடியவில்லை. இப்போது இந்த அமெரிக்கன் நம்மைத் தேடுகிறான். அவன் போலீசாரிடம் சொல்லி விடுவான், நிச்சயமாக.''

''வாயை மூடு. நீ பயந்துவிட்டாய்'' என்றான் ஃபெலிக்ஸ்.

''நீ எப்படிச் சொல்லலாம்?'' என்று கேட்ட லோரெலி கடுமையாக சொன்னாள். ''உன்னால் பாக்க முடியலை'' ஃபெலிக்ஸ் பாய்ந்தான். அவளைப் பிடித்து வலிமையாக உலுக்கினான். ''வாயை மூடு. நான் சொல்வதைக் கேள். கையிலிருக்கும் சீட்டை வைத்துத்தான் விளையாட வேண்டும். வெற்றி கிடைத்தால் கிடைக்கலாம், இல்லாவிட்டால் தோல்விதான். நம்மிடம் இப்போது வசதியிருக்கிறது. எந்த அமெரிக்கனாலும் இதை நம்மிடமிருந்து பிரிக்க முடியாது.''

அவள் விலகிக் கொண்டாள்.

''நீ ஒரு முட்டாள். நான் இதற்காகவே காத்திருந்தேன். எப்படியும் நம்மை நெருங்கி விடுவார்கள் என்று எனக்குத் தெரியும். நம்மால் முடிந்தவரை வருமானம் பார்த்து விட்டோம். இப்போது வெளியேற வேண்டிய நேரம்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

போலீஸ் வருவதற்குள் வெளியேற வேண்டும். நாம் ப்யூனஸோர்ஸுக்கு போய்விடலாம்.

ஃபெலிக்ஸ் அவளை முறைத்தான்.

''நாம் போக முடியுமா?'' வெறுப்பான ஒரு புன்னகையை உதிர்த்தான். ''நீ தூங்காத நேரத்தில் இதைப் பற்றிதான் திட்டமிட்டாயா? நல்ல யோசனை நாம் புறப்படுகிறோம் என்று தெரிந்தவுடன் அல்ஸ்கோனி ஆனந்தக் கூத்தாடுவான் தெரியுமா?''

''நிறுத்து'' என்றாள் லோரெலி. ''அவனுக்குத் தெரிவதற்குள் நாம் வெகுதூரம் போய்விடலாம்.''

ஃபெலிக்ஸ் சிகரெட்டை நெருப்பில் எறிந்தான்.

''அவன் நம்மை மறந்துவிடுவான் என்று நினைக்கிறாயா? உனக்கு ஏதாவது மரை கழண்டு விட்டதா. நாம் எங்கே போனாலும் அவன் கண்டுபிடித்து விடுவான். நமக்கு நிம்மதியே இருக்காது. நம்மைக் கண்டுபிடித்து விட்டால்...'' ஃபெலிக்ஸ் தோள்களைக் குலுக்கிக் கொண்டார். ''ஒரு வாதத்திற்காக நாம் புவனஸோர்ஸில் காணாமல் போய்விடு கிறோம் என்று வைத்துக் கொண்டால் யார் கண்ணிலும் படாமல் எத்தனை நாள் இருக்க முடியும்? உலகத்தின் எல்லா நாடுகளிலும் அவனுடைய ஏஜெண்டுகள் இருக்கின்றனர். அவர்கள் நம்மை வேட்டையாடுவார்கள். என்னை இங்கே விட்டுவிட்டு நீ போகலாம் என்று நினைத்தால் உனக்குச் சொல்கிறேன், நீ ஒரு நிமிடம் கூட நிம்மதியாய் இருக்க மாட்டாய். பின்னால் கேட்கும் ஒவ்வொரு காலடியோசையும் பயத்தால் உன்னை உறைய வைக்கும். ஒவ்வொரு மனிதன் உன்னைப் பார்க்கும் போதும் இதயத்துடிப்பு நின்றுவிடும். தன்னுடைய இயக்கத் திலிருந்து யாரும் வெறியேறுவதை அல்ஸ்கோனி அனுமதிக்க மாட்டான். இதற்கு முன் வெளியேறிய

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

முட்டாள்கள் என்ன ஆனார்கள் என்பது உனக்குத் தெரியும்.''

''ஆக, என்ன செய்யப்போகிறாய்?'' என்றாள் லோரெலி அவனை முறைத்துக் கொண்டே.

''நான் பயப்படமாட்டேன். இந்த அமெரிக்கன் என்னை மிரட்ட முடியாது. அவனால் ஆபத்து என்றால் அவனைத் தீர்த்து விடுவேன்.''

''அதற்குள் எல்லாம் முடிந்துவிடும்.''

''பெண்ணே போய் படுத்துக்கொண்டு ஓய்வெடு. நீ பயந்துவிட்டாய். நாம் இங்கிருக்கிறோம் என்று அவன் நினைக்கலாம். ஆனால் அவன் இன்னும் நம்மைக் கண்டுபிடிக்கவில்லை. நம்மைக் கண்டுபிடிப்பது சிரமம் என்பதை மறந்துவிடுகிறாய்.''

''அதாவது நீ என்னோடு வரமாட்டாய்'' என்றாள் லோரெலி பரிதாபமாக.

''வெளியேறுவது என்ற பேச்சே இல்லை. கடைசிவரை இருக்க வேண்டும். இப்போது படுக்கைக்குப் போ.''

''அல்ஸ்கோனியிடம் சொல்லப்போகிறாயா?''

''இல்லை எனக்கு இன்னமும் சில தகவல்கள் தேவை.''

அவள் கோட்டை எடுத்துக்கொண்டு கதவருகே போனாள்.

''வில்லி தொலைபேசி மூலம் அழைக்கலாம்.''

''சரி, அதுவரை நான் இங்கேயே இருக்கிறேன்.''

அவள் போனபிறகு, ஃபெலிக்ஸ் இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். அவனுடைய முகத்திலே ஒரு சுருக்கம், வசதியான முறையில் யோசனையோடு நடந்து கொண்டிருந்தான். ஃபெலிக்ஸ்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இந்த வியாபாரத்தை நிறுத்திவிடலாம் என்று அந்த அமெரிக்கன் நினைத்தால் அது நடக்காது. ஏதாவது விவரத்தை அவன் கண்டுபிடிப்பதற்குள் அவன் கதையை முடித்துவிடலாம். நடந்து கொண்டிருக்கும் போதே வில்லீயிடமிருந்து அழைப்பு வந்தது.

''அவன் தொலைந்துவிட்டான். சிறிது நேரம் தெருக்களில் நடந்து கொண்டிருந்தவன் வியா பன்டெனைட் டோவுக்குப் போனான். அங்கிருந்து காரில் போய் விட்டான், நகரத்துக்கு வெளியே.''

''கார் நம்பர் இருக்கிறதா?''

''இதோ இருக்கிறது. இங்கிலாந்து ரிஜிஸ்ட்ரேஷன்'' கார் நம்பரைக் கொடுத்தவுடன் ஃபெலிக்ஸ் எழுதிக் கொண்டான்.

''ஆக அவன் எந்த ஓட்டலிலும் தங்கவில்லை.''

''நகரத்திற்கு வெளியே போய்விட்டான்.''

''நகரத்திற்கு வெளியே உள்ள மாளிகைகளை யாராவது வாடகைக்கு எடுத்திருக்கிறார்களா என்று விசாரிக்க வேண்டும். அவன் எங்கே இருக்கிறான் என்பது தெரிய வேண்டும். அது அவசரம்.''

''நாளைக் காலை வரை எதுவும் செய்ய முடியாது'' என்றான் வில்லீ, ''அவனுக்கு வேலை செய்வதில் விருப்பமில்லை.''

''காலையில் விசாரித்துப் பார்.'' ஃபெலிக்ஸ் ஆபரேட்டரை அழைத்தார்.

''லண்டன் மியூஸியம் 11066 எண் வேண்டும்'' என்றார்.

அரைமணி நேரத்திற்குப் பிறகு அவன் க்ரான்டருடன் பேசிக் கொண்டிருந்தான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"கார் எண் பிஎல்எம்122ன் உரிமையாளர் யார் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். மிகவும் அவசரம். தெரிந்தவுடன் என்னைக் கூப்பிடு."

ஒரு மணி நேரத்தில் தகவல் தருவதாக க்ரான்டர் கூறினார்.

ஃபெலிக்ஸ் ரிசீவரை வைத்தவுடன் அறையில் அலாரம் மணி அடிந்தது. ரிசீவரிலிருந்து கையை எடுக்காமல் அப்படியே இருந்தான். யாரோ வீட்டிற்குள் வந்திருக் கிறார்கள்; வரக் கூடாதவர்கள் யாரோ வந்திருக்கிறார்கள் என்பதின் அறிகுறி அது.

ஜன்னல் பக்கமாக இருந்த மேசையை நெருங்கி, அதிலிருந்த ரிவால்வரை எடுத்துக் கொண்ட ஃபெலிக்ஸ் கீழ்த்தளத்தின் கூரையில் இறங்கினான்.

டான் தன்னுடைய இருப்பிடத்திற்கு வந்தபோது மணி பதினொன்றைத் தாண்டிவிட்டது. லோரெலியைத் தேடி சியென்னாவின் தெருக்களில் அலைந்தார் அவர். இறுதியில் எதுவும் கிடைக்கவில்லை என்பதால் ஹாரியும் செர்ரியும் என்ன செய்தார்கள் என்பதைப் பார்ப்பதற்காக வீட்டுக்கு வந்துவிட்டார்.

தன்னைப் பின் தொடர்ந்து அந்தக் கறுப்பு மனிதனை அவர் பார்க்கவில்லை. அந்த மனிதன் கறுப்புத் தொப்பியை முகத்தை மறைக்கும்படி அணிந்திருந்தான்; வெண்மையான அம்மை வடு நிறைந்த முகம் அவனுடையது. பென்ட்லே காரில் ஏறி வேகமாகப் போகும் வரை அவன் பின் தொடர்ந்தான் என்பதை அவர் அறியவில்லை.

மாளிகைக்கு வெளியே காரை நிறுத்தியவுடன், வாயிற் கதவைத் திறந்து கொண்டு ஹாரி கீழே வந்தார்.

"ஏதாவது கிடைத்ததா?" என்றார் ஹாரி.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கேட்கும் முறையிலிருந்து ஹாரியிடம் தகவல் இருக்கிறது என்பதை டான் தெரிந்து கொண்டார்.

''எதுவும் இல்லை.'' என்ற டான் வரவேற்பறையில் நுழைந்தார். ஹாரியிடம் ''செர்ரி எங்கே?'' என்று கேட்டார்.

''படுத்திருக்கிறார், அந்த நீக்ரோவின் பின்னால் நடந்ததில் அவர் கலைத்துப் போய்விட்டார். சாதாரண மனிதனைப் போல் மூன்று மடங்கு அதிகமாக இருக்கிறது அவனுடைய நடை. செர்ரி கூட்டமாகத்தான் நடந்தார்.''

பாரிலிருந்து இரண்டு கோப்பை எடுத்து வந்த டான், ஒரு கோப்பையை ஹாரியிடம் கொடுத்தார்.

''நீக்ரோ எங்கோ போனான்'' என்று கேட்ட டான் நாற்காலியின் கைப்பகுதியில் உட்கார்ந்து கொண்டார்.

பீரை உறுஞ்சிய ஹாரி, வாயை புறங்கையால் துடைத்துக் கொண்டார்.

ஒரு குதிரை செய்ய வேண்டிய உடற்பயிற்சியைச் செய்தபிறகு அந்த நீக்ரோ காரில் ஏறிப்போய்விட்டான். என்னிடம் கார் இருந்தால் அவனைப் பின் தொடர முடியாது. நிச்சயமாக அவன் என்னைப் பார்த்துவிடுவான். ஆனால் அந்தச் சாலை மைல் கணக்கில் நேராக இருந்தது. அதுதான் அதிர்ஷ்டம். சில மைல் தூரம் போன பிறகு சாலையிலிருந்து திரும்பிவிட்டான். ஒரு வீட்டின் காம்பவுண்டிற்குப் போயிருக்கலாம். இப்போதே நாம் காரை எடுத்துக் கொண்டு போய்ப் பார்த்தால் அவன் திரும்பிய இடத்தை நான் அடையாளம் காட்டுவேன்''

''நல்லது'' என்ற டான் பீரை முடித்தார். ''இப்போதே போகலாம்.''

அவர்கள் காரிடம் போனார்கள், டான் டிரைவர் சீட்டில் உட்கார்ந்தார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''விஷயம் வெளியாகிவிட்டதோ என்ற சந்தேகம் எனக்கு. அந்தப் புத்தகக் கடைக்காரனிடம் பேசிக் கொண்டிருந்தேன். வாகாவைப் பற்றி ஏதாவது தெரியுமா என்று கேட்டேன். அவனுடைய முகபாவம் உடனே மாறிவிட்டது. உடனே என் பெயரையும் என் முகவரி யையும் கேட்டான். ஒரு வேளை நான் தேவையில்லாமல் சந்தேகப்படலாம். ஆனால் அந்தப் பெடோனி அவ்வளவு ஒழுக்கமானவனாகத் தெரியவில்லை.''

''நிச்சயமாக அந்த நீக்ரோ ஒழுக்கமானவனில்லை. அடடா என்ன உருவம். அவன் ஐஸ்கிரீம் சாப்பிடுவதைப் பார்த்து செர்ரிக்கு முழி பிதுங்கிவிட்டது. அவனோடு எந்த வம்பும் வைத்துக் கொள்ளக்கூடாது.''

''அவன் உங்களைப் பார்க்கவில்லையே.''

ஹாரி இல்லையென்றார்.

''அவன் ஒரு முறைகூட திரும்பிப் பார்க்கவில்லை. உடற் பயிற்சி செய்வது போல நடந்தான். ''இங்கே இடது பக்கம் திரும்ப வேண்டும், ஐயா.'' நகரத்தின் பழைய நுழைவாயில் வழியாக அவர்கள் போனார்கள். ''இங்கேதான் அவன் காரை நிறுத்தினான், அந்த மரங்களுக்குக் கீழே வலது பக்கமிருக்கும் வழியில் அவன் போனான்.

டான் ஹெட்லைட்களை அணைத்து பனிக்கால விளக்கைப் போட்டார். அந்தச் சாலை செங்குத்தாக இருந்தது, அவர்களுக்கு இடது பக்கத்தில் ஃபிரான்சிஸ்கன் மடம். மடத்திற்கு அப்பால் மலைப்பிரதேசம்.

மீண்டும் ஒரு மைல் தூரம் போனபிறகு ஹாரி ''இங்கேதான் இருக்கிறது. நாம் காரை விட்டு இறங்கி நடக்கலாமா?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

டான் சம்மதித்தார், புல்வெளியில் காரை நிறுத்தினார், விளக்குகளை அணைத்தார். இருவரும் மலைமீது ஏறினார்கள்.

அங்கே எந்தக் கட்டிடமும் இல்லை. பத்து நிமிடங்கள் நடந்த பிறகு ஹாரி கேட்டார். ''நாம் அதைக் கடந்து விட்டோமா? இவ்வளவு தூரம் இருக்காது.''

''அவ்வளவு சரியாகச் சொல்ல முடியாது. இன்னொரு மைல் தூரம் போய்ப் பார்க்கலாம். இதுவரை எந்தப் பக்கத்திலும் சாலை பிரியவில்லை.''

சில நிமிடங்களுக்குப் பிறகு ஹாரி ''இதோ இதோ இருக்கிறது'' என்றார்.

மெயின் ரோட்டிலிருந்து பிரிந்து செல்லும் சாலை நிலவு வெளிச்சத்தில் தெரிந்தது. நூறுகஜம் வரை நேராகப் போன சாலை காட்டுப் பகுதியில் வளைந்துவிட்டது.

''எந்த வீடும் இல்லை. இன்னும் கொஞ்சம் நடக்க வேண்டும்'' என்ற டான் சத்தம் கேட்காதபடி புல்வெளியில் நடந்தார்.

ஹாரி அவருக்குப் பின்னால் வர, வளைவைக் கடந்து காட்டுக்குள் நுழைந்தனர்.

காட்டுக்குள் கும்மிருட்டாக இருந்தது. டான் முன்னேறிக் கொண்டே இருந்தார்.

பத்து நிமிடங்களுக்குப் பிறகு காட்டைவிட்டு வெளி வந்து, ஒரு குன்றின் அடிப்பாகத்தில் அவர்கள் நின்றனர். அவர்களுக்கு எதிரே பதினைந்தடி உயரத்தில் ஒரு கல் சுவர் எழுந்து இரண்டு பக்கமும் பரவியிருந்தது.

நிலவு வெளிச்சத்தில் அங்கே பகல்போல ஒளியூட்டம். ஐம்பது முழங்களுக்கு அப்பால் பெரிய வரவேற்பு வளைவும்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இரண்டு இரும்புக் கதவுகளும் தென்பட்டன. கதவுகள் மூடப்பட்டிருந்தன.

''இதுதான் அந்த இடம். இடைக்காலத்து மாளிகையைப் போல இருக்கிறது.''

ஹாரி உயரமான சுவரை உற்றுப் பார்த்தார்.

''இங்கிருந்து எதுவும் தெரியவில்லை. உங்களைத் தூக்கி விடட்டுமா?''

''நல்ல யோசனை'' என்றபடி டான் கதவருகே போனார். தன்னுடைய காலை ஹாரியின் கைகளில் வைத்தார், ஹாரி அவரைத் தூக்கினார். டான் சுவரைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறினார். மிகப் பெரிய தோட்டத்திற்கு அப்பால் கோதிக் கட்டிடக்கலையின் வடிவத்தில் ஒரு மாளிகை கம்பீரமாக நின்றது.

''பழைய அரண்மனையைப் போல இருக்கிறது'' என்ற டான் கையை நீட்டினார். ''பிடித்துக் கொள்ளுங்கள். உங்களைத் தூக்கி விடுகிறேன்.''

சிறிது நேரம் சிரமப்பட்டு ஹாரி மேலே ஏறி வந்தார். அவரும் தோட்டத்திற்கு அப்பால் இருந்த மாளிகையைப் பார்த்தார்.

''பெரிதாக இருக்கிறது. நாம் கீழே இறங்கிப் பார்க்கலாமா?''

''நான் போகிறேன் நீங்கள் இங்கேயே இருக்க வேண்டும். நான் அவசரமாகத் திரும்பி வந்தால் நீங்கள் என்னைக் கை கொடுத்துத் தூக்க வேண்டும்.''

''உங்களுக்குப் பதிலாக நான் போகிறேனே. இருட்டு எனக்கு அதிகப் பழக்கம்.''

''அப்படித்தான் நீங்கள் நினைக்கிறீர்கள்'' என்று சொல்லிவிட்டுக் கீழே குதித்தார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''பார்த்துப் போகவேண்டும்'' என்றார் ஹாரி.

ஹாரியைப் பார்த்துக் கையசைத்துவிட்டு டான் வீட்டை நோக்கிப் போனார். முதல் இருநூறு கஜம் சுலபமாக இருந்தது; பூச்செடிகளில் மறைந்த படியே போனார் அவர். புல்வெளியின் எல்லைக்கு வந்த பிறகு அவர் தயங்கினார்.

இரண்டு பக்கமும் பார்த்தவர் மறைப்பு இல்லாத இடத்தில் செல்வதற்கு யோசித்தார். நிலவு வெளிச்சத்தில் அவர் நகர்ந்து போவதை யாரும் ஜன்னல் வழியாகப் பார்க்க முடியும். செடிகளில் மறைந்தபடியே அரை வட்டமாகச் சென்றவர் மறைப்பைத் தேடினார். தனக்கு முன்னால் ஒரு அசைவைப் பார்த்தவர் புதரில் பதுங்கினார்.

அவருக்கு முப்பது முழ தூரத்தில் செடிகளிலிருந்து வெளிப்பட்டான் ஒருவன். அவனுடைய கையில், ஆட்டோமெட்டிக் துப்பாக்கி, அருகில் பயங்கரமான தோற்றமுடைய நாய்.

டானின் கழுத்திலிருந்து ரோமங்கள் எழுந்து நின்றன. நாயின் கழுத்தில் கட்டப்பட்ட சங்கிலியின் முன்பகுதி அந்த மனிதனின் கையில் இருந்தது. அந்த மிருகத்தின் சதைத் திரட்சிகள் அசைவது நிலா வெளிச்சத்தில் நன்றாகத் தெரிந்தது.

டான் அசையாமல் இருந்தார், மனிதனும் மிருகமும் மெதுவாக நடந்து இருட்டுக்குள் போகும் வரை அவரிடம் மூச்சில்லை. நல்ல வேளையாக புல்வெளியின் குறுக்கே போகவில்லை, போனால் அந்த நாய் தன்னைக் கடித்துக் குதறியிருக்கும் என்று நினைத்தார்.

திரும்பிப்போக மனமில்லாமல் அந்த மாளிகையைப் பார்த்தார். ஆனால் அதை நெருங்குவதும் கடினம். மிகவும் எச்சரிக்கையாக செடிகளின் மறைவிலேயே அவர் முன்னேறினார். சில நிமிடங்களில் மாளிகையின் கிழக்குப் பகுதிக்கு வந்துவிட்டார். இங்கே புல்வெளி குறுகி

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

செடிகளாலான மறைவிடமும் இருந்தது. வீட்டிற்கும் அவருக்கும் இடையே நாற்பது முழம் புல்வெளிதான்.

இரு மரத்தின் மறைவில் இருந்து கொண்டு வீட்டைக் கவனித்தார். இந்தப் பக்கத்தில் எல்லா ஜன்னல்களும் இருளில் இருந்தன. ஆனால் அந்த ஜன்னல்களுக்குப் பின்னால் இருந்து யாராவது கண்காணிக்கிறார்களா என்று தெரியவில்லை.

அகன்ற அழகான கூரையும், பளிங்குப் படிக்கட்டுகளும் பளிங்குக் கைப்பிடிச் சுவரும் கிழக்குப் பகுதியை அலங்கரித்தன. புல்வெளியைக் கடந்து நிலா வெளிச்சத்தில் படிக்கட்டுகளில் ஏறினால்தான் வீட்டுக்குள் போகமுடியும் என்பதை அவர் உணர்ந்தார். அந்த நாய் இல்லாவிட்டால் அவர் துணிந்து அடுத்த அடி வைத்திருப்பார். ஆனால் இந்த முறை அவருக்குத் தயக்கம் ஏற்பட்டது.

வீட்டின் சொந்தக்காரர் யாரென்று ஆராயவேண்டும். அது பெரிய விஷயமில்லை. அதற்குள் அவசரப்பட்டு மாட்டிக் கொள்ளக்கூடாது.

குனிந்தபடியே செடிகளின் வழியாக ஹாரி இருக்கும் இடத்தை நோக்கி அவர் நகர்ந்தார். முப்பது முழம் கூட போயிருக்க மாட்டார், அங்கு ஏற்பட்ட சூழ்நிலையில் அப்படியே உறைந்து போய்விட்டார்.

புல்வெளியின் மறுபக்கத்திலிருந்து ஒரு நாய் டான் இருக்கும் பகுதியைப் பார்த்துக் கொண்டிருந்தது. அந்த நாயின் காதுகள் செங்குத்தாக நின்றன. தலை சாய்த்தபடி இருந்தது.

டானின் உடலில் எந்த அசைவும் இல்லை, இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. நாய் தன்னை மோப்பம் பிடித்து விட்டதா? மெல்லிய காற்று நாய் இருக்கும்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பக்கத்திலிருந்து டான் இருக்கும் இடத்தை நோக்கி வீசியதால் அது சாத்தியமில்லை.

நாய் தலையைக் குனிந்தது, முன்னே நடந்து புல்வெளியின் நடுப்பகுதிக்கு வந்தது, அங்கே நின்றது.

டானின் முகத்தில் வேர்வை ஒடியது. இருந்தாலும் அவர் அசையவில்லை. ஒரு நிமிட நேரம் அவரும் அந்த நாயும் அசையவில்லை, ஆனால் அவருக்கு அது ஒரு மணி நேரமாகத் தோன்றியது.

வீட்டின் பக்கத்திலிருந்து ஆட்டோமாடிக் துப்பாக்கி ஏந்திய மனிதன் அப்போது வந்தான். வெளிச்சத்திலிருந்து அவன் நாயை உற்றுப் பார்த்தான்.

நாய் அவனைப் பார்த்து, சிணுங்கியது சில அடிகள் முன்னுக்கு வந்து, நின்று அவனைப் பார்த்தது.

''இங்கே வா'' என்றான் அவன் இத்தாலிய மொழியில்

சிறிது யோசனைக்குப் பிறகு அது அவனருகே போனது. அவன் கழுத்துப்பட்டையில் சங்கிலியைக் கோத்து விட்டான். கட்டிடத்தின் மேற்குப் பகுதியை நோக்கி அவன் சென்றான்; நாயும் அவன் கால்களோடு ஒட்டிக்கொண்டு நடந்தது.

பார்வைக்கு அப்பால் அவர்கள் போனபிறகு, டான் மீண்டும் நகர்ந்தார். இந்த இடத்திலிருந்து வெளியேற வேண்டும் என்பதுதான் அவருடைய முடிவு. அவர் வேகமாக நடந்தார். ஆனால் இதற்கிடையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த உலோகத்தட்டை அவர் மிதித்து விட அலாரம் மணி அலறியது.

தான் வந்த வழியை அவர் தேடினார், அது கிடைக்க வில்லை. இருக்குமிடத்திலிருந்து கண்களைச் சுழற்றிப் பார்த்தார். அப்போதுதான் அலாரம் மணி அவருக்குக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கேட்டது. அந்த இடத்தில் அது மெதுவாகத்தான் ஒலித்தது என்றாலும் அது அலாரம் மணிதான் என்பதில் சந்தேக மில்லை.

அவர் நிமிர்ந்து பார்த்தார், எப்படியோ எங்கேயோ தொட்டு அலாரம் மணியை ஒலிக்கச் செய்துவிட்டோம் என்பதை உணர்ந்து கொண்டார். பூதாகரமான நீக்ரோ புல்வெளியில் நடந்து வருவதைப் பார்த்தார், நீக்ரோவின் கையிலிருந்து கத்தி பளபளத்தது.

கருஞ்சிறுத்தையைப் போல நீக்ரோ வரும் காட்சி யாரையும் மிரட்டிவிடும். ஆனால் டான் துணிச்சலாக இருந்தார். ஒரு புதருக்குப் பின்னே மறைந்து கொண்டார்.

டானுக்கு ஐம்பது முழ தூரத்தில் நீக்ரோ புதரில் நுழைந்தான். அங்கேயே உற்றுப் பார்த்தார்.

வாட்டசாட்டமான ஆளும் அவருடைய நாயும் அங்கே வந்து, நீக்ரோவைப் பார்த்தவுடன் நின்றுவிட்டனர். நாய் திமிறிக் கொண்டிருந்தது. அது குரைத்துக் கொண்டும் உறுமிக் கொண்டும் போராடியது. வீட்டின் பின்பக்க மிருந்து மூன்றுபேர், மூன்று நாய்களுடன் வந்தனர். அந்த நாய்களும் திமிறிக் கொண்டிருந்தன.

நீக்ரோ அவர்களைப் பார்த்துக் கையாட்டினான். அவர்கள் நின்றுவிட்டனர். நீக்ரோ டானிருக்கும் இடத்தை நோக்கி முன்னேறினான்.

புதரின் நடுவே பதுங்கியிருந்த டான் வரிசையாக நின்றிருக்கும் நால்வரையும் நாய்களையும் பார்த்தார். தன்னை நோக்கி வரும் நீக்ரோவின் அசைவால் நகரும் இலைகளையும் பார்த்தார். ஆறு அடி நெருக்கத்தில் வந்துவிட்ட நீக்ரோவின் கொடுமையான முகத்தையும் அவன் விரல்களிலிருந்த கத்தியையும் பார்த்தார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

டான் மூச்சை அடக்கிக்கொண்டு காத்திருந்தார். சிறிது நேரத்திற்கு எதுவும் நடக்கவில்லை. மரக்கிளைகளில் நழுவும் காற்றின் ஓசை, பலமாக மூச்சுவிடும் நீக்ரோவின் ஓசை, நாய்களின் உறுமல் ஓசை ஆகியவை தெளிவாகக் கேட்டது. ஆனால் நீக்ரோ சற்று விலகிப் போயிவிட்டான். இருந்தாலும் டான் அசையவில்லை. சிறிது அசைந்தாலும் நீக்ரோவுக்குத் தெரிந்துவிடும்.

சிறிது நேரம் புதர்களை ஆராய்ந்த நீக்ரோவுக்குப் பொறுமையில்லை. இங்கே இருப்பதை நாய்கள் பார்த்துக் கொள்ளும் என்ற யோசனையில் மற்றவர்களைப் பார்த்து ''நாய்களை அவிழ்த்து விடுங்கள்'' என்றான்.

நான்கு பேரும் செயின் அவிழ்ப்பதற்கு முன் டான் ஓடத்துவங்கினார். குத்து மதிப்பாக சுவர் இருக்கும் இடத்தை குறிவைத்து அவர் ஓடினார். செடிகளை மிதித்துக் கொண்டு ஓடிய அவர் ஹாரியின் கரங்களைத் தேடினார்.

புல்வெளிக்குக் குறுக்கே ஓடிவரும் நாய்களின் குரைப்பு அவருக்குக் கேட்டது. ஒரு வழியாக வந்த வழியைக் கண்டு பிடித்தவர் வேகமாக ஓடினார்.

நாய்கள் அவரை நெருங்கிவிட்டன. அந்த உறுமல் சத்தம் முதுகெலும்பைக் குளிரவைத்தது. மிகவும் அருகே வந்து விட்ட நாய்களிடமிருந்து தப்பமுடியாது என்று தெரிந்து கொண்டார். இன்னும் சில நிமிடங்களில் அவரைக் கீழே தள்ளிக் கடித்துக் குதறிவிடும்.

பக்கத்தில் ஒரு மரம் இருந்தது. தன்னுடைய கையைக் கவ்விய நாயின் தலையில் ஓங்கி அடித்தார். அது சுருண்டு விழுந்தது, ஆனால் ஓட்டம் முடிந்துவிட்டது என்பது அவருக்குத் தெரியும் மரத்தில் சாய்ந்து கொண்டு நின்றார்.

மற்ற நாய்கள் சுற்றி வட்டமாக நின்றன. பெருமூச்சு வாங்கிய டான் நாய்களைப் பார்த்தார். எந்தத் திசையில்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நகர்ந்தாலும் அந்தத் திசையில் இருக்கும் நாய் குதறிவிடும். பாக்கெட்டிலிருந்து கர்ச்சீப்பை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டார் நாய்கள் உறுமியபடியே கிட்டே வந்தன.

நிலா வெளிச்சம் நிறைவாக இருந்த பாதையில் நீக்ரோ ஓடிவந்தார், கையில் கத்தி டானைப் பார்த்தவுடன் அப்படியே நின்றான்.

டான் சிகரெட் பெட்டியை எடுத்து, ஒரு சிகரெட்டைத் தன்னுடைய உலர்ந்த உதடுகளில் வைத்தார். நீக்ரோவின் குரலை மிமிக்ரி செய்தபடி ''நண்பரே, நெருப்பு இருக்கிறதா?'' என்று கேட்டார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அத்தியாயம் எட்டு

அல்ஸ்கோனி

அமெரிக்க மற்றும் ஐரோப்பிய போலீஸ்காரர்களால் ஆமை என்று அறியப்பட்ட சைமன் அல்ஸ்கோனி கொழுந்துவிட்டெறியும் நெருப்புக்கு எதிரே உட்கார்ந் திருந்தார், அவருடைய கால்கள் அதற்கான பிரத்யேக ஸ்டூலில் இருந்தன. கை வைத்த நாற்காலியில் அமர்ந்திருந்த அவருடைய மடியில் அமைதியின் வடிவமாக ஒரு பாரசீகப் பூனை.

கறுப்பு வட்டமாக இருந்த அவருடைய முகத்தில் தேவைக்கு மேற்பட்ட கொழுப்பு; பள்ளத்தில் இருந்த கண்களைப் பற்றி எதுவும் சொல்வதற்கில்லை. தோற்றத்தில் ஐம்பது என்று இருந்தாலும் உண்மையில் அவருடைய வயது அறுபதைக் கடந்துவிட்டது. ஈவினிங் டிரஸ் அணிந்திருந்த அல்ஸ்கோனியின் விரல்களில் ஒரு சுருட்டு. மற்றொரு கையால் பூனையின் பளபளக்கும் ரோமத்தைத் தடவிக் கொண்டிருந்தன; பார்வையோ எரியும் நெருப்பில்.

ஃபெலிக்ஸ் எதிரே நின்று கொண்டிருந்தான்; டானைப் பிடித்தது பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான்.

அல்ஸ்கோனியின் இயக்கம் ஃபெலிக்ஸின் பொறுப்பில் தான் இருந்தது என்றாலும் அவனுக்கு அதிகாரமும் செல்வாக்கும் உண்டு என்றாலும் ஒவ்வொரு முறை அல்ஸ்கோனியின் அறைக்குள் வரும்போதும் ஃபெலிக் ஸுக்கு இனம் புரியாத பயம் ஏற்படும்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தவறு எதுவும் செய்யாமல் அல்ஸ்கோனியின் கட்டளை களை நிறைவேற்றும் வரை தனக்கு ஆபத்து இல்லை. ஃபெலிக்ஸ் நினைத்தாலும் அவனால் தைரியமாகச் செயல்பட முடியவில்லை. கொடூரமான ஒரு பைத்தியக் காரனோடு தான் உறவு வைத்திருக்கிறோம், அவன் எந்த நேரத்திலும் மனம் மாறி தன்னைத் தீர்த்துக் கட்டலாம், இயக்கத்தின் மற்ற உறுப்பினர்கள் ஏற்கெனவே தீர்த்துக் கட்டப் பட்டிருக்கிறார்கள் என்பதெல்லாம் அவன் எண்ணத்தில் மீண்டும் மீண்டும் வந்தன.

''டான் மிக்லெம்? என்ன ஆச்சர்யம்'' என்றார் அல்ஸ்கோனி.

''உங்களுக்கு அவனைத் தெரியுமா? இங்கிலாந்தின் மிகப் பெரிய பணக்காரர்களில் ஒருவன் என்று க்ரான்டர் சொல் கிறான்.''

''நன்றாகத் தெரியும். அவனுடைய மதிப்பு இரண்டு மில்லியன் பவுண்டு ஸ்டெர்லிங்.'' பூனையின் மூக்கில் கைவைத்துத் தேய்த்த அல்ஸ்கோனி கேட்டார். ''அவனை என்ன செய்தீர்கள்?''

''அவனை குகையில் வைத்திருக்கிறேன்.''

''அவன் தனியாக வந்தானா?''

இந்தக் கேள்வியைத்தான் அல்ஸ்கோனி கேட்கக்கூடாது என்று ஃபெலிக்ஸ் பயந்து கொண்டிருந்தான். ''அவனோடு டிரைவர் இருந்தான். டிரைவர் தப்பிவிட்டான்.''

பூனையைத் தடவிக் கொண்டிருந்த விரல்கள் அப்படியே நின்றுவிட்டன.

''அவன் எப்படித் தப்பித்தான்?''

''அவன் இருந்தது எங்களுக்குத் தெரியாது. டானுடைய காரில் அவன் போகும்போதுதான் வில்லீ பார்த்தான்.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அல்ஸ்கோனியின் பார்வை நெருப்பிலேயே இருந்தது. முகபாவம் மாறவில்லை. ஆனால் விரல்கள் அசைய வில்லை. இது ஆபத்திற்கு அறிகுறி என்று ஃபெலிக்சுக்குத் தெரியும்.

''அவனைத் தப்பவிட்டிருக்கக்கூடாது. தேவையான ஒழுங்கு நடவடிக்கைகள் நீ எடுக்கலாம். இருந்தாலும் பாதகமில்லை. டிரைவர் போலீசிடம் போவான். நம்முடைய இயக்கத்தின் வளர்ச்சியில் இந்தக் கட்டம் தவிர்க்க முடியாதது. கடந்த மூன்று வருடங்களாக இந்த நெருப்புக்காக நான் தயாராக இருக்கிறேன். வருடாவருடம் நான் தேவாலயத்திற்கும், போலீசுக்கும், தர்ம ஸ்தாபனங் களுக்கும் கொடுத்த தொகை வேலை செய்கிறதா என்று இப்போது பார்க்க வேண்டும். ஒரு பக்கம் அந்த டிரைவர், இன்னொரு பக்கம் நான். நீ தேவையான பாதுகாப்பைச் செய்து கொள்ளலாம். வீட்டை சோதனை செய்யும்படி நான் போலீசை அழைப்பேன். அதை நான் வலியுறுத் துவேன். எனக்கு சங்கடம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள. அவர்களுக்கு எதுவும் கிடைக்கக் கூடாது. புரிகிறதா?''

''புரிகிறது'' என்றான் ஃபெலிக்ஸ், அல்ஸ்கோனி அவரைப் பார்த்தார்.

''போலீஸ் வருவதைப் பற்றி உனக்குப் பயமில்லையா?''

''இல்லை'' என்றான் ஃபெலிக்ஸ்.

''அப்படித்தான் இருக்கவேண்டும்'' என்றபடி அல்ஸ் கோனி தலையசைத்தார். ''நீ லோரெலியும் அவர்கள் கண்ணில் பட வேண்டாம். அவள் பலகீனமானவள். இதுதான் இந்த இயக்கத்தின் முடிவு என்று கூட அவள் நினைக்கலாம். அவள் கலவரப்படாமல் பார்த்துக்கொள்.''

''சரி'' என்றான். ஃபெலிக்ஸ்; அவனுடைய உதடுகள் காய்ந்துவிட்டன.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"அவள் அழகான பெண்மணி" அல்ஸ்கோனி தொடர்ந் தார். உன்னைவிட அதிகமாக எனக்கு அவளைத் தெரியும். அவளுடைய பலகீனங்களும் எனக்குத் தெரியும். ஒரு நெருக்கடியில் அவள் தாக்குப் பிடிக்க மாட்டாள்.

"பாஸெரோவின் மரணம் அவளைப் பாதித்துவிட்டது." என்ற ஃபெலிக்ஸ் குரலில் உணர்ச்சி வெளிப்படாமல் பார்த்துக் கொண்டான். " அது சரியாகி விடும்."

அல்ஸ்கோனி தலையசைத்தார்.

"நீ அவளோடு கூட்டணி வைத்திருப்பதால் அவருடைய நடவடிக்கைகளுக்கு நீதானே பொறுப்பு?"

"அவள் சரியாகிவிடுவாள்" என்று சொல்வதற்குள் ஃபெலிக்சுக்கு வேர்த்துவிட்டது.

அல்ஸ்கோனி அவரைப் பார்த்தார்.

"அல்லது நான் அவளோடு பேசட்டுமா? உங்கள் இருவருக்கும் இடையில் வர நான் விரும்பவில்லை. தன்னுடைய துணைவியைக் கட்டுப்படுத்துவது ஒரு மனிதனின் உரிமை.

"அவளை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றான் ஃபெலிக்ஸ் உடனடியாக.

"அப்படித்தான் இருக்கவேண்டும். பெண்களை அனுபவிக்க வேண்டும். ஃபெலிக்ஸ், ஆண்களின் ஆசையைத் தீர்த்துவைப்பது தான் அவர்களுடைய வேலை. ஆனால் அவர்கள் நம்மை ஆளக் கூடாது. அது அபாயகர மானது. பல வருடங்களுக்கு முன்பே பெண்கள் உறவை நான் விட்டுவிட்டேன். மனிதனுடைய சக்தியை அது விரயம் செய்கிறது; நம்மை திசை திருப்புகிறது; பிரச்சினை களை உண்டாக்குகிறது."

ஃபெலிக்ஸ் எதுவும் சொல்லவில்லை.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''மிக்லெம்மை மறந்துவிட்டோமே'' என்ற அல்ஸ்கோனி சிறிது நேரத்திற்குப் பிறகு ''அவன் ஏன் நம்முடைய தோட்டத்திற்கு வந்தானாம்?''

''கார்லோஸ் கொஞ்சம் அதிகமாகக் கவனித்து விட்டான். அவனுக்கு இன்னும் நினைவு திரும்பவில்லை.''

''அதிகமாகத் தாக்கக் கூடாது. அவன் நல்ல முதலீடு.''

''அவனைப் பார்க்கும்படி எங்கெல்மேனிடம் சொல்லியிருக்கிறேன்.''

''ஆக, பெடோனியிடம் ஆமை வார்டைப் பற்றிக் கேட்டிருக்கிறான்.''

''ஆமாம். கெங்கா மற்றும் வாகா பற்றியும் சொல்லியிருக் கிறான்.''

''அப்படியா, இதெல்லாம் அவனுக்கு எப்படித் தெரியும்? நீ என்ன நினைக்கிறாய்?''

''மிக்லெம் கிடோ ஃபெரென்சியின் நெருங்கிய நண்பன் என்று க்ராண்டர் சொல்கிறான்.''

''அடடா, அதுதான் விஷயம். இதை முன்பே சொல்லி யிருக்க வேண்டும். நம்மைப் பற்றி விசாரிப்பதற்கு அதுதான் காரணம். அவனிடம் நிறைய பணம் இருக்கிறது; ஆனால் வேலை இல்லை. பரவாயில்லை, இப்போது அவன் நம்மிடம் இருக்கிறான். அதை நாம் காசாக்கிவிடலாம். நாளைக் காலை பதினோரு மணிக்கு அவனைப் பார்க்கிறேன். அதற்குள் அவனுடைய தங்குமிடம் எது அவனுடைய கூட்டாளிகள் யார் என்பதைக் கண்டுபிடி. நிச்சயமாகப் போலீஸ் இங்கே வரும்; அதை நான் பார்த்துக் கொள்கிறேன்.'' பூனையின் ரோமங்களிடையே விரல் களை நகர்த்தினார் அவர். ''க்ராண்டர் உபயோகமாக இருக்கிறான் அல்லவா? ஃபெரென்சி விவகாரத்தில்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவனுடைய திறமை வெளிப்பட்டது, கொடூரமானவன், எனக்கு அவனைப் பிடித்திருக்கிறது.'' அவருடைய கண்கள் ஃபெலிக்ஸ் முகத்தைப் பார்த்தன. ''நீயும் அப்படித்தான் இருக்க வேண்டும். இதுவரை இங்கேயே சவுகரியமாகக் காலம் கழித்துவிட்டாய். அது உன்னைப் பலகீனமாக்காமல் பார்த்துக்கொள். வாழ்க்கையின் கஷ்டம் உனக்குத் தெரியும். உனக்கென்று ஒரு மரியாதை இருக்கிறது. இங்கே இருக்கும் இரண்டு வருடங்களில் நீ அதை இழந்துவிடக் கூடாது.''

''உங்களுக்கு என்னுடைய வேலையில் திருப்தி இல்லை யென்றால் அதை நேரடியாகச் சொல்லலாம்'' என்றான். ஃபெலிக்ஸ்.

அல்ஸ்கோனி புன்னகைத்தார்.

''ஃபெலிக்ஸ், அது என்னுடைய வழியல்ல. இப்போதே அது உனக்குத் தெரிந்திருக்க வேண்டும். என்னிடம் வேலை செய்பவர்கள் முழு உழைப்பையும் தரவேண்டும் இல்லா விட்டால் அவர்கள் கணக்கை முடித்துவிடுவேன்'' கதவை நோக்கிக் கையை அசைத்ததிலிருந்து தான் வெளியேற வேண்டும் என்று ஃபெலிக்ஸ் தெரிந்து கொண்டான். ''நாளைக் காலை பதினோரு மணிக்கு மிக்லெம்மைக் கொண்டு வா''

ஃபெலிக்ஸ் அந்த இடத்தை விட்டு வெளியே வந்தான், பயத்தில் அவருடைய அடிவயிறு கலங்கியது.

தலையிலிருந்த வலியால் டானுக்கு நினைவு திரும்பியது. கண்களை ஓரளவு திறந்தார். கூரையிலிருந்து விளக்கின் ஒளி கூசவும் மீண்டும் மூடிக்கொண்டார்.

சில நிமிடங்கள் அப்படியே இருந்தார்; மூளை மட்டும் வேலை செய்தது. நீக்ரோ ஆக்ரோஷமாகத் தன்னை நெருங்கியதும், தான் நகர்ந்து கொண்டதும் நினைவுக்கு

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வந்தது. நீக்ரோவின் கழுத்தைப் பிடிக்க முயன்றதும் நீக்ரோ நாசூக்காக விலகிக் கொண்டதும் நினைவுக்கு வந்தது. அதற்குப் பிறகு சுத்தியலைப் போன்ற ஏதோ ஒன்று தலையின் பக்கவாட்டில் அடித்ததும், கால்களுக்குக் கீழே இருந்த பூமி பிளந்து தான் இருட்டில் இறங்கியதும் நினைவுக்கு வந்தது.

வலிக்கின்ற இடத்தில் தலையைத்தொட்டுப் பார்த்தார்; வலது காதுக்கு மேல் ரத்தம் உறைந்திருந்தது. நீக்ரோ தன்னுடைய மண்டையைப் பிளக்காதது நல்ல நேரம்தான் என்று நினைத்துக் கொண்டார்.

சிரமப்பட்டுக் கண்களைத் திறந்த டான் வெளிச்சம் அதிகமாக இருந்ததால் சரியாகப் பார்க்க முடியவில்லை. அது ஒரு குகை போல இருந்தது; சுவர்கள் கற்களால் ஆனவை; அவை ஈரமாக இருந்தன. கான்கிரீட் தரையில் வைக்கோல் மீது அவர் படுத் திருந்தார். நகர்ந்த போது சங்கிலியின் சத்தம் கேட்டது; பாதத்தோடு இணைக்கப் பட்ட சங்கிலி சுவரில் பொருத்தப்பட்டிருந்தது.

சுவரில் முதுகைச் சாய்த்துக்கொண்டு தலைவலி போகும்வரை காத்திருந்தார் அவர்.

ஹாரி என்ன ஆனார்? சுவரில் இருக்கும் படி ஹாரியிடம் சொல்லியிருந்தோம். ஹாரிக்கு கட்டளையை மீறும் வழக்க மில்லை. ஒருவேளை போலீசைத் தேடிப் போயிருக்கலாம்; ஆனால் இத்தாலியப் போலீசுடன் எப்படிப் பேசுவார்?'' ஹாரி டிக்ஸன் தொலைபேசியில் தொடர்பு கொள்வாரா? அப்படிச் செய்திருந்தால் போலீஸ் இந்நேரம் வந்து கொண்டிருக்கும். ஹாரி தன்னோடு இருந்தது இந்தக் கூட்டத்திற்குத் தெரியுமா? அது முக்கியமான விஷயம். அவர்களுக்குத் தெரிந்தால், விரைவில் போலீஸ் இங்கே வரும் என்பதை எதிர்பார்ப்பார்கள். டான் அந்தக் குகையை ஆராய்ந்தார். கூரையிலிருந்த விளக்கு அவர் மீது வெளிச்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சத்தை வீசியது; ஆனால் மற்றப் பகுதிகள் இருட்டில் இருந்தன. இந்த வீட்டின் பாதாள அறையில் இருக்கிறோமா அல்லது வேறு இடத்திற்கு வந்துவிட்டோமா?

கைக் கடிகாரத்தைப் பார்த்தவர் மணி பத்தரை என்றதும் யோசித்தார், ஒருவேளை பகல் பத்தரையாக இருக்கலாம். நீக்ரோவிடமிருந்து வாங்கிய அடி பலமாக இருந்தாலும் அது இவ்வளவு நேர மயக்கத்திற்கு காரணமாக இருக்காது என்பது அவரது நினைப்பு; வலது கையில் சட்டையை மடித்துவிட்டுக்கொண்டார். முன்கையில் மருந்து ஊசி ஏற்றப்பட்டதின் அடையாளம் இருந்தது; அவர் முகத்தைச் சுளித்துக் கொண்டார்.

பாதத்தில் இருந்த இரும்புப் பட்டையைப் பார்த்தார், அதில் இணைக்கப்பட்டிருந்த சங்கிலி பாறையில் பொருத்தப்பட்டிருந்தது. பட்டை காலை இறுகப் பிடித்திருந்தது, அதிலிருந்த பூட்டு பெரிய காரியமாகத் தெரியவில்லை. இந்த மாதிரி விஷயங்களில் அவருக்குத் தேர்ச்சி இருந்ததால் இந்தப் பூட்டைத் திறப்பதற்கு ஒரு கம்பி போதும் என்று நினைத்தார். அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்; சங்கிலியைக் கழற்றினாலும் குகையிலிருந்து தப்ப முடியாது.

தூரத்திலிருந்து தன்னை நோக்கி ஒரு ஒளி வருவதை அவர் பார்த்தார். அப்போதுதான் குகையின் மறு முனையில் சுரங்கவழி இருப்பதைக் கவனித்தார். அந்த வழியில் வருவதற்கு கார்லோஸ் என்ற நீக்ரோ எடுத்துக்கொண்ட நேரத்திலிருந்து அதன் நீளத்தை டான் அறிந்தார். அது குறைந்தது நூற்றைம்பது முழ நீளம் இருக்கலாம்.

நீக்ரோ அருகில் வந்து அவரைப் பார்த்தார், பருமனான உதடுகள் விரிந்து பற்கள் வெளிப்பட்டன.

"நண்பரே, எப்படி இருக்கிறீர்கள். நாம் இருவரும் சிறிது நேரம் நடக்க வேண்டும். அமைதியாக இருங்கள். ஏதாவது

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வம்பு செய்துவிட்டு பிறகு கஷ்டப்படவேண்டாம்'' என்றான் நீக்ரோ.

டான் கார்லோசுக்குப் பின்னால் பார்த்தான். சுரங்க வழியில் இருந்தபடி இரண்டு நாய்கள் அவரை முறைத்துக் கொண்டிருந்தன.

பின்னால் திரும்பிப் பார்த்த நீக்ரோ சிரித்தான்.

''இந்த நாய்கள் அழகானவை. நீ ஏதாவது ஆரம்பித்தால் அவை உன் தொண்டையைப் பிய்த்து விடும். ஆடுகளைப் போல அமைதியாக நடக்கும், ஆனால் உண்மையான வலிமையைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்றால் நீ வம்பு செய்யலாம்.''

டானுக்கு அருகே வந்து குனிந்து காலில் இருந்த பட்டையைக் கழற்றினான் நீக்ரோ. அவளை ஒரு ஜூடோ பிடியில் மடக்கிவிடலாமா என்று யோசித்த டான் நாய்களைப் பார்த்தவுடன் அசையாமல் இருந்துவிட்டார்.

''நண்பரே வாருங்கள். டாக்டர் உங்களைப் பார்க்க வேண்டும். பிறகு தலைவர் உன்னோடு பேசவேண்டும்.''

டான் எழுந்து நின்றார்; கால்கள் ஆடின. நாய்கள் இல்லா விட்டாலும் தன்னால் எதையும் செய்ய முடியாது என்பதைத் தெரிந்து கொண்டார்.

''ஒரு முறை இந்த நாய்கள் இல்லாதபோது நாம் சந்திக்க வேண்டும். உன்னுடைய உருவத்திற்கு நீ வேகமாகவே மோதுவாய் என்று நினைக்கிறேன்.''

கார்லோஸ் சிரித்தபோது அவனுடைய ஈறுகள் தெரிந்தன.

''கதை வேண்டாம் நண்பரே, என்னைத் தாக்குவதற்கு உன்னிடம் எதுவும் கிடையாது.'' அவர் விரலைக் சொடுக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கியவுடன் நாய்கள் குகைக்குள் நுழைந்தன. ''சரி, புறப்படலாம்.''

டான் அந்த வழியில் நடந்தார், நாய்கள் அவருக்குப் பின்னால் கார்லோஸின் கையிலிருந்து டார்சலைட் டானுக்கு வழிகாட்டியது.

''நண்பரே, இடது பக்கம் திரும்பவேண்டும்'' என்று சொன்ன கார்லோஸ் பாறையில் குடையப்பட்டிருந்த வழியைக் காட்டினார்.

அந்த வழி குறுகலான ஏற்றம். அங்கே ஒரு எஃகுக் கதவு இருந்தது.

''நண்பரே அதைத் திறக்கவேண்டும்'' என்றான் கார்லோஸ். டான் தள்ளியவுடன் கதவு உட்புறமாகத் திறந்துகொண்டது. அந்தத் தாழ்வாரம் வெளிச்சமாக இருந்தது; சுவரில் பளபளக்கும் வெள்ளை நிறம்.

அவருக்கு எதிரே ஒரு கதவு; சற்றுத் தொலைவில் இன்னொரு கதவு.

டானுடைய தோள்களுக்கு மேலே கையைக் கொடுத்து கதவைத் தள்ளிய கார்லோஸ் ''நண்பரே, உள்ளே போகலாம். உள்ளே போய் சுத்தம் செய்து கொள்ளுங்கள். நான் இங்கே காத்திருக்கிறேன்.''

எல்லா வசதிகளும் செய்யப்பட்டிருந்த குளியலறை அது. முதலில் நெற்றியிலிருந்து காயத்தைக் கவனித்தார். அங்கிருந்த எலக்ட்ரிக் ஷேவரைப் பயன்படுத்தி சவரம் செய்து கொண்டார். உடைகளைக் கழற்றிவிட்டு ஷவரில் குளித்தார். இருபது நிமிடங்களுக்குப் பிறகு குளியலறையை விட்டு வெளியே வந்தபோது தெம்பாக இருந்தது; கார்லோஸ் சுவரில் சாய்ந்துகொண்டு சிகரெட்டைப் புகைத்துக் கொண்டிருந்தான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''இப்போதுதான் நீங்கள் பழைய ஆளாக இருக்கிறீர்கள் நண்பரே. இப்போது டாக்டரைப் பாருங்கள். அவரிடம் உங்கள் திமிரைக் காட்ட வேண்டாம். அது வேறு விஷயமாக முடிந்துவிடும்.''

ஆடி அசைந்தபடி நடந்த கார்லோஸ், அடுத்த கதவைத் தட்டினான், பிறகு கைப்பிடியைத் திருப்பிக் கதவைத் தள்ளினான். டானைப் பார்த்து தலையசைத்துவிட்டு ஒதுங்கி வழிவிட்டான்.

பெரிய அளவில் இருந்த அறைக்குள் டான் சென்றார்; அது ஆபரேஷன் தியேட்டரைப் போல இருந்தது. மிகுந்த பொருட் செலவில் எல்லா சாதனங்களோடும் அது அமைக்கப்பட்டிருந்தது.

உயரமான, வயதான ஒருவர் வெள்ளைக் கோட்டு அணிந்து மேசையின் முன் அமர்ந்திருந்தார். அவருடைய மெலிந்த முகத்தில் கோடுகள் நிறைந்திருந்தன; பார்வையில் பரிவு இல்லை நீலநிறக் கண்களால் அவர் டானைப் பார்த்தபோது டானுடைய முதுக்குத் தண்டில் குறுகுறு வென்று உணர்ச்சி ஏற்பட்டது.

''நான் டாக்டர் எஸ்கெல்மேன்'' என்றார் வெள்ளைக் கோட்டு அணிந்தவர். எழுந்து நின்றவர் ''உங்களுடைய காயம் லேசானது தான். ஆனால் அதற்கு மருந்து போட வேண்டும். உட்காருங்கள் மிக்லெம்.''

''நன்றி. நானே செய்துவிட்டேன். அது அப்படியே இருக் கட்டும்''

எஸ்கெல்மேன் தோள்களைக் குறுக்கிக் கொண்டார்.

''அது உங்கள் விருப்பம்'' என்றார் டானை முழுவது மாகப் பார்த்தார். ''உங்களுடைய தலைவலிக்கு ஏதாவது மருந்து கொடுக்கட்டுமா?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''வேண்டாம். நன்றி.''

எங்கெல்மேன் உட்கார்ந்து கொண்டார். ''அப்படியானால் நீங்கள் போகலாம். நாம் மீண்டும் சந்திப்போம் என்று நினைக்கிறேன். ஆனால் அடுத்தமுறை நீங்கள் ஒத்துழைக்க மாட்டீர்கள்.''

''இதற்கு என்ன அர்த்தம்?'' என்றார் டான்.

''அது உங்களுக்குச் சொல்லப்படும்'' என்ற எங்கெல்மேன் உள்ளே வந்த கார்லோசை நோக்கிக் கையசைத்தார்.

''இவரை அழைத்துச் செல்லுங்கள்.''

கார்லோஸ் டானுடைய கையைப் பிடித்தான்.

''நண்பரே, போகலாம்'' என்றான்.

டான் தாழ்வாரத்திற்கு வந்தார். பின்னால் வந்த கார்லோஸ் கதவைச் சாத்தினான். இரண்டு நாய்களும் எழுந்து நின்றன. அவற்றின் காதுகள் செங்குத்தாக.

''தலைவர் உங்களை இப்போது சந்திப்பார். எச்சரிக்கை மிகவும் அவசியம். தன்னிடம் வாலாட்டுபவனை அவருக்குப் பிடிக்காது''

''சரியான லூசுப்பசங்களாக இங்கே சேர்த்து வைத்திருக்கிறீர்கள்.''

கார்லோஸ் சிரித்தான்.

''நீ இப்போது சொன்னது சத்தியமான வார்த்தை''

கார்லோஸ் வழிகாட்டிக் கொண்டே சென்றான். மிகப்பெரிய எஃகுக் கதவு ஒன்றின் அருகே சுவரில் இருந்த ரப்பர் பட்டனை அழுத்தினான். விரைவில் அந்தக் கதவு திறந்தது. அவர்களுக்கு எதிரே மேலே செல்லும் படிக்கட்டுகள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கார்லோஸ் விலகிக் கொண்டான்.

"நண்பரே, மேலே ஏறவேண்டும்."

டான் படிகளில் ஏறினார், ஏறும்போதே எண்ணிக் கொண்டார். முப்பத்திரண்டாவது எண்ணிக்கையில் இன்னொரு எஃகு கதவு.

பின்னால் வந்த கார்லோஸ் ரப்பர் பட்டனை அழுத்தினான்.

"நான் மிக்லெமைக் கொண்டுவந்திருக்கிறேன் தலைவரே" என்றார்.

சுவரில் பாதிக்கப்பட்டிருந்த மைக்ரோ ஃபோனில் நீக்ரோ பேசுவதை டான் கேட்டார். அப்போது கதவு திறந்து கொண்டது, கார்லோஸ் டானை உள்ளே தள்ளினான். பெரிதாகவும், அலங்காரமாகவும் இருந்த அறைக்குள் டான் வந்தார். திறந்திருந்த பலகணி வழியாக சூரிய ஒளி விரிந்திருந்த தளம் அதற்குப் பின்னால் நேர்த்தியான தோட்டம், அதிலுள்ள செடிகள், கானிபர் மற்றும் சிப்ரஸ் மரங்களைப் பார்த்தார். ஜன்னல் வழியாகச் சென்று தோட்டத்தில் குதித்துவிடலாம் என்ற யோசனை நிழலாடியது. ஆனால் அவரது யோசனையைப் புரிந்து கொண்ட நாய்கள் அவரைக் கடந்து சென்று அந்தத் தளத்தில் வெயிலுக்கு இதமாகப் படுத்துக் கொண்டன

வசதியான நாற்காலியில் உட்கார்ந்திருந்த சைமன் அல்ஸ்கோனி பழுப்புலினன் கோட் அணிந்திருந்தார். அவருடைய மடியில் இருந்த பாரசீகப் பூனை டானை அலட்சியமாகப் பார்த்தது. நாற்காலியில் உட்காரும்படி அல்ஸ்கோனி கை காட்டியபோது அவரது விரலிலிருந்த மோதிரத்தில் சூரிய ஒளி பளிச்சிட்டது.

"வாருங்கள் திரு. மிக்லெம். இது எதிர்பாராத ஒரு மகிழ்ச்சி. எழுந்து தங்களை வரவேற்கவில்லை. என்பதைப்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பொறுத்துக் கொள்ளவும். இந்தப் பூனை என்னை அசையாமல் வைத்திருக்கிறது. மிருகங்களின் உணர்ச்சி களை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அந்த நாற்காலியில் உட்கார்ந்தால் நாம் ஒருவரை ஒருவர் நன்றாகப் பார்க்க முடியும்''

அறையின் குறுக்கே நடந்து டான் அந்த சவுகரியமான நாற்காலியில் அமர்ந்தார், அல்ஸ்கோனியை உற்றுப் பார்த்தார். இவன் தான் ஆமையா? இவனைப் பார்த்தால் அப்பாவியாகத் தெரிகிறது. ஆனால் கண்களைப் பார்த்தால் வேறுவிதமாக இருக்கிறது. அந்தக் கண்களைப் பற்றி யோசித்த டானுக்கு திடீரென விஷயம் புலப்பட்டது. அந்தக் கண்கள் பாம்பின் கண்களைப் போலிருந்தன; தட்டையாக, பளபளப்பாக மற்றும் மையால் எழுதியதைப் போல கறுப்பாக.

அறையின் மூலையில் இருந்த கதவைத் திறந்து, குள்ளமான பருமான ஒரு இத்தாலியன் காபி டிரேயுடன் உள்ளே வந்தான். அல்ஸ்கோனிக்கும் டானுக்கும் நடுவே இருந்த மேசையில் இரண்டு கப்பில் காபியை ஊற்றிவிட்டு அவன் அமைதியாக வெளியேறிவிட்டான்.

''உங்களுக்குக் காபி தேவைப்படும், திரு. மிக்லெம்'' என்றார் அல்ஸ்கோனி. ''காலையில் எங்களுக்கு வேலை அதிகமாக இருந்ததால் உங்களை கவனிக்க முடியவில்லை ஒரு சிகரெட்டையும் எடுத்துக் கொள்ளுங்கள்.''

டானுக்கு காபி தேவைப்பட்டது, ஆகவே ஏற்றுக் கொண்டார்.

ஜன்னலருகே நின்றுகொண்டிருந்த கார்லோசைப் பார்த்து அல்ஸ்கோனி கையசைத்தார். ''தேவைப்படும் போது நான் கூப்பிடுகிறேன். கார்லோஸ்.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நீக்ரோ ஜன்னலுக்கு வெளியே இருந்த தளத்திற்குச் சென்றான். இரண்டு நாய்களும் ஜன்னல் வழியாக டானைப் பார்த்துக் கொண்டிருந்தன.

நெருப்பு எரிந்து கொண்டிருந்த அடுப்பைப் பார்த்தார் டான்; அங்கிருந்த வலுவான எஃகுத் துடுப்பைப் பார்த்தார். எழுந்து இரண்டு அடி எடுத்து வைத்தால் அதைக் கைப்பற்றி விடலாம். நாய்கள் கிட்டே வருவதற்குள் அதை எடுத்து விடலாம். ஆனால் அதற்குப் பிறகு? கார்லோஸ் அருகில் இருக்கிறான். தோட்டத்தில் நான்கு பேர் ஆட்டோ மெட்டிக் துப்பாக்கிகளோடு இருக்கலாம். நாய்களையும் வீழ்த்திவிட்டு, இந்த இத்தாலியனையும் தாக்கி விட்டு தோட்டத்தில் குதித்தாலும் ஆயிரம் முழ தூரத்திற்குப் புல்வெளியைக் கடக்க வேண்டும்; பிறகு பதினைந்து அடி சுவரைத் தாண்ட வேண்டும். தன்னைத் தூக்கிவிட ஹாரி இல்லை. அதற்குள் மற்ற இரண்டு நாய்களையும் சமாளிக்க வேண்டும். இது முடியாத வேலை என்று டான் முடிவெடுத்தார்.

டானைக் கவனித்துக் கொண்டிருந்த அல்ஸகோனி ''புத்திசாலித்தனமான முடிவு. நீங்கள் அவசரப்படுவீர்கள் என்று நினைத்தேன். அந்தத் துடுப்பு உங்களைத் தூண்டு கிறது. இங்கு வந்த ஒரு விருந்தாளி அதைக் கையி லெடுத்தார். அந்தச் சுவரில் மறைவிடத்தில் இருக்கும் ஜகோ போ அவரை சுட்டுக் கொன்றுவிட்டான். அருமையான வேலைப்பாடு இது'' அவருடைய விரல்கள் பூனையைத் தடவிக் கொண்டிருந்தன. ''காபியைச் சாப்பிடுங்கள், சிகரெட்டை எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் முட்டாள்தனமாக எதுவும் செய்துவிடாதீர்கள்.''

டான் ஒரு சிகரெட்டைப் கொளுத்தினார். எதிர்ப்பக்க மிருந்த சுவரில் இருந்த அலங்காரச் சிலையைப் பார்த்தார். தோள்களை அசைத்துக் கொண்டார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''கிடோ ஃபெரென்சியின் மரணத்திற்கு ஏற்பாடு செய்தது நீங்கள்தானா?'' என்று கேட்டார்.

அல்ஸ்கோனி புன்னகைத்தார்.

மறைமுகமாக நான் பொறுப்பு என்று நீங்கள் சொல்லாம். நான் சொல்வதைச் செய்வதற்கு வேறு ஆட்கள் இருக்கிறார்கள். முதலில் என்னை அறிமுகம் செய்து கொள்கிறேன். என் பெயர் சைமன் அல்ஸ்கோனி. வாகா குடும்பத்தின் கடைசி உறுப்பினர் நான்தான். எங்களுடைய சோகமான வரலாற்றை நீங்கள் ஆராய்வதாகக் கேள்விப்பட்டேன்.

''இதைப் போலீசாரும் விசாரிக்கிறார்கள்.'' என்றார் டான்.

அல்ஸ்கோனி சிரித்தார்.

''இதைக் கண்டுபிடிப்பதற்கு உங்களுக்கு இத்தனை நாள் ஆயிற்று என்பதில் எனக்கு வருத்தம். நீங்கள் அவர்களிடம் இது பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். வாகா குடும்பத்தோடு எனக்கு உள்ள உறவை நான் எப்போதும் மறைத்ததில்லை. இந்த வீடே வாகா குடும்பத்தின் மாளிகை இருந்த இடத்தில்தான் கட்டப்பட்டுள்ளது. என்னுடைய தாய் வாகா குடும்பத்தின் கடைசிப் பெண். ஆனால் உங்கள் கண்டுபிடிப்பால் உங்களுக்கோ போலீசுக்கோ எந்தப் பலனும் இருக்காது. இந்த இயக்கத்தோடு என்னை இணைப்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை, இந்தப் பணத்தையும் கைப்பற்ற முடியாது. என்னிடம் வேலை செய்பவர்களுக்கு என்னைத் தெரியாது; தெரிந்த சிலரோ கணநேரத்தில் காணாமல் போய்விடுவார்கள். நான்தான் ஆமை என்று ஒப்புக்கொண்டாலும் நீதிமன்றத்தில் ஜூரிகள் ஏற்கும் அளவு சாட்சியங்கள் இருக்காது.''

''எல்லா கொலைகாரர்களும் போலீசில் சிக்க மாட்டோம் என்று தான் நினைக்கிறார்கள்.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

டான் சொன்னான் ''ஆனால் ஏதோ ஒரு தடயத்தை மாற்றி விட்டு மாட்டிக் கொள்கிறார்கள். இது அதிக நாட்கள் நீடிக்கும் என்று நினைத்து உன்னையே நீ ஏமாற்றிக் கொள்ள வேண்டாம்.''

ஆல்ஸ்கோனி சிரித்தார், அந்தச் சிரிப்பில் எக்காளம் இருந்தது.

''என்னுடைய பாதுகாப்பு இன்று காலையில் சோதனை செய்யப்பட்டது.'' அவர் சொன்னார்.

கடந்த இரண்டு வருடங்களாக இத்தகைய சோதனைக் காக நான் காத்திருந்தேன். ஒருவரின் திட்டங்களும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் முறையாக சோதிக்கப்படும். விரைவில் ஒரு சந்தேகம் தொடருகிறது. இன்று காலையில் ஆறு போலீஸ் அதிகாரிகள் இங்கு வந்தனர். அவர்கள் உங்களைத் தேடி வந்தனர். நீங்கள் பெருமைப் பட்டுக் கொள்ளலாம். ரோம் நகர போலீசின் தலைவரான ரோஸி இங்கே வந்து சோதனையை நடத்தினார். சியென்னா நகரத்து அதிகாரிகளின் எதிர்ப்பை மீறி இந்த சோதனை நடந்தது. இந்த நகரத்தின் முக்கியமான பிரமுகர் நான். தேவாலயமும், அதிகாரிகளும் என்னைக் கொடை யாளியாக மட்டுமல்லாமல் இந்தச் சமூகத்தின் தூணாகவும் நினைக்கிறார்கள். சர்ச் வாரண்டோடு ரோஸி வந்தபோது சியென்னா அதிகாரிகளுக்கு அதிர்ச்சி. சூழ்நிலையோ விசித்திரமானது. ஒரு சாதாரண கார் டிரைவரான இங்கிலீஷ்காரனுக்கு எதிராக சியென்னாவின் மிகப் பெரிய பணக்காரனான, அவனுடைய முதலாளியை நான் கடத்திவிட்டதாகக் குற்றச் சாட்டு; நம்பமுடியாத கட்டுக்கதை. ஆனால் ரோஸி வளைந்து கொடுக்கும் வழக்கம் உடையவரல்ல. கடந்த மூன்று வருடங்களாக என்னுடைய இயக்கத்தை உடைக்க வேண்டும் என்பது அவருடைய திட்டம். எனக்கு ஆதரவாகச் சொல்லப்பட்ட வாதங்களை அவர் ஒதுக்கிவிட்டார். சியென்னா

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

போலீசிலிருந்து மூன்று போலீசார், ரோம் நகரத்துப் போலீசார் மூன்று பேரோடு அவர் இங்கே வந்தார். அவருக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தேன். அவரால் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை'' பூனையின் ரோமத்திற்குள் அல்ஸ்கோனி தன் விரல்களைப் புதைத்துக் கொண்டார். பூனை கண் களைத் திறந்து சோம்பலோடு அவரைப் பார்த்தது; பிறகு அது பாதங்களைத் திறந்து மூடிக் கொண்டது. ''ஒரு பெரும் தொகையைச் செலவு செய்து இங்கே சில பாதாள அறைகளை நான் உருவாக்கி இருக்கிறேன், எனக்கு வேண்டப்படாதவர்களை அங்கே வைத்துக் கொள்ளலாம்.. அந்த அறைகளுக்கான வழி அவர்களால் கண்டுபிடிக்க முடியாதபடி மறைக்கப்பட்டுள்ளது. நான் பலமான சூழலில்தான் இருந்தேன். என்னுடைய தோட்டத்திற்குள் ஒரு திருடனைப் போல் நுழைந்த ஒரு அமெரிக்கனுக்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்? இங்கு நூற்றுக் கணக்கான ஏக்கர் தோட்டம் இருக்கிறது. அந்த அமெரிக் கனுக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டிருக்கலாம்; இந்தத் தோட்டத்திலேயே அவன் எங்காவது இருக்கலாம் என்று நான் சொன்னேன். நீண்ட நேரமாக அவர்கள் தோட்டத் தில் தேடினார்கள். ஆனால் அமெரிக்கன் தென்பட வில்லை. பிறகு நான் பொறுமை இழந்தேன். நான் உதவிகர மாக இருந்தேன்; நான் ஒத்துழைப்பு கொடுத்தேன். என்னுடைய வீடெங்கும் ஆறு போலீஸ்காரர்கள் நடப்பதற்கு அனுமதித்தேன்; கேள்விகளுக்குப் பதிலளித் தேன். ஆனால் இப்போது எனக்குக் கோபம் வந்து விட்டது. தன்னுடைய முதலாளி கடத்தப்பட்டுவிட்டார் என்று சொல்லும் இந்த ஆசாமி யார்? அவன் பத்தியக்காரனா? உண்மையிலேயே அந்த அமெரிக்கனைக் காணோமா? நான்தான் ஆமை என்று சொல்வதற்கு என்ன அர்த்தம்? போலீசிடம் என்ன ஆதாரம் இருக்கிறது? எனக்கு ஆவேசமே வந்துவிட்டது. அதன் விளைவாக ரோஸி

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மன்னிப்புக் கேட்டார்'' அல்ஸ்கோனி சிரித்தார். ''அருமை யான காலைப் பொழுது. இதற்காக நான் உங்களுக்கு நன்றி சொல்லவேண்டும்.''

டான் தன்னுடைய வெறுப்பை மறைத்துக் கொண்டார்.

''உங்களுக்கு இது அருமையான பொழுதாக இருக் கலாம். ஆனால் எனக்கு என்ன பயன்? என்னுடைய வாழ்நாளின் மீதிப் பகுதியை இங்கேதான் கழிக்க வேண்டுமென்றால் எனக்குக் கவலை ஏற்படும்.''

''இரண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டு நீங்கள் எப்போது வேண்டுமானாலும் இங்கிருந்து போகலாம். இதோடு என்னை மறந்துவிடுவதாக எனக்கு உறுதிமொழி தரவேண்டும். இங்கு நடந்ததை யாரிடமும் சொல்லக் கூடாது. நீங்கள் கௌரவமான மனிதர், உங்களை விடுவிப் பதற்கான பணயத்தொகை. நீங்கள் ஒரு பணக்காரர். எனக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு நீங்கள் ஈடு செய்ய வேண்டும். நீங்கள் ஐந்து லட்சம் டாலர்கள் கொடுத்தால் போதுமென நான் நினைக்கிறேன். இப்போது எனக்கு டாலர்கள் தேவைப்படுகிறது. உங்களுடைய அமெரிக்க வங்கியிலிருந்து இத்தாலிய வங்கிக்கு அந்தத் தொகையை உடனடியாக மாற்ற வேண்டும்.''

''நான் பணம் கொடுக்க மறுத்தால்?'' டான் பொறுமை யாகக் கேட்டார்.

''என்னுடைய அன்புக்குரிய மிக்லெம், மற்றவர்களும் இது போலப் பேசியிருக்கிறார்கள். உங்களை 'பணம் கொடுக்கிறேன்' என்று சொல்ல வைப்பது பெரிய விஷயமல்ல. உங்களை சித்ரவதை செய்வேன் என்று நினைக்க வேண்டாம். அந்த மாதிரி வழிமுறைகளில் எனக்குப் பொறுமையில்லை. ஒரு மனிதனை வலியெடுக் காமல் மாற்றிக் காட்டமுடியும் நீங்கள் டாக்டர். எங்கெல் மேனைச் சந்தித்தீர்களா?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''நான் அவரைச் சந்தித்தேன்'' டான் சொன்னார்.

''டாக்டர். எங்கெல்மேன் ஒரு மூளை நிபுணர். ஆனால் தன்னுடைய ஆர்வத்தில் சில அபாயகரமான பரிசோதனை களைச் செய்துவிட்டார். அவரைக் கொலைக் குற்றத்திற்காக போலீசார் தேடிக் கொண்டிருக்கின்றனர். என்னுடைய பாதுகாப்பில் இருப்பதில் அவருக்கு மகிழ்ச்சி. அவருடைய பரிசோதனைகளுக்கு நான் நிதி ஒதுக்குகிறேன்; அதற்குப் பதிலாக அவர் எனக்குச் சில உதவிகள் செய்கிறார். சில நரம்பு அறுவைச் சிகிச்சைகளின் மூலம் மனதை மாற்ற முடியும் என்பது அவரது யோசனை. உதாரணமாக, மன ஒருமை பலமாக இல்லாதவர்களுக்கு நரம்புகளைத் ஓட்டுப் போடுவதன் மூலம் மன ஒருமையை உண்டாக்க முடியும் என்கிறார் அவர். டாக்டர் எங்கெல்மேனுடைய கண்டு பிடிப்புகள் இன்றும் நடைமுறைக்கு வரவில்லை. அவருடைய பரிசோதனைக்கு உடன்படாதவர்களை அவரிடம் அனுப்பிவிடுகிறேன். ஒரு மாதத்திற்கு முன் ஒருவன் பிடிவாதமாக பணம் தர முடியாது என்று சொல்லி விட்டான். அவனை நீங்கள் பார்க்க வேண்டும். டாக்டர் எங்கெல்மேனிடம் அவனைக் காண்பிக்கச் சொல்கிறேன். டாக்டர் செய்த அறுவைச் சிகிச்சை தோல்வியில் முடிந்தது, ஆனால் அதன் முடிவுகள் எனக்குப் பிடித்திருந்தன. அந்த நோயாளி ஒரு கையின் செயல்பாட்டை இழந்துவிட்டான்; அவனால் சரளமாகப் பேசமுடியவில்லை, அவனுடைய நினைவாற்றலும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அவன் பரிதாபகரமான மிருகமாக ஆகிவிட்டான், இருந்தாலும் டாக்டர் அவன் சில பரிசோதனைகளுக்குப் பயன்படுவான் என்று சொல்கிறார். ஆகவே மிக்லெம் அவர்களே, என்னுடைய விருப்பத்தை நிறைவேற்றாவிட்டால் உங்கள் நிலைமை மோசமாகிவிடும். கண்களில் இருக்கும் நரம்பிற் குப் புது உணர்வு தர முடியும்மா என்பதை அறிய டாக்டர் விரும்புகிறார். நீங்கள் பணயத்தொகையைக் கொடுக்கா விட்டால் உங்களை அவரிடம் ஒப்படைத்துவிடுவேன்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

எங்கெல்மேன் திறமையான டாக்டர் என்றாலும் அறுவைச் சிகிச்சை செய்வதற்கு அவருக்கு முழுத் தைரியம் இல்லை. ஆகவே அவர் அதிகமாகக் குடிக்கிறார், அதன் விளைவாக அவருடைய கைகளில் உறுதியில்லை என்பதை உங்களுக்குச் சொல்ல வேண்டும். இதனால்தான் அவருக்குத் தோல்விகள் ஏற்படுகின்றன என்பது என் கருத்து. உங்களை அவர் பயன்படுத்தினால் நீங்கள் குருடாகலாம் அல்லது செயலிழக்கலாம்.

டான் அவருடைய முகத்தைப் பார்த்தார். டானுடைய முகத்திலிருந்த களை போய்விட்டது; அல்ஸ்கோனியின் நிறைந்த கழுத்தை நெரிக்க வேண்டுமென்ற ஆசையை டானுடைய கண்கள் வெளிப்படுத்தின.

''இப்போது உங்களுக்கு சாதகமான சூழ்நிலை இருக்கிறது. ஆனால் அது நீடிக்காது. உங்களுக்கு வாழ்வதற்கு உரிமை இல்லை அல்ஸ்கோனி. எனக்கு வாய்ப்பு கிடைத்தால் உங்களைக் கொன்றுவிடுவேன். இன்னொரு எச்சரிக்கை இருக்காது என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

அல்ஸ்கோனியின் எக்களிப்பில் எந்த மாற்றமும் இல்லை.

''என்னை எத்தனையோ பேர் மிரட்டினார்கள், அது எனக்கு ஒரு விஷயமாகத் தெரியவில்லை.'' மேசை மேலிருந்த மணியைத் தொட்டவுடன் கார்லோஸ் உள்ளே வந்தான். ''நீங்கள் முடிவெடுப்பதற்கு ஒரு மணி நேர அவகாசம் கொடுக்கிறேன். நீங்கள் பணம் கொடுக்கச் சம்மதித்தால் ரோமிலுள்ள வங்கிக்கு பணத்தை மாற்றும்படி நியூயார்க்கிலுள்ள வங்கிக்குக் கடிதம் எழுத வேண்டும். பணம் வந்த பிறகு அந்தத் தொகைக்கான செக்கை எழுத வேண்டும்; அதோடு செக்கை எடுத்து வருபவருக்கு தொகையை பத்திரங்களாக மாற்றும் அதிகாரம் கொடுக்கும் கடிதமும் எழுத வேண்டும். அந்தப் பத்திரங்கள் என் கைக்கு வந்த பிறகு உங்களுக்கு உடனே விடுதலை.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''அதை நான் எப்படி நம்புவது?''

''என்னுடைய வார்த்தை இருக்கிறது; ஒரு கனவானின் வார்த்தை. இங்கு நடந்தது வெளியே தெரியாது என்று நீங்கள் சொல்லும் வார்த்தையை நான் நம்பவில்லையா? அப்படித்தான் இதுவும்.'' அல்ஸ்கோனி கையசைத்தார். ''திரு.மிக்லெமை அவருடைய அறைக்கு அழைத்துச் செல்ல வேண்டும், கார்லோஸ்.''

நீக்ரோ முன்னுக்கு வந்தான், அவரோடு இரண்டு நாய்களும் ''வாருங்கள், நண்பரே'' என்றான் நீக்ரோ.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அத்தியாயம் ஒன்பது

ஒரு ஒப்பந்தம்

ஒன்பது மணிக்குப் பிறகு ஃபெலிக்ஸ் லோரெலியின் படுக்கையறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். அந்தச் சிறிய அறை நீலமாகவும் சாம்பல் நிறமாகவும் அலங்கரிக்கப் பட்டிருந்தது. அந்த அறையில் ஜன்னல்கள் இல்லை என்றாலும் இயற்கை வெளிச்சம் இல்லை என்றாலும் அது பூமிக்கு முப்பது அடி ஆழத்தில் இருந்தது என்பதை யாரும் யூகிக்க முடியாது.

நேரம் கழித்து உறங்கிய லோரெலி, கண்ணாடியின் முன் அமர்ந்து தலைவாரிக் கொண்டிருந்தாள். வெளிர்பச்சை வண்ணத்தில் பட்டாடை அணிந்திருந்தாள் அவள்; அவளுடைய அழகிய பாதங்களில் இறகுகளாலான காலணிகள். ஃபெலிக்ஸ் வந்தவுடன் அவள் திரும்பினாள். ''என்ன நடக்கிறது?'' என்றாள் அவள். அவள் குரலில் இருந்த பதற்றத்தை ஃபெலிக்ஸ் கவனித்துவிட்டான்.

''நிறைய விஷயம் இருக்கிறது'' என்ற ஃபெலிக்ஸ் ஒரு நாற்காலியை இழுத்து அதில் உட்கார்ந்தான். நம்மிடம் கிடைத்துள்ள அமெரிக்கனான டான் மிக்லெம். இதுவரை கேள்விப் படாவிட்டால், அவனுடைய மதிப்பு இரண்டு மில்லியன் பவுண்டு ஸ்டெர்லிங் டாலர்கள் அல்ல. தலை வருக்கு அவன் கிடைத்ததில் ஏகப்பட்ட மகிழ்ச்சி. அவனுக்கு அரை மில்லியன் டாலர் விலை வைத்திருக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கிறார். லோரெலி தன்னுடைய சீப்பை மேசையில் வைத்தாள். ''இதில் சந்தோஷப்பட என்ன இருக்கிறது? அவனுக்கு அவ்வளவு மதிப்பு இருந்தால் ஐந்து லட்சம் டாலரோடு நிறுத்துவானேன்?''

''இது முதல் தவணைதான். இதைவிடப் பெரிய தொகையை இப்போது எடுப்பது கடினம். பணம் கொடுத்தவுடன் விடுதலை கிடைக்கும் என்று மிக்லெம் நம்புகிறான். கடைசி இருபது லட்சம் இருக்கும் வரை அவன் இங்கிருந்து வெளியேற முடியாது, கால் முதலில் போகும், கைகளில் மலர் வளையம் இருக்கும்.''

லோரெலி சிலிர்த்துக்கொண்டாள்; எழுந்து துணிகள் வைக்கப் பட்டிருக்கும் இடத்திற்குச் சென்றாள். தன்னுடைய ஆடையை அவிழ்த்துவிட்டு ஒரு கறுப்புப் பட்டு ஆடையை எடுத்து தலை வழியாகப் போட்டுக் கொண்டாள்.

கச்சிதமாகச் செதுக்கப்பட்ட அவளுடைய உடலை ஃபெலிக்ஸ் கண்களால் தழுவிக்கொண்டான்.

இடுப்பில் ஆடையைச் சரி செய்தபடியே, ''மிக்லெம்முக்குத் தெரியாதா?'' என்று கேட்டாள் லோரெலி. மீண்டும் கண்ணாடி அருகே வந்தவள் அந்த மேசையில் குவிந்திருந்த நகைகளுக்கிடையே தேடி, கறுப்பு மற்றும் சிகப்பு வெள்ளை மணிகள் கோத்த நூலை எடுத்தாள்.

''அதுதான் எனக்குப் புரியவில்லை. ஆளைப் பார்த்தால் சண்டை போடுகிற மாதிரிதான் இருக்கிறான். ஆனால் எந்த எதிர்ப்பும் இல்லை. ஒருவேளை தலைவரைப் பார்த்துப் பயந்திருக்கலாம்; சொல்லப்பட்டதைச் செய்கிறான். தன்னுடைய நியூயார்க் வங்கிக்குக் கடிதம் எழுதியிருக்கிறான், பணத்தை ரோமில் உள்ள வங்கிக்கு மாற்ற வேண்டுமென்று எழுதியிருக்கிறான். நீ அந்தக் கடிதத்தை

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மிக்லெம்மின் செயலாளரிடம் கொடுக்க வேண்டும். அவள் அதை நியுயார்க் நகருக்கு எடுத்துச் செல்வாள்.''

லோரெலி விறைத்துக்கொண்டாள்.

''நானா எடுத்துப் போகவேண்டும்?''

''ஆமாம். அது பெரிய விஷயமில்லை.''

''நீயோ, வில்லீயோ, கார்லஸோ எடுத்துப்போகலாமே'' என்றாள் லோரெலி. அவளுடைய குரல் உயர்ந்தது.

''என்னைக் கேட்காதே. நீதான் எடுத்துப்போக வேண்டும் என்று தலைவர் சொன்னார்.''

''மோசமான வேலைகளை ஏன் என்னிடம் தள்ளி விடுகிறீர்கள்?''

''இதில் எது மோசம்?''

''அவர்கள் என்னைப் போலீசில் ஒப்படைத்துவிட்டால். லண்டனில் என்ன நடந்தது? நான் தப்பித்ததே பெரும்பாடு.''

''அதை மறந்துவிடு. இது ரொம்ப சுலபம். இங்கே போலீஸ் இல்லை. தவிர, மிக்லெம் இங்கே இருக்கும்வரை அவனுடைய ஆட்கள் உன்னைத் தொடமாட்டார்கள்.''

''நான் இதைச் செய்ய மாட்டேன் ஃபெலிக்ஸ். நான் இதிலிருந்து வெளியேற வேண்டும்.''

''லோரெலி உனக்குத் தெரியாது. உனக்குப் பிரச்சினை ஆரம்பமாகிவிட்டது. எது முடியும் எது முடியாது என்பதைப் பேசும் நேரம் இதுவல்ல. இன்னும் ஒருமணி நேரத்திற்குள் அவனுடைய மாளிகைக்குக் கடிதத்தை எடுத்துப்போக வேண்டும். இது உத்தரவு.'' லோரெலி பயத்தில் உறைந்துவிட்டாள்.

''என்ன பிரச்சினை?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''அல்ஸ்கோனிக்கு உன்மீது நம்பிக்கை குறைந்துவிட்டது. ஒரு நெருக்கடியில் நீ பயந்து விடுகிறாய் என்கிறான் அவன். நீ சரியாக இருக்கிறாய், உனக்கு நான் பொறுப்பு என்று அவனிடம் சொல்லியிருக்கிறேன். அவனுக்கு திருப்தியில்லை. இந்தக் கடிதத்தோடு உன்னை அனுப்புவதே உன்னை சோதித்துப் பார்க்கத்தான்.''

லோரெலி படுக்கையில் உட்கார்ந்தாள்.

''இதில் ஒன்றுமில்லை. இது ஒரு சாதாரண விஷயம்தான். நீ தைரியமாக இருக்க வேண்டும். அல்ஸ்கோனி உன்னைக் கண்காணிக்கிறான்; அதன் பொருள் உனக்கே தெரியும்.'' அவள் எதுவும் சொல்லவில்லை.

''இதோ அந்தக் கடிதம்'' தன்னுடைய பர்சிலிருந்து ஒரு உறையை எடுத்து அதை மேசைமேல் வைத்தான். அந்த மாளிகை இருக்குமிடம் தெரியுமா?''

''தெரியும்'' என்றாள் லோரெலி.

''அங்கே போனவுடன் மரியன் கக்பியைப் பார்க்க வேண்டும். அவளிடம் மிக்லெம் பத்திரமாக நலமாக இருக்கிறான், ஆனால் சியென்னாவில் இல்லை என்று சொல்லிவிடு. அவள் உடனடியாக நியூயார்க் விமானத்தில் செல்ல வேண்டும். அங்கே மிக்லெம்மின் வங்கியில் கடிதத்தைக் கொடுக்க வேண்டும். எதற்காக இந்தத் தொகை தேவைப்படுகிறது என்ற கேள்வி எழுந்தால் மிக்லெம் இங்கே ஒரு மாளிகையைக் கட்டப்போகிறார் என்று சொல்ல வேண்டும். அவள் போலீசிடம் போனால் மிக்லெம் பாதிக்கப்படுவான் என்று சொல்லிவிடு. புரிகிறதா?

''சரி'' என்றாள் லோரெலி.

''நல்லது. இரண்டரை மணிக்கு அங்கே போக வேண்டும். காரை எடுத்துப்போ'' ஃபெலிக்ஸ் ஒரு

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சிகரெட்டைப் பற்றவைத்தான். ''உன்னோடு இன்னொரு விஷயத்தைப் பேச வேண்டும். க்ராண்டர் எப்படிப் பட்டவன்? உனக்கு அவனோடு ஒத்துப் போயிற்றா?''

''க்ராண்டரா? எனக்கு அவனைப் பிடிக்கவில்லை. அவன் பேராசைக்காரன், கொடூரமானவன். ஏன் இதைக் கேட்கிறாய்?

''அவன் கெட்டிக்காரன்; ரொம்பவும் கெட்டிக்காரன். மிக்லெம் பற்றிய விவரங்களைக் கேட்பதற்காக க்ராண்டரு டன் பேசும்படி அல்ஸ்கோனி கூறினான். அவன் அதற்காக அவகாசம் கேட்பான் என்று நினைத்தேன். ஆனால் அவனோ குறிப்பு நோட்டிலிருந்து படிப்பது போல் எல்லா வற்றையும் சொல்லி விட்டான். மிக்லெம்மைப் பற்றி அவனுக்குத் தெரியாத விவரமே இல்லை; அவனுடைய சொத்து எவ்வளவு அவனுடைய வங்கிக் கணக்கு, அவனுடைய இன்சூரன்ஸ் என்று அடுக்கிவிட்டான். லண்டன் நகரில் பத்தாயிரம் பவுண்டுக்கு மேல் வருமானம் உள்ள யாரைப்பற்றியும் தகவல் கொடுக்க முடியும் என்கிறான் அவன். இது நிஜமாகவே கெட்டிக்காரத்தனம் தான்.''

''நீ என்ன சொல்கிறாய்?'' என்றாள் லோரெலி.

''இப்போது க்ராண்டர் புத்திசாலி என்று அல்ஸ்கோனி நினைக்கிறான். தனக்காக அவன் இவ்வளவு பாடுபடு கிறான் என்பது தெரிந்தால் அல்ஸ்கோனிக்கு வேறு யோசனைகள் ஏற்படும்''

''என்ன யோசனைகள்?''

''அவனை இங்கே கொண்டு வந்து என் இடத்தில் வைக்கலாம். இப்படிப்பட்ட ஆட்களைத்தான் அல்ஸ் கோனிக்குப் பிடிக்கும். அதனால்தான் நீ கவனமாக இருக்க

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வேண்டும் என்கிறேன். நம்முடைய நட்பில் அவனுக்கு சம்மதமில்லை, நான் பலகீனமாகி விட்டேன் என்கிறான்.''

''அப்படியென்றால் நாம் இங்கிருந்து தப்பவேண்டும்.'' லோரெலி கைகளைக் குவித்துக்கொண்டு சத்தம் போட்டாள். ''ஃபெலீக்ஸ் நான் சொல்வதைக்கேள். போலீஸ் நம்மைப் பிடிக்கா விட்டால் அல்ஸ்கோனி நம்மை முடித்துவிடுவான். நாம் தப்ப வேண்டும்.''

''நீ வாயை மூடு. நான் உன்னை எச்சரிக்கிறேன். நாம் அல்ஸ்கோனிக்கு துரோகம் செய்தால் அதோடு நம்மைக் கொன்று விடுவான். நான் சொல்வது உன் மூளையில் ஏறுகிறதா?''

''ஆக, அல்ஸ்கோனி நமக்குத் துரோகம் செய்யும் வரை பொறுமையாக இருக்கவேண்டும் என்கிறாய். க்ரான்டர் இங்கே வந்து ஆட்சியைப் பிடிக்கும்வரை நீ முட்டாளாகவே இருப்பாய், அப்படித்தானே?''

''க்ரான்டர் இங்கே வந்தால் அவன் அல்ஸ்கோனியைச் சந்திப்பதற்கு முன்பே அவனைத் தீர்த்துவிடுவேன்.''

''அதற்குள் அல்ஸ்கோனி உன்னைத் தீர்த்துவிடலாம்''

ஃபெலிக்ஸ் எழுந்து நாற்காலியை உதைத்தான். லோரெலிக்கு அருகே சென்று அவள் கைகளைப் பிடித்து உலுக்கினான்.

''உன்னிடம் நான் முரட்டுத்தனத்தைக் காட்டியதில்லை. ஆனால் அவசியம் ஏற்பட்டால் நான் தயங்க மாட்டேன். என்னிடம் சிக்கிய பெண்கள்நிலைமை மிகவும் மோசமாகி விடும். நாம் இருவரும் இங்கிருந்து தப்ப முடியாது. இதில் நாம் முழுவதுமாக இறங்கிவிட்டோம். உனக்கு பயமாயிருக்கிறது, நீ வெளியேற விரும்புகிறாய் என்று அல்ஸ்கோனியிடம் சொன்னால் என்ன நடக்கும் தெரியுமா? உன்னை எங்மேனிடம் ஒப்படைத்து விடுவான். நீ ஒழுங்காக

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இருக்காவிட்டால் நானும் உன்னைக் கைகழுவி விடுவேன். நான் உனக்குப் பொறுப்பு என்று சொல்லியிருக்கிறேன், ஆனால் நீயாகப் பிரச்சினையை உண்டாக்கினால் உன்னைக் காப்பாற்ற மாட்டேன். யாருக்காகவும் நான் பலியாக மாட்டேன்.''

''சரி ஃபெலிக்ஸ் என்னை மன்னித்துவிடு. எனக்குப் பயமாயிருக்கிறது. ஆனால் நான் சரியாகிவிடுவேன்.'' லோரெலி அவர் மீது சாய்ந்து கொண்டாள்.

''நீ சரியானால் உனக்கு நல்லது'' என்றபடி ஃபெலிக்ஸ் அவளை விலக்கினான். ''நீ கவலைப்படுவதற்கு எதுவும் இல்லை. நான் பார்த்துக் கொள்கிறேன். நான் சொல்வதைச் செய்தால் போதும். புரிகிறதா?''

அவள் தலையைக் குனிந்தபடி சரியென்றாள்.

''சரி, இப்போது நான் தலைவனைப் பார்க்க வேண்டும். நீ அந்தக் கடிதத்தை எடுத்துப் போகிறாயா?''

''எடுத்துப் போகிறேன்.''

''நல்லபெண். அங்கே இரண்டரை மணிக்கு இருக்க வேண்டும்'' என்று சொல்லி அவளைத் தட்டிக் கொடுத்தான். அவன் போன பிறகு லோரெலி கண்ணாடியின் முன் அமர்ந்திருந்தாள். தான் எவ்வளவு பயந்திருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொண்டாள். பவுடர் பூச்சை எடுத்துத் தடவிக் கொண்டாள். பிறகு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தாள். தான் சிக்கிக்கொண்டோம் என்பது அவளுடைய எண்ணம். இந்த அளவில் ஒரு கொலைகாரக் கும்பலை உருவாக்குவான் என்று தெரிந்திருந்தால் அல்ஸ்கோனியோடு சவகாசம் வைத்திருக்க மாட்டாள்.

ஐந்து வருடங்களுக்கு முன்பு அல்ஸ்கோனியைச் சந்தித்தபோது அவன் ரோம் நகரத்துக் காபிக்கடையில் சுமாராக வயலின் வாசித்துக்கொண்டிருந்தான். அந்த

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இடத்தில் அவள் நடனமாடிக் கொண்டிருந்தாள். அவளும் மற்றவர்களும் அல்ஸ்கோனி அகம்பாவம் பிடித்தவன், பயித்தியக்காரன் என்றே நினைத்திருந்தனர். அல்ஸ்கோனி எப்போதும் தன்னுடைய சியென்னா குடும்பத்தைப் பற்றியே பெருமையாகப் பேசிக்கொண்டிருப்பான். விரைவில் வாகா குடும்பத்தின் தலைவனாக ஏகப்பட்ட சொத்துக்கு சொந்தக்காரனாகப்போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தான். வயலின் வாசிக்காத நேரங்களில் வாடிக்கையாளர்களில் யாரிடமாவது சியென்னாவிலிருந்து வாகா குடும்பத்தினர் விரட்டப் பட்டதையும் அவளின் பழி தீர்ப்பதற்காக சபதம் செய்ததையும் சொல்லிக் கொண்டிருப்பான்.

ஒருநாள் லோரெலியை நெருங்கி ஒரு யோசனையைக் கூறினான். அவள், தான் மற்றும் அங்கே தட்டுகளைக் கழுவிக் கொண்டிருக்கும் ஜானி லாசர் ஆகிய மூவரும் சேர்ந்து கூட்டணி அமைக்கலாம். இந்த மிரட்டல் வேலையில் நிறைய பணம் கிடைக்கும். ஏற்கெனவே ஜானியோடு பேசியாகிவிட்டது. அல்ஸ்கோனிக்கு எளிதில் ஏமாறக்கூடிய சில பணக்காரர்களைத் தெரியும். அவர்களை லோரெலுக்கு அறிமுகம் செய்வான். அவர்களை மயக்கி ஒரு அசந்தர்ப்பமான நிலைக்குக் கொண்டு வரவேண்டியது லோரெலியின் பொறுப்பு. பாதிக்கப்பட்ட கணவனைப் போல வரும் ஜானி தகராறு செய்பவன். விளம்பரத்தை விரும்பாதவர்கள் பணத்தைக் கொடுத்து விடுவார்கள் என்பதுதான் அந்தத் திட்டம்.

அப்போது லோரெலிக்கு அவசரமாகப் பணம் தேவைப் பட்டது. நடனம் ஆடி அவளுக்கு அலுத்துப்போய் விட்டது. ஜானியோடு நடத்திய ஆலோசனைக்குப் பிறகு அல்ஸ் கோனியின் திட்டம் சோதனை ஓட்டமாக விடப்பட்டது.

பதினாறு மாதங்களில் மூவருக்கும் கணிசமான தொகை கிடைத்தது. போலீஸ் பிரச்சினை இல்லாமல் செய்வதற்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

காகவும் பணக்காரர்களை அறிமுகம் செய்வதற்காகவும் அல்ஸ்கோனிக்கு மூன்றில் இரண்டு பங்கு. மீதித் தொகையை மற்ற இருவரும் பகிர்ந்து கொண்டனர்.

ஆனால் ஜானி அதிகப் பங்கு வேண்டுமென்று கேட்க ஆரம்பித்தான். எல்லா பிரச்சினைகளையும் தானும் லோரெலும் சமாளிக்கும்போது அல்ஸ்கோனிக்கு ஏன் அதிகப் பங்கு என்ற கேள்வியை அவன் எழுப்பினான்; அல்ஸ்கோனியை விலக்கிவிடலாம் என்றான். ஆனால் பயத்தினால் லோரெலி உடன்படவில்லை. இந்த இடை வேளையில் ஜானி காணாமல்போனான்; சில நாட் களுக்குப் பிறகு டைபர் நதியிலிருந்து அவன் உடல் போலீசால் எடுக்கப்பட்டது. அல்ஸ்கோனி இதனால் பாதிக் கப்படவில்லை. ஒருவேளை ஜானிக்கு யாராவது எதிரிகள் இருந்திருக்கலாம் என்றான் அவன். இந்த மாதிரி முட்டாள் களின் முடிவு இப்படித்தான் இருக்கும். நம்பகமான கூட்டாளியைத் தேடும்படி அல்ஸ்கோனி ரோரெலியிடம் கூறினான். அவள் ஃபெலிசைத் தேர்வு செய்து அல்ஸ்கோனியிடம் அறிகமுகப் படுத்தினாள். தன்னுடைய சேமிப்பிலிருந்தும் மிரட்டிச் செய்த வசூலில் இருந்தும் கிடைத்த தொகையை வைத்துக்கொண்டு அல்ஸ்கோனி புதிய தொழிலைத் தொடங்கினான். பணம் கொடு அல்லது உயிர் போய்விடும் என்ற மிரட்டல் தொழில் அது. அதற்கு ஃபெலிக்சை பொறுப்பாகச் செய்தான்; லோரெலியையும் சேர்த்துக் கொண்டான். லோரெலிக்கு ஃபெலிக்சோடு வேலை செய்வது பிடித்திருந்தது. பணம் வேகமாகச் சேர்ந்தது. முதல் டஜன் பணக்காரர்கள் பேசாமல் பணம் கொடுத்து விட்டார்கள். அல்ஸ்கோனி தொகையை உயர்த்தியதும் சிலர் தகராறு செய்தனர். முதல் கொலை லோரெலிக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஆனால் அதற்குள் வசதியான வாழ்க்கை பழகிவிட்டதால் ஒதுங்க முடிய வில்லை. அவளுக்கு ஃபெலிக்ஸ் மீது காதல் ஏற்பட்டது; பணமும் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அடுத்து வந்த மாதங்களில் கொலைகள் தொடர்ந்தன. போலீசால் அல்ஸ்கோனியைத் தடுக்க முடியவில்லை. லோரெலிக்கு பயம் போய்விட்டது. தான் யாரையும் கொலை செய்யாத வரை பிரச்சினையில்லை என்பது அவளுடைய நினைப்பு. ஆனால் கினாவின் மரணம் அவளை மாற்றிவிட்டது. மிக்லெம் அவளைத் தேடி வந்து விட்டான் என்றவுடன் கதி கலங்கிவிட்டது. ஃபெரென்சி மற்றும் கினாவில் சம்பந்தப்பட்டது பெரிய முட்டாள்தனம். போலீஸ் வருவதற்குள் தப்பிக்க வேண்டும். சரியான முடிவுகளை எடுக்க ஃபெலிக்ஸ் துணியாவிட்டால் தான் தனியாக வெளியேற வேண்டும்.

கண்ணாடியில் பார்த்தபடியே இருந்தவளுக்கு ஒரு யோசனை ஏற்பட்டது. இந்தக் கூட்டத்திலிருந்து தப்பித்துப் போக வேண்டுமென்றால் நிறைய பணமும் பதுங்குவதற்கு ஏற்ற இடமும் வேண்டும். மிக்லெமிடம் பணம் இருக்கிறது. அவனோடு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.

வெகுநேரம் சிந்தித்தபடியே இருந்த லோரெலி எழுந்து உடைகள் இருக்கும் அலமாரியிடம் சென்றாள். பளு வில்லாத கம்பளிக்கோட்டை எடுத்து அணிந்து கொண் டாள்; கறுப்புத் தொப்பியைப் பொருத்திக்கொண்டாள். மேசையின் டிராயரிலிருந்து .25 அடோமெடிக் துப்பாக் கியை எடுத்து கோட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டாள். கடிதத்தை எடுத்துக்கொண்டு வெளியே வந்து தாழ்வாரத்தில் நடந்து லிப்டுக்கு வந்தாள்.

ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வந்த டாக்ஸிக்கு மரியன் பணம் கொடுத்துக் கொண்டிருந்தாள். ஹாரி படிகளில் இறங்கி வந்து அவருடைய பையை வாங்கிக்கொண்டார்.

''நாங்கள் உங்களோடு பேச முயற்சி செய்தோம். மிஸ். பிளாரன்சில் உள்ள அத்தனை ஓட்டல்களுக்கும் ஃபோன் செய்தோம்.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மரியன் அவரைப் பார்த்தாள்; கவலையான தோற்றத்தின் விளைவாக அவருக்குள் எச்சரிக்கை மணி ஒலித்தது.

''ஹாரி, ஏதாவது பிரச்சினையா?''

செர்ரீ ஹோடாலுக்கு வந்தார். அவருடைய முகத்திலும் அபாய அறிகுறிகள்.

''திரு. மிக்லெம்மைக் காணோம்'' என்றார் ஹாரி.

மூவரும் வரவேற்பறைக்கு வந்தனர்.

''எவ்வளவு நேரமாக அவரைக் காணவில்லை?'' என்றாள் மரியன், தன்னுடைய பதற்றத்தைக் காட்டிக் கொள்ளாமல்.

''உங்களுக்கு ஒரு கப் காபி தரட்டுமா மேடம்?'' என்றான் செர்ரீ.

அது மரியனுடைய காதில் விழவில்லை. அவள் ஹாரியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நேற்றிரவு முதல்'' என்ற ஹாரி, தானும் செர்ரியும் கார்லோஸைப் பின் தொடர்ந்ததையும் கார்லோஸ் காரில் ஏறிப் போனதையும் பற்றிக் கூறினார். அந்தச் சாலை நீளமாக இருந்தது. எங்களால் ஹெட்லைட்களைப் பார்க்க முடிந்தது. மெயின் ரோடிலிருந்து திரும்பியவன் ஒரு வீட்டிற்குள் போனதாக நினைத்தேன். இதை திரு. மிக்லெம் மிடம் தெரிவித்தேன். அவரும் நானும் அங்கே போனோம். கார் திரும்பிய இடத்தைக் கண்டு பிடித்தோம். அந்த வழியில் பெரிய மாளிகையும் அதன் சுற்றுபுறச் சுவரும் இருந்தன. மிக்லெம் வீட்டிற்குள் போக வேண்டும் என்றார். என்னைச் சுவரின் மேல் இருக்கச் சொல்லிவிட்டு தோட்டத்தில் இறங்கினார். நான் அரைமணி நேரம் காத்திருந்தேன். அவர் திரும்பி வருவார் என்று நினைத்தேன். அப்போது நாய்கள் குறைத்தன. தோட்டத்தில் விளக்குகள் எரிந்தன. நான் தோட்டத்தில் இறங்கி ஒரு நாயிடம்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பிடிபடாமல் தப்பி மீண்டும் சுவரில் ஏறி இறங்கி காரை ஓட்டிக்கொண்டு இங்கே வந்தேன். செர்ரியை எழுப்பினேன். கொஞ்சநேரம் பார்த்துவிட்டு பிறகு உதவியைத் தேடலாம் என்று நினைத்தோம்''

''அவர் பிடிபட்டாரா என்று தெரியுமா?''

''நான் ஒரு நாயிடமிருந்து தப்பியதே பெரிய விஷயம். அங்கே அதைத்தவிர மூன்று நாய்கள் இருந்தன. ஆக அவர் தப்பித்திருக்க முடியாது. அப்படித் தப்பியிருந்தால் இங்கே வந்திருப்பார்.''

அவள் தலையசைத்தாள்.

''செர்ரியை இங்கே இருக்கச் சொல்லிவிட்டு நான் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனேன். அங்கிருந்தவர்களில் ஒருவனுக்கும் ஆங்கிலமே புரியவில்லை. யாராவது ஒருத்தராவது படித்தவர்களாக இருப்பார்கள் என்று நினைத் தோம். ஆனால் யாருக்கும் நான் சொல்வது புரியவில்லை. என்னை உள்ளே தள்ளியிருப்பார்கள். திரும்பவும் இங்கே வந்து சூபரின்டென்டென்ட் டிக்ஸுக்கு போன் செய்தேன். அவரோடு பேசியவுடன் அவர் உடனே நடவடிக்கை எடுத்தார். ரோமில் ஆமை வழக்கைக் கவனித்துக் கொண்டிருக்கும் அதிகாரியோடு அவர் தொடர்பு கொண்டார். நானும் செர்ரியும் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் அவரோடு பேசினோம். நீக்ரோவையும் அந்த வீட்டையும் குறிப்பிட்டவுடன் உள்ளூர் போலீசார் எகிறிவிட்டனர். நீக்ரோ தெரிந்த ஆள்தான். அவனால் எந்தப் பிரச்சினையுமில்லை என்றனர். மாளிகையின் சொந்தக்காரன் சைமன் அல்ஸ்கோனிக்கு அங்கே அதிகமான மரியாதை இருந்தது. அல்ஸ்கோனி மீது குற்றம் சுமத்த உள்ளூர் போலீஸ் தயாராயில்லை. இருந்தாலும் ரோசி முழுக்கதையையும் கேட்டார். நீக்ரோவுக்கும் ஆமை இயக்கத்திற்கும் உள்ள தொடர்பை என்னால் நிறுவ

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

முடியவில்லை. திரு. மிக்லெம் லோரெலியைப் பார்த்தார் என்பதைச் சொன்னேன், ஆனால் அவளுக்கும் நீக்ரோவுக் கும் உள்ள தொடர்பு அவளுக்கும் அந்த வீட்டிற்குள் உள்ள தொடர்பு ஆகியவற்றை நிரூபிக்க முடியவில்லை. ஆனால் திரு. மிக்லெம் அந்த வீட்டிற்குள் சென்றவர், வெளிவர வில்லை என்பதை அவர்களால் மறுக்க முடியவில்லை. அந்தத் தோட்டத்திற்குள் போவதற்கு மிக்லெம்மிற்கு எந்த உரிமையும் இல்லை. சட்டவிரோத நடவடிக்கைகளுக்காக அல்ஸ்கோனி வழக்கு தொடரலாம் என்றார் ரோசி. மிக்லெம் அந்த வீட்டில் இருக்கிறார் என்பதற்கு ஆதார மில்லை என்றார் ரோசி. முடிவில் அவரே அந்த வீட்டிற்குச் சென்றார். என்னையும் செர்ரியையும் போலீஸ் ஸ்டேஷ னிலேயே இருக்கச் சொல்லிவிட்டார். சிறிது நேரத்திற்குப் பிறகு அவர்கள் திரும்பி வந்தனர். வீடு முழுவதும் தேடிவிட்டோம், மிக்லெம் அங்கே இல்லை என்றார் ரோசி. மிக்லெம்முக்கு புத்தி பிசகியதால் அவர் எங்காவது அலைந்து கொண்டிருக்கலாம் என்றார் ரோசி. பிறகு அவர் ரோமிற்குச் சென்றுவிட்டார். இதுவரை நடந்தது இதுதான்.''

''டான் அவர்களால் கடத்தப்பட்டிருந்தால் அவரை வேறிடத்திற்குக் கொண்டு செல்ல அவர்களுக்கு நிறைய அவகாசம் இருந்தது அல்லவா?''

''ஆமாம். ஆனால் அப்படிச் செய்யவில்லை என்று நினைக்கிறேன். அவர் இன்னும் அங்கேதான் இருக்கிறார்.''

''போலீசார் தேடிய போது...''

''அந்த இடத்தை நீங்கள் பார்க்க வேண்டுமா. அங்கே மறைவிடங்களும், பாதாள அறைகளும், சில கதவுகளும் இருக்கலாம். அவர் அங்கே தான் இருக்கிறார்.''

மரியன் செர்ரியைப் பார்த்தாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''சொர்ரி, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''என்ன சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை.''

''அந்த இடத்தில் அவரை வைத்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன் மேடம்.'' சொர்ரி பதற்றத்தோடு சொன்னார்.

''நீங்களும் அந்த இடத்தைப் பார்க்கவில்லை'' ஹாரி குறுக்கிட்டுப் பேசினார். அவர் எங்கிருந்தாலும் நாம் அவரைக் கண்டுபிடிக்க வேண்டும். அதை ஏதாவது ஒரு இடத்தில் தொடங்க வேண்டும்''

''சரி. என்ன செய்யலாம்?'' என்றாள் மரியன்.

''மேடம் இந்த வேலையை நாம் தனியாகச் செய்ய முடியாது. நமக்கு உதவி தேவை. போலீஸ் உதவவில்லை யென்றால் நாம் வேறு ஆட்களைத் தேடவேண்டும். நாம் கிஸிபேவுடன் தொடர்பு கொள்வோம். அவரால் நமக்கு உதவமுடியும். அவருடைய படகோட்டி நண்பர்கள் சிலரை அழைத்து வரவேண்டும். அவர்களோடு அங்கே போனால் திரு. மிக்லெம்மைக் கண்டுபிடித்து விடலாம்.''

''ஆனால் ஹாரி, அவர் அங்கே இருக்கிறாரா என்பது தெரியவில்லை. ஒரு யூகத்தின் அடிப்படையில் அங்கே நுழைய முடியாது. நீங்கள் கைது செய்யப்படுவீர்கள். அதனால் டானுக்கு எந்த லாபமும் இல்லை. இதை இப்படிக் கையாளக்கூடாது. ஆமை என்பவன் மிரட்டிப் பணம் பறிப்பவன். இந்த வாய்ப்பை அவன் விட மாட்டான். விரைவில் நமக்கு ஒரு கடிதம் வரும். அதுவரை காத்திருந்து பிறகு நாம் நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் நமக்கு ஆள் பலம் வேண்டும். நான் கிஸிபேவுடன் பேசுகிறேன்; அவர் மாளிகையில் இருக்கலாம்.''

''சரி, எதுவும் செய்யாமல் இங்கே இருப்பதில் எனக்கு சம்மதமில்லை. கிஸிபேவின் தோழர்கள் வந்தால் உள்ளே

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

போய் திரு. மிகெலெம்மைக் கண்டுபிடிக்கலாம்'' என்றார் ஹாரி.

''முதலில் கிஸிபேவுடன் பேசுவோம்'' என்றாள் மரியன். தொலைபேசிக்கு அருகே சென்று வெனிஸ் நகரத்தின் உள்ள டானுடைய மாளிகைக்குத் தொலைபேசி இணைப்புக் கேட்டாள்.

கிஸிபோ ஸ்பினோலோ டானுடைய படகோட்டி. டான் ஊரில் இல்லாதபோது கிராண்டு கெனாலில் இருந்த டானுடைய மாளிகையைப் பார்த்துக்கொண்டார். மரியன் அவரோடு பேசி, நிலைமையை விளக்குகிறாள்.

''ஹாரி நீங்கள் இங்கே வரவேண்டுமென்கிறார், உங்கள் நண்பர்கள் சிலரையும் அழைத்து வந்தால் நல்லது...''

''நாங்கள் உடனே வருகிறோம். என்னுடைய நண்பர் களையும் அழைத்து வருகிறேன். கவலைப்படவேண்டாம். தலைவரை நாங்கள் கண்டுபிடித்து விடுவோம். இன்று இரவு அங்கே வந்து விடுவோம்.'' என்றார் கிஸிபே.

''அவர் வருகிறார் ஹாரி, நான் அந்த வீட்டைப் பார்க்க வேண்டும். காரில் போய்ப் பார்க்கலாம். அந்த இடமும் வீதிகளும் எப்படி இருக்கின்றன என்பதை கிஸிபே வருவதற்குள் பார்க்க வேண்டும்...'' என்ற மரியன் ஹாரியைப் பார்த்து பேச்சை நிறுத்திவிட்டாள்.

ஹாரி மரியனின் முதுகுப் புறத்தில் பார்த்துக்கொண் டிருந்தார். அங்கே கதவுக்கருகே கையில் .25 ஆட்டே மெடிக் துப்பாக்கியோடு இருந்தாள் லோரெலி.

பகல்நேர சூரியன் அந்தத் தோட்டத்தை சூடாக்கிக் கொண்டிருந்தது. தோட்டத்திற்கு அப்பால் இருந்த மாளிகையைப் பார்க்கும்படி உட்கார்ந்திருந்தார் வில்லி; அவருடைய முதுகு மரத்தின் மீது சாய்ந்திருந்தது. வில்லி தூக்கத்தை விரட்டிக் கொண்டிருந்தான். மரியன் வருவதை

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவர் பார்த்துவிட்டார். இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் மிக்லெம் குறித்த பணயத் தொகையைக் குறிப்பிடும் கடிதத்தோடு லோரெலி வருவாள் என்று அவருக்குச் சொல்லப்பட்டது. லோரெலியைப் பாதுகாப்பது உன் வேலை; கண்ணில் தெரியாதபடி இரு; ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் உள்ளே போகவேண்டும்; தேவைப் பட்டால் உன் துப்பாக்கியைப் பயன்படுத்தலாம்.''

அழுக்கான கைக்குட்டையை எடுத்து வில்லீ முகத்தைத் துடைத்துக்கொண்டான். கண்களை மூடி அருமையான தூக்கம் போடலாம் என்ற ஆசை அவனுக்கு, ஆனால் அது முடியாது. தன்னுடைய கடிகாரத்தை அவன் பார்த்துக் கொண்டான். அவள் எந்த நேரத்திலும் வரக்கூடும். இடுப்பு பாக்கெட்டிலிருந்து ஒரு .38 ஆட்டோமெடிக் துப்பாக்கியை எடுத்தவன் கிளிப்பை சரி பார்த்தான். கையில் துப்பாக்கியை சமநிலையாக வைத்துப் பார்த்தவனின் கண் அந்த மாளிகை மீதே இருந்தது. இந்த வெயிலில் இருந்து தப்பி அந்த வீட்டுக்குள் போனால் சுகம்.

ஏதாவது ஒரு விஷயத்திற்கு ஏங்கியபடியே வாழ்க் கையைக் கழித்துவிட்டதாக வில்லீக்குத் தோன்றியது. அவனுக்கு வேகமாகச் செல்லும் கார்கள், விருப்பத்திற்கு ஒத்துழைக்கும் பெண்கள் ஆகிய விஷயங்களில் ஆசை. ஆனால் அம்மை வடு நிறைந்த அவன் முகத்தை எந்தப் பெண்ணும் விரும்பவில்லை; தனக்குத் தேவையான காரை வாங்கும் அளவிற்கு வசதியும் இல்லை.

கெனோவாவில் இருந்த தரக்குறைவான ஓட்டல் ஒன்றில் பதினான்கு வயதில் தன் வாழ்க்கையைத் துவக் கினான் வில்லீ. போர்ட்டராக வேலை செய்தவன், வாடிக்கையாளர்களிடம் திருட முயன்று இறுதியில் சிறைச்சாலைக்குச் சென்றான். அவனுடைய நாற்பது வருடங்களில் பெரும்பகுதி சிறைக்குச் செல்வதிலும் சிறையிலும் செலவானது. அல்ஸ்கோனியின் இயக்கத்தில்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

சேர்ந்த பிறகு தான் அவனுடைய சிறைவாசம் தடைப் பட்டது. இப்போது ஓரளவு வசதி இருக்கிறது என்றாலும் விருப்பப்பட்ட காரை வாங்க முடியாது; விருப்பப்பட்ட பெண்களோ வெகு தொலைவில்.

எப்படியாவது பணம் சேர்க்க வேண்டும் என்ற வெறி அவனுக்கு. ஆண் எவ்வளவு அசிங்கமாக இருந்தாலும் பணம் இருந்தால் பெண்கள் அவனை ஏற்றுக்கொள் வார்கள். ஆனால் அதற்கு இந்த வருமானம் போதாது. எனவே நிறைய பணம் வேண்டும்.

அவன் அதிகமாக ஆசைப்பட்டது லோரெலியைத்தான். அவளுடைய அழகு அவனைப் புரட்டி எடுத்துவிட்டது. அவள் ஃபெலிக்ஸுடைய காதலி. தன்னுடைய நினைப்பு ஃபெலிக்ஸுக்குத் தெரிந்தால் கதை கந்தலாகிவிடும் என்பதும் அவனுக்கு நன்றாகத் தெரியும், லோரெலி தன்னை மதிக்க மாட்டாள் என்பதும் தெரியும். ஃபெலிக் சுடைய தாக்குதலை விட தன்னுடைய முகம், தன்னுடைய உடல், தன்னுடைய வறுமை ஆகியவைதான் மிகப் பெரிய தடைகள். இதுவரை அவன் பொறுமையாக இருந்தான். காலம் மாறலாம் என்ற நம்பிக்கையில் அவன் லோரெலியை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான். கனவு இல்லாத வாழ்க்கை எதற்கு? கடந்த நாற்பது வருடங்களாக கனவுகளில்தான் அவன் வாழ்ந்து கொண்டிருந்தான். என்றாவது ஒருநாள் தன்னுடைய கனவு பலிக்கும் என்று நம்பிக்கை அவனுக்கு.

லோரெலியைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கும் போதே அவள் வந்தாள்.

செடிகளையும் மரங்களையும் கடந்து அவள் மாளிகையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தாள். அவளை வில்லீ பார்த்து விட்டான். லோரெலியின் கண்ணில் படாமல் மறைந்திருக்க வேண்டும் என்பது ஃபெலிக்சின்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

உத்தரவு, புல்வெளியில் படுத்துக் கொண்ட வில்லீயை இருபது அடி தொலைவில் சென்ற லோரெலி கவனிக்க வில்லை.

புதரிலிருந்து மரத்திற்கும் மரத்திலிருந்து புதருக்கும் சென்ற அவளை அவன் ஆசையோடு பார்த்துக்கொண் டிருந்தான். எழுந்து அவளைத் தொடர்ந்த போது, அவள் தோட்டத்தில் ஓடி, தாழ்வாரத்துப் படிகளில் ஏறி, கதவருகே நிற்பதைப் பார்த்தான்.

ஒரு மரத்திற்குப் பின் ஒளிந்திருந்தபடி அவன் அவளைக் கவனித்தான்; கதவின் கைப்பிடியைத் திருகி அவள் உள்ளே சென்றாள். திரும்பிப் பார்த்தபோது வில்லீ அவளுடைய பார்வையில் படாதபடி பதுங்கிக் கொண்டான். அவன் வெளிப்பட்ட போது அவள் முன்னேறி விட்டாள்; கையில் துப்பாக்கியோடு.

கதவைத் திறந்த அவள் கையில் .25 துப்பாக்கியுடன் நகர்ந்தாள். கதவுக்கு அருகே இருந்த சுவரில் சாய்ந்தபடி வில்லீ காதுகளைத் தீட்டிக்கொண்டான். மரியன் ''அந்த இடமும் வீதிகளும் எப்படி இருக்கின்றன என்பதை சிலிபே வருவதற்குள் பார்க்க வேண்டும்...'' என்று சொல்வதை அவள் கேட்டாள்.

அப்போது லோரெலி ''யாரும் அசையக்கூடாது'' என்று சொல்வது கேட்டது.

அவளுடைய குரலில் இருந்த மிரட்டலை வில்லீ ரசித்தான். பச்சைக் கண்கள், கையில் நீட்டிய துப்பாக்கி என்று அந்தக் காட்சியைக் கற்பனை செய்துகொண்டான். அவள் அலட்சியமாகச் சமாளித்துவிடுவாள்; தனக்கு வேலையிருக்காது.

அசைய விரும்பிய ஹாரி லோரெலியின் குரலால் அதட்டப்பட்டார். வெளுத்துப் போன முகத்தையும்,

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

துப்பாக்கியையும் தான் இருக்கும் இடத்தையும் பார்த்தவர் சுலபமாக நகரமுடியாது என்பதைப் புரிந்து கொண்டார்.

''உட்கார்'' என்றாள் லோரெலி; துப்பாக்கியை உயர்த்தி ஹாரியின் கண்ணுக்கு நேராகப் பிடித்தாள்.

ஹாரி உட்கார்ந்தார்.

ரோரெலி அறைக்குள் வந்தாள். ஹாரி தான் ஆபத்தானவள் என்று முடிவு செய்தாள். மரியனைப் பற்றிக் கவலையில்லை. நாற்காலியின் ஓரத்தில் உட்கார்ந்திருந்த செர்ரியின் விழிகள் நகராமல் நின்றதால் அவரும் எதிரியில்லை என்று நினைத்தாள் அவள்; மூன்று பேருக்கும் தொலைவில் நின்றபடி சுவரில் சாய்ந்து கொண்டாள்.

''மிக்லெம் நலமாக இருக்கிறார். இப்போது அவர் சியென்னாவில் இல்லை, அவரைத் தேடுவது வீண்வேலை. தன்னுடைய நியூயார்க் வங்கிக்கு அவர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதை நீ சேர்ப்பிக்க வேண்டும்'': என்று மரியனைப் பார்த்துக் கூறினாள் அவள். ''தொகையைப் பற்றி வங்கியில் ஏதாவது கேள்வி எழுந்தால் அவர் இத்தாலியில் வீடு வாங்குகிறார் என்று நீ சொல்ல வேண்டும்.''

ஹாரியை விட்டுக் கண்களை எடுக்காமல், அவள் தன் கைப்பையைத் திறந்து கடிதத்தை எடுத்து மரியனின் காலடியில் வீசினாள்.

ஹாரி கடுமையான தொனியில் பேசினார். ''என்னை ஏமாற்ற வேண்டாம். திரு. மிக்லெம் அந்த வீட்டில்தான் இருக்கிறார் என்று எனக்குத் தெரியும், நீயோ உன்னுடைய ஆட்களோ அவரைத் தாக்கினால் அதற்கு வருத்தப்படு வீர்கள்'' வெளியறைக்கு வந்துவிட்ட வில்லியின் முகத்தில் புன்னகை. சுவரில் சாய்ந்தபடி துப்பாக்கியோடு அவன் கவனித்தான். மரியன் கடிதத்தை எடுத்தாள்; அதைத் திறந்து

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

எழுதப்பட்டிருந்ததைப் படித்தாள். டானுடைய கையெழுத்து தெளிவாகத் தெரிந்தது. பத்து லட்சம் டாலர் மதிப்புள்ள பங்குகளை ரோமிலுள்ள வங்கிக்கு மாற்று வதற்கான குறிப்பு அதில் இருந்தது. தனக்கென்று அதில் எதுவும் எழுதப்பட வில்லை என்பதில் மரியனுக்கு ஏமாற்றம்.

''பணம் ரோம் நகர வங்கிக்கு வந்தவுடன் என்ன நடக்கும்?'' என்று கேட்டாள் மரியன்.

''மிக்லெம் ஒரு செக் எழுதுவார். அதை நீ காசாக்க வேண்டும். பணம் எங்களிடம் வந்தவுடன் அவர் விடுதலை செய்யப் படுவார்.''

''அவர் விடுதலை செய்யப்படுவார் என்பதற்கு என்ன உத்தரவாதம்?''

லோரெலி தோள்களை அசைத்தாள்.

''எனக்கு அது பற்றித்தெரியாது. என்னிடம் சொல்லப் பட்டதை நான் தெரிவித்தேன். நீ உடனே புறப்பட வேண்டும்.''

மரியன் ஹாரியைப் பார்த்தாள். ''இந்தப் பணத்தை இடம் மாற்றுவதற்கு சில நாட்கள் ஆகும். அதற்குள் அடுத்த கட்டத்தை யோசிக்கலாம்.''

''நல்லது. நான் சொன்னபடி செய்கிறேன்.''

''நீ போலீசோடு தொடர்பு கொண்டால் மிக்லெம் நிலை கஷ்டமாகிவிடும். நீங்களோ போலீசோ அவரைக் கண்டு பிடிக்க முடியாது. ஏதாவது புத்திசாலித்தனமாக செய்தால் அதோடு அவரை மறந்து விடலாம்.''

''என்ன அழகு'' என்று நினைத்தான் வில்லி. என்னால் இதைவிடச் சிறப்பாகச் செய்ய முடியாது. லோரெலி வருவதற்குள் வாசல் கதவருகே போய்விடலாம் என்று

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அசைந்தபோது லோரெலியின் வார்த்தைகள் அவனை நிறுத்திவிட்டன.

''இப்படித்தான் சொல்லச் சொன்னார்கள்'' என்றாள் அவள் மரியனிடம். ''ஆனால் அது பொய். மிக்லெம்மை விடுதலை செய்யமாட்டார்கள். அவருடைய மதிப்பு இருபது லட்சம் பவுண்டு. அது மொத்தமும் அவர்களுக்கு வேண்டும்; கிடைத்தவுடன் அவரைக் கொலை செய்து விடுவார்கள்.''

மரியனின் முகம் வெளுத்துவிட்டது; எழுந்திருக்க முயன்ற ஹாரியைக் கையால் தடுத்தாள்.

''இதை ஏன் சொல்கிறாய்?'' என்றாள் மரியன்.

''நான் அவர்களை விட்டு வெளியேற வேண்டும். பணம் இல்லாமல் என்னால் வெளியேறமுடியாது. உங்களோடு நான் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்கிறேன். அவர் இருக்குமிடம் எனக்குத் தெரியும். என்னால் அவரை விடுவிக்க முடியும். அவர்கள் கேட்பதில் பாதியை எனக்குக் கொடுங்கள். இரண்டரை லட்சம் டாலர்கள். அவர்கள் வழியில் போனால் கடைசியில் எதுவும் மிஞ்சாது. என் வழியில் வந்தால் மிக்லெம்மை மீட்டு விடலாம்.''

''ஆக உன்னுடைய கூட்டாளிகளை ஏமாற்றுகிறாய்'' என்றார் ஹாரி கோபத்துடன். மரியனைப் பார்த்து ''இவளை நம்ப வேண்டாம், மிஸ்'' என்றார்.

''நீங்கள் என்னை நம்ப வேண்டாம். நான்தான் உங்களை நம்ப வேண்டும். அவர் விடுதலை ஆகும் வரை நீங்கள் எனக்குப் பணம் தரவேண்டாம். இந்தப் பணம் இத்தாலிக்குக் கொண்டு வர எத்தனை நாளாகும்?

''ஐந்து அல்லது ஆறு நாட்கள்'' என்றாள் மரியன். ''அவரை வெளியே கொண்டுவரும் வழியை நான்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

காண்பித்தால் நான் சொல்லும் கணக்கில் பணத்தைச் சேர்ப்பீர்களா? போலீசிடம் போகக்கூடாது.''

''திரு. மிக்லெம்மைப் பத்திரமாகக் கொண்டு வந்தால் உங்களுக்குப் பணம் கொடுக்கும்படி நான் சொல்லுவேன். அது என்னுடைய பணம் அல்ல, நான் உத்தரவாதம் தரமுடியாது.''

''நான் செய்வது அவர்களுக்குத் தெரிந்துவிட்டால் என்ன நடக்கும் என்பது உங்களுக்குப் புரியாது. அவர்களில் ஒருவன் குடிகார மருத்துவன். தனக்குக் கிடைக்கும் மிருகங்களையும் மனிதர்களையும் அறுவைச் சிகிச்சை செய்வது அவனுடைய முறை. அந்தப் பரிசோதனைகளின் விளைவுகளை நான் பார்த்திருக்கிறேன். நான் அவர்களுக்குத் துரோகம் செய்கிறேன் என்பது தெரிந்தால் எனக்கும் பரிசோதனைதான். என்னுடைய உயிரை உங்களிடம் ஒப்படைக்கிறேன். எனக்கு உறுதியளித்தால் உங்களுக்கு உதவி செய்வேன்.''

மரியன் தயங்கினான். பிறகு ''சரி, உங்களுக்குப் பணம் கிடைக்கும்.''

''போலீசிடம் சொல்லக்கூடாது.''

''சொல்லமாட்டோம்.''

லோரெலி துப்பாக்கியைக் கீழே இறக்கினாள். அதை பாக்கெட்டில் போட்டுக்கொண்டவள் அங்கிருந்து நகர்ந்தாள். மற்ற மூவரும் எழுந்து நின்றனர்.

''அவர் அந்த வீட்டில்தானே இருக்கிறார்?'' என்று ஹாரி கேட்டார். ஆமாம். பூமிக்கு முப்பது அடி கீழே சில பாதாள அறைகள் இருக்கின்றன. அவர் இருக்குமிடம் எனக்குத் தெரியும் அவரைத் தொடர்பு கொள்ளவும் முடியும். ஆனால் அது ஆபத்தானது.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"எவ்வளவு ஆபத்து?" என்றார் ஹாரி.

அந்த வழியை வெள்ளத்தால் மூழ்கடிக்க ஒரு பட்டனைத் தொட்டால் போதும். எல்லா இடங்களிலும் எச்சரிக்கை மணி இருக்கிறது. எல்லா தாழ்வாரங்களிலும் இரண்டு பக்கங்களிலும் எஃகுக் கதவுகள் இருக்கின்றன. அதற்கு மின்சார கன்ட்ரோல் இருக்கிறது. தோட்டத்தில் நாய்களும் காவலாளிகளும் எப்போதும் இருக்கின்றனர்."

"அவரை விடுதலை செய்வது எப்படி?" என்றார் ஹாரி.

"நான் ஒரு திட்டத்தோடு வருகிறேன். நீங்கள் பணம் கொடுப்பீர்களா என்று பார்ப்பதற்காக வந்தேன். நமக்குக் குறைந்த பட்சம் மூன்று நாட்கள் இருக்கின்றன. காவலாளிகள் இருக்கும் இடத்தையும் எச்சரிக்கை மணி இருக்கும் இடத்தையும் நான் சொல்லிவிடுகிறேன். எல்லா விவரங்களையும் சொல்லிவிடுகிறேன். ஆனால் சிறிது அவகாசம் தேவை. வியாழக்கிழமை இரவு இங்கே ஒரு திட்டத்தோடு வருகிறேன்." வெளியே வில்லீ கேட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய அம்மை வடு நிறைந்த முகத்தில் பயம். அவள் எந்தநேரமும் வரலாம். அவள் தன்னைப் பார்க்கக் கூடாது. வாயில் கதவை அடைந்த வில்லீ தாழ்வாரத்திற்கு வந்தான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அத்தியாயம் பத்து

வீணாய்ப்போன வில்லி

சிகரெட்டுகளை எண்ணிப் பார்த்தார் டான்; ஐந்து சிகரெட்டுகள் இருந்தன. சபலத்திற்கு இடம் கொடுக்காமல் அவற்றை பத்திரமாக வைத்துக்கொண்டார். அவரது காலில் எஃகுப் பட்டை, அதில் இணைக்கப்பட்ட சங்கிலி குகையின் பாறையில் பதிக்கப்பட்டிருந்தது. வைக்கோல் தரையில் உட்கார்ந்த அவருடைய முதுகு சாய்ந்தபடி இருந்தது. மணி மதியம் மூன்றரை. மூன்று மணி நேரங்களுக்கு முன் ஃபெலிக்ஸ் வந்ததுதான் பிறகு எவரும் வரவில்லை. நியுயார்க் வங்கிக்கு டான் கடிதம் எழுதுவதற்காக ஃபெலிக்ஸ் வந்தார். எந்தப் பிரச்சினையும் இல்லாமல் டான் எழுதிக்கொடுத்ததில் ஃபெலிக்சுக்கு ஆச்சரியம்.

ஆனால் இந்தக் கடிதத்தை எழுதுவதின் மூலம் தனக்கு நான்கு நாட்கள் அவகாசம் கிடைக்கும் என்பதுதான் டானின் நோக்கம்; அதற்குள் தப்பிக்க முயற்சி செய்யலாம். போலீசால் தன்னைக் கண்டுபிடிக்க முடியா விட்டாலும் ஹாரி சளைக்க மாட்டார் என்று டானுக்குத் தெரியும். இந்தக் கோட்டைக்குள் நுழைய முடியுமென்றால் ஹாரி வந்துவிடுவார், ஆனால் அதற்கு நேரமாகும். தன்னிடமிருந்து வரும் கடிதத்தைப் பார்த்ததும் தான் உயிரோடிருக்கிறேன் என்பதை மரியன் தெரிந்து கொள்வாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

போலீசாரால் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதால் அவள் பதற மாட்டாள் என்று அவர் நம்பினார்.

டானுக்குப் பணம் கொடுக்கும் நோக்கமே இல்லை. அல்ஸ்கோனியைப் பற்றிய நல்ல அபிப்ராயம் அவருக்கு இல்லை. ஐந்து லட்சம் டாலர் கிடைத்தவுடன் தனக்கு விடுதலை கிடைக்காது என்பது அவருக்குத் தெரியும். தேவைப்பட்டதை ஹாரி செய்வார் என்பது அவருடைய கணிப்பு, ஆனால் அதில் உள்ள சிரமங்கள் அவருக்குத் தெரியும். ஹாரியை மட்டும் நம்பிப் பயனில்லை. இங்கிருந்து தப்பிக்க வேண்டுமென்றால் முயற்சிதான் முதல் துணை.

காலிலிருந்த பட்டையை வெறுப்போடு பார்த்தார் டான். ஏதாவது ஒரு உபகரணம் இல்லாமல் இதைத் திறக்க முடியாது. கையால் அசைத்துப் பார்த்ததில் எதுவும் முடியவில்லை.

அடுத்த முறை தன்னுடைய உணவு வரும்போது, தட்டில் உள்ள முள்கரண்டியை உடைத்து பூட்டில் செலுத்திப் பார்க்கலாமா என்று யோசித்துக் கொண்டிருந்த போது சுரங்கப் பாதையில் வெளிச்சம் தெரிவதைப் பார்த்தார்.

நிழலைவிட்டு வந்த லோரெலி அவருக்கருகே நின்றாள். அவளுடைய முகத்தில் கலவரம், அவருக்கு அருகே அமர்ந்தாள்.

''உங்களுடைய செயலாளரிடம் பேசினேன்'' என்று முணுமுணுத்தாள்.

''உங்களை இங்கிருந்து வெளியே கொண்டு வருவதாக அவளிடம் சொன்னேன். அதற்குப் பதிலாக எனக்கு இரண்டரை லட்சம் டாலர் தரவேண்டும். அந்தத் தொகையைக் கொடுப்பதாக உங்கள் செயலாளர் ஒப்புக் கொண்டுள்ளார். நீங்களும் அதற்கு உறுதி அளிக்க வேண்டும்.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவளுடைய கண்களில் தெரிந்த கலக்கத்தைப் பார்த்த டான் அவள் உண்மை பேசுகிறாள் என்பதைத் தெரிந்து கொண்டார்.

''அது பெரிய தொகை'' என்ற டான். ''நீ ஏன் கட்சி மாறிவிட்டாய்?'' என்று கேட்டார்.

''எனக்கு இது பிடிக்கவில்லை. நான் தப்பிக்க வேண்டும். பணம் இருந்தால் என்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்'' என்றாள் அவள். ''அவர்கள் உங்களை விடுவிக்க மாட்டார்கள்; மொத்த பணத்தையும் வசூல் செய்து விட்டு உங்களைக் கொலை செய்துவிடுவார்கள். நீங்கள் தப்பிக்க நான் உதவி செய்கிறேன், ஆனால் அதற்குப் பிறகு எனக்கு இரண்டரை லட்சம் டாலர் தருவதாக நீங்கள் உறுதி அளிக்க வேண்டும்.''

''இது நியாயமான கோரிக்கை. நான் விடுதலை ஆகும் வரை உனக்குப் பணம் கிடைக்காது. ஆனால் அதற்குப் பிறகு கிடைக்கும். இது நிச்சயம்'' என்றார் டான்.

''இது நடக்குமா?''

''நான் சொன்னால் அது நடக்கும். என்னை எப்படி வெளியே கொண்டு போக முடியும்?''

''ஒரு திட்டத்தை நான் தயாரிக்கிறேன். இங்கே இருக்கிற கதவுகள் எல்லாம் மின்சாரத்தால் இயங்குகின்றன. தாழ்வாரங்களைத் தண்ணீரால் மூழ்கடிக்க முடியும். ராப்பகலாக காவல் இருக்கும் இடத்தில் இதற்கான கன்ட்ரோல் இருக்கிறது. இங்கிருந்து தாக்கிவிட்டுத்தான் வெளியேற வேண்டும். இரவில் செய்வது சுலபம். கார்லோஸ் மட்டும் கன்ட்ரோல் அறையில் இருப்பான், மற்றவர்கள் தூங்கிவிடுவார்கள்.''

டான் முகத்தைச் சுளித்துக் கொண்டார்.

''நான் அவனைத் தாக்க வேண்டுமா?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

லோரெலி தலையசைத்தாள்.

"எனக்கு ஒரு துப்பாக்கி வேண்டும்" என்றார் டான்.

"முயற்சி செய்கிறேன்"

"கொடுத்துவிடு. கார்லோசை எதிர்ப்பதற்குத் துப்பாக்கி அவசியம். இதை என்ன செய்வது?" என்று காலிலிருந்த உலோகப் பட்டையைக் காட்டினார்.

"ஒரு அரத்தைக் கொண்டு வருகிறேன்."

"எனக்கு ஒரு ஹேர்பின் வேண்டும். உன்னிடம் இருக்கிறதா?" சிகப்புக் கூந்தலுக்குள் போன கை, ஒரு ஹேர்பின்னோடு வந்தது. அவள் எழுந்து நின்றாள்.

"நான் மீண்டும் வருகிறேன். ஒரு துப்பாக்கி கிடைக்குமா என்று பார்க்கிறேன். ஆனால் அது சுலபமல்ல. எதுவும் கிடைக்காவிட்டால் என்னுடைய துப்பாக்கியைக் கொடுத்துவிடுகிறேன். நீங்கள் விடுதலை ஆனவுடன் பணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இதையெல்லாம் செய்கிறேன்."

"நான் இன்னும் விடுதலை ஆகவில்லை. ஆனால் உனக்குப் பணம் உண்டு. போலீஸ் உன்னைத் தேடுகிறது. அது விஷயமாக என்னால் எதுவும் செய்ய முடியாது."

"அவர்களைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை."

"கன்ட்ரோல் அறை எங்கே இருக்கிறது?"

"எங்கெல்மேனுடைய அறுவைச் சிகிச்சைக் கூடத்திற்கு எதிரே. நீங்கள் அங்கே போயிருக்கிறீர்கள் அல்லவா?"

"ஆமாம். துப்பாக்கி முக்கியம். கார்லோசை அடக்குவது கடினம்."

"என்னால் முடிந்ததைச் செய்கிறேன்."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவள் புறப்பட்டாள். சுரங்க வழியில் அவளுடைய டார்ச் ஒளி மறைந்துவிட்டது.

ஒரு சிகரெட்டைக் கொளுத்தலாம் என்று நினைத்துக் கொளுத்தினார். நுரையீரலில் புகையை நிரப்பிக் கொண்டார். தன்னுடைய சூழ்நிலையில் முன்னேற்றம் இருக்கிறது. லோரெலியின் மனமாற்றத்திற்கான காரணங்களை அவர் ஆராயவில்லை. அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். அவள் கொடுத்த ஹேர் பின்னை வைத்துக்கொண்டு அந்தப் பட்டையருகே போனார். அரை மணி நேரத்தில் பூட்டு விடுபட்டு, பட்டை வழிவிட்டது. தேவைப்பட்டால் அதை மீண்டும் காலில் மாட்டிக் கொள்ளலாம். சுதந்திர மனிதனாக எழுந்து நிற்கலாம் என்று நினைத்தபோது சுரங்கப் பாதையில் ஒளி தெரிந்தது. பட்டையைக் காலில் மாட்டிக்கொண்டு, ஹேர் பின்னை கைக்கடிகாரத்தின் ஸ்ட்ராப்பில் ஒளித்துக்கொண்டார். இருட்டிலிருந்து வந்தவர் டாக்டர் எங்கெல்மேன்; நடையில் சிறிது தள்ளாட்டம், சுருக்கங்கள் நிறைந்த முகம் வெளுப்பாக. அவருடைய முகத்திலிருந்த வியர்வைத் துளிகளை டான் பார்த்தார்.

''ஹலோ, உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்றார் டான். எங்கெல்மேன் அவரைக் குனிந்து பார்த்தார். கண்களில் தெரிந்த வெளிச்சத்தை டான் கவனித்தார். பேசும்போது எங்கெல்மேனுக்கு வாய் குழறியது. ''ஒரு பரிசோதனைக்காக உங்களை என்னிடம் ஒப்படைக்கப் போகிறார்கள். அது இன்னமும் முடிவாகவில்லை. இருந்தாலும் இன்று மாலையில் சில ஆரம்பக் கட்ட சோதனைகள் செய்ய வேண்டும். நீங்கள் ஒத்துழைக்க வேண்டும். உங்களுடைய ரத்தத்தைப் பரிசோதிக்க வேண்டும். நாடியைப் பார்க்கவேண்டும். கண்களையும் கூட.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"உங்கள் கோரிக்கை மறுக்கப்படுகிறது. எனக்கு அருகே வந்தால் உங்கள் கழுத்தை நெரித்து விடுவேன் என்று எச்சரிக்கிறேன்."

எங்கெல்மேனுடைய முகம் இறுகியது. அவர் நகர்ந்து கொண்டார். "என்னைப் பொறுத்தவரை எல்லாம் குறித்த நேரத்தில் நடக்க வேண்டும். இது முக்கியமான பரிசோதனை. நீங்கள் ஒத்துழைக்காவிட்டால், உங்களை ஒத்துழைக்க வைப்பதற்கான வேலைகளைச் செய்ய வேண்டும். அதற்கான உத்தரவு வரும் வரை காத்திருக்கிறேன்."

"நீங்கள் சாத்திருக்க வேண்டியதுதான். நான் பணத்தைக் கொடுக்கப் போகிறேன்."

"அது நடக்காது. நீங்கள் கால அவகாசத்திற்காக நடிக்கிறீர்கள் என்று அல்ஸ்கோனியிடம் சொன்னேன். உங்களை மாதிரி ஆட்களை எனக்குத் தெரியும். உங் களுக்குப் பிடிக்காத காரியத்தைச் செய்யமாட்டீர்கள்."

"உங்களுடைய பரிசோதனைக்கு நான் தயாராக இல்லை. தவறு செய்துவிட்டதாக நீங்கள் அல்ஸ்கோனி யிடம் சொல்லலாம்."

"என்ன செய்கிறேன் என்று அல்ஸ்கோனி உங்களிடம் சொன்னாரா?" கோட்டைப் பிடித்துக்கொண்டே பேசினார் எங்கெல்மேன் "பரிசோதனை எவ்வளவு முக்கிய மானது என்று தெரியுமா?"

"அவர் என்னிடம் சொல்லிவிட்டார். அறுவைச்சிகிச்சை செய்யும் போது நீங்கள் போதையில் இருப்பீர்கள், அதன் காரணமாகப் பரிசோதனை வெற்றி பெறுவதில்லை என்று அவர் சொன்னார்."

எங்கெல்மேனின் கண்கள் நெருப்பாய் எரிந்தன. திரு.மிக்லெம் உங்களை என்னுடைய அறுவைச் சிகிச்சை

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மேசையில் பார்ப்பதற்காகக் காத்திருக்கிறேன். அதற்கு நீண்ட காலம் ஆகாது என்று நினைக்கிறேன்.''

திரும்பி நடந்து சென்றவர், சமாளித்துக் கொண்டு கரங்களை வழியின் சுவரில் வைத்தபடி சென்றார்.

டான் அதையே பார்த்துக் கொண்டிருந்தார். டானுடைய வாய் உலர்ந்துவிட்டது, இதயம் வேகமாக அடித்துக் கொண்டது.

டானுடைய தங்குமிடத்திற்கு எதிரே இருந்த மரத்தின் நிழலில் வில்லீ உட்கார்ந்திருந்தான். அவன் முகத்தில் வேர்வை ஓடிக் கொண்டிருந்தது.

லோரெலியின் துரோகத்தைத் தெரிவிக்க வேண்டும். ஃபெலிக்சைப் பார்த்துச் சொல்லி விடலாம் என்றுதான் அவன் நினைத்தான். ஆனால் ஜகோபி வரும்வரை இங்கேயே இருக்க வேண்டும் என்பது ஃபெலிக்சின் உத்தரவு. ஃபெலிக்சின் உத்தரவை மீறக்கூடாது. எனவே ஜகோபி வரும்வரை இருந்து பிறகுதான் ஃபெலிக்சை சந்திக்க வேண்டும்.

வில்லீயின் குதர்க்கமான மூளையில் ஒரு யோசனை தோன்றியது. லோரெலி ஃபெ க்சின் ஆள். அவள் துரோகியாகி விட்டாள் என்பது தெரியவந்தால் ஃபெலிக்ஸ் என்ன செய்வான்? தான் சொல்லுவதை ஃபெலிக்ஸ் நம்பாவிட்டால் என்ன நடக்கும்? வெண்கலப் பூண் போட்ட கையுறையை மாட்டிக் கொண்டு அவன் நம்மை அடிக்கலாம். ஒரு முறை ஃபெலிக்சிடம் அடி வாங்கிய வனின் பற்கள் உடைந்ததை வில்லீ பார்த்திருக் கிறான். பயத்தில் வில்லீக்கு உடல் நடுங்கியது.

ஆனால் ஃபெலிக்ஸ் முட்டாளல்ல, தான் சொல்லுவதை நம்புவான் என்ற எண்ணமும் ஏற்பட்டது. இருபது லட்சம் பவுண்டு கைவிட்டுப் போகவும் போலீசை வரவேற்கவும் ஃபெலிக்ஸ் உடன்பட மாட்டான். லோரெலி மீது மயக்கம்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இருந்தாலும் துரோகத்தை மன்னிக்க மாட்டான். ஆனால் ஃபெலிக்சிடம் பேசும்போது கவனமாக இருக்க வேண்டும். துப்பாக்கியையும் பத்திரமாக வைத்துக்கொள்ள வேண்டும். ஃபெலிக்ஸ் பிரச்சினை செய்தால் துப்பாக்கியை எடுக்க வேண்டியதுதான்.

நமக்கு லாபம் அடைய வழி ஏதாவது இருக்கிறதா என்ற கேள்வியும் வில்லீக்கு எழுந்தது. லோரெலி பணத்தைக் கைப்பற்றும் வரை பொறுமையாக இருந்து விட்டு, பிறகு அதில் பாதியைக் கேட்கலாம். நூற்றி இருபத்தைந்து ஆயிரம் டாலர்கள். இது சரியான யோசனை என்று வில்லீ நினைத்தான். ஆனால் இதைச் செயல்படுத்த முடியுமா என்பது சந்தேகம்தான். அல்ஸ்கோனி எப்படியும் லோரெலியைப் பிடித்துவிடுவார். அவருடைய வலையிலி ருந்து தப்பமுடியாது. இந்த இயக்கத்திலிருந்து வெளியேறிய வர்கள் உயிரோடு நடமாடியதில்லை. லோரெலியை மிரட்டிப் பணம் சம்பாதித்தால் அல்ஸ்கோனியோடு விரோதம் ஏற்படும். இது சரி வராது. சிறிது நேர யோசனைக்குப் பிறகு ஃபெலிக்சிடம் சொல்வதுதான் ஒரே வழி என்ற முடிவுக்கு வந்தான் வில்லீ. அதற்குப் பிறகு ஃபெலிக்சின் இஷ்டம். தனக்கு ஒரு வெகுமதி வேண்டுமென்று ஃபெலிக்சிடம் கேட்கலாம். தன்னுடைய தகுதிக்கு அது போதும்.

லோரெலியை நினைத்தால் பரிதாபமாக இருக்கிறது. அவளை எப்படியும் எங்களிடம் சேர்த்து விடுவார்கள். அது அவளுடைய தலைவிதி. அவள் தானாக வம்பை விலைக்கு வாங்குகிறாள்.

வில்லீ ஃபெலிக்சைப் பற்றிச் சிந்திக்கும்போது, ஃபெலிக்ஸ் அல்ஸ்கோனியின் அறையில் இருந்தார். அல்ஸ்கோனியின் கைகள் மேசைமீது இருந்தன.

அந்த விரல்களுக்கு அருகே ஒரு சிறிய தங்கத்தினால் ஆன பட்டன் இருந்தது. அந்த பட்டனை அழுத்தினால்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மேசையின் முன் புறத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் துப்பாக்கியிலிருந்து தோட்டா வெளிப்படும். ஃபெலிக்ஸ் துப்பாக்கிக்கு எதிரே இருந்தான். மிக்லெம்மின் கடிதத்தைக் கொடுத்தாகிவிட்டது. அங்கே எந்தப் பிரச்சினையும் இல்லை. அவனுடைய செயலாளர் இப்போதே நியூயார்க் நகரத்திற்குப் போகிறார். பணம் ஐந்து நாட்களில் ரோமிலுள்ள வங்கிக்கு வந்துவிடும் என்கிறார் அந்தச் செயலாளர்.

அல்ஸ்கோனி விளையாட்டாக அந்தப் பட்டனைத் தடவிப் பார்த்தார். பட்டனை அழுத்தினால் தோட்டா ஃபெலிக்சின் வயிற்றில் பாய்ந்துவிடும் என்ற விவரம் அவருக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியது.

''ஆக, அவர்கள் ஒத்துழைக்கிறார்கள்?''

''ஆமாம்''

''லோரெலி கடிதத்தைக் கொடுத்துவிட்டாள்.''

''ஆமாம்.''

''அவள் தனியாகப் போனாளா?''

''அவளைப் பொறுத்தவரை தனியாகப் போனாள். ஆனால் வில்லீயை அங்கே இருக்கும்படி சொல்லி யிருந்தேன்.''

''போலீசுக்குப் போனால் மிக்லெம் பாதிக்கப்படுவார் என்பதை அவள் சொன்னாளா?''

''அவள் சொன்னதைச் செய்தாள். வேலை நன்றாக முடிந்தது''

''நல்லது'' என்ற அல்ஸ்கோனி தன்னுடைய விரல் நகங்களைப் பார்த்துக் கொண்டார். ''வில்லீ எங்கே?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''அவன் அங்கேயே இருக்கிறான். ஜகோபோ வரும் வரை அங்கேயே இருக்கும்படி சொல்லியிருக்கிறேன்.''

மூக்கின் பக்கத்தில் சொறிந்துகொண்ட அல்ஸ்கோனி ஃபெலிக்சைப் பார்த்தார்.

''ஆக லோரெலி சொல்வதுதான் உனக்குத் தெரியும், வில்லீ என்ன சொல்கிறான் என்பது தெரியாது.''

ஃபெலிக்சுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது.

''எனக்குப் புரியவில்லை. நான் இன்னும் வில்லீயிடம் பேசவில்லை. ஆனால் அது முக்கியமில்லை. நாம் லோரெலியை நம்பக்கூடாது என்கிறீர்களா?''

அல்ஸ்கோனியின் புருவம் உயர்ந்தது.

''இல்லை. ஆனால் எந்தச் செய்தியையும் உறுதி செய்து கொள்ள வேண்டும். ஒருவேளை லோரெலி பயந்திருக் கலாம். அங்கே போகாமல் இருக்கலாம். அவள் போனாள் என்பதை நான் நம்புகிறேன். இருந்தாலும் வில்லீ அதை நிச்சயப்படுத்தினால் அவளுக்கு நல்லது.''

''வில்லீ வெளியே இருந்து கண்காணித்துக் கொண்டிருந் தான். உள்ளே என்ன பேசினார்கள் என்பது அவனுக்குத் தெரியாது.'' அல்ஸ்கோனி தொலைபேசி ரீசிவரை எடுத்தார்.

''கார்லோஸ், ஜகோபை டானுடைய இடத்திற்கு அனுப்பி வை. இவன் போனதும் வில்லீ இங்கே வந்து உடனடியாக என்னைச் சந்திக்க வேண்டும்'' என்று சொல்லி ரிசீவரை வைத்தார் அல்ஸ்கோனி.

''நீ எதையும் கற்பனை செய்யாதே. அது ஆபத்தானது. வில்லீ வரட்டும்.''

ஃபெலிக்சுக்குக் கோபம் வந்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''உங்கள் விருப்பப்படியே நடக்கட்டும்''

''லோரெலி பயப்படுவாள் என்பது நமக்குத் தெரியும். இந்த வேலை ஒருங்காக நடக்கவேண்டும். சீக்கிரமே அவளுக்காக ஒருவேலை வைத்திருக்கிறேன். லண்டனிலிருந்து ஏகப்பட்ட தொகையை இங்கே கொண்டு வரவேண்டும். லோரெலிதான் அதைச் செய்ய வேண்டும்'' மேஜையில் தாளம் போட்டுக் கொண்டே அல்ஸ்கோனி பேசினார். ''அவளை நம்பலாமா? பணம் கரன்சியாக இருக்கிறது. பெரியதொகை. அவள் அதை எடுத்துக் கொண்டு ஓடிப்போகக் கூடாது.''

''அவள் அப்படிச் செய்யமாட்டாள்.'' பெலிக்சுக்கு அல்ஸ்கோனியை நேரடியாகப் பார்க்கத் துணிவில்லை. ''அவளை நம்பலாம். ஆனால் அவளை அங்கே அனுப்ப முடியாது. லண்டன் போலீசார் அவளைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.''

''ஆமாம். அதை நான் மறந்துவிட்டேன். வேறு யாரையாவது அனுப்பலாம். வில்லீயை அனுப்பலாமா?''

''வேண்டாம். தினசரி வேலைகளுக்கு வில்லீ பரவாயில்லை. ஆனால் அவனை நம்பி பணத்தைக் கொடுக்க முடியாது.''

''அப்படியானால் க்ராண்டரால் யாரையாவது அனுப்ப முடியுமா என்று கேட்கிறேன். லோரெலிக்கு வேறு வேலை பார்க்கலாம். அவள் இங்கே சரிப்படவில்லை.'' சற்று நிறுத்திவிட்டு ஃபெலிக்சை உற்றுப் பார்த்த அல்ஸ்கோனி தொடர்ந்தார். ''தென் அமெரிக்காவின் ப்யூனஸ்ஏர்ஸ் நகரில் ஏதாவது தொடங்கலாமா என்று பார்க்கிறேன். அவளை அங்கே அனுப்பலாமா?''

ஃபெலிச்சுக்குத் தலை சுற்றியது. ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்து சமாளித்தார். தாங்கள் பேசுவதை

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அல்ஸ்கோனி கேட்டு விட்டானா அல்லது ஏதேச்சையாக நடக்கிறதா?

''ப்யூனஸ்ஏர்ஸா? எனக்குத் தெரியவில்லை. அவளைக் கேட்கிறேன்.''

''இதை அப்படியே விட்டுவிடு. எனக்கு நேரம் இருக்கும்போது நானே அவளுடன் பேசுகிறேன். அவளோடு பேசி வெகு நாளாயிற்று. சில நேரங்களில் பெண்களை வேலைக்கு வைப்பது சரியா என்று யோசிக்கிறேன். அவர்களால் பயன் இருக்கிறது என்றாலும் அவர்களை நம்ப முடியாது.''

''நீங்கள் லோரெலி மீது நம்பிக்கை இழந்து விட்டீர்கள். அதற்கான காரணம் எதுவும் இல்லை. அவள் இந்த இயக்கத்தின் தொடங்க காலத்திலிருந்தே இருக்கிறாள். அவளை நன்றாக நடத்த வேண்டும். உத்தரவுகளைச் செயல்படுத்துவதில் அவள் சிறப்பாகச் செயல்படுகிறாள்.''

''என்னைவிட நீதான் அவளை சரியாகப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் இந்த மாறுதல் அவளுக்கு நல்லது என்று நினைக்கிறேன், புதிய முகங்கள், புதிய பழக்கங்கள். அவளோடு ப்யூனஸ்ஏர்ஸுக்குப் போய் நீயும் பாத்துக்கிறியா?

''நீங்கள் போகச் சொன்னால் போகிறேன்'' என்றான் ஃபெலிக்ஸ். அவனுக்கு வியர்த்துவிட்டது. ''இங்கேதான் எனக்கு அதிக வேலை இருக்கிறது என்று நினைக்கிறேன். இரண்டு வருடங் களாக நான் இதை நிர்வாகம் செய்கிறேன். இது கடினமான வேலை. என்னுடைய விருப்பம் இங்கேயே இருப்பதுதான்.''

அல்ஸ்கோனி புருவங்களை உயர்த்தினார்.

''லோரெலியை இழந்து விடுவீர்களே, பரவாயில்லையா? உனக்கு அவளோடு பிணைப்பு இருப்பதாக நினைத்தேன்.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"எந்தப் பெண்ணோடும் எனக்குப் பிணைப்பு இல்லை. நீங்கள் அவளை ப்யூனஸ்ஏர்ஸுக்கு அனுப்பப் போகிறீர்களா?"

"இல்லை. அது வெறும் யோசனைதான். லோரெலியால் அந்த வேலையைச் செய்ய முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். இன்னும் கொஞ்சம் யோசிப்போம்" என்ற அல்ஸ்கோனி புறப்படலாம் என்கிற வகையில் கையசைத்தார்.

ஃபெலிக்ஸ் அங்கிருந்து வேகமாக வெளியேறினான்.

பயந்துபோன ஃபெலிக்ஸ், தன்னுடைய அறைக்குச் சென்றான். ஒரு பாட்டில் விஸ்கியை எடுத்து தேவையான அளவு ஊற்றிக் கொண்டான். கையில் கோப்பையைப் பிடித்தபடி உட்கார்ந்து நடந்ததை அலசிப் பார்த்தான்.

அல்ஸ்கோனி எதேச்சையாக ப்யூனஸ்ஏர்ஸ் பற்றிச் சொல்லியிருக்க வேண்டும். லோரெலியின் யோசனைகள் எவ்வளவு பயித்தியகாரத்தனமானவை என்பதைத்தான் இது காட்டுகிறது. ப்யூனஸ்ஏர்ஸ் போன்ற செல்வம் நிறைந்த நகரம் எப்போதாவது அல்ஸ்கோனியின் பார்வையில் படுவது நிச்சயம். மற்றபடி தாங்கள் பேசுவதை அல்ஸ்கோனி கேட்டிருந்தால் அதை இப்படிப் போட்டுக் காட்டியிருக்க மாட்டான். நிச்சயமாக நடவடிக்கை எடுத்திருப்பான். அல்ஸ்கோனியின் செய்முறை அவருக்குத் தெரியும். அது உடனடியாகக் கொடூரமாகச் செயல்படும்.

மதுவை அருந்திவிட்டுக் கோப்பையைக் கீழே வைத்தான். நிலைமையை கவனமாகக் கையாளவேண்டும், ஆனால் ஆபத்தில்லை. தன்னுடைய இடத்தை நிரப்ப வேறு ஆள் இல்லை என்பது முக்கியமான விஷயம். இயக்கம் தானாக நடக்காது என்பதை அல்ஸ்கோனியிடம் சொல்லி விட்டோம். இதில் இரண்டு விஷயங்களைக் கவனிக்க

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வேண்டும், பெலிக்சின் விரல் நுனியில் அத்தனை விவரங்களும் இருந்தன.

தன்னைத் தீர்த்துக்கட்டும் அளவிற்கு அல்ஸ்கோனி முட்டாளல்ல. ஃபெலிக்ஸ் செய்தவேலைகள் எல்லாம் அவன் தலையில் விழுந்துவிடும். இப்போதே நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அல்ஸ்கோனியின் உத்தவுகளை நிறைவேற்றும் கார்லோஸைக் கண்காணிக்க வேண்டும்.

கோட்டுப் பாக்கெட்டில் கை வைத்து .45 துப்பாக் கியைத் தொட ஃபெலிக்சுக்கு தெம்பு வந்தது. கார்லோஸ் பூதமாக இருந்தாலும் .45 அவனை நிறுத்திவிடும்.

இன்னும் கொஞ்சம் மது அருந்திவிட்டு அவன் எழுந்து நின்றான். லோரெலியைப் பார்த்துப் பேச வேண்டும். அவளை மிரட்ட வேண்டும். இயக்கத்தை விட்டுப் போவதை அவள் மறக்கவேண்டும். அது மாதிரிப் பேசுவது ஆபத்தாகிவிடும்.

கண்ணாடியில் பார்த்து கையை சரி செய்து கொண்டான் அவன். தன்னுடைய உருவத்தைப் பார்த்துப் புன்னகைத் தான். உள்ளே போன விஸ்கி ஒரு விதமான பாதுகாப்பைக் கொடுத்தது. அறையை விட்டு வெளியே வந்த போதும் அந்தப் புன்னகை மாறவில்லை. அந்த நேரத்தில் அல்ஸ்கோனி க்ராண்டரோடு பேசிக் கொண்டிருக்கிறார் என்று தெரிந்தால் ஃபெலிக்சின் புன்னகை புறப்பட்டுப் போயிருக்கும். தொலைபேசிக் கம்பி வழியாக வந்த அல்ஸ்கோனியின் குரலைக் கேட்க க்ராண்டர் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்.

''நீ உடனடியாக இங்கே வரவேண்டும். மூன்றாவது வழியில் சரக்கை எடுத்துக்கொண்டு வரவேண்டும். நான் சொல்வது புரிகிறதா?'' என்றார் அல்ஸ்கோனி.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''சரி'' என்றார் க்ராண்டர். அவரால் நடப்பதை நம்ப முடியவில்லை. இப்போதுதான் முதன்முறையாக அல்ஸ்கோனியின் குரலை அவர் கேட்கிறார். அவர் வாழ்க்கையில் இது முக்கியமான கட்டம்.

''இன்று நள்ளிரவில் இங்கு வரவேண்டும். இங்கே சில மாற்றங்களைச் செய்கிறேன். உனக்கு முக்கியமான வேலை இருக்கிறது.''

''நான் வந்துவிடுகிறேன்'' என்ற க்ராண்டரின் முகத்தில் வெளிச்சம் விளையாடியது.

''நல்லது'' என்று சொல்லி, ரிசீவரை வைத்தார் அல்ஸ்கோனி. இன்டர்காமை எடுத்தவர் ''கார்லோஸ், உன்னோடு யார் இருக்கிறார்களா?'' என்று கேட்டார்.

''மெனெட்டோ, திரு.ஃபெலிக்ஸ் மற்றும் மிஸ் லோரெலி ஜகோபோ வில்லீயைப் பார்க்கப் போயிருக் கிறான்.''

''மெனெட்டாவை என்னிடம் அனுப்பி வை. மின்சாரத்தை நிறுத்திவிடு. யாரும் வெளியேறக்கூடாது. உனக்குத் தெரிகிறதா? யாராவது வெளியேற முயற்சி செய்தால் எனக்குச் சொல்ல வேண்டும்.''

''சரி, தலைவா'' என்றான் கார்லோஸ். கார்லோசின் குரலில் இருந்த வியப்பு அல்ஸ்கோனியை சிரிக்க வைத்தது.

இரத்தில் முதுகை சாய்த்தபடி உட்கார்ந்த வில்லீ தனக்குப் பின்புறத்தில் ஏற்பட்ட சத்தத்தைக் கேட்டான். கோட்டின் உள் பாக்கெட்டிலிருந்து .38 துப்பாக்கியை எடுத்தவன் உருண்டபடி துப்பாக்கியை சுடுவதற்குத் தயாராக வைத்தான்.

புதிரிலிருந்து வெளிப்பட்ட ஜகோபோ அப்படியே நின்றான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''உன்னைப் போன்ற முட்டாள்கள் இப்படித்தான் சாகிறார்கள்'' என்ற வில்லீ, ''ஏன் என்னைக் கூப்பிடவில்லை'' என்றான்.

''நான் உன்னைப் பார்க்கவில்லை'' என்றபடி ஜகோபோ நடந்தான்.

''உனக்கு என்ன பிரச்சினை? ஏன் பதறுகிறாய்?'' என்று கேட்டான். அக்குளுக்குக் கீழே இருந்த உறையில் வில்லீ துப்பாக்கியை வைத்தான். அவன் எழுந்து நின்றான்.

''எனக்கு எதுவும் இல்லை. நீ பார்த்துக்கொள்கிறாயா? சீக்கிரமாக வந்து விட்டாயே.''

''தலைவர் உன்னைப் பார்க்க வேண்டுமாம்'' என்றார் ஜகோப். ஜகோபின் கண்களில் ஆர்வம் புலப்பட்டது. ''என்ன விவகாரம்'' என்றான் வில்லீயைப் பார்த்து. வில்லி அவனை முறைத்தான். ''அல்ஸ்கோனியைப் பார்க்க வேண்டுமா?''

''வேறு யார். சீக்கிரமாகப் புறப்படு. உன்னை உடனே பார்க்க வேண்டுமாம். அவர் காத்திருக்கிறார்'' அழுக்குக் கைக்குட்டையால் வில்லீ முகத்தைத் துடைத்துக் கொண்டான். கடந்த இரண்டு வருடங்களில் அவர் ஒரு முறைதான் அல்ஸ்கோனியோடு பேசியிருக்கிறான். ஆர்வமும் பயமும் அதிகமாகிவிட்டது. தன்னுடைய வெகுமதியைப் பெறுவதற்கு இதுதான் சரியான நேரம். ஃபெலிக்சை நம்பியிருக்க வேண்டியதில்லை. லோரெலி விஷயத்தை அல்ஸ்கோனியிடம் நேரடியாகச் சொல்லி விடலாம். எதற்காக என்னைப் பார்க்க வேண்டும்? ஏதாவது தவறு செய்து விட்டோமா? தன்னுடைய தோற்றத்தில் பெருமை காண்பவன் ஜகோப். அவன் வில்லீயைக் கேவலமாகப் பார்த்தான். அன்று காலையில் வில்லீ சவரம் செய்து கொள்ளவில்லை. சட்டை அழுக்காக இருந்தது. கறுப்புக் கோட்டு கறைபடிந்திருந்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''அவரைப் பார்க்கப் போவதற்கு முன் சுத்தம் செய்து கொள். உன்னைப் பார்த்தால் பரதேசி மாதிரி இருக்கிறது.''

''என் தோற்றத்தைப் பற்றிக் கவலைப்படாதே. எதற்காக என்னைப் பார்க்க வேண்டுமாம்.?''

''உனக்குத் தெரியவில்லையா? கடந்த மாதங்களில் நீ எதுவும் உருப்படியாகச் செய்யவில்லை என்பதற்காக உன் பற்களை உடைக்கப் போகிறார். ஒருவேளை உன்னைத் தரும்படியாக டாக்டர். எங்கெல்மேன் கேட்டிருக்கலாம்''

வில்லீ அவனைத் திட்டினான்.

''தலைவரைக் காக்க வைக்காதே. உடனே வா என்று சொன்னால் அதுதான் அர்த்தம்.''

''நான் பயப்படவில்லை. நான் சொல்வதைக் கேட்டால் அவர் எனக்குக் கொட்டிக் கொடுப்பார். அந்தப் பணத்தில் நான் கார் வாங்கியபிறகு நீ அதைப் பார்த்து குரங்கு மாதிரி கூக்குரலிடலாம்.''

''வெய்யில் அதிகமாகி விட்டதா?'' என்றார் ஜகோப்.

''பொறுத்திருந்து பார். என்னிடமிருக்கும் தகவலுக்குத் தலைவர் அள்ளித்தருவார்.''

''என்ன தகவல்?'' என்றார் ஜகோப்.

''தேவைப்பட்டால் அவரே உனக்குச் சொல்வார். கார் எங்கே இருக்கிறது?''

''சற்றுத் தொலைவில் இருக்கிறது. நீ தலைவரிடம் என்ன சொல்லப் போகிறாய்?''

''ஏதாவது ஒரு ஏரியில் குதித்துவிடு'' என்றான் வில்லீ; மரங்களின் வழியாக காரை நோக்கி ஓடினான்.

வாழ்க்கையில் முதல்முறையாக வில்லீ ஓர் கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை. அது ஆபத்தாக முடியப்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

போகிறது. அல்ஸ்கோனி உடனடியாக வரச் சொன்னார் என்பது ஜகோப் கொண்டு வந்த சேதி. ஆனால் அல்ஸ்கோனியிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்பது வில்லீயின் நோக்கம். தன்னுடைய அறைக்குப் போய், ஷேவ் செய்து குளித்து விட்டு, நல்ல கோட்டைப் போட்டுக்கொள்ள வேண்டும். அதில் பத்து நிமிடங்கள் ஆனாலும் நஷ்டமில்லை. புதிய கோட் போடுவதால் நல்ல பலன் கிடைக்கலாம் என்பது வில்லீயின் எண்ணம்.

காரை தொலைவில் வைத்து விட்டு வில்லீ வீட்டின் பின்புறமாக நுழைந்தான். கார்லோஸ் கதவை மூடுவதற்கு சில விநாடிகளுக்கு முன் அவன் பாதாள அறைக்கு வந்து விட்டான். கதவு மூடப்பட்டது என்பதை அறியாத வில்லீ தாழ்வாரத்தின் வழியாக நடந்து தன் அறைக்கு வந்தான். அங்கே கதவைத் திறக்கும் போது ஃபெலிக்ஸ் வந்தான்.

''தலைவர் உன்னைப் பார்க்க வேண்டுமாம். பார்த்து விட்டாயா?''

''இல்லை. முதலில் குளிக்கலாம் என்று நினைத்தேன். என்ன விஷயம்?''

''சீக்கிரமாய்க் குளித்துவிடு. உன்னை உடனே பார்க்க வேண்டும் என்றார்.''

''இந்த உடையில் நான் போக முடியாது. அவருக்கு என்ன வேண்டுமாம்?''

ஃபெலிக்ஸ் அவனை அந்த அறைக்குள் தள்ளினான். ''இது பன்றியை அடைக்கும் இடம் மாதிரி இருக்கிறது.'' ''எனக்கு எதுவும் தெரியவில்லை'' என்றான் வில்லீ; கோட்டைக் கழட்டி துப்பாக்கி இருக்கும் உறையை நாற் காலியில் மாட்டினான்; பிறகு சட்டையைக் கழற்றினான். டாய்லட் பேசினில் கொதி நீரைத் திறந்து விட்ட வில்லீ ''எனக்கு எதுவும் பிரச்சினை இல்லையே?'' என்று கேட்டான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''இல்லை. லோரெலி அந்தக் கடிதத்தைக் கொடுக்கும் போது அங்கே என்ன நடந்தது என்பது தெரிய வேண்டு மாம்.''

வில்லீயின் கையிலிருந்த சோப் நழுவிவிட்டது. தலைவனுக்குத் தெரியாதது எதுவுமில்லையோ என்று நினைத்தான் வில்லீ.

வில்லீயின் விபரீத முகபாவத்தைப் பார்த்ததும் ஃபெலிக்சுக்கு சந்தேகம் வந்துவிட்டது.

''நீ லோரெலியைப் பார்த்தாயா?'' என்று கேட்டான்.

''அவளைப் பார்த்தேன், கேட்டேன்'' என்று வில்லீ அதிலிருந்த எக்காளத்தை மறைக்க முயன்றான். முகத்தை நீரால் கழுவி, சோப்பு நுரையைப் பூசினான்.

''அவள் உன்னைப் பார்க்கவில்லையா?''

''இல்லை. வில்லீ தயங்கினான். ஃபெலிக்சிடம் சொல்லலாமா என்பதில் அவனுக்குத் தயக்கம். ஃபெலிக்சை எதிரியாக்க விரும்பவில்லை அவன். லோரெலியின் காலத்திற்குப் பிறகும் அவர்கள் இணைந்து வேலை செய்ய வேண்டும், பெலிக்சுக்குத் தெரிவிக்காமல் அல்ஸ் கோனியிடம் பேசினால் ஃபெலிக்ஸ் தன்னை மன்னிக்க மாட்டான் என்று வில்லீக்குத் தெரியும். அல்ஸ்கோனி தனக்காகக் காத்திருக்கும்போது ஃபெலிக்சிடம் பயப்படத் தேவையில்லை. ஃபெலிக்சிடம் சொல்லிவிடலாம். ஃபெலிக்சின் முகத்தில் ஏற்படும் உணர்ச்சியை வில்லீ பார்க்க விரும்பினான். ''அவள் என்னைப் பார்த்திருந்தால், அவள் இங்கே வந்திருக்க மாட்டாள்'' என்றான் வில்லீ. வில்லீ துப்பாக்கியை எடுப்பதற்குள் ஃபெலிக்ஸ் பாய்ந்துவிட்டான், வில்லியின் குரல்வளையைப் பிடித்து தலையைச் சுவரில் மோதினான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''என்ன சொல்கிறாய்?'' என்று உறுமினான் ஃபெலிக்ஸ். ஃபெலிக்ஸ் கைகளைப் பிடித்து தன்னை விடுவிக்க முயன்றான் வில்லீ, சோப்பு நுரை சிதறிவிட அவனுடைய முக வண்ணத்தை கிழித்தது. பிறகு ஃபெலிக்ஸ் பிடியைத் தளர்த்தி, ''என்ன சொல்கிறாய்'' என்று மீண்டும் கேட்டான். வில்லீ மூச்சு விட்டுக் கொண்டான்.

''என்னை விட்டு விடு. நான் தலைவரிடம் சொல்லி விடுவேன். என்னை விட்டுவிடு.''

ஃபெலிக்ஸ் அவனை ஓங்கி அறைந்தான். சோப்பு நுரை அறையெங்கும் சிதறியது.

''அவள் ஏன் இங்கே வரமாட்டாள். அதைச் சொல்லிவிடு. இல்லாவிட்டால் நான் அடிக்கிற அடியில் உன் பற்களை நீயே விழுங்கிவிடுவாய்'' என்றான் ஃபெலிக்ஸ்.

''அவள் நமக்குத் துரோகம் செய்துவிட்டாள்'' என்றான் வில்லீ, அவனுடைய கண்களில் வலி தெரிந்தது.

கையை ஓங்கிய ஃபெலிக்ஸ் அடிக்காமல் நிறுத்தினான். ''பொய் சொல்லும் நாயே'' என்றான்.

''அவள் பேசியதை நான் கேட்டேன்'' என்றான் வில்லீ ''இந்த இயக்கத்திலிருந்து வெளியேற வேண்டும். அவளுக்குப் பணம் வேண்டும். இருநூற்று ஐம்பது நூறாயிரம் டாலருக்கு மிக்லெம் தப்பிக்க உதவி செய்கிறேன் என்று சொன்னாள் அவள்.''

லோரெலி சொன்னது ஃபெலிக்சுக்கு ஞாபகம் வந்தது. விரைவில் நாம் இருவரும் இங்கிருந்து தப்ப வேண்டும். எப்படியும் போலீஸ் நம்மைப் பிடித்துவிடும். நாம் தப்பிக்க வேண்டும்.

பயித்தியக்காரி. இது ஒரு தற்கொலை முயற்சி.

வில்லீயை விட்டு விலகினான் ஃபெலிக்ஸ்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''அவள் சொல்வதை நீ கேட்டாயா?''

வில்லீ முகத்திலிருந்த நுரையைத் துடைத்துக்கொண்டான்.

''ஆமாம். என்னை அடிப்பதற்கு உனக்கு உரிமை இல்லை.''

''நடந்ததை முழுமையாகச் சொல்.''

லோரெலி மாளிகைக்குள் நுழைந்ததையும் தான் அவளைப் பின் தொடர்ந்ததையும் வில்லீ கூறினான். ''நீங்கள் சொன்னதை நான் செய்தேன். அந்த அறையில் மூன்று பேர் இருந்தார்கள். அன்றிரவு இங்கிருந்து தப்பியவன், சொர்ரி என்ற குண்டன் தவிர ரிக்பி என்ற பெண். அவள் உடனே நியூயார்க் நகரத்திற்குப் புறப்படுவதாகச் சொன்னாள். அப்போது லோரெலி புதிதாக ஒன்று சொன்னாள். மிக்லெம்மை விடுவிக்க மாட்டார்கள். மொத்த பணத்தையும் வசூலித்து விடுவார்கள் என்றாள். அவர்கள் இருநூற்றி ஐம்பது ஆயிரம் டாலர் தருவதற்கு ஒப்புக்கொண்டால் மிக்லெம்மைக் காப்பாற்ற உதவுவேன் என்றாள் அவள்.''

''அவர்கள் ஒப்புக்கொண்டார்களா?''

''ஆமாம், ஒப்புக்கொண்டார்கள். ஆனால் அவள் அந்தப் பணத்தைப் பார்க்கப் போவதில்லை. மிக்லெம் தப்பிப்பதற்கான திட்டத்தோடு வியாழக்கிழமை இரவு வருவதாகச் சொல்லியிருக்கிறாள். எச்சரிக்கை மணி இருக்கும் இடத்தையும் காவலாளிகள் இருக்கும் இடத்தையும் சொல்லப் போகிறாள்.''

ஃபெலிக்ஸ் நெருங்கி வந்தான், அவனது முகத்தில் வியர்வைத் துளிகள்.

''வில்லீ நீ பொய் சொன்னால் உன்னைக் கொன்று விடுவேன்.'' வில்லீ பின்நோக்கி நகர்ந்தான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''நான் உண்மையைத்தான் சொல்கிறேன்'' என்று வில்லீ முனகினான்.

ஃபெலிக்ஸ் கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

''அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்? போலீசிடம் சொல்லப் போகிறார்களா?''

''இல்லை. போலீசுக்குப் போக மாட்டோம் என்று லோரெலியிடம் சொல்லியிருக்கிறார்கள்.

ஃபெலிக்ஸ் வில்லீயை விட்டு நகர்ந்தான்.

''இதைப் பற்றி யாரிடமும் சொல்லவில்லையே?''

''இல்லை.''

''ஜோபியிடம் சொல்லவில்லையே?''

''இல்லை. அவனுக்கு இதில் சம்பந்தமில்லை.'' வில்லீக்கு இப்போது கொஞ்சம் தெம்பாக இருந்தது. சவர பிளேடை எடுத்து ஷேவ் செய்யத் துவங்கினான். ''தலைவர் நிச்சயமாக மகிழ்ச்சி அடைவார். அவரிடம் சம்பள உயர்வு கேட்கப் போகிறேன். கட்டாயமாகக் கிடைக்கும்.''

வில்லீ சொல்வதைப் ஃபெலிக்ஸ் கேட்கவில்லை. இதோடு லோரெலியின் கதை முடிந்தது என்று அவன் நினைத்தான். அல்ஸ்கோனி அவளை எங்கெல்மேனிடம் ஒப்படைத்து விடுவான். லோரெலியின் மீது தனக்குள்ள பிடிப்பு அப்போதுதான் அவனுக்குத் தெரிந்தது. அதோடு தன் கதையும் முடிந்துவிடும். தனக்கு சம்பந்தமில்லை என்பதை அல்ஸ்கோனி நம்பமாட்டான்; தான் லோரெலியைத் தூண்டிவிட்டதாக நினைப்பான். முகத்தைக் கழுவிக் கொண்டிருந்த வில்லீயைப் பார்த்தான். ஃபெலிக்ஸ் வில்லீக்கு ஆசை காட்டி வாயை அடைக்க தன்னிடம் எதுவும் இல்லை. அது அவனுக்குத் தெரியும். வில்லீ ஒரு மிருகம், அவனை நம்ப முடியாது. எதைக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கொடுத்தாலும் வாங்கிக் கொண்டு அல்ஸ்கோனியிடம் விஷயத்தைக் கக்கிவிடுவான். லோரெலியைக் காப்பாற்ற வேண்டுமென்றால் வில்லீயின் வாயை மூடவேண்டும், அதாவது நிரந்தரமாக.

துண்டில் முகத்தைத் துடைத்துக்கொண்டே வில்லீ கேட்டான். ''அவளுடைய கதி என்னாகும்? எங்கெல்மேனிடம் கொடுத்துவிடுவார்களா?''

ஃபெலிக்ஸ் தோளசைத்தான்.

''எனக்குத் தெரியாது. எனக்குக் கவலையில்லை. அவளே அதை உருவாக்கினாள்.''

வில்லீ ஆமோதித்தான்.

''நானும் அப்படித்தான் நினைத்தேன். அவளுக்கு என்ன நடந்தாலும் எனக்குக் கவலையில்லை. தலைவரிடம் நான் போனால் கேட்கலாமா?'' டிராயரைத் திறந்த வில்லீ, சுத்தமான சட்டை ஒன்றை எடுத்தான். ''பிளாரன்சில் ஒரு காரைப் பார்த்தேன். தலைவர் சம்மதித்தால் அதை வாங்கி விடுவேன்.''

''அவர் நிச்சயமாகக் கொடுப்பார்.'' என்றபடியே நடந்த ஃபெலிக்ஸ் வில்லீயின் துப்பாக்கி இருக்குமிடத்திற்கு வந்தான். வில்லீக்கும் துப்பாக்கிக்கும் நடுவில் அவன் நின்றான். ''அவரை சிரமப்படுத்தாதே. அவர் கொடுக்க மாட்டார் நான் அவரிடம் பேசுகிறேன்.''

வில்லீக்கு தெம்பு வந்துவிட்டது.

''செய்வீர்களா? மிகவும் நல்லது. இனிமேலாவது நான் பட்ட கஷ்டத்திற்குப் பலன் இருக்கும்.''

ஃபெலிக்சின் கை பின்னால் சென்றது. அவன் விரல்கள் துப்பாக்கியைப் பிடித்து எடுத்தன. துப்பாக்கியை குழல் பகுதியில் பிடித்துக் கொண்டான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''நீ சீக்கிரம் புறப்படு. தலைவரைக் காக்க வைத்தால் உனக்கு எதுவும் கிடைக்காது.''

வில்லீ சட்டையை மாட்டிக் கொண்டான்.

''ஆமாம். இப்போதே நேரமாகிவிட்டது.''

கண்ணாடியைப் பார்த்து வில்லீ தலைவாரிக் கொண்டான். ஃபெலிக்ஸ் முன் நோக்கி நகர்வதை அவன் கண்ணாடியில் பார்த்தான். இருவரின் கண்களும் சந்தித்தன. ஃபெலிக்சின் முகபாவம் அவனை மிரட்டியது. கத்துவதற்காக வாயைத் திறந்தான். ஆனால் அதற்குள் துப்பாக்கியால் தலையில் அடிக்கப் பட்டு கீழே விழுந்தான். டாய்லெட் பேசின் மீது மோதினான். அந்த உடலிலிருந்து உயிர் பிரிந்துவிட்டது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அத்தியாயம் பதினொன்று

பாதாள அறை

எங்கெல்மேன் வெளியேறிய பிறகு டான் பத்து நிமிடங்கள் காத்திருந்தார்; காலிலிருந்த பட்டையைக் கழற்றிவிட்டு எழுந்து நின்றார். இது ஆபத்துதான் என்று தெரிந்தாலும் அவரால் சும்மாயிருக்க முடியவில்லை.

குகையை விட்டு சுரங்க வழிக்கு வந்தார் அவர். இருட்டில் எதுவும் தெரியவில்லை. ஆனால் அவருக்கு அதிர்ஷ்டம் இருந்தது. சுவரின் மேல்பகுதியில் ஏதோ ஒரு உலோகம் பளிச்சிட்டது. சிகரெட் லைட்டரை எடுத்துக் கொளுத்தியவர் அதை ஆராய்ந்தார். அங்கே நீளமான டார்ச்லைட் ஒன்று தொங்கவிடப் பட்டிருந்தது. மின்சார சப்ளை இல்லாதபோது பயன்படுத்துவதற்காக வைத்திருக் கலாம். டார்ச் லைட்டை எடுத்து பட்டனை அழுத்தினார். அந்த ஒளி பிரகாசமாக வெகு தூரத்திற்கு வீசியது. பாட்டரிகள் புதியதாக இருக்க வேண்டும். சுரங்க வழியில் நுழைந்து இடது பக்கம் இருந்த செங்குத்தான பாதையைக் கடந்தார். ஐம்பது முழம் சென்ற பிறகு முடிவில் ஒரு எஃகுக் கதவு வழியை அடைத்தது. கதவிற்கு அருகே இருந்த ரப்பர் பட்டனை பலமுறை அமுக்கியும் பலனில்லை. பாறைச் சுவரில் பொருத்தப் பட்டிருந்த கதவை அசைக்க முடியவில்லை. திரும்பி, செங்குத்தான பாதைக்கு வந்தார். அதில் ஏறினார். தாழ்வாரத்திற்குச் செல்லும் கதவை அடைந்தார். லோரெலி சொன்னபடி எங்கெல்மேனின்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பரிசோதனைக் கூடமும், கன்ட்ரோல் அறையும் அங்கு தான் இருக்கவேண்டும். கதவுக்கருகே இருந்த ரப்பர் பட்டனை அழுத்தினார். க்ளிக் சத்தத்திற்குப் பிறகு கதவு நகர்ந்தது. தாழ்வாரத்தில் நல்ல வெளிச்சம். அங்கே போகலாம் என்ற யோசனையை அவர் ஒத்திவைத்தார். தேவைப்படும் போது கன்ட்ரோல் அறைக்குச் செல்லலாம். ஆனால் இது அதற்கான நேரமல்ல. லோரெலி வரும் வரை காத்திருக்க வேண்டும். கதவைச் சாத்தி விட்டு இறங்கி வந்து சுரங்க வழிக்குச் சென்றார் அவர்.

சுரங்க வழியை ஆராய்ந்த அவருக்கு ஒரு ஆச்சரியம். தரையிலிருந்து குறிப்பிட்ட உயரத்தில் ஆங்காங்கே இருபது அடி தொலைவில் நடுவில் பிடிகள் இருந்தன. பிடியை அசைத்து தட்டை உள்ளே திருப்ப முடிந்தது. அந்த வழியாக சுவரின் மறு பக்கத்தில் இருந்த அறையைப் பார்க்க முடிந்தது. அலுவலகம் போலிருந்த அந்த அறையில் ஒருவருமில்லை. டான் தட்டை மூடினார். அடுத்த தட்டு இருந்த இடத்திற்குச் சென்று அந்தப் பிடியை அசைத்தார். அதன் வழியாக லோரெலியின் படுக்கையறையைப் பார்க்க முடிந்தது.

லோரெலி மேசைக்கருகே உட்கார்ந்திருந்தாள். அவளிடம் பேப்பரும் பென்சிலும் இருந்தன. பாதாள அறையின் பாதுகாப்புகள் பற்றிய வரைபடத்தை அவள் தாயார் செய்து கொண்டிருந்தாள்.

அவளைக் கூப்பிடலாமா என்று யோசித்தார். அதற்குள் படுக்கையறையின் கதவு தட்டப்பட்டது. அதிர்ச்சியடைந்த லோரெலி பென்சிலைக் கீழே போட்டாள். காகிதத்தை மேசை டிராயருக்குள் வைத்தாள்.

கதவு வேகமாகத் தட்டப்பட்டது. "கதவைத்திற நான் உன்னோடு பேச வேண்டும்."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''வருகிறேன்'' என்றாள் லோரெலி. தலையைச் சரி செய்து கொண்டு பட்டன்களைப் போட்டுக்கொண்டு கதவைத் திறந்தாள். ''நான் உடைமாற்றிக் கொண்டிருந்தேன்.'' உள்ளே வந்த ஃபெலிக்ஸ் கதவைச் சாத்தினான். ''நீ உடைமாற்றும் போது கதவைத் தாளிடும் பழக்கமில்லையே.'' ''கவனக் குறைவாக சாவியைத் திருப்பி விட்டேன்'' என்றவள் கண்ணாடிக்கருகே உட்கார்ந்து தலை வாரத் தொடங்கினாள்.

''என்ன விஷயம்?'' என்றாள்.

ஃபெலிக்ஸ் படுக்கையில் உட்கார்ந்தான். ஒரு சிகரெட்டைக் கொளுத்தி புகையை மேலே விட்டான்.

''டான் வீட்டில் என்ன நடந்தது என்று அல்ஸ்கோனி கேட்டார்.''

கையிலிருந்த சீப்பு கீழே விழுந்தது; லோரெலி மற்றொரு சீப்பை எடுத்துக்கொண்டாள்.

''எதுவும் பிரச்சினை இல்லாமல் முடிந்து விட்டதே என்று அவர் யோசிக்கிறார். உனக்கு எதுவும் பிரச்சினையில்லை என்று அவரிடம் சொன்னேன். சரிதானே?''

''அப்படித்தான். நடந்ததை உன்னிடம் சொல்லிவிட்டேன். அதை மீண்டும் ஒரு முறை சொல்ல வேண்டுமா?''

''ஆக ஐந்து அல்லது ஆறு நாட்களில் ரோமில் உள்ள வங்கிக் கணக்குக்குப் பணம் சேர்க்கப்படும்.''

''ஆமாம். அதைத்தான் மிக்லெம்மின் செயலர் கூறினாள். லோரெலி தலைசீவி முடிந்துவிட்டாள். கைப்பையை எடுத்தவள் அதிலிருந்த சிகரெட்டைப் பற்ற வைத்தாள். கைப்பையில் இருந்த .25 துப்பாக்கியை ஃபெலிக்ஸ் பார்த்துவிட்டான். ''நல்லது'' என்ற ஃபெலிக்ஸ் எழுந்து கொண்டான். தலைவருக்கு இன்னமும் உன்மீது சந்தேகம்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இருக்கிறது. ஆனால் நீ இந்த வேலையை சிறப்பாகச் செய்திருப்பதாக அவரிடம் சொன்னேன். உன்னுடைய புத்திசாலித்தனத்தைப் பாராட்டி உனக்கு ஒரு புதுக் கைப்பையைப் பரிசளிக்கலாம் என்று நினைக்கிறேன்'' என்று பழைய கைப்பையை எடுத்துக் கொண்டான். ''இது மிகவும் பழசாகிவிட்டது.''

''அதைக் கீழே வைத்துவிடு'' என்றாள் லோரெலி.

ஃபெலிக்ஸ் அவளைப் பார்த்தான். ''நீ ஏன் பயப்படுகிறாய். நல்ல சிறுத்தைத் தோலில் செய்யப்பட்ட பையை வாங்கித் தருகிறேன்'' என்று சொல்லியபடி பையிலிருந்த .25 துப்பாக்கியை எடுத்தான்.

லோரெலி அசையவில்லை. அவளுடைய கண்கள் பெரியதாக விரிந்தன.

''இந்த மாதிரிப் பொருளை வைப்பதால் பை கெட்டு விடும்'' என்ற ஃபெலிக்ஸ் பையை மேசையில் வைத்தான். வலதுகையிலிருந்த துப்பாக்கி லோரெலியின் கால்களைப் பார்த்தபடி

அவள் எதுவும் பேசவில்லை; விறைப்பாக இருந்தாள், கைகள் கால்களுக்கு உள்ளே இருந்தன.

''இது நல்ல உபகரணம். கிட்டத்தில் அதிகமான சேதத்தை உண்டாக்கும்'' என்ற ஃபெலிக்ஸ், க்ளிப்பை வெளியில் எடுத்து ஆறு தோட்டாக்களையும் கைகளில் கொட்டிக் கொண்டான். இன்னொரு தோட்டாவையும் எடுத்தான். தோட்டாக்கள் இல்லாத துப்பாக்கியை மேசை மேல் வைத்தான். ஏழு தோட்டாக்களையும் பக்கத்தில் வைத்தான்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்தாள் லோரெலி, அவளுடைய இதயம் வேகமாக அடித்துக்கொண்டது, மூச்சு விடுவது சிரமமாக இருந்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''உனக்குப் புதிய கைப்பை வாங்க வேண்டும்'' என்ற ஃபெலிக்ஸ் படுக்கையில் உட்கார்ந்தான்.

லோரெலியின் உடல் நடுங்கியது. தன்னுடைய துரோகத்தை ஃபெலிக்ஸ் கண்டு பிடித்துவிட்டானோ என்ற பயம்விட்டது. அவன் துப்பாக்கியை எடுத்த உடனேயே அவளுடைய நடுக்கம் ஆரம்பமாகிவிட்டது. சமாளிப் பதற்காக விரல்களில் நகப்பாலிஷ் போடத் துவங்கினாள்.

அந்த அறையில் அமைதி நிரம்பியிருந்தது. ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தாள். ஃபெலிக்ஸ் பின்னால் சாய்ந்திருந் தான். தலை சுவரில் சாய்ந்தபடி, கூரையைப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த முக பாவத்தைப் பார்த்தவுடன் அவளுடைய இதயத்துடிப்பு அதிகமாயிற்று.

''உன்னைப் பற்றிக் கவலைப்படுகிறேன் நான்'' என்றான் அவன் திடீரென்று. ''யாரைப் பற்றியும் கவலைப் படுவது எனக்குப் புது அனுபவம். ஆனால் நான் உன்னைப் பற்றியும் கவலைப் படுகிறேன்.''

''என்ன சொல்கிறாய்? கவலைப்படுவதற்கு என்ன இருக்கிறது?'' என்றாள் அவள்.

''வினோதமான விஷயம். நான் கவலைப்படும் ஒரே பெண்மணி நீதான். உன்னை முதலில் பார்த்தபோது இவ்வளவு ஆசை ஏற்படும் என்று நினைக்கவில்லை. நான் உன்னை விரும்புகிற அளவுக்கு நீ என்னை விரும்புகிறாயா என்று சந்தேகமாக இருக்கிறது. என்ன சொல்கிறாய்?

உலர்ந்து போன உதடுகளை அவள் ஈரமாக்கிக் கொண்டாள். அவனுடைய முகபாவம், அபூர்வமான அந்த வார்த்தைகள் எல்லாம் ஏதோ அசம்பாவிதமாக அவளுக்குத் தெரிந்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

"நீ உணர்ச்சி வசப்படுகிறாய். காதலை அளக்க முடியாது. யார் யாரை அதிகமாகக் காதலிக்கிறார்கள் என்பதை எப்படி அறிந்து கொள்வது."

அவன் சிகரெட்டை அணைத்தான்.

"ஆமாம். அது சரிதான். ஆனால் நீ என்னைக் காதலிக் கிறாய் என்பது சரிதானே?"

"நிச்சயமாக"

அவன் அவளைப் பார்த்தான்.

ஃபெலிக்ஸ் என்ன விஷயம்? என்னை ஏன் அப்படிப் பார்க்கிறாய்? என்ன நடந்தது?

"ப்யூனஸ்ஏர்ஸ் போக வேண்டுமென்று சொன்னாய் அல்லவா? அதைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். அங்கே போவதென்றால் பணத்திற்கு என்ன செய்வது?

லோரெலி அவனைப் பார்த்தாள்.

"ஆனால் நீ வேண்டாமென்று சொல்லியது..."

"என் மனது மாறலாம் அல்லவா? நமக்குக் கொஞ்சம் பணம் கிடைத்தால்..." நிறுத்திவிட்டு உடலைக் குலுக்கிக் கொண்ட ஃபெலிக்ஸ் தொடர்ந்தான். மறைந்து வாழ் வதற்கு நிறைய பணம் தேவை. டிக்கெட்டுக்கும் பணம் வேண்டும். விமானக் கட்டணத்திற்குப் பணம் வேண்டும்."

"விமானக் கட்டணத்திற்கான பணத்தை வைத்திருக் கிறேன். என்னுடைய சேமிப்பு அது. அங்கே நாம் சம்பா தித்துக் கொள்ளலாம்."

ஃபெலிக்சின் முகம் இறுகியது.

"உன்னிடம் எவ்வளவு பணம் இருக்கிறது?"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''ஐந்து லட்சம் டாலர் இருக்கிறது போய் ஒருமாதம் வரை நாம் சமாளிக்கலாம். அதற்குள் வேறு வேலை பார்க்கலாம்.''

பெலிக்ஸ் தலையை ஆட்டினான்.

''அது போதாது. அல்ஸ்கோனி நமக்காக வேட்டை ஆடுவான். பத்திரமாக இருப்பதற்கு இதைவிட அதிகமான பணம் தேவை. நீ வேலைக்குப் போக முடியாது. அவருடைய ஒற்றர்கள் எல்லா இடத்திலும் இருக்கிறார்கள். உன்னைப் பார்த்துவிடுவார்கள்.''

''அது போதும் ஃபெலிக்ஸ் என்னோடு வந்துவிடு.'' முன் பக்கமாக நகர்ந்து தன்னுடைய கைகளால் முட்டியில் அடித்துக் கொண்டாள் அவள். ''நீ கட்டாயமாக என்னுடன் வர வேண்டும்.''

''நான் வராவிட்டால் நீ தனியாகப் போவாயா?''

அவளைப் பார்க்காமல் ஃபெலிக்ஸ் கேட்டான்.

வெகுநேரமாக பதிலில்லை. தன்னுடைய பதற்றத்தை அடக்கிக் கொண்டு அவள் பேசினாள். ''இல்லை. உன்னை விட்டுப் போக மாட்டேன். நீ கட்டாயமாக வரவேண்டும்.''

ஃபெலிக்ஸ் எழுந்து நின்றார்.

''என்னுடைய ஒரு கேள்விக்காவது விடை கிடைத்துவிட்டது. நீ என்னை எவ்வளவு விரும்புகிறாய் என்று தெரிந்துவிட்டது.''

''நீ அதைத் தெரிந்துகொண்டால் நல்லது'' என்றாள் லோரெலி. அவன் அவளை நெருங்கினான்.

''ஆக, டான் வீட்டில் நீ வில்லியைப் பார்க்கவில்லை?'' என்று சாதாரணமாகக் கேட்டான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

முதலில் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு பனிக் கட்டியால் செய்யப்பட்ட கத்தியை நெஞ்சில் செருகியது போலிருந்தது. அவள் ஃபெலிக்சை உற்றுப் பார்த்தாள்; மேக்கப்பை மீறி அவளுடைய முகம் வெளிறிவிட்டது; கண்கள் பயத்தில் விரிந்து விட்டன.

''வில்லீ!'' அவள் பதறினாள். ''வில்லீ அங்கே வந்தானா?''

''வந்தான். பாதுகாப்புக்கு ஆள் இல்லாமல் உன்னை அங்கே அனுப்ப முடியுமா?''

தப்பிப்பதற்கு ஏதாவது வழி இருக்கிறதா என்று அவள் தேடினாள்.

''வில்லீ வந்து விட்டான்'' அவளைப் பார்த்தபடியே ஃபெலிக்ஸ் பேசினான். ''அல்ஸ்கோனி அவனுக்காகக் காத்திருக்கிறான். டானுடைய விவகாரத்தில் எதுவும் வில்லங்கம் இல்லை என்பது நீ சொன்னதை வில்லீ உறுதிப்படுத்த வேண்டும்.''

லோரெலி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''பயித்தியக்காரி'' என்ற ஃபெலிக்சின் குரல் ஓங்கி ஒலித்தது. ''தப்பிவிடலாம் என்று கற்பனை செய்யாதே'' அவளை நெருங்கி சுவரில் வைத்து அழுத்தினான். அவளுடைய தோள்களில் கைவைத்து அழுத்தினான். அவனுடைய விரல்கள் அங்கே இறங்கின. ''நீ சொன்னதை எல்லாம் வில்லீ கேட்டு விட்டான்''

லோரெலி தடுமாறினாள். அவனுடைய பிடியில் இருந்ததால் கீழே விழவில்லை. அவளை இழுத்து வந்து படுக்கையில் போட்டான். கைகளை மூடியபடி எதிரே நின்றான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''முட்டாளே, என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா?'' என்றான் அவன் கோபத்துடன். ''இருநூற்று ஐம்பது ஆயிரம் அந்தப் பணம் உன்னிடம் வந்து சேருமா?''

லோரெலி உடலைக் குறுக்கிக் கொண்டாள்.

''எனக்கு வேறு வழியில்லை. அவர்கள் பணம் கொடுத்து விடுவார்கள். நாம் தப்பிப்பதற்கு இதுதான் ஒரே வழி. அந்தப் பணம் நம் இருவருக்கும்தான்.''

''அப்படியே நீ அதைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்ற வாய்ப்புக் கொடுத்தேன். ஆனால் நீ வாயைத் திறக்க வில்லை. நீ என்னை விட்டுப் போக மாட்டேன் என் கிறாய். ஆனால் ப்யூனஸ்ஏர்ஸ் போவதற்கான ஏற்பாடு களைச் செய்கிறாய். உன்னால் தப்பிக்கமுடியுமா? படகு இருக்கும் இடம் வரை கூட உன்னால் போகமுடியாது; சியென்னாவை விட்டு வெளியேற முடியாது.''

அவள் எழுந்தாள்; பயத்தில் பாதி உயிர் போய்விட்டது.

''நீ என்னைக்காட்டிக் கொடுக்க மாட்டாய்'' படுக்கையை விட்டு இறங்கி முட்டி போட்டவள் அவனுடைய கைகளைப் பிடித்துக் கொண்டாள். ''ஃபெலிக்ஸ், என்னைக் காதலிப்பதாகச் சொன்னாயே, நீ காட்டிக் கொடுக்க மாட்டாய். அவன் என்ன செய்வான் என்பது உனக்குத் தெரியும்.

லோரெலியின் பயத்தைப் பார்த்து டானுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

ஃபெலிக்ஸ் கையை உதறிவிட்டு விலகினான்.

நீ ப்யூனஸ்ஏர்ஸ் போக விரும்புகிறாயா என்று அல்ஸ்கோனி கேட்டார். அங்கே தொழிலைத் தொடங்கப் போகிறாராம். நீ போகிறாயா?

லோரெலி கண்களை மூடிக் கொண்டாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''அவருக்குத் தெரியுமா?''

''இருக்கலாம். உன்னுடைய யோசனை எவ்வளவு முட்டாள் தனமானது என்பதைத் தெரிந்துகொள்.''

''நாம் வேறு இடத்தைத் தேடலாம். எத்தனையோ இடங்கள் இருக்கும்.''

''முட்டாள் தனமாகப் பேசாதே. நீ எங்கேயும் போக முடியாது.''

''நீ தலைவனிடம் சொன்னால் நான் உயிரை விட்டு விடுவேன். எங்கெல்மேன் என்னைத் தொடும் வரை காத் திருக்க மாட்டேன்.''

''நல்ல நாடகம்'' ஃபெலிக்ஸ் உறுமினான். ''தற்கொலை செய்து கொள். அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை.''

படுக்கை மேல் கைகளை வைத்து அதன் மேல் தலையை வைத்து அவள் அழுதாள்.

ஃபெலிக்ஸ் சிகரெட்டைக் கொளுத்தினான். கைகளின் ஆட்டத்தில் அதற்கு சிறிது நேரம் ஆனது.

''போதும் நிறுத்து. நான் சொல்லப்போவதில்லை. இதைச் செய்வதற்கு நான் பயித்தியகாரனாக இருக்க வேண்டும். ஆனால் நான் சொல்லமாட்டேன்.''

அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

''சொல்ல மாட்டாயா?''

''ஆமாம். அழுகையை நிறுத்து.''

ஆனால் வில்லீக்குத் தெரியுமே. அவனை நம்ப முடியாது. அவன் அல்ஸ்கோனியிடம் சொல்லிவிடுவான்.

ஃபெலிக்சின் பற்களில் உற்சாகமில்லாத புன்னகை உருவானது. ''விஷயம் வெளியாவதற்கு எவ்வளவு நேர

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மாகும் என்று யோசித்தேன். வில்லீயின் வாயை மூடி விட்டேன்.''

''ஆனால் அவனை நம்ப முடியாது...'' என்ற லோரெலி பெலிக்சின் வார்த்தையைப் புரிந்து கொண்டாள். வாயெடுத்து அலறாமல் அடக்கிக் கொண்டாள்.

''அவன் வாயை நிரந்திரமாக மூடிவிட்டேன். இப்போது நாம் இருவரும் இதில் தலையைக் கொடுத்துவிட்டோம். வில்லீயின் ரிப்போர்ட்டுக்காக அல்ஸ்கோனி காத்திருக் கிறான். வில்லீ என் அறையில் இருக்கிறான், அவன் தலையைப் பிளந்துவிட்டேன். உனக்குத்தான் மூளை அதிகம். இங்கிருந்து தப்புவது எப்படி?''

''வில்லீயைக் கொன்றுவிட்டாயா?'' லோரெலி அலறினாள்.

''வேறு என்ன செய்வது? உன்னிடம் இப்போது எவ்வளவு பணம் இருக்கிறது?''

''தெரியவில்லை அதிகமாக இருக்காது.''

கைப்பையை எடுத்த ஃபெலிக்ஸ் அதை மேசைமேல் கவிழ்த்துக் கொட்டினார்.

''ஐயாயிரம் டாலர்தான் இருக்கிறதா?''

''ஆமாம்''

''வங்கியில் எவ்வளவு இருக்கிறது?''

''ஐந்து லட்சம் டாலர் இருக்கிறது என்று சொன் னேனே.''

''என்னிடம் நாற்பது லட்சம் இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு எங்கேயாவது போய்விடலாம். நாம் வேகமாக வெளியேற வேண்டும். வில்லீயைக் கண்டு பிடிப்பதற்குள் வெளியேற வேண்டும்.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தொலைபேசி மணி ஒலித்தது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

''அதை எடு'' என்றான் ஃபெலிக்ஸ்.

நடுங்கும் கையோடு லோரெலி ரிசீவரை எடுத்தாள்.

''திரு. ஃபெலிக்ஸ் அங்கே இருக்கிறாரா?'' என்று கார் லோஸ் கேட்டான். ''தலைவர் அவரோடு பேச வேண்டுமாம்.''

லோரெலி ஃபெலிக்சைப் பார்த்தாள், அவள் கண்களில் மரண பயம்.

''அல்ஸ்கோனி உன்னோடு பேச வேண்டுமாம்'' என்றவள் ரிசீவரைக் கொடுத்தாள்.

ஃபெலிக்ஸ் முகத்தில் வியர்வை வடிவதை டான் பார்த்தார். கடந்த பத்து நிமிடங்களாகக் கண்ட காட்சியில் அவர் லயித்திருந்தார். ஆனால் இப்போது அவருடைய சுறுசுறுப்பு வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது. மாறிவிட்ட சூழ்நிலை தனக்கு எப்படி உதவும் என்பதை அவர் யோசித்தார். இந்த இருவரும் பயந்து ஓடிவிட்டால், தனக்கு லோரெலியின் உதவி கிடைக்காது. அவளுடைய உதவி இல்லாமல் தான் தப்புவது கடினம் என்பது அவருக்குத் தெரியும்.

ஃபெலிக்ஸ் நடுங்கிய கையில் ரிசீவரை எடுப்பதை அவர் பார்த்தார்.

''நான் வில்லீக்காகக் காத்திருக்கிறேன். அவன் எங்கே?'' என்றார் அல்ஸ்கோனி.

நானும் அவனுக்காகத்தான் காத்திருக்கிறேன். ஒரு வேளை கார் ரிப்பேராகி இருக்கலாம். நான் போய்ப் பார்க்கிறேன்.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''கார் ரிப்பேராக வில்லை. நான் மெனோட்டோவை அனுப்பினேன். கார் வீட்டிற்கு வெளியே இருப்பதாக அவன் சொல்கிறான். ஆனால் வில்லியைக் காணவில்லை.''

''நான் மேலே வருகிறேன்'' என்றான் ஃபெலிக்ஸ்.

''அதற்கு அவசியமில்லை. நீ அங்கேயே இருக்கலாம்'' என்ற அல்ஸ்கோனி ''எப்படியும் நீ அங்கேதான் இருக்க வேண்டும்'' என்று சொல்லிச் சிரித்தார். தொலைபேசி இணைப்பு துண்டிக்கப் பட்டது.

ஃபெலிக்ஸ் ரிசீவரை வைத்தான். அவனுடைய முகத்தில் ஏற்பட்ட மாறுதல் லோரெலியை எழுந்திருக்கச் செய்தது.

''இங்கேயே இரு'' என்று சொல்லிவிட்டு அவன் வெளியே சென்றான்.

கதவருகே போன லோரெலி தாழ்வாரத்தைப் பார்த்தாள். மீண்டும் அறைக்குள் வந்தாள். அவளுடைய பயம் இப்போது பீதியாக மாறிவிட்டது. இப்போதுதான் நடவடிக்கை எடுக்க வேண்டிய நேரம் என்று நினைத்தார் டான்.

''லோரெலி'' என்று அழைத்தார் டான்.

லோரெலி அலறியபடியே திரும்பிப் பார்த்தாள், அறை முழுவதும் தேடினாள்.

''நான் இங்கே இருக்கிறேன், மிக்லெம்.''

சுவரில் இருந்த வழியை அவள் பார்த்தாள், பிறகு விலகினாள்.

''தைரியமாக இரு. உனக்குத் தப்பிக்கப் பணம் வேண்டும். அது என்னிடம் இருக்கிறது. நாம் ஒருவருக்கு ஒருவர் உதவ வேண்டும். அந்தத் துப்பாக்கியை என்னிடம் கொடு.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''இல்லை. நான் உனக்கு உதவப்போவதில்லை. நான் வெளியேறப் போகிறேன்.''

''உன்னால் எவ்வளவு தூரம் போக முடியும். முட்டாள் தனமாகப் பேசாதே. என்னிடம் துப்பாக்கியைக் கொடு. வில்லீயைக் கொலை செய்தது போலவே ஃபெலிக்ஸ் உன்னையும் கொலை செய்துவிடுவான். அவனை நம்ப வேண்டாம். நான் உன்னைக் காப்பாற்றுகிறேன். துப்பாக்கியைக் கொடு.''

பயத்தில் அவள் சிந்திக்கும் திறனை இழந்துவிட்டாள்; துப்பாக்கியை எடுத்தாள்.

''தோட்டாக்களையும் எடு'' என்றார் டான்.

தோட்டாக்களையும் துப்பாக்கியையும் அங்கே கொண்டு வந்தாள்.

''சீக்கிரம், அவன் வருவதற்குள் கொடுத்துவிடு.''

துப்பாக்கியையும் தோட்டாக்களையும் அவரிடம் சேர்த்துவிட்டாள்.

''பயப்படாதே. நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்.''

அப்போதுதான் அவளுக்குத் தன் செய்கையின் விபரீதம் புரிந்தது. ஃபெலிக்ஸ் மட்டுமல்ல, எங்கெல்மேனிடருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள உதவும் ஆயுதத்தைக் கொடுத்துவிட்டாள் என்பது தெரிந்தது.

''அதைக் கொடுத்துவிடு எனக்கு அது வேண்டும்'' என்று சொல்லி அந்த ஓட்டையில் கைவிட்டாள்; அதற்குள் டான் வழியை அடைத்துவிட்டார். அதே நேரத்தில் ஃபெலிக்ஸ் உள்ளே வந்தான்.

லோரெலி திரும்பிப் பார்த்தாள்; ஃபெலிக்சின் முகம் வெளிறிப் போயிருந்தது. வியர்வை பெருக்கெடுத்து ஓடியது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''தாழ்வாரத்தின் முடிவில் இருக்கும் கதவை என்னால் திறக்க முடியவில்லை.'' ஃபெலிக்சின் குரலில் நடுக்கம். ''மின்சார சப்ளை இல்லை.''

லோரெலி கண்ணை மூடிக்கொண்டு சுவரில் சாய்ந்தாள். ஃபெலிக்ஸ் தொலைபேசி அருகே சென்று ரிசீவரை எடுத்தான்.

கார்லோஸ் ''ஹலோ'' என்றான். அந்த நீக்ரோவின் குரல் வெல்லப்பாகு போல் குழைந்திருந்தது.

''தாழ்வாரத்தின் முடிவில் இருக்கும் கதவில் ஏதோ பிரச்சினை. என்னால் அதைத் திறக்க முடியவில்லை.'' பதற்றத்தைக் காட்டாமல் பேசினான் ஃபெலிக்ஸ்.

''அது சரிதான். திரு. ஃபெலிக்ஸ்'' என்றான் கார்லோஸ் உற்சாகத்தோடு. ''மின்சார சப்ளையை நிறுத்தும்படி தலைவரின் உத்தரவு''

ஃபெலிக்சுக்கு வயிறு குமட்டிக்கொண்டது.

''சரி. நான் அவரோடு பேசுகிறேன். நான் இங்கே இருப்பது அவருக்குத் தெரியாது.''

''அவருக்குத் தெரியும்'' கார்லோசின் குரலில் கேலி இருந்தது.

''மின்சாரத்தை நிறுத்துவதற்கு முன் கீழே யார் இருக்கிறார்கள் என்று கேட்டார் அவர்.''

''நான் அவரோடு பேச வேண்டும்'' என்றான் ஃபெலிக்ஸ்.

''இப்போதே பேசாலம். திரு. ஃபெலிக்ஸ்'' என்ற கார்லோஸ் அல்ஸ்கோனியோடு பேசினான்.

''என்ன?'' என்றார் அல்ஸ்கோனி.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''திரு. ஃபெலிக்ஸ் உங்களோடு பேச வேண்டுமாம், தலைவரே''

''அப்படியா. நான் வேலையாக இருக்கிறேன் என்று சொல். நாளைக் காலையில்தான் பேச முடியும்.''

''சரி, தலைவரே'' என்ற கார்லோசின் உதடுகளுக் கிடையே உற்சாகப் புன்னகை.

ஃபெலிக்ஸ் ரீசிவரைக் கீழே வைத்தான். இப்போது லோரெலியை முறைத்தான்.

''அறிவுகெட்ட.....'' அந்த வார்த்தையைக் கேட்ட லோரெலிக்கு பேயறைந்தாற்போல ஆகிவிட்டது ''நாம் இங்கே மாட்டிக் கொண்டு விட்டோம். அல்ஸ்கோனி நம்மைப் பழி வாங்குகிறான். மின்சார சப்ளையைத் துண்டித்து விட்டார். வெளியே போக வழி இல்லை. உன்னுடைய அறிவு நம்மை எங்கே கொண்டு வந்திருக்கிறது என்பதைப் பார்.''

கைகளை முகத்தில் புதைத்தபடி லோரெலி நாற்காலியில் விழுந்தாள். ஃபெலிக்ஸ் தன்னுடைய அறையை நோக்கி ஓடினான். கதவைத் திறந்து உள்ளே சென்றவன் வில்லீயின் உடலை கவனிக்கவில்லை. மேசைமேலே அவனுடைய .45 ஆட்டோமெடிக் துப்பாக்கி இருந்தது. துப்பாக்கியை எடுத்தவன் சிறிது யோசித்தான். கையில் இருந்த துப்பாக்கியின் கனத்தைப் பார்க்கும்போது அதில் தோட்டா இல்லை என்பது தெரிந்தது. வில்லீயைக் கொலை செய் வதற்கு முன், துப்பாக்கியில் தோட்டாக்கள் இருப்பதைப் பார்த்திருக்கிறான்.

நடுங்கும் கைகளால் கிளிப்பை வெளியே எடுத்தான்; அதில் தோட்டாக்கள் இல்லை. மேசையின் டிராயரைத் திறந்து சட்டைகளுக்குக் கீழே தோட்டாக்கள் இருக்கும் பெட்டியைத் தேடினான். அதுவும் இல்லை. வில்லீயைத் தலையில் அடித்தபிறகு வில்லீயின் துப்பாக்கியை அந்த

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

உடலுக்கருகே போட்டு விட்டான். இப்போது அந்தத் துப்பாக்கியைத் தேடினால் அது இல்லை. வில்லீயின் உடலை உதைத்துத் தள்ளினான்.

ஃபெலிக்சின் இதயம் வேகமாக அடித்துக் கொண்டது; விரல்களை மூடிக்கொண்டான். தான் லோரெலியோடு பேச நேரத்தை வீண் செய்தபோது கார்லோஸோ அல்லது வேறு யாரோ இங்கே வந்து ஆயுதங்களை அப்புறப் படுத்தியிருக்கிறார்கள்.

நல்லவேளை லோரெலியின் துப்பாக்கியாவது இருக்கிறது. அது சிறியதுதான் என்றாலும் அதாவது இருக் கிறதே. அடுத்து என்ன நடக்கும் என்று அவருக்குத் தெரியும். சரியான நேரத்தில் அல்ஸ்கோனி கார்லோசை அனுப்புவான். கார்லோசை எதிர்க்க முடியாது. ஆனால் .25 துப்பாக்கி இருந்தால் அவனுடைய வேகத்தைக் குறைக்கலாம்.

அவன் லோரெலியின் அறைக்குச் சென்றான்.

அவள் இன்னமும் தலைகுனிந்தபடிதான் இருந்தாள். அவன் அவளைப் பார்க்கவில்லை. .25 துப்பாக்கியை வைத்த இடத்தில் பார்த்தான், அது இல்லை; தோட்டாக்களும் இல்லை. அவனால் தன்னுடைய கண்களை நம்ப முடிய வில்லை.

"உன்னுடைய துப்பாக்கி எங்கே?" என்றான் அவன்.

அவள் தலைநிமிர்ந்தாள், அதிர்ச்சியோடு.

"உன்னுடைய துப்பாக்கி எங்கே?" என்றான் அழுத்தத்துடன்.

"ஏன்? எதற்காக..."

அவனுடைய கோபத்தைப் பார்த்தவுடன் அவள் எழுந்து நின்றாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''உன்னுடைய துப்பாக்கி எங்கே?'' என்றபடி அவளை நெருங்கினான்.

''என்னை அப்படிப் பார்க்காதே. என் அருகே வராதே'' என்றபடி சுவரின் பக்கமாக அவள் சாய்ந்தாள்.

ஃபெலிக்ஸ் அருகே வந்தான். இடது கையால் அவளுடைய ஆடையின் முன் பக்கத்தைப் பிடித்து இழுத்துத் தன்னோடு சேர்த்துக் கொண்டான்.

''அது எங்கே?''

''அதை மிக்லெம்மிடம் கொடுத்துவிட்டேன்.''

''என்ன?''

''அவர் கேட்டார். யோசிக்காமல் கொடுத்து விட்டேன்...''

''மிக்லெம்மா? என்ன உளறுகிறாய்.'' ஃபெலிக்ஸ் அவளை வேகமாக உலுக்கினான். ''எனக்கு அந்தத் துப்பாக்கி வேண்டும். அது எங்கே?''

''அந்தச் சுவரில் ஒரு ஓட்டை இருக்கிறது. மிக்லெம்...''

ஃபெலிக்ஸ் அடித்த அடியில் அவளுடைய தாடை கழன்று விட்டது. அவள் அலறினாள்.

துப்பாக்கி எங்கே முட்டாளே? என்னுடைய துப்பாக்கியில் இருக்கும் தோட்டாக்களை யாரோ எடுத்து விட்டார்கள். இப்போது கார்லோஸ் உள்ளே வந்து நம்மைத் தொலைத்துவிடுவான். துப்பாக்கி இல்லாமல் அந்தக் கருங்குரங்கை சமாளிப்பது எப்படி? நான் சொல்வது புரிகிறதா? அது எங்கே?''

லோரெலியின் கண்கள் செருகிக் கொண்டன. அவள் மயங்கி விழுந்தாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

இங்கு நடப்பதை டான் பார்த்துக் கொண்டிருந்தார். இப்போது அவர் ஓட்டையை மூடினார். அவரிடம் துப்பாக்கி இருக்கிறது. தன்னைத் தடுப்பவர்களை அவர் தாக்கலாம். லோரெலியை இப்போது காப்பாற்ற முடியாது; பிறகு பார்த்துக் கொள்ளலாம். துப்பாக்கியில் தோட்டாக் களை நிரப்பிக் கொண்டு செங்குத்தான பகுதிக்குச் சென்றார். அங்கிருந்த ரப்பர் பட்டனை அழுத்தியவுடன் கதவு உட்புறமாகத் திறந்து கொண்டது. கையில் துப்பாக்கியோடு, அதன் விசையில் விரலை வைத்தபடி வெளிச்சமாக இருந்த தாழ்வாரத்தில் நுழைந்தார்.

இரண்டு பக்கமும் பார்த்துவிட்டு அந்தக் கதவை மூடினார். அதற்குள் உள் பக்கம் இருந்த ரப்பர் பட்டனை அழுத்தி, கதவு திறக்கிறதா என்று பார்த்துக்கொண்டார்.

அவருக்கு எதிரே இருந்த கதவுதான் குளியலறைக்குப் போகும் வழி. சற்றுத் தொலைவில் எங்கெல்மேனுடைய கூடத்திற்குப் போகும் கதவு இருந்தது. அதற்கு எதிரே இருப்பதுதான் கன்ட்ரோல் அறைக்கான கதவாக இருக் கலாம். தாழ்வாரத்தின் முனையில் அல்ஸ்கோனியின் அறைக்குப் போவதற்கான வழியும், எஃகுக் கதவும் இருந்தன. மெதுவாக நகர்ந்து இந்தக் கதவருகே வந்த டான் ரப்பர் பட்டனை அழுத்தினார்; கதவு நகரவில்லை. சிறிது நேர முயற்சிக்குப் பிறகு அதைக் கைவிட்டார். கன்ட்ரோல் அறைக் கதவுக்கு வந்தவர் அதைத் திறக்க முயற்சி செய்தார்; அதுவும் எஃகுக் கதவு, அசையவில்லை. அவசரப்படக் கூடாது என்று முடிவெடுத்த டான் இரவு வரை காத்திருக்கத் தீர்மானித்தார். இரவு நேரத்தில் தோட்டத்தைக் கடந்து செல்ல முடியும். இப்போது முடியாது.

தாழ்வாரத்தைப் பார்த்த டான் இடது பக்கத்தில் மூன்று கதவுகள் இருப்பதைக் கவனித்தார். கார்லோஸ் கன்ட்ரோல் அறையில் இருப்பான். எங்கெல்மேன் பரிசோதனைக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கூடத்தில் குளியலறைக்கு இடது பக்கமாக இருந்த கதவருகே சென்ற டான் காது கொடுத்துக் கேட்டார். எதுவும் கேட்கவில்லை என்று தெரிந்த பிறகு கைப்பிடியைத் திருகி, கதவைத் திறந்தார். அறை இருட்டாக இருந்தது. உள்ளே வந்தவர் கதவை மூடினார். டார்ச் லைட்டை அடித்துப் பார்த்து அது ஒரு சிறிய படுக்கையறை என்பதைத் தெரிந்துகொண்டார். விளக்கு ஸ்விட்சைக் கண்டு பிடித்து விளக்கைப் போட்டார். ஒரு பக்கத்து சுவரில் இருந்த அலமாரியில் வரிசையாகப் புத்தகங்கள் அடுக்கப்பட்டிருந் தன. இது எங்கெல்மேனுடைய படுக்கையறையாக இருக்கலாம் என்பதை டான் யூகித்தார்.

படுக்கையறையின் பக்கத்திலிருந்த பீப்பாயில் தொலை பேசி இருப்பதைக் கவனித்தார். அங்கே சென்று ரீசிவரை எடுத்தவருக்கு இனிய அதிர்ச்சி. ரிசீவரில் டயல் டோன் கேட்டது. வெளி உலகத்தோடு அது இணைக்கப்பட்டுள் ளது என்பதைத் தெரிந்து கொண்டார்.

படுக்கையில் உட்கார்ந்தபடி, இடது கையில் .25 துப்பாக்கியை வைத்துக்கொண்டு தன்னுடைய தங்குமிடத் திற்கு டயல் செய்தார்.

மணி அடிக்க ஆரம்பித்தவுடனே அதை எடுத்துப் பேசிய ஹாரியின் குரல் கேட்டது. "ஹலோ, யார் அது?"

"முதலாளியோடு இப்படிப் பேசுவதுதான் முறையா?" என்றார் டான். ஹாரி திணறுவது கேட்டது.

"அது திரு. மிக்லெம்மா?" ஹாரி கூச்சலிட்டார்.

"நான்தான்" என்ற டான் காதிலிருந்த ரிசீவரைத் தள்ளி வைத்துக் கொண்டார். "மெதுவாகப் பேசு. என்னுடைய காது கிழிந்துவிடும்."

"எங்கே இருக்கிறீர்கள்?" என்ற ஹாரியின் குரல் தணிந் திருந்தது. "உயிரைப் பற்றிக் கவலையாக இருக்கிறது."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''நான் இன்னும் பாதாள அறையில்தான் இருக்கிறேன். ஆனால் ஓரளவுக்கு விடுதலை. நல்லவேளையாக இந்தத் தொலைபேசி கிடைத்தது, இருந்தாலும் வெளிவருவது சிரமம்தான்.''

''அதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். இன்றிரவு அது நடக்கும். சிஸிப்பேயும் அவருடைய நண்பர்களும் வருகிறார்கள். அந்த சிகப்புக் கூந்தல்காரி அவர்களுக்குத் துரோகம் செய்து விட்டாள்...''

''அதெல்லாம் எனக்குத் தெரியும். இப்போது அது நடக்காது. நீங்கள் பேசிக்கொண்டிருந்ததை வில்லீ என்பவன் கேட்டுவிட்டான். அவன் அவளைப் பற்றிச் சொல்லிவிட்டான். இப்போது நானும் அவளும், நீக்ரோவும் ஃபெலிக்ஸ் என்பவனும் இங்கே மாட்டிக்கொண்டிருக் கிறோம்.''

''நாங்கள் என்ன செய்யவேண்டும்?'' என்று கேட்ட ஹாரியின் குரலில் தெம்பு இல்லை.

''நான் வெளிவருவதை நானேதான் செய்ய வேண்டும். கிஸிப்பேயோடு எத்தனை பேர் வருகிறார்கள்?''

''ஆறு பேர்.''

''நல்லது. நான் சொல்வதைக் கேள். நான்கு ஆட் களையும் நான்கு நாய்களையும் சமாளிக்க வேண்டியது உங்கள் வேலை. அப்போதுதான் வீட்டிலிருந்து வெளியே வந்தாலும் நான் தப்பிக்க முடியும். நாய்களை சமாளிப்பது கஷ்டம். அதை எப்படிச் செய்வது என்று நீங்கள் யோசிக்க வேண்டும். இந்த இடத்திற்குள் நீங்கள் வர முடியாது. கதவுகள் மூன்று இஞ்ச் எஃகுக் கதவுகள், மின்சாரத்தால் இயக்கப் படுகின்றன. இரவு ஒன்றரை மணிக்கு நான் தப்பிக்க முயற்சி செய்கிறேன். அதற்குள் ஆட்களோடு இங்கே வந்துவிடு. இருபது நிமிடங்களுக்குப் பிறகு நீங்கள் உள்ளே வரலாம். துப்பாக்கிச் சத்தம் கேட்டால் உள்ளே

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வந்துவிடுங்கள். இரண்டே கால்வரை எதுவும் நடக்க வில்லை என்றால் நான் தோல்வியடைந்து விட்டேன் என்று தெரிந்து கொள்ளுங்கள்.''

''அது நடந்தால் நாங்கள் உங்களை எப்படியும் காப்பாற்றிவிடுவோம். அந்த வீட்டை ஒவ்வொரு செங்கல்லாகப் பெயர்த்து எடுத்துவிடுவோம்.''

''அவசரப்படாதே ஹாரி. நீ நினைப்பதைவிட இது பெரிய வேலை. பெரிய ஜன்னல்கள் கொண்ட முன்பக்கத்து அறை வழியாக மாடிக்குப் போகலாம். அந்த அறை வழியாக இங்கே வரலாம். அறையின் இடது பக்கத்தில் உள்ள கதவு போலீஸ்காரர்களுக்குத் தெரியவில்லை. அதுதான் இங்கே வரும் வழி.''

''நாங்கள் அதைக் கண்டுபிடித்துவிடுவோம். கொஞ்சம் டைனமைட் எடுத்து வரும்படி கிசிப்பேவிடம் சொல்லி யிருக்கிறேன். எப்படியாவது உங்களைக் காப்பாற்றி விடுவோம்''

''நானாக வருவதற்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள். இரண்டே கால்வரை நான் வரவில்லை என்றால் உங்கள் திறமையைக் காட்டலாம். இப்போது நான் போக வேண்டும், ஹாரி.''

''நல்லது'' என்ற ஹாரி, ''நாங்கள் எப்படியும் வந்துவிடுவோம்'' என்றார்.

டான் ரிசீவரைக் கீழே வைத்தார்; எழுந்தவர் கதவருகே சென்றார்.

பின்புறமிருந்த எங்கெல்மேன் ''திரு. மிக்லெம் அசையாதீர்கள். அசைந்தால் சுட்டுவிடுவேன்'' என்றார்.

டான் அசையாமல் நின்றார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''துப்பாக்கியைக் கீழே போடுங்கள்'' என்றார் எங்கெல்மேன். டான் துப்பாக்கியைக் கீழே போட்டார். கீழே இருந்த கம்பளத்தில் அது விழுந்தது; பிறகு பின்பக்கமாகப் பார்த்தார். புத்தக அலமாரி பின்பக்கமாக திறந்திருந்தது. அந்த இடத்தில் .38 துப்பாக்கியோடு நின்றார் எங்கெல்மேன்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அத்தியாயம் பன்னிரண்டு

பூதத்தோடு மோதல்

ஹாரி ரிசீவரை வைத்தவுடன் மரியன் வேகமாக வரவேற்பறைக்குள் வந்தாள்.

''திரு. மிக்லெம் பேசினார்'' என்ற ஹாரிக்கு மரியனுடைய முகத்தைப் பார்த்ததில் மகிழ்ச்சி.

''நீ சத்தம் போட்டுப் பேசும் போதே நினைத்தேன். அவர் எப்படி இருக்கிறார் ஹாரி? எங்கே இருக்கிறார்?''

''அவர் நன்றாக இருக்கிறார். இன்னமும் பாதாள அறையில் தான் இருக்கிறார். அவரிடம் ஒரு துப்பாக்கி இருக்கிறது, தப்பிவிடலாம் என்கிறார் அவர். இன்றிரவு ஒன்றரை மணிக்குத் தப்பிக்கப் போவதாகக் கூறினார்'' என்ற ஹாரி கைக் கடிகாரத்தைப் பார்த்தார். ''இப்போது ஆறரை. கிளிபே எந்த நேரமும் வரலாம். நான் அங்கே போய் அவருக்கு உதவி செய்வதற்குத் தயாராக இருக்க வேண்டும்.''

ஹாரி போட்ட சத்தத்தில் செர்ரி அங்கே வந்துவிட்டார். அவரிடம் செய்தி சொல்லப்பட்டது. டானோடு பேசிய உரையாடலை அவர்களிடம் கூறினார் ஹாரி.

''இந்த வில்லி நம்மைக் கண்காணித்துக் கொண்டிருந்தான் என்றால் இப்போது இங்கு யாராவது இருக்க வேண்டும்'' என்றாள் மரியன். ஹாரி தலையில் அடித்துக் கொண்டார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''நீங்கள் சொல்வது சரிதான், மிஸ். இதை நான் யோசிக்க வில்லை. யாராவது இருக்கிறார்களா என்று பார்க்கிறேன்.''

''எச்சரிக்கையாக இரு ஹாரி'' என்றாள் மரியன். ''கிஸிப்பே வரும்வரை நாம் பொறுமையாக இருக்கலாம்.''

ஹாரி சிரித்துக் கொண்டார்.

''என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அவன் அங்கே இருந்தால் அவன் என்னைப் பார்ப்பதற்கு முன் நான் அவனைப் பார்த்துவிடுவேன். நமக்கு ஆள்பலம் சேர்ந்திருக்கிறது என்ற தகவலை அவன் கொண்டு போகக்கூடாது.''

சொர்ரி ''நானும் வருகிறேன்'' என்றார்.

''இது உங்களுக்கு வேண்டாம். நீங்கள் மிஸ். ரக்பியோடு இருங்கள். இதை நான் பார்த்துக் கொள்கிறேன்.''

சொர்ரிக்கு அதில் உடன்பாடில்லை.

''நான் கதவு வரை நடக்கப் போகிறேன். உங்களைப் பார்த்தவுடன் அவன் ஓடலாம். நான் அவனைப் பிடித்து விடுவேன்''

''அவன் உங்களைத் தாக்கலாம். இந்த ஆட்கள் மோசமானவர்கள் என்னிடம் விட்டுவிடுங்கள்.''

''என்னிடம் கத்தி உள்ள குச்சி இருக்கிறது. என்னைப் பாதுகாத்துக் கொள்ள எனக்குத் தெரியும்.''

ஹாரி எதுவும் சொல்வதற்கு முன் சொர்ரி நடந்து விட்டார். கறுப்புத் தொப்பியோடும் மறைக்கப்பட்ட கத்தியுடைய குச்சியோடும் அவர் ராணுவ வீரனைப் போல நடப்பதை இருவரும் பார்த்தனர்.

ஹாரி தலையசைத்துக் கொண்டார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''இவரைத் திருத்த முடியாது. ஆனாலும் மிகவும் தைரியம். நான் போகிறேன் என்ற ஹாரி மேசை டிராயரைத் திறந்து டானுடைய பிரெட்டா துப்பாக்கியை எடுத்தார். ''மிஸ், இதை வைத்துக்கொள்ளுங்கள். வில்லியுடைய நண்பர்கள் இங்கே வந்தால் காரில் சுடலாம். ஆனால் விசையைத் தொடும்போது கண்களை மூடக்கூடாது.''

''எனக்குத் தேவையில்லை. இதுவே போதும்'' என்று சொல்லி கைகளைத் தூக்கிக் காட்டினார் ஹாரி.

அந்த மாளிகைக்கு எழுபத்தைந்து முழம் தொலைவில் நடப்பது அறியாமல் ஒரு புதரில் உட்கார்ந்திருந்தான் ஜகோபோ. மாலை வெய்யில் இதமாக இருந்தது. கையில் இருந்த ஆப்பிள் இனிப்பாக இருந்தது. நிழலில் அமைதியாக உட்கார்ந்திருப்பதுதான் ஜகோபோக்குப் பிடித்த விஷயம். அந்த இன்பத்திலேயே முக்கியமில்லாத உறுப்பினர் தான் என்பதில் அவனுக்கு திருப்தியுண்டு. அவனுக்குப் பேராசை இல்லை, பணம், கார், பெண் எதுவும் தேவையில்லை. வேலை எதுவும் செய்யாமல் நிழலில் இருப்பதே அவனுடைய லட்சியம். மற்றவர்களைப் பின் தொடர்வதற்காக அல்ஸ்கோனி பயன்படுத்தும் டஜன் ஆட்களில் அவன் ஒருவன். அல்ஸ்கோனி குறிவைத்த நபர் வருவதற்காக மணிக்கணக்கில், காபிக் கடைகளிலும், ஓட்டல் வரவேற்பறைகளிலும், கார்களிலும் காத்திருப்பது அவனுடைய வேலை. இதற்காகத்தான் ஜகோபோ பிறவி எடுத்திருக்கிறான். மணிக்கணக்கில் எதுவும் செய்யாமல் உட்கார்ந்திருப்பதைத் தவிர வேறு திறமை எதுவும் அவனிடமில்லை.

வீட்டிலிருந்து வந்த சொர்ரி வாயில்கதவு வரை போவதை அவன் பார்த்தான். அந்த வீட்டைக் கண்காணிக்க வேண்டும் என்பதுதான் அவனுக்குச் சொல்லப்பட்ட உத்தரவு; போலீஸ் வந்தால் ஃபெலிக்சுக்கு சொல்ல

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வேண்டும். செர்ரி மாலை நேரத்தில் நடைப்பயிற்சி செய்கிறார் என்று அவன் நினைத்தான். பின் வாசல் வழியாக ஹாரி வெளியேறி, புதர்களில் மறைந்ததை அவன் பார்க்கவில்லை.

ஹாரி போர்க்காலத்தில் கமாண்டோவாகப் பணியாற்றி யிருக்கிறார். அந்தப் பயிற்சியை அவர் இப்போதும் மறக்கவில்லை. ஜெர்மனியில் காவலாளிகளைக் கத்தியால் குத்துவது அவருடைய தனித்திறமை. ஃபிரான்சு நாட்டின் கடற்கரையில் அவரும் மற்றவர்களும் பாரசூட் மூலம் இறங்கியிருக்கிறார்கள். ஹாரி தனியாகச் சென்று காவலாளியை வீழ்த்துவார். எதிர்பாராத விதத்தில் எதிரியின் அருகில் சென்று கத்தியை அவன் கழுத்தில் செலுத்துவார். என்ன நடந்தது என்று உணராமலே அவன் கதை முடிந்துவிடும்.

ஹாரி தன்னை நோக்கி வந்து கொண்டிருக்கிறார் என்பது தெரிந்தால் ஜகோப் சுவாரசியமாக ஆப்பிள் சுவைத்துக் கொண்டிருக்க மாட்டான். மீதமிருந்த ஆப்பிளைத் தூக்கி யெறிந்த ஜகோபோ வில்லியைப் பற்றி யோசித்தான். வில்லி அவ்வளவு பரபரப்பானதற்கு என்ன காரணம்? அந்தத் தகவல் என்ன? வெறுப்பில் மூக்கைச் சொறிந்து கொண்டான் அவன். வில்லியைப் பற்றி யோசிக்க வேண் டாம். அவனுக்குத் தெரிந்ததெல்லாம், பணம், கார், மற்றும் பெண்கள். ஜகோபோவின் விருப்பமோ பாடுவது. அவனால் இயற்கையாகவே உச்சஸ்தாயியில் பாட முடிந்தது; சோம்பேறித்தனம் இல்லாவிட்டால் ஏதாவது கடைசி நிலை நாடகக் கம்பெனியில் இரண்டாம் நிலைப் பாடகனாக மாறியிருக்கலாம். ஹாரி நாற்பது முழத் தொலைவில் இருக்கிறார் என்பதெல்லாம் தெரியாமல் 'காற்றில் மிதக்கும் இறகைப் போலே அவள் மனதை மாற்றுகிறாள்' என்று பாடினான். ஹாரி ஜகோபோவைப் பார்க்கவில்லை. ஆனால் அவருடைய பழக்கப் பட்ட

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

காதுகளுக்கு இன்னிசை கேட்டதும் அழகான முகத்தில் ஒரு புன்னகை வளைய வந்தது.

ஜகோபோ பாக்கெட்டிலிருந்து அடுத்த ஆப்பிளை எடுத்தான். ஒரு பாட்டில் ஒயினையும் கொண்டு வந்திருக்கலாம். மெனோடோ வந்து சேருவதற்கு இன்னும் இரண்டு மணிநேரம் ஆகும். மெனோடோவும் அல்ஸ்கோனியின் கண்காணிப்புப் படையைச் சேர்ந்தவன். ஜகோபோவும், அவனும் நல்ல நண்பர்கள். இருவரும் சோம்பேறிகள், பேராசை இல்லாதவர்கள், வன்முறையை விரும்பாதவர்கள். ஆப்பிள் கையால் தடவி கனிவோடு பார்த்தான். அந்தக் கறுத்த முகத்தில் திருப்தி நிலவியது.

ஜகோபோ ஆப்பிளைக் கடிக்கும் முயற்சியில் இருந்த போது ஹாரி மூன்று முழ தூரத்திற்குள் வந்துவிட்டார். ஜகோபோவிற்கு அவர் தரையிலிருந்து எழுந்து தன்மீது விழுந்தது போலிருந்தது.

ஹாரியின் கைகள் கழுத்தை நெரிக்க, ஜகோபோவிற்கு அதிர்ச்சியில் மரண பயம் ஏற்பட்டது. எஃகு விரல்கள் கழுத்தின் பக்கங்களில் காயப்படுத்துவதை அவன் உணர்ந்தான். ஒரு சிறிய விநாடியில், தான் கொல்லப் படுகிறோம் என்று தெரிந்து கொண்டான், கண்களுக்கு முன் தெரிந்த சிவப்பு விளக்கு பளிச்சிட இருட்டில் இறங்கினான்.

ஹாரி எழுந்து நின்றார்; கைகளை வாயில் குவித்துக் கொண்டு "செர்ரி" என்று குரல் கொடுத்தார்.

முன் யோசனையோடு கொண்டு வந்த கயிற்றை பாக் கெட்டிலிருந்து எடுத்த ஹாரி ஜகோபோவின் கைகளையும் கால்களையும் சேர்த்துக் கட்டினார்.

பெருமூச்சு விட்டுக்கொண்டே செர்ரி ஓடிவந்தார், அவருடைய கையில் உருவப்பட்ட கத்தி பளபளத்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஹாரி கையாட்டினார்.

''நான் இவனைப் பிடித்துவிட்டேன். வெயிலில் நின்று நீங்கள் மயக்கம் போட வேண்டாம்.''

அருகில் வந்த செர்ரி கீழே கிடந்த ஜகோபோவைக் கத்தியால் லேசாகக் குத்தினார்.

''பொறுமையாக இருங்கள். அது ஆபத்தாகலாம்'' என்றார் ஹாரி. ''நான் இவனைப் பிடித்திருக்க வேண்டும். அடிக்கிற அடியை ஆயுளுக்கும் மறக்க மாட்டான்.''

ஹாரி ஜகோபோவைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டார்.

''இவனைப் பேச வைக்க வேண்டும். உள்ளே போய் அதற்கான வேலையைச் செய்யலாம். திரு. மிக்லெம்மை எப்படி நெருங்குவது என்பதை இவன் சொல்லலாம்.''

''சொல்லாவிட்டால் இவன் வருத்தப்படுவான்'' என்றார் செர்ரி. அவருக்குக் கொஞ்சம் காயம் ஏற்படுத்த வேண்டுமென்ற ஆசை.

மரியன் அவர்களுக்காக படிகளில் காத்துக்கொண்டிருந்தாள். ஹாரியின் முதுகில் இருந்த மனிதனைப் பார்த்ததும் அவளுடைய கண்கள் அகலமாக விரிந்தன. மறைந்து போகும் சூரியனின் மஞ்சள் ஒளியில் கத்தி பளபளக்க செர்ரி கூடவே வந்தார்.

வராந்தாவின் படிகளை நெருங்கிய ஹாரி ''இவனைப் பிடித்துவிட்டேன்'' என்று தேவையில்லாமல் சொன்னார்; ஜகோபோவைத் தரையில் போட்டார். ''செர்ரி, ஒரு பக்கெட் தண்ணீர் வேண்டும்'' என்றார்.

''கொண்டு வருகிறேன்'' என்றபடி செர்ரி விலகினார்.

ஜகோபோவின் வெள்ளை முகத்தைப் பார்த்த மரியன், ''இவனுக்கு ஆபத்தில்லையே?'' என்று கேட்டாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''தெம்பாக இருக்கிறான். கொஞ்சம் குரல்வளையை அழுத்தினேன். அவ்வளவுதான். பயத்தில் மயக்கம் போட்டு விட்டான், மற்றபடி எந்த பாதிப்பும் இல்லை.

பக்கெட்டோடு வந்த செர்ரி உத்தரவுக்குக் காத்திருக் காமல் ஜகோபோவின் தலையில் அதைக் கவிழ்ந்தான்.

சில விநாடிகளில் மூச்சுத் திணறிய படியே எழுந்த ஜகோபோ வெராந்தா கம்பியில் சாய்ந்து கொண்டான்.

ஹாரி அவருக்கருகே முட்டி போட்டார்.

''பையா, உனக்கு ஆங்கிலம் தெரியுமா?'' என்றார் மெதுவாக. ஜகோபோ தலையாட்டினான், விழிகள் மிரட்சியில் இருந்தன.

''நல்லது. திரு. மிக்லெம்மை எப்படி அணுகுவது என்று நீ எங்களுக்குச் சொல்ல வேண்டும்.'' தன்னுடைய கையை ஜகோபோவின் மூக்கில் உரசினார் ஹாரி. ''ஒன்று நீயாகச் சொல்லலாம் அல்லது நானாக வற்புறுத்தலாம். அது உன் சவுகரியம். ஆனால் எப்படியும் நீ சொல்லித்தான் ஆக வேண்டும். அதில் எந்த மாற்றமும் கிடையாது.''

அந்த சாம்பல் நிறக் கண்களைப் பார்த்த ஜகோபோ நடுங் கினான்.

''ஐய்யா, உங்களுக்குத் தேவையானதைச் சொல்லிவிடு கிறேன்.''

''நல்ல பையன்'' என்று ஹாரி ஆமோதித்தார். ஜகோபோவின் கால்களிலிருந்த கயிற்றை அவிழ்த்தார். நனைந்து போயிருந்த சட்டையைப் பிடித்துத் தூக்கினார். ''நாம் உள்ளே போய்ப் பேசலாம்'' ஹாரி அவரை வரவேற்பறைக்கு இழுத்து வந்தார். அவனை நாற்காலியில் தள்ளிவிட்டு மரியனைப் பார்த்து ''இவன் சொல்வதை எழுதிக் கொள்கிறீர்களா, மிஸ்'' என்று மரியனைப் பார்த்துக் கூறினார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஜகோபோவைப் பார்த்து "நான் அரைமணி நேரத்திற்கு முன் அவனோடு தொலைபேசியில் பேசியிருக்கிறேன். எனவே நீ ஒருங்காகப் பேசவேண்டும். நீ முதல் பொய் சொன்னவுடன் வலது கண்ணில் அடிப்பேன். புரிகிறதா?" என்றார்.

பின்பக்கமாக நகர்ந்த ஜகோபோ 'புரிகிறது' என்றான்.

அல்ஸ்கோனி விஸ்கியில் சோடாவைக் கலந்தபோது அந்த ஜன்னல் வழியாக மெனோடோ வந்தார்.

அல்ஸ்கோனியின் கையிலிருந்த ஐஸ் இடுக்கி அப்படியே நின்றது மெனோடோவைப் பார்த்து முறைந்தார்.

"உனக்கு என்ன வேண்டும்? நான் உன்னைக் கூப்பிட வில்லையே."

மெனோடோவின் கருத்தமுகம் வெளுத்திருந்தது. முகமெங்கும் வியர்வைத்துளிகள், கருமையான கண்களில் கலக்கம் தெரிந்தது.

"அவர்கள் ஜகோபோவைப் பிடித்துவிட்டார்கள்" என்று குமுறினார் மெனோடோ.

அல்ஸ்கோனி ஒரு ஐஸ்கட்டியை எடுத்து டம்ளரில் போட்டுக் கொண்டார்.

நாற்காலியில் அமர்ந்த அல்ஸ்கோனி "யார் ஜகோபோவைப் பிடித்து விட்டார்கள்?" என்று கேட்டார்.

"அந்த வீட்டிலிருந்தவர்கள். நான் அங்கே போனேன். ஜகோபோவை ஒருவன் தூக்கிப் போனதைப் பார்த்தேன்" என்றான் மெனோடோ. "பத்து நிமிடங்களுக்குப் பிறகு இரண்டு கார்கள் வந்தன. அதில் ஆறுபேர் இருந்தனர். அவர்கள் இத்தாலியர்கள். அவர்களைப் பார்த்தால் போலீஸ் மாதிரித் தெரியவில்லை."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அல்ஸ்கோனி பாதி விஸ்கியைக் குடித்தார். டம்ளரைக் கீழே வைத்துவிட்டு மூக்கைச் சொறிந்து கொண்டார்.

''அப்படியா'' என்றார் அவர்.

எதிரிலிருந்த சுவரைப் பார்த்துக் கொண்டிருந்தார் அல்ஸ் கோனி. மெனேடோ பயத்துடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

சியென்னாவில் தன்னுடைய ஆட்சி முடிந்துவிட்டது என்பது அல்ஸ்கோனிக்குத் தெரிந்துவிட்டது. அந்த வீட்டைக் கண்காணிப்பதற்கு ஜகோபோவை அனுப்பியது தன்னுடைய கடைசித் தவறு என்பதும் தெரிந்துவிட்டது. வில்லீ மாட்டிக் கொள்ளமாட்டான், அவன் தொழில் தெரிந்தவன். ஜகோபோ வெறும் அமெச்சூர், அவன் எல்லாவற்றையும் உளறிவிடுவான். அவனுக்கு மிக்லெம் இருக்குமிடம் தெரியும். அல்ஸ்கோனியின் நடவடிக்கை களைத் தெரியும். போலீசுக்குத் தேவையான சாட்சி அவன்தான். அவனை அனுப்பியது பெரிய தவறு.

அல்ஸ்கோனி மெனோடோவைப் பார்த்தார். ''நீயும் நானும் அரைமணி நேரத்தில் புறப்படலாம். காரை பக்கத்து வழிக்கு எடுத்துவா. என்னுடைய அலுவலகத்தில் ஐந்து மரப்பெட்டிகள் இருக்கும். அதைக் காரில் வைத்துவிடு. என்னுடைய படுக்கையறையில் ஒரு பை இருக்கும். அதையும் காரில் வைத்துவிடு. உனக்காக ஒரு பை எடுத்துக்கொள். நாம் திரும்ப வரமாட்டோம்.''

''சரி, ஐயா'' என்று சொல்லிவிட்டு மெனோடோ சென்றான்.

எழுந்து நின்ற அல்ஸ்கோனி விஸ்கி இருக்கும் இடத்திற்குச் சென்று விஸ்கியை ஊற்றிக் கொண்டார்.

இந்த நாளுக்காக அல்ஸ்கோனி ஒரு வருடம் முன்பே ஏற்பாடுகள் செய்திருந்தார். பலெர்மோவில் ஒரு மாளி

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கையை வாடகைக்கு எடுத்து தன்னுடைய செல்வத்தில் பெரும்பகுதியை அங்கிருக்கும் பொக்கிஷ அறையில் வைத்திருந்தார். இன்றிரவு விமானம் மூலம் அங்கே சென்று விடுவார். துறைமுகத்தில் அவருடைய படகு தயாராக இருக்கிறது. பணத்தைப் படகில் ஏற்றிக்கொண்டு வட அமெரிக்காவில் இருக்கும் அதிகம் புலப்படாத துறைமுகத் திற்குப் போய்விடலாம். அவ்வளவுதான் என்று நினைத்த போது ஒரு விவரம் இடித்தது. க்ராண்டரை மறந்து விட் டோம். க்ராண்டர் பதினைந்தாயிரம் பவுண்டு ஸ்டெர்லிங் கோடு வருகிறான், அத்தனையும் பவுண்டு கட்டுகள். அல்ஸ் கோனியிடம் பிரிட்டிஷ் கரென்சி குறைவாக இருந்தது.

க்ராண்டர் விமான டாக்சியில் வருகிறார். தன்னுடன் இருக்கும் சரக்கை சுங்கத்துறையின் கண்ணில் படாமல் கொண்டு வருவதற்காக ஆளில்லாத விமான நிலையத் திலிருந்து அவர் புறப்படுகிறார். சியென்னாவுக்கு நாற்பது மைல் தொலைவிலுள்ள பழைய அமெரிக்க விமானப் படைத் தளத்தில் இறங்கிவிடுவார்.

அந்த விமானத்தைச் சந்திக்க வேண்டுமென்று அல்ஸ்கோனி முடிவு செய்தார். நிச்சயமாக அந்தப் பதினைந்தாயிரம் பவுண்டை க்ராண்டரிடம் விடக்கூடாது. அதே விமான டாக்சியில் ஏறிக் கொண்டு பலெர்மோவுக்கு அருகில் இறங்க வேண்டும். ஆனால் ஒரு சிக்கல் இருக் கிறது. விமான டாக்சியில் ஒருவர்தான் போக முடியும். க்ராண்டரிடம் தன் காரைக் கொடுத்து பலெர்மோவுக்கு வரச்சொல்லலாம். மெனோடோ? அல்ஸ்கோனி தலையைக் குலுக்கிக் கொண்டார். மெனோடோவை நம்ப முடியாது. மெனோடோ முதல் தரமான சமையல்காரன், இருந்தாலும் அவனை முடித்துவிட வேண்டும். அவன் போலீசிடம் சிக்கினால் நமக்குத்தான் பிரச்சினை.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

எங்கெல்மேன் மற்றும் கார்லோஸ் ஆகியோர் போலீசில் சிக்கினாலும் பிரச்சினைதான். எங்கெல்மேன் உளறி விடுவான். அல்ஸ்கோனி மூக்கைச் சொறிந்து கொண்டார். அவருக்கு கார்லோஸ் மீது கருணை உண்டு, இருந்தாலும் பூதம் போன்ற அந்த நீக்ரோவை மறைத்து வைக்க முடியாது. அவனுடைய வேலை முடிந்தது. கார்லோஸ் மூலமாக போலீஸ் தன்னை நெருங்கிவிடும். ஆகவே கார்லோசின் கதையையும் முடிக்க வேண்டும்.

உடனுக்குடன் உறுதியான முடிவுகளை எடுத்ததற்காக அல்ஸ்கோனி தன்னை பாராட்டிக் கொண்டார். ஃபெலிக்ஸ் மற்றும் லோரெலி சாக வேண்டும். எஸ்கெல் மேன் மற்றும் கார்லோஸ் கூடவே போகவேண்டும். மிக்லெமுக்கும் மரணம் தான். இவர்கள் ஐந்து பேரும் பாதாள அறையில் இருப்பது மிகவும் சவுகரியமானது. சிரமமில்லாமல் அவர்களைக் கொன்று விடலாம்.

அந்த அறையிலிருந்து அல்ஸ்கோனி வெளிப்பட்டார். தன்னுடைய பருமனான உடலைத் தூக்கிக் கொண்டு வேகமாக நடந்தார். வீட்டின் பின்பக்கமாக இருந்த பாய்லர் அறைக்கு வந்தார். பாதாள அறைகளுக்கான மின்சார இணைப்புகளும் பியூஸ்பெட்டிகளும் அங்கே இருந்தன. கன்ட்ரோல் அறையை செயலிழக்கச் செய்யும் நான்கு ஸ்விட்களைப் போட்டார் அவர். பிறகு வரவேற்பறைக்கு வந்தவர் ஜன்னலருகே சென்று பார்த்தார்.

அல்ஸ்கோனியின் அறையிலிருந்து எடுத்த ஐந்து பெட்டிகளை மெனோடோ காடிலாக் காரில் ஏற்றிக்கொண்டிருந்தான். தன்னுடைய மேசைக்குச் சென்ற அல்ஸ்கோனி ரீசிவரை எடுத்தார்.

''வணக்கம், தலைவரே'' என்றான் கார்லோஸ்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''ஃபெலிக்சோடு பேசவேண்டும். அவன் மிஸ் லோரெலியோடு இருக்கிறான். அவனோடு பேசிய பிறகு, உன்னோடு பேச வேண்டும்.''

''ஒரு நிமிடம்'' என்றான் கார்லோஸ்.

சில நொடிகளில் ஃபெலிக்ஸ் குரல் கேட்டது.

''ஃபெலிக்ஸ் நாளை உன்னோடு பேசலாம் என்றிருந்தேன். ஆனால் நிகழ்ச்சிகள் வேகமாக நடக்கின்றன.''

ஃபெலிக்ஸ் சத்தமாகப் பேசினான். ''என்ன பிரச்சினை? உங்கள் உத்தரவுப்படி மின்சாரத்தைத் துண்டித்துவிட்டதாக கார்லோஸ் சொல்கிறான். நான உங்களோடு பேச வேண்டும். உங்களுக்காக ஒரு விஷயம் வைத்திருக்கிறேன்.''

''நீ எதைச் சொன்னாலும் எனக்கு அது தேவையில்லை. எனக்கு அதிக நேரமில்லை. நான் இங்கிருந்து வெளியேறப் போகிறேன். முட்டாள் ஜகோபோ மாட்டிக் கொண்டான். இதனால் என்ன ஆகும் என்று உனக்குத் தெரியும். நீ என்னோடு வரமுடியாது. கடந்த காலத்தில் நேரத்தை வீண் செய்து, நீ ஏன் செய்திருக்கிறாய் என்பதைச் சொல்கிறேன். உன்னுடைய அறை மற்றும் லோரெலியின் அறையில் மைக்ரோபோன்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன. அவை டேப்ரிகார்டர்களோடு இணைக்கப்பட்டுள்ளன. அவ்வப் போது நான் அதைக் கேட்பது வழக்கம். லோரெலியின் துரோகமும் உன்னுடைய அணுகுமுறையும் வினோதமாக இருந்தன. வில்லியைச் செய்தது போலவே அவளை நீ செய்திருந்தால் நீ அங்கே இருக்க மாட்டாய். ஆனால் அவளுக்கு நீதான் பொறுப்பு என்று சொல்லியிருந்தேன். உன்னுடைய தவறுக்கு நீ தண்டிக்கப்பட வேண்டும். நான் தண்ணீர் செல்லும் வழியைத் திறந்து விடப் போகிறேன். எலிகளைப் போல வாழ்பவர்கள் எலிகளைப் போல சாகவேண்டும்.'' ஃபெலிக்ஸ் சத்தம் போடுவது அல்ஸ்கோனியின் காதுகளில் விழவில்லை.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மெனோடா உள்ளே வந்தான்.

''கார் தயாராக இருக்கிறது, ஐயா.''

''சரி'' என்றார் அல்ஸ்கோனி.

மெனோடோவை அழைத்துப் போகவேண்டாம். வெளியிடத்தை விட இங்கேயே அவன் கதையை முடிப்பது சுலபம்.

''மெனோடோ கொஞ்சம் வலது பக்கமாக நகர்ந்து கொள்.''

''வலது பக்கமா?'' மெனோடோவிற்குப் புரியவில்லை.

''வலது எது, இடது எது என்று உனக்குத் தெரியாதா?''

''தெரியும் ஐயா'' என்ற மெனோடோ சில அடிகள் நகர்ந்தான். இப்போது மேசையில் இருக்கும் துப்பாக்கிக்கு நேரே அவன் நின்றான்.

''நன்றி இது போதும்.''

அழகாக பாலிஷ் செய்யப்பட்ட அல்ஸ்கோனியின் விரல் சிறிது நேரம் அந்தத் தந்தத்தினால் ஆன பட்டன் மீது இருந்தது. தன்னைப் பார்த்து விழிக்கின்ற மெனோடோவைப் பார்த்து சிரித்தபடியே அவர் அந்த பட்டனை அமுக்கினார்.

ஃபெலிக்ஸ் ரிசீவரை விசி எறிந்தான். அவனுடைய முகத்தில் சவக்களை நிரம்பியிருந்தது.

''அவன் நம்மைக் கொல்லப் போகிறான். தண்ணீரை உள்ளே விடப்போகிறான். நாம் மூழ்கப் போகிறோம்.''

லோரெலி அலறினாள். கதவைத்திறந்து தாழ்வாரத்தில் அவள் ஓடினாள். ஃபெலிக்சும் ஓடினான். தாழ்வாரத்தின் முனையில் இருந்த எஃகுக் கதவுகள் மீது அவள் ஓங்கித் தட்டினாள். தாழ் வாரத்தின் மறுமுனையில் இருந்த

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஸ்டோர் அறைக்குச் சென்றான். ஃபெலிக்ஸ் அங்கிருந்து நாலடி நீளமுள்ள இரும்பு கடப்பாரையை எடுத்து வந்தான். லோரெலியை அகற்றிவிட்டு கடப்பாரையால் அந்தக் கதவில் அடித்தான்.

''அதோ பார், தண்ணீர் வருகிறது'' என்று கத்தினாள் லோரெலி.

தாழ்வாரத்தின் மறுபக்கத்திலிருந்த ஆறு இன்ச் ஓட்டை வழியாக நீர் கசிந்தது.

திட்டிக் கொண்டே ஃபெலிக்ஸ் கதவை இடித்தான். அந்த சத்தத்தைக் கேட்டு வந்த கார்லோஸ் தாழ்வாரத்தில் நின்றபடி யோசித்தான்.

ஒருவரை ஒருவர் பார்த்தபடி நின்று கொண்டிருந்த டானும் எங்கெல்மேனும் இந்த சத்தத்தைக் கேட்டார்கள். எங்கெல்மேனுடைய முகம் இறுகியது.

''யாரோ கதவைத் தட்டுகிறார்கள். யாரென்று நீங்கள் பார்க்கலாம்'' என்றார் டான்.

''அந்த நாற்காலியில் உட்காருங்கள்'' என்றார் எஸ்கெல்மேன்.

குறிப்பிட்ட நாற்காலியில் டான் உட்கார்ந்தார். தன்னைச் சுற்றி வந்த எங்கெல்மேன் தாழ்வாரக் கதவருகே போவதைப் பார்த்தார் அவர். அறையின் மூலையிலிருந்து நீர் கசிவதைப் பார்த்தார்.

''இது எங்கிருந்து வருகிறது டாக்டர்?'' என்று கேட்ட டான் நீரைச் சுட்டிக் காட்டினார்.

எஸ்கெல்மேன் விழித்தார். பிறகு கதவைத் திறந்து தாழ் வாரத்திற்கு வந்தார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நாற்காலியிலிருந்து எழுந்த டான் .25 துப்பாக்கியை எடுத்துக் கொண்டு தாழ்வாரத்திற்கு வந்தார். அங்கே ஒரு இன்ச் அளவிற்கு நீர் நிறைந்திருந்தது. சுவரில் சாய்ந்திருந்த எங்கெல்மேன் பேயறைந்தாற் போல இருந்தார். கதவுகளின் மோல்டைக் கழற்ற கார்லோஸ் போராடிக் கொண்டிருந்தான். இதை அவசரமாகக் கவனித்த டான் மீண்டும் எங்கெல்மேனுடைய படுக்கையறைக்கு வந்தார்.

சுவரில் இருந்த இரண்டு ஓட்டைகள் மூலமாக வந்த நீர் தரையில் வழிந்தது. தொலைபேசியை நெருங்கிய டான் ரீசிவரை எடுத்துக்கேட்டார். டயல் டோனைக் கேட்டதும் திருப்தியடைந்த அவர் எண்களைச் சுழற்றினார்.

''மரியன்?'' மரியனின் குரலைக் கேட்டார்.

''கிஸிப்பே இன்னும் வரவில்லையா?''

அந்தக் குரலில் இருந்த அவசரத்தை உணர்ந்ததால் அவள் எதுவும் கேட்கவில்லை.

''ஐந்து பேரோடு வந்துவிட்டார்.''

''ஹாரியை உடனே இங்கு வரச் சொல். மற்ற எல்லா ஏற்பாடுகளையும் மறந்து விடு. இங்கே நாங்கள் ஐந்து பேர் இருக்கிறோம்; உள்ளே தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. நாங்கள் உடனே வெளியேறாவிட்டால் ஆபத்தாகி விடும்.''

''நான் சொல்கிறேன்.''

அவளுடைய குரலில் இருந்த பதற்றத்தை டான் உணர்ந்தார்.

''இந்த இணைப்பு இப்படியே இருக்கட்டும். நான் மீண்டும் பேசுகிறேன். என்ன நடக்கிறது எனக்குத் தெரியவேண்டும்.''

''சரி'' என்றாள் மரியன்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவர் ரிசீவரைக் கீழே வைத்தார். தண்ணீர் இப்போது அவரது பாதங்களுக்கு மேலே இருந்தது. அளவு அதிகரித்துக் கொண்டிருந்தது. அவர் தாழ்வாரத்தில் எட்டிப் பார்த்தார்.

கார்லோஸ் எஃகுத் கதவைத் திறந்துவிட்டான். ஃபெலிக்சும் லோரெலியும் இந்தப் பக்கம் வந்துவிட்டனர். தண்ணீர் முட்டி அளவுக்கு வந்துவிட்டது. மேலும் உயர்ந்து கொண்டிருந்தது.

"அந்தக் கதவை மூடுங்கள்" என்றார் டான்; தண்ணீரில் இறங்கினார்.

நான்கு பேரும் அவரை ஆச்சரியத்தோடு பார்த்தனர். பிறகு கார்லோசும் டானுமாக அந்தக் கதவை மூட முயன்றனர். ஃபெலிக்சும் சேர்ந்து கொண்டவுடன் கதவு மூடப்பட்டது. தண்ணீர் வருவது குறைந்தது.

"என்ன நடக்கிறது?" என்று கேட்டார் டான். "தண்ணீர் எங்கிருந்து வருகிறது?"

"அது ஏரியிலிருந்து வருகிறது. வால்வு திறந்திருக்கிறது. அதை இப்போது நிறுத்த முடியாது" என்றான் ஃபெலிக்ஸ்.

"என்னுடைய ஆட்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். பத்து நிமிடத்தில் அவர்கள் வந்துவிடுவார்கள்" என்றார் டான்.

"அவர்களால் நம்மைக் காப்பாற்ற முடியாது. கதவைத் திறப்பதற்காக அவர்கள் மின்சாரத்தை இயக்கினால் இந்த இடமெல்லாம் மின்சாரம் பாய்ந்துவிடும். நாம் இங்கேயே சாக வேண்டியதுதான்" என்றான் ஃபெலிக்ஸ்.

"அவர்கள் எப்படியும் காப்பாற்றுவார்கள்" என்றார் டான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தண்ணீர் வேகமாக ஏறிக்கொண்டிருந்தது; இப்போது இடுப்பளவிற்கு வந்துவிட்டது. நிற்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்த லோரெலியை அவர் பிடித்து நிறுத்தினார்.

''அல்ஸ்கோனியின் அறைக்குப் போகும் படிகள் எங்கே? என்று கேட்டார் டான்.

நீக்ரோ சுட்டிக் காட்டினான்.

''அந்த வழியாகத்தான் அவர்கள் வருவார்கள். அப்படித்தான் நாமும் போகவேண்டும்'' என்றார் டான்.

லோரெலியை முன்னே தள்ளியபடி டான் சென்றார். படிக்கட்டுகளுக்குப் போகும் வழியில் எஃகுக் கதவு இருந்தது. கார்லோஸ் மற்றும் ஃபெலிக்ஸ் அங்கே வந்தனர். எங்கெல்மேன் மட்டும் அசையாமல் நின்றார்.

''உங்களுடைய நண்பரைக் கூப்பிடுங்கள்'' என்று ஃபெலிக்சிடம் கூறினார் டான். அவர்கள் கதவைத் திறக்க முயற்சி செய்தார்கள்.

''அவன் சாகட்டும்'' என்றான் ஃபெலிக்ஸ்.

டானும் கார்லோசும் சேர்ந்து தள்ளினாலும் அந்தக் கதவு அசையவில்லை. தண்ணீரில் அது அசையாமல் நின்றது. ''கடப்பாரையைக் கொடுங்கள்.''

ஃபெலிக்ஸ் கடப்பாரையைக் கொடுத்தான்.

கார்லோஸ் கதவோடு போராடிக்கொண்டிருந்த போது டான் கடப்பாரையை கதவுக்கும் கூட்டத்திற்கும் இடையே திணித்தார். அவரும் ஃபெலிக்ஸுமாகச் சேர்ந்து கதவைத் திறந்தனர். தண்ணீர் அவர்களைக் கடந்து படிக்கட்டு இருக்கும் இடத்திற்குப் பாய்ந்தது. மீண்டும் கதவை அவர்கள் மூடினார்கள்.

கார்லோசும் ஃபெலிக்சும் படிக்கட்டை நோக்கிப் பாய்ந்தனர். திடீரென்று பாய்ந்த நீர் லோரெலியைக்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கவிழ்த்தது. அவள் அலறினாள். கீழே விழப்போன அவளை டான் பிடிக்க முயன்றார். முடியவில்லை தண்ணீருக்குள் போன அவள் சிறிது தொலைவில் மேலே வந்தாள்.

எங்கல்மேன் கீழே தள்ளப்பட்டார், அவர் தத்தளித்துக் கொண்டே நீர் மட்டத்திற்கு வந்தார். இப்போது தண்ணீருக்கும் கூரைக்கும் இடையே மூன்று அடிதான் இருந்தது, தண்ணீரின் உயரம் உயர்ந்தது.

டான் லோரெலியை நோக்கி நின்றார், வழியில் எங்கெல் மேனுடைய கைகள் அவருடைய கோட்டைப் பிடித்துக் கீழே இழுத்தன. டானுடைய தொண்டையைப் பிடித்தபடி எங்கெல்மேன் ஆக்ரோஷமாகப் போராடினார். அந்தப் பிடியை விலக்கி டான் அவரை உதறினார்; பிறகு லோரெலியை நெருங்கிச் சென்றார். அவளுக்கருகே போனார். அதற்குள் எங்கெல்மேன் லோரெலியைப் பிடித்துக் கொண்டார். டான் அவரை முகத்தில் அடித்து லோரெலியை விடுவித்தார். அவள் அலறிக் கொண் டிருந்தாள். லோரெலியைப் பிடித்த டான் ''போராடாதே நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றார்.

இப்போது தண்ணீருக்கும் கூரைக்கும் சில இன்ச் தூரம்தான் இருந்தது.

''என்னுடைய கோட்டைப் பிடித்துக்கொள்'' என்ற டான் வேகமாக நீந்தினார். கதவைக் கடந்த பிறகு அவளை முன் பக்கமாகத் தள்ளினார். அவர்கள் படிக்கட்டின் கீழ்ப் பகுதிக்கு வந்துவிட்டனர். எங்கெல்மேனுக்காகப் போக வேண்டுமா என்று டான் யோசித்தார். தண்ணீர் கூரை அளவுக்கு வந்து விட்டதைப் பார்த்ததும் அந்த யோசனையைக் கைவிட்டார். தண்ணீர் அவர்களைச் சுற்றி ஓடியது. லோரெலியைப் படிகளில் ஏற்றிவிட்டார். அங்கிருந்து படிகளில் ஏறி இருவரும் கார்லோஸ் மற்றும் ஃபெலிக்ஸ் இருந்த தளத்திற்கு வந்தார்கள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

ஃபெலிக்ஸ் அங்கிருந்த கதவை ஆராய்ந்தான்.

''இந்தக் கதவை திறக்க முடியாது'' என்றான் ஃபெலிக்ஸ்.

''இது இறுக்கமாக உள்ளது.''

டான் அந்தக் கதவைப் பார்த்தார்; ஃபெலிக்ஸ் சொல்வது சரிதான்.

''மின்சாரம் வந்தால்தான் இது திறக்கும். ஆனால் நமக்கு ஷாக் அடித்துவிடும்'' என்றார் ஃபெலிக்ஸ்.

''வெளியில் இருக்கும் ஆட்களுக்கு நாம் இங்கிருக்கிறோம் என்பதைத் தெரிவிக்கவேண்டும். இந்தக் கதவைத் தட்ட வேண்டும்'' என்றான் டான்.

கடப்பாரையை எடுத்துக் கதவில் தட்டத் தொடங்கினார் அவர்.

அப்போது விளக்குகள் அணைந்துவிட்டன. அவர்களைச் சுற்றி மூச்சு முட்டும் இருட்டு.

''கடைசி ஃப்யூசும் போய்விட்டது'' என்றார் டான்.

அவர் தொடர்ந்து தட்டினார்.

''தண்ணீர் ஏறுகிறது. என்னுடைய பாதம் வரை வந்துவிட்டது'' என்றாள் லோரெலி.

ஃபெலிக்சைத் தள்ளிக்கொண்டு கார்லோஸ் மேலே வந்தான். ''வழியை விடு'' என்றான்.

முட்டி அளவு நீரில் இருந்த ஃபெலிக்ஸ் பயந்துவிட்டான். கார்லோசைப் பிடித்து இழுத்து விட்டு மேலே வர முயன்றான்.

கார்லோஸ் முனகும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து யாரையோ அடிக்கும் சத்தம், நீரில் மூழ்கும் சத்தம் கேட்டது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

லோரெலி மீண்டும் அலறினாள்.

டான் இருட்டில் கை வைத்துத் தேடினார்; அவர் கார்லோசின் சட்டையைத் தொட்டார். பயத்தில் கார்லோஸ் டானுடைய கோட்டைப் பிடித்துக் கொண் டான். இழுத்த இழுப்பில் டான் விழுந்துவிட்டார். கார்லோசின் தொடையைக் கால்களால் பிடித்துக் கொண்ட டான் அவருடைய கழுத்தை நெறித்தார். ரத்த நாளத்தைப் பிடித்து வலிமையாக அழுத்தினான். கார்லோஸ் அடித்த அடியில் அவருக்கு பொறி கலங்கியது. கார்லோஸ் தடுமாற, இருவரும் நீருக்குள் விழுந்தனர்.

படிகளில் மோதியபடியே தாழ்வாரத்தை நோக்கிச் சென்றார் டான். கார்லோசின் பிடி தளர்ந்தது. முழு முயற்சி செய்து தன்னை கார்லோசிடமிருந்து டான் விடுவித்துக் கொண்டார். நீந்தி மேலே வந்தவர் படியின் மீது ஏறினார். மேலே வந்த கார்லோசை எட்டி உதைத்தார். அது கார்லோஸ் மீது படவில்லை. டான் மீண்டும் தண்ணீரில் மூழ்கினார். தண்ணீரில் கார்லோசைத் தேடினார். ஆனால் கார்லோஸ் கண்ணில் படவில்லை. டான் மேலே வந்தார்.

மின்சார விளக்கு கண்ணைச் சிமிட்டி ஆரஞ்சு வெளிச்சம் தந்தது.

இப்போது கார்லோஸ் கீழ்ப்படியில் நின்று கொண்டிருந் தான்; அவனுடைய உதடுகள் விரிந்து பற்கள் வெண்மை யாய் தெரிந்தன.

டான் படியை நோக்கி நீந்தினார். கார்லோஸை எட்டி உதைத்தார். டான் ஒதுங்கிக் கொள்ள கார்லோஸ் சத்தமிட்டான். லோரெலி மேலே நின்றாள். தண்ணீர் தன்னை கார்லோசிடம் சேர்த்துவிடும். லோரெலி ஏதாவது செய்யாவிட்டால் தான் மூழ்க வேண்டும் அல்லது தலையில் அடிபட வேண்டும்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

லோரெலி செயல்பட்டாள். கடப்பாரையை எடுத்தாள், படிகளில் இறங்கி வந்து தலைமேல் சுழற்றி கார்லோஸ் தலையில் அடித்தாள்.

அந்த நீக்ரோ திரும்பினான், கைகளை உயர்த்தினான். ஆனால் கடப்பாரை உச்சியில் இறங்கிவிட்டது. தண்ணீருக்குள் அப்படியே விழுந்தான் கார்லோஸ்.

டான் அவனைப் பிடித்தார், ஆனால் அந்த பளுவை அவரால் தாங்க முடியவில்லை. தானும் மூழ்கும் நிலை வந்ததும் கார்லோசைக் கைவிட்டார். நீந்தி லோரெலி இருக்கும் இடத்திற்கு வந்தார். அவள் இடுப்பளவு நீரில் இருந்தாள்; அவரைக் கை கொடுத்துத் தூக்கினாள். அவர் எழுந்து நின்றபோது படிகளின் முடிவில் இருந்த கதவின் வழியாக யாரோ சத்தம் போடுவது கேட்டது.

லோரெலியைப் பிடித்துக் கொண்டு டான் மேலே வந்தார்; சத்தம் மீண்டும் கேட்டது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அத்தியாயம் பதின்மூன்று

கடைசிச் சிரிப்பு

டான் கடைசிப் படியை அடைந்த போது தண்ணீர் முட்டி அளவுக்கு இருந்தது. அவரும் லோரெலியும் எஃகுக் கதவில் சாய்ந்து கொண்டனர்.

''ஹாரி, நீங்களா? என்று டான் சத்தம் போட்டார்.

''நான்தான், இந்தக் கதவை திறக்க முயற்சி செய்கிறேன். டைனமைட்டைப் பயன்படுத்தலாமா?''

''வேண்டாம்'' என்றார் டான். நாங்கள் கதவுக்கருகே இருக்கிறோம். தண்ணீர் ஏறிக்கொண்டிருக்கிறது.

''சரி, நான் பார்த்துக் கொள்கிறேன். இன்னும் ஐந்து நிமிடம் தாக்குப் பிடிக்க முடியுமா?''

''அதைவிட சீக்கிரமாகச் செய்யவேண்டும்'' என்றார் டான். திடீரென்று பெருகிய தண்ணீரில் அவர் கீழே விழுந்தார்.

''நான் செய்கிறேன்'' என்றார் ஹாரி.

லோரெலி டானோடு ஓட்டிக்கொண்டாள்.

''அவர்களால் முடியாது. அவர்கள் செய்ய மாட்டார்கள்'' என்றாள் அவள்.

''இதுவரை ஹாரி தோல்வியடைந்து நான் பார்த்த தில்லை'' என்றார் டான். உற்சாகமாய் இருப்பதுபோல

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவர் பேசினார். ஹாரியால் எப்படிக் காப்பாற்ற முடியும் என்று அவருக்குத் தெரியவில்லை. ''என்னைப் பிடித்துக் கொள், தைரியமாக இரு.''

தண்ணீர் லோரெலியின் தோள்கள் வரை வந்துவிட்டது. வெளிச்சம் இல்லாத நிலையிலும் முகத்தின் வெறுப்பு தெரிந்தது.

நிமிடங்கள் நகர்ந்த போது, தண்ணீர் இன்ச் இன்சாக உயர்ந்தது.

''ஐயா, இருக்கிறீர்களா!'' என்றார் ஹாரி.

''ஆமாம். என்ன நடக்கிறது?''

''கிஸப்பேயின் ஆட்கள் மூன்று பேரை ஏரிப்பக்கம் அனுப்பி இருக்கிறேன். அங்கிருந்து தண்ணீர் வரும் குழாயை அவர்கள் உடைக்கப் போகிறார்கள். சீக்கிரமாக அதைச் செய்து விடுவார்கள்''

''நல்லது ஹாரி''

''நான் வருகிறேன். இது சீக்கிரமாய் முடிந்துவிடும்.''

தண்ணீர் டானுடைய தோள்கள் வரை உயர்ந்து விட்டது. அவர் லோரெலியைத் தூக்கிப் பிடித்தார்.

''கை கால்களை அசைத்துக் கொண்டிரு'' என்று அவளிடம் சொன்னார் அவர். இப்போது தலைக்கு மூன்று அடி இடைவெளி இருக்கிறது. அது உச்சிக்கு வருவதற்குள் அவர்கள் கதவைத் திறந்துவிடுவார்கள்.

அவளை ஒரு கையில் பிடித்தபடி அவர் நீந்திக் கொண்டிருந்தார்.

தண்ணீர் ஏறிக்கொண்டிருந்தது. ஆனால் அதன் வேகம் குறைந்துவிட்டது. கையை உயரே தூக்கித் தொட்டார்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவர். இன்னும் மூன்று அல்லது நான்கு நிமிடங்களில் தண்ணீர் தலைக்கு மேலே வந்துவிடும்.

''பின்புறமாகப் படுத்துக்கொண்டு தலையைத் தண்ணீரில் வைத்துக்கொள் அவள் நீள்வதற்கு அவர் உதவி செய்தார். ''பயப்படுகிறாயா?''

''இப்போது அவ்வளவு இல்லை. உங்களுக்குப் பயம்?''

''பயமாகத்தான் இருக்கிறது. என்ன செய்யமுடியும்?''

''ஃபெலிக்ஸ் இறந்துவிட்டானா?''

''ஆமாம். அவன் இறந்துவிட்டான். இப்போது அவர்களைப் பற்றி நினைக்க வேண்டாம்.''

''எனக்கு எந்த வருத்தமுமில்லை. அவனைத் தெரியாதவள் மாதிரி இருக்கிறேன்.''

ஆரஞ்சு வெளிச்சம் திடீரென்று பரவியது, அவர்களது முகத்திற்கு மேலே ஆறு இன்ச் உயரத்தில் பாறைகள் இருந்தன; விளக்கு மீண்டும் அணைந்தது.

''அல்ஸ்கோனி சிரித்துக் கொண்டிருப்பான்'' என்றாள் லோரெலி. அவளுக்குப் பயம் பழகிவிட்டது. குரல் தெளிவாக இருந்தது. ''அவனிடமிருந்து தப்பிவிடலாம் என்று நினைத்தது முட்டாள்தனம். பேசாமல் மூழ்கிப் போய்விடலாம்.''

''மோசமான யோசனை. நாம் நிச்சயமாகத் தப்பிக்கப் போகிறோம், சினிமாவில் வருவதைப் போல; கடைசிக் காட்சியில்தான் காப்பாற்றுவார்கள்.''

''அந்தக் காட்சியே முடியப்போகிறது. என் உடல் குளிர்ந்து விட்டது.''

இன்னும் சில நொடிகள்தான் இருக்கும் என்று டான் நினைத்தார். கூரையைத் தொடுவதற்காகக் கையை உயர்த்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தினார்; ஆனால் எதுவும் தட்டுப்படவில்லை. முழுமையாக உயர்த்திய போது தொட முடிந்தது.

''அவர்களுக்கு வெற்றி என்று நினைக்கிறேன். தண்ணீர் ஒரு அடி அளவுக்குக் குறைந்திருந்தது.''

''அப்படியா?''

''நீயே தொட்டுப் பார்.''

''ஆமாம். என்னால் தொட முடியவில்லை.''

டான் கால்களைத் துழாவி படிகளைக் கண்டுபிடித்தார்.

''அவர்களுக்கு வெற்றி'' அவர் சத்தம் போட்டார். நம்மால் நிற்க முடியுது. நான் சொன்னேன். தண்ணீர் கீழே போகிறது.''

லோரெலி அவருக்கருகே வந்தாள்; அவர் மீது சாய்ந்து கொண்டு அழுதாள்.

ஹாரியின் குரல் கேட்டது. ''நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? தண்ணீரை நிறுத்தி விட்டோம்; கதவைத் திறக்கப் போகிறோம்''

''நாங்கள் நன்றாக இருக்கிறோம், ஹாரி கதவை எப்படித் திறப்பீர்கள்?''

''ஸ்விட்ச் போர்டைக் கண்டுபிடித்துவிட்டோம். மின்சாரத்தைக் கொடுத்துக் கதவைத் திறப்போம்.''

''சில நிமிடங்கள் பொறுமையாக இருங்கள். நாங்கள் தண்ணீரை விட்டு மேலே வருகிறோம்.''

''சரி, நீங்கள் தயாரானவுடன் சொல்லுங்கள்.''

இதற்குள் தண்ணீர் முட்டிக்கு வந்துவிட்டது. மேலும் குறைந்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''இன்னும் ஐந்து நிமிடங்களில் நாம் வெளியில் போகலாம்'' என்றார் டான்.

டானை விட்டு விலகிய லோரெலி, ''என்னை என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்றாள். ''என்னைப் போலீசில் ஒப்படைக்கப் போகிறீர்களா?''

''நான் உன்னை எதுவும் செய்யப்போவதில்லை. நீ என்ன செய்யப்போகிறாய் என்பது உன் பிரச்சினை. என்னைப் பொறுத்தவரை நீ அவர்களோடு இறந்து விட்டாய். போலீஸ் உன்னைப் பிடிப்பதற்கு முன் சில மணி நேரங்கள் இருக்கின்றன.''

வெகு நேரத்திற்கு அவள் எதுவும் பேசவில்லை. பிறகு ''ஃபெலிக்சின் நிலைமை பரவாயில்லை'' என்றாள்.

மேலிருக்கும் படியில் தண்ணீர் படாத இடத்தில் அவர்கள் நின்று கொண்டிருந்தனர்.

''கதவைத் திறக்கும்படி சொல்லப்போகிறேன்'' என்றார் டான்.

''பலெர்மோவில் இருக்கும் பஸோனி மாளிகை அல்ஸ் கோனிக்குச் சொந்தம். என்னை எலியைப்போல சாக வேண்டும் என்றான் அவன். எலி போலவே செய்து காட்டுகிறேன் அவனுக்கு. துறைமுகத்தில் ஒரு விசைப்படகு இருக்கிறது. அதன் பெயர் நெட்டுனோ''

''என்னுடைய ஆட்கள் அவனைப் பிடித்திருக்கலாம்.''

''அவனை அவ்வளவு சுலபமாகப் பிடிக்க முடியாது. அவனைத் தப்பவிடக்கூடாது. கதவு திறப்பதற்கு முன் உங்களுக்கு நன்றி சொல்கிறேன். நீங்கள் இல்லாவிட்டால் நான் இந்நேரம் செத்திருப்பேன். ஃபெலிக்ஸ் எனக்கு உதவவில்லை.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''நீ இல்லாவிட்டால் கார்லோஸ் என்னைக் கொலை செய்திருப்பான்'' குரலை உயர்த்திய டான் ''ஹாரி, நீங்கள் உங்கள் வேலையைத் தொடங்கலாம்'' என்றார்.

இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு எஃகுக்கதவு திறந்து கொண்டது.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு டான் தன் இருப்பிடத்தில் இருந்தார், ரோமில் இருக்கும் கேப்டன் ரோஸியோடு தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்தார்.

வராந்தாவில் செர்ரி சிஸிப்பே மற்றும் அவரது நண்பர் களுடைய தேவைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். வராந்தா கம்பியில் சாய்ந்தபடி ஹாரி டான் பேசுவதைக் கேட்டார்.

மாடியில் மரியன் லோரெலிக்கான மாற்றுடையைக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

டான் ''எந்த சந்தேகமும் இல்லை. எந்த ஜூரியையும் நம்ப வைக்கும் சாட்சி கைவசம் இருக்கிறது. பலெர்மாவில் இருக்கும் பஸோனி மாளிகைக்குப் போகிறான் அல்ஸ்கோனி. அவனைப் பிடிக்க வேண்டுமென்றால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். சில மணி நேரங்களுக்கு முன்பே அவன் புறப்பட்டுவிட்டான். அவனுடைய விசைப்படகு துறைமுகத்தில் இருக்கிறது. அதன் பெயர் நெட்டுனோ.''

ரோஸி ''உங்களுடைய நம்பரைக் கொடுங்கள். நானே கூப்பிடுகிறேன்'' என்றார்.

நம்பரைக் கொடுத்துவிட்டு டான் ரிசீவரைக் கீழே வைத்தார். அப்போது மரியனும் லோரெலியும் உள்ளே வந்தார்கள். லோரெலி மரியனுடைய கறுப்பு ஃப்ராக்கை அணிந்திருந்தாள். அவளுடைய சிகப்பு நிறமான தலைமுடி

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

தொப்பிக்குள் வைக்கப்பட்டிருந்தது. அவள் ஏதோ சங்கடத்தில் இருந்தாள்.

மரியன் வராந்தாவுக்குச் சென்றாள்.

''என்ன செய்யப்போகிறாய்?'' என்று கேட்டார் டான்.

''என்னால் என்ன செய்ய முடியும்? என்னிடம் பணம் இல்லை.'' என்ற படி மேசையிலிருந்த சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தாள். ''என்னால் வெகுதூரம் போக முடியாது.''

நான் கொஞ்சம் பணம் கொடுக்கிறேன். இன்றிரவு உன்னை பிரான்சுக்கு அழைத்துப் போகிறேன். சியென்னா போலீஸ் உன்னைத் தேடிக் கொண்டிருக்கும். பிரான்சில் உனக்கு வாய்ப்பு அதிகம். எப்படியிருந்தாலும் நாளைக் காலையில் வங்கி திறந்தால்தான் பணம் எடுக்க முடியும். பிரான்சில் செக்கை மாற்றலாம்.''

அவள் அவரை உற்றுப் பார்த்தாள்.

''எனக்காக இதைச் செய்கிறீர்களா?''

''உனக்கு ஒரு வாய்ப்பு தருகிறேன். அது பெரிய வாய்ப்பு இல்லை. அதை உன் திறமைப்படி பயன்படுத்திக் கொள்ளலாம். உனக்கு ஒரு மில்லியன் டாலர் கொடுக் கிறேன், உன்னை பிரான்சில் சேர்க்கிறேன். மற்றபடி உன் சவுகரியம்.''

''போலீஸ் உங்களோடு என்னைப் பார்த்தால் பிரச்சினை யாகும்.''

''அது என் தலைவதி. நீ புறப்படத் தயாரா?''

''ஆமாம். நான் தயாராக இருக்கிறேன்.''

''இங்கேயே இரு'' என்ற டான் வெராந்தாவுக்குச் சென்றார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''எனக்குக் கார் வேண்டும். அதில் பெட்ரோல் இருக்கிறதா?''

''டாங்க் நிரம்பியிருக்கிறது'' என்ற ஹாரி காரை எடுக்கச் சென்றார்.

டான் மரியனை அழைத்தார்.

''அவளை பிளாரசன்சுக்குக் கூட்டிப் போகிறேன். ரோசி அழைத்தால், நான் தூங்கப் போய்விட்டேன், என்னை எழுப்ப முடியாது என்று சொல்லிவிடு. நாளை பகலில் நான் வந்துவிடுவேன்.''

''அவள் தப்பிக்க உதவப் போகிறீர்களா? இது தேவையா டான்? போலீஸ் அவளைத் தேடுகிறது.''

''எனக்குத் தெரியும். ஆனால் இதை நான் செய்ய வேண்டும். அவள் இல்லாவிட்டால் அந்த நீக்ரோ என் கதையை முடித்திருப்பான். நான் அவளுக்கு ஏதாவது செய்ய வேண்டும். அவளைக் கைகழுவ முடியாது.''

''ஹாரியை அழைத்துப் போகிறீர்களா?''

''வேண்டாம். ஒருவேளை நாங்கள் நிறுத்தப்பட்டால் அவரும் மாட்டிக் கொள்வார்.''

வெராந்தா படிகளுக்கருகே பென்ட்லே காரை நிறுத்தினார் ஹாரி. காரை விட்டு இறங்கி டானைப் பார்த்தார்.

''தயாரா இருக்கிறது'' என்றார்.

''அவரை அழைத்துப் போகலாம்'' என்றாள் மரியன்.

டான் வேண்டாம் என்றார், வரவேற்பறைக்குள் சென்று லோரெலியை அழைத்தார்.

''நாம் போகலாம்'' என்றார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அவள் படிகளில் இறங்கி வந்தாள், வெராந்தாவில் இருந்தவர்களை அவள் பார்க்கவில்லை.

ஹாரி, ''நீங்கள் ஓட்டுகிறீர்களா, நான் ஓட்டட்டுமா?'' என்று கேட்டார்.

''நீங்கள் வரவில்லை'' என்ற டான் லோரெலிக்குக் கதவைத் திறந்து வைத்தார். அவர் டிரைவர் சீட்டில் உட்கார்ந்து கொண்டார்.

''ஹாரி வாதாட வேண்டாம்'' என்றார். நாளை மதியம் நான் வந்துவிடுவேன். ஜகோபோவைப் பார்த்துக்கொள்.''

ஹாரி பதில் சொல்வதற்குள் டான் க்ளட்சை இயக்க கார் சீறிப் பாய்ந்தது.

பொக்கிபோன்ஸி பாதையில் கார் போய்க்கொண்டிருந்தது. ''போலீசாரிடம் அல்ஸ்கோனியைப் பற்றிச் சொல்லிவிட்டீர்களா?'' என்று கேட்டாள் லோரெலி.

''சொல்லிவிட்டேன். அல்ஸ்கோனிக்கு பலெர்மோவில் வரவேற்பு காத்திருக்கும். இந்த முறை அவன் தப்ப முடியாது.''

''அவன் யாரையோ சந்திக்கப்போகிறான். மெனோ டோவை ஏன் கொலை செய்தான் என்று தெரியவில்லை. அவன் கார் ஓட்டிப் பல வருடங்கள் ஆகிறது. மெனோடா தான் கார் ஓட்டுவான். தானே பலெர்மோவரை கார் ஓட்ட முடியாது. யாரோ ஒருவரை அவன் எதிர்பார்க்கிறான்.''

''அவனைப் பற்றிக் கவலைப்படாதே. அதைப் போலீஸ் பார்த்துக் கொள்ளும். பஸோனி மாளிகையைப் பற்றி ஜகோபோவிற்குத் தெரியாதா?''

''இல்லை, எனக்கும் ஃபெலிக்சுக்கும் மட்டும்தான் தெரியும்.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அதுதான் விஷயம். நீ இறந்து விட்டதாக அவன் நினைக்கிறான். ஆகவே பஸோனி மாளிகை பத்திரமானது என்பது அவனுடைய கணக்கு. வரவேற்பாளர்களிடம் அவன் மாட்டிக் கொள்வான்.

''அவன் பிடிபட்ட பிறகு அதை நான் நம்புகிறேன். அவன் மிகவும் புத்திசாலி. அவன் தப்பித்தால் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உங்களால்தான் அவன் இப்போது பிரச்சினையில் இருக்கிறான். கணக்குத் தீர்க்கும் வரை அவன் ஓய மாட்டான்.''

''அவன் தப்ப மாட்டான்'' என்ற டான் திடீரென்று ''ஷாபிரோவைக் கொன்றது யார்?'' என்று கேட்டார். அவள் அவரைப் பார்த்தாள்.

''அதைக் கண்டுபிடிப்பது லண்டன் போலீசின் வேலை. நீங்கள் ஏன் அதை யோசிக்கிறீர்கள்?''

டான் அவளுக்குப் பதில் சொல்வதற்குள் சக்தி வாய்ந்த ஹெட்லைட் வருவதைப் பார்த்தார். அவர்கள் மேலேறிச் சென்று கொண்டிருந்த பாதை பாம்பைப் போல வளைந்திருந்தது. அந்தக் காரை அவரால் பார்க்க முடிய வில்லை. ஆனால் அது வேகமாக வந்து கொண்டிருந்தது.

''இவன் வேகமாக வருகிறான்'' என்ற டான் வலது பக்கமாகத் திரும்பி ஹெட்லைட் வெளிச்சத்தைக் குறைத்தார்.

அந்தக் கார் அவர்களை நோக்கி வந்தது, சாலையின் தவறான பகுதியில் ஐம்பது மைல் வேகத்திற்கு மேல் ஹெட்லைட் வெளிச்சத்தோடு பாய்ந்தது.

அந்தக் காரின் வெளிச்சத்தால் டான் சிறிது நேரம் பார்வையை இழந்தார். அவர் பிரேக் மீது காலை வைத்து அழுத்தினார். அந்தக் காரும் ப்ரேக் போட்டு டயர்கள்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

கிரீச்சிடும் சத்தம் கேட்டது. பென்ட்லேயின் பக்கத்தில் அது மோதி சற்றுத் தொலைவில் நின்றது.

சத்தம் போட்டுக் கொண்டே கதவைத்திறந்த டான் எகிறிக் குதித்தார்.

அந்தக் கார் சாலையின் குறுக்கே நின்றது. அதனுடைய பின் பக்கத்து சக்கரங்கள் மலை விளிம்பில் இருந்தன.

தொங்கும் தொப்பியும் மழைக்கோட்டும் அணிந்த ஒருவர் அந்தக் காரிலிருந்து இறங்கி வந்தார். பக்கத்து இருக்கையில் இன்னொருவர் காரின் முன்பகுதியை அவர் பார்வையிட்டார். டான் அருகே வந்ததைப் பற்றி அவர் கவலைப்படவில்லை.

''என்ன விளையாட்டிது. சாலையின் தவறான பக்கத்தில் வந்தாய் நீ'' என்றார் டான்.

மழைக்கோட்டு அணிந்தவர் டார்ச்லைட்டை முன் பக்கத்து சக்கரங்கள் மீது திருப்பினார். காரின் முன்பகுதி உடைந்து டயரைக் கிழித்து விட்டிருந்தது.

''நாங்கள் அவசரமாகப் போகிறோம். உங்கள் காருக்கு ஏதாவது பாதிப்பு உண்டா?''

''நீங்கள் அவசரமாகப் போவதைப் பற்றி எனக்குக் கவலை யில்லை. சாலையில் இந்த மாதிரி ஓட்டக்கூடாது.'' ''உங்களுடைய காருக்கு... என்று மழைக்கோட்டுக்காரர் சொல்லும் போதே அவருடைய கூட்டாளி காரிலிருந்து இறங்கி டார்ச் லைட் வெளிச்சத்தில் வந்தார்.

''உங்கள் குரலைக் கேட்ட மாதிரி இருக்கிறது'' அவர் கையிலிருந்த .45 துப்பாக்கியை டானை நோக்கி நீட்டினார்.

''இது திரு. மிக்லெம்தானே?''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

மழைக்கோட்டுக்காரர் டார்ச்லைட்டை டானுடைய முகத்தில் அடித்தார்.

''நாம் மீண்டும் சந்திக்கிறோம்'' என்றார் அல்ஸ்கோனி. ''உங்களைத் தொலைப்பது மிகவும் சிரமாக இருக்கிறது. அப்படியே இருங்கள்.'' க்ராண்டரைப் பார்த்து ''காரில் யாராவது இருக்கிறார்களா என்று பார்.''

க்ராண்டர் பென்ட்லேக்கு அருகே வந்தார். அவர் வருவதைப் பார்த்த லோரெலி கதவைத் திறந்து நழுவினாள். க்ராண்டரின் கையிலிருந்த துப்பாக்கி அவளை அசையாமல் செய்துவிட்டது.

க்ராண்டரைப் பார்த்தவுடன் அவள் அலறினாள்.

மெனோடோவைக் கொலை செய்தபிறகு அல்ஸ்கோனி காருக்கு அருகே சென்றார். அவ்வளவு பெரிய கடிலாக்காரை தன்னால் ஓட்ட முடியுமா என்ற சந்தேகம் அவருக்கு ஏற்பட்டது. டிரைவர் இல்லாத குறையை அவர் உணர்ந்தார். மெனோடோவைக் கொலை செய்திருக்கக் கூடாது என்ற எண்ணம் ஏற்பட்டது.

ஐந்து வருடங்களாக அவர் கார் ஓட்டியதில்லை. அந்த மாதிரி விஷயங்களில் அவருக்குத் திறமை கிடையாது.

க்ராண்டர் நள்ளிரவில் வரப்போகிறான் அவன் வரும்போது அங்கே இருக்க வேண்டியது அவசியம். விமான நிலையத்தை அடைவதற்கு ஒன்றரை மணி நேரம் இருந்தது. நாற்பது மைல் தூரம் இந்தக் காரை ஓட்ட வேண்டும்.

காரில் உட்கார்ந்தார். ஹெட் லைட் வேலை செய்வதைத் தெரிந்து கொள்வதற்கு சில நிமிடங்களைச் செலவழித்தார். ஒரு வழியாக ஹெட்லைட்களைப் போட்ட பிறகு, இக்னிஷயன் சாவியைத் திருப்பி இன்ஜினை ஓடவிட்டார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

நல்லவேளையாக அது ஆட்டோமெடிக் கியர் கொண்ட கார். கிளச்சோடு போராட வேண்டியதில்லை. காரை வாசல் வரை ஓட்டினார். மணிக்குப் பதினைந்து மைல் வேகத்தில் போனால் காரை சாலையிலேயே இருக்கும்படி செய்யலாம் என்று தெரிந்து கொண்டார்.

வாயிலில் இருந்த காவலாளி கதவைத் திறந்தான், அல்ஸ்கோனி ஓட்டுவதை ஆச்சரியத்தோடு பார்த்தான் அவன். பெரிய வண்டியை சாலையில் செலுத்துவதில் கவனமாக இருந்த அல்ஸ்கோனி அவரைக் கவனிக்கவில்லை. சாலை அகலமானவுடன் அவர் வேகத்தைக் கூட்டினார், மணிக்கு இருபத்தைந்து மைல் வேகம் பாதுகாப்பானது என்பது அவருடைய புதுக்கணக்கு.

விரைந்து சென்ற மலைப்பாதை அவருக்கு சிரமமாக இருந்தது. வியர்வையில் நனைந்துவிட்ட அல்ஸ்கோனி மெனோடோவைக் கொலை செய்ததற்காக மீண்டும் வருந்தினார். டாஷ் போர்டில் இருந்த கடிகாரம் அவருடைய தாமதத்தைச் சுட்டிக் காட்டியது. விமானம் வருவதற்குள் அவர் அங்கே போக வேண்டும் க்ராண்டரை இறக்கி விட்டு அது பறந்து விடும். அது பறக்கும் போது அல்ஸ்கோனி அதில் இருக்க வேண்டும். தப்பிப்பதற்கு சிறந்த வழி பலெர்மோவிற்கு விமானத்தில் சென்று அங்கிருந்து படகில் செல்வதுதான் என்று அவர் நினைத்தார்.

காரின் வேகத்தை முப்பத்தைந்து மைலாகக் கூட்டினார். அது பாதையை விட்டு எகிறியது. பிரேக்கை அழுத்தவில்லை என்றால் அது சரிவில் உருண்டிருக்கும், சபித்துக் கொண்டே வேகத்தைக் குறைத்தார்.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு மணிக்கு இருபது மைல் வேகத்தில் விமான நிலையத்திற்குச் செல்லும் முக்கியமான சாலைக்கு வந்தார். அந்தச் சாலை நேராக இருந்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

வேகத்தைக் கூட்டி மணிக்கு முப்பத்தைந்தாக ஆக்கினார். ஸ்டியரிங் வீலோடு போராடியபடியே விமான நிலையத்திற்கு ஒரு மைல் தொலைவில் உள்ள சிறிய சாலையை அடைந்தார்.

குண்டும் குழியுமாக இருந்த குறுகிய சாலையில் காரை வேகமாக ஓட்டியவர் விமானத்தின் விளக்குகளைப் பார்த்தார்; இன்ஜின் சத்தமும் கேட்டது. ஆக்ஸலரேட்டரை அவர் அழுத்தினார். கார் புல்வெளிப் பக்கமாக சாய்ந்தது. அதற்குள் விமானம் புறப்பட்டுவிட்டது. காரை ஒரு தூரத்திற்குக் கொண்டு வந்து நிறுத்தியபோது விமானம் உயரே போய் இருட்டில் மறைந்துவிட்டது.

கோபமும் வியர்வையும்தான் அவருக்கு மிச்சம். இப்போது வில்லா ஸான் கியோவன்னி வரை காரில் போக வேண்டும். இதன் விளைவாக படகுப் பயணம் இருபத்திநாலு மணி நேரம் தாமதப்படும். இது ஒரு பேரிடி ஃபெலிக்ஸ் மற்றும் லோரெலிக்குத்தான் அந்தப் படகைப் பற்றித் தெரியும். ஆனால் அவர்கள் இப்போது இறந்து விட்டார்கள். ஆனாலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தான் எந்தப் பக்கம் போகிறோம் என்று அவர்களுக்குத் தெரியாவிட்டாலும் அவர்கள் தன்னைத் தேடுவார்கள்.

பெரிய சூட்கேஸ் ஒன்றைத் தூக்கிக்கொண்டு க்ராண்டர் காருக்கருகே வந்தார்.

''அது திரு. அல்ஸ்கோனியா?'' என்றார் மெதுவாக.

''என்னுடைய பெயரைச் சொல்லாதே, முட்டாளே'' என்று கடிந்தார் அல்ஸ்கோனி. ''பணத்தைக் கொண்டு வந்தாயா?''

''ஆமாம்'' என்ற க்ராண்டர் காரை நெருங்கினார். அவர் அல்ஸ்கோனியின் முகத்தைப் பார்க்க விரும்பினார். அவருக்கு அது முக்கியமான விஷயம்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''நாம் பலெர்மோவுக்குப் போகிறோம்'' என்றார் அல்ஸ்கோனி. ''போகும்போதே நான் வழி சொல்கிறேன். நீ காரை ஓட்டலாம்'' அல்ஸ்கோனி இடம் மாறிக் கொண்டார்.

''பலெர்மோவா?'' என்றார் க்ராண்டர் ஆச்சரியத்தோடு, கதவைத்திறந்து டிரைவர் இருக்கையில் அமர்ந்தார் அவர். ''அது சிசீலியில் தானே இருக்கிறது?''

''வேறு எங்கே இருக்க முடியும், முட்டாளே நாம் உடனே அங்கே போக வேண்டும். நீ பேசுவதை நிறுத்திவிட்டு கார் ஓட்டினால் நல்லது.'' க்ராண்டருக்கு சுர்ரென்று ஏறியது. என்ஜினை இயக்கியவர் அந்த மோசமான சாலையில் வேகமாகச் சென்றார்.

''சாலையின் முடிவில் இடது பக்கம் திரும்ப வேண்டும். பிறகு நேராக.''

வசதியாக இருந்த இருக்கையில் சாய்ந்தபடி முன்பக்கக் கண்ணாடி வழியாகப் பார்த்தார் அல்ஸ்கோனி. வண்டி முக்கிய சாலையில் திரும்பியபோது டயர்கள் கிரீச்சிட்டன.

காரின் இயந்திர சக்தியை க்ராண்டர் முழுமையாகப் பயன்படுத்தினார். அவருக்கு வேகமாகப் போவதில் விருப்பமுண்டு, ஸ்பீடா மீட்டர் மணிக்கு தொண்ணூற்றி எட்டு மைல்களைத் தொட்டது.

இதற்கு என்ன அர்த்தம்? எதற்காக பாலெர்மோ? பின் பக்கத்து சீட்டில் அடுக்கப்பட்டிருக்கும் மரப்பெட்டிகளில் என்ன இருக்கிறது? அவசரமாக சிசிலி போக வேண்டிய காரணம்? ஏதாவது பிரச்சினையா? அல்ஸ்கோனி தப்பித்துப் போகிறானா?

தன் பக்கத்திலிருக்கும் சதைப் பிடிப்பான உருவத்தைப் பார்த்தார் க்ராண்டர். டாஷ் போர்டு வெளிச்சத்தில் அந்த

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

முகத்தின் கவலை தெரிந்தது. ஷேவ் செய்யப்படாத முகமும் கருவளையம் கொண்ட கண்களும் தெரிந்தன.

அல்ஸ்கோனியின் வடிவம் க்ராண்டருக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. அவர் கேள்விப்பட்டதை வைத்து உறுதியான உடலை எதிர்பார்த்தார், ஆனால் இதோ கொழுகொழுவென்ற எரிச்சலூட்டும் வயதான முகம்.

க்ராண்டர் உற்றுப் பார்ப்பதை உணர்ந்த அல்ஸ்கோனி, க்ராண்டரை முறைத்துப்பார்த்தார். அல்ஸ்கோனியின் உடல் குலுங்கியது. என்ன முகம். இந்த மாதிரி முகம் உடையவன் என்று தெரிந்தால் இவனைப் பயன்படுத்தி யிருக்க மாட்டேன். கார்லோசின் பூத உடலைப் போல இந்த முகத்தையும் பார்த்தவர் மறக்க மாட்டார்கள். ஆனால் இவனால் கார் ஓட்ட முடியாது. இதே வேகத்தில் போனால் காலையில் நேபின்ஸ் சேரலாம். அல்ஸ்கோனி நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''சீக்கிரமே சியென்னாவுக்குப் போகும் மலைப்பாதை வரும். நீ மெதுவாகப் போக வேண்டும். மிக மெதுவாக அல்ல. நம்மால் முடிந்த வேகத்தில் போய் பலெர்மோவை அடைய வேண்டும்.''

''ஃபெலிக்ஸ் பலெர்மோவில் இருப்பாரா? அவர் சியென்னாவில் இருப்பதாக அறிந்தேன்'' காரின் வேகத்தை அதிகரித்தபடியே கேட்டார் க்ராண்டர்.

''வீண் வம்பு பேசவேண்டாம். நான் யோசிக்க வேண்டும்'' என்றார் அல்ஸ்கோனி கடுப்புடன்.

க்ராண்டர் காரை ஓட்டினார். அவமானத்தால் மனம் கொந்தளித்தது. விரைந்து செல்லும் மலைப்பாதையில் ஏறி, வேகத்தைக் குறைக்கும் போது அவருக்குள் அடுக்கடுக்காக யோசனைகள் தோன்றின.

மாற்றம் செய்யப் போவதாக அல்ஸ்கோனி சொல்கிறார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

உடனடியாகப் புறப்பட்டு வரவேண்டுமென்று கூறினார். அப்படியென்ற ல் அல்ஸ்கோனியோடு நெருக்கமாக இருக்க வேண்டுமா? அது அவசியமா? அல்ஸ்கோனியின் பேச்சு இப்படித்தான் இருக்குமென்றால் இவரோடு நாம் இருக்க வேண்டுமா?

இங்கிலாந்தில் இருந்து தான் எடுத்து வந்த பதினைந்தாயிரம் பவுண்டு பணத்தைப்பற்றி யோசித்தார் க்ராண்டர். அது இப்போது காருக்குள் இருந்தது. அல்ஸ் கோனியின் குணம் தெரிந்திருந்தால் அந்தப் பணத்தோடு காணாமல் போயிருக்கலாம். அது சிரமம் தான், ஆனாலும் அதைச் செய்திருக்கலாம். இப்போதும் காலம் கடந்து விடவில்லை. அந்த மரப்பெட்டிகளில் என்ன இருக்கிறது? பணம்?

இதையே யோசித்துக் கொண்டு க்ராண்டர் காரை ஓட்டிய போதுதான் டானுடைய பென்ட்லே காரை அவர் கவனிக்கவில்லை. சாலையின் வளைவைக் கடந்தவர் இடது புறமாகப் போய்விட்டதை உணர்ந்து, பிரேக்கை அழுத்தினார். எதிரே அந்தக் காரின் ஹெட்லைட்டுகள்.

காரோடு கார் இடித்ததையும் முன்பக்க டயர் வெடித்ததையும் அவர் கேட்டார். ஒரு நிமிடம் கார் பள்ளத்தில் விழுந்துவிடும் என்று நினைத்தார். தான் ஸ்டியரிங்கோடு போராடும்போது அல்ஸ்கோனி திட்டுவது கேட்டது. கார் திடீரென நின்றது. பயத்தோடு காரின் கதவைத் திறந்து அவர் வெளியே வந்தார்.

லோரெலி க்ராண்டருக்குப் பின்புறத்தில் இருந்த அல்ஸ் கோனியைப் பார்த்துவிட்டாள். அவளுக்கு ஜன்னி கண்டது.

க்ராண்டர், "திரு. மிக்லெம்மோடு என்ன செய்கிறாய்?" துப்பாக்கியை நீட்டினார் "என்ன இது?"

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''க்ராண்டர், அவளை இங்கே கொண்டுவா. அவளைத் தப்ப விடாதே'' என்றார் அல்ஸ்கோனி.

க்ராண்டர் அவளுடைய மணிக்கட்டைப் பிடித்தார். அவள் தப்புவதற்கு வழி தேடினாள்; அவரை உதற முயன்றாள். அவளை வலுவாகப் பிடித்து இழுத்து வந்த க்ராண்டர் அல்ஸ்கோனியின் அருகே வந்தார். அவருடைய துப்பாக்கி டானைப் பார்த்தபடி இருந்தது.

கடிலாக் காரின் ஹெட்லைட் வெளிச்சத்தில் கொழுத்துப் போன அல்ஸ்கோனி வெள்ளையாக இருந்தார். அவருடைய உதடுகள் துடித்தன, கண்களில் மிரட்சி.

''இவனைக் கவனமாகப் பார். அசைந்தால் சுட்டுவிடு'' என்ற அல்ஸ்கோனி லோரெலியின் கையைப் பிடித்து இழுத்தார். அவளை வெளிச்சத்தில் வைத்துப் பார்த்தார். ''நீ தப்பிவிட்டாயா? விஷயத்தையும் சொல்லிவிட்டாய், அல்லவா? என்னுடைய ரகசியங்களை வெளிப்படுத்தி விட்டாய்'' என்றவர் அவளுடைய கழுத்தைப் பிடித்து உலுக்கினார்.

லோரெலியின் கால்கள் பலமிழந்தன. கைகள் அல்ஸ் கோனியின் மணிக்கட்டோடு போராடின.

''என்னுடைய படகைப் பற்றிச் சொல்லிவிட்டாயா?''

''கையை எடு. நீ தப்ப முடியாது. போலீஸ்காரர்கள் அந்தப் படகில் காத்திருக்கிறார்கள். பஸோனி மாளிகை யிலும் இருக்கிறார்கள்.''

அல்ஸ்கோனி லோரெலியை வீசி எறிந்தார், அவள் வீதியில் விழுந்தாள். அவர் துப்பாக்கியை எடுத்தார். முகத்தில் கொலை வெறி வேகமாக நகர்ந்த க்ராண்டர் டானை விட்டுப் பார்வையை எடுக்காமல் அல்ஸ் கோனியின் கைகளில் அடித்தார். துப்பாக்கி கீழே விழுந்தது.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அல்ஸ்கோனி தடுமாறினார்.

''பொறு'' என்றார் க்ராண்டர் ''என்ன நடக்கிறது?''

''நடக்கிறதா? அவள் நமக்குத் துரோகம் செய்து விட்டாள். போலீசிடம் பேசிவிட்டாள்.''

''அது என்ன படகு?''

''படகு இல்லாமல் நான் எப்படி வெளியேறுவது'' என்றான் அல்ஸ்கோனி.

''போலீசாருக்கு என் அடையாளம் தெரியும். அந்த மாளிகையில் பணம் இருக்கிறது. நான் தப்பிப்பது எப்படி?''

இந்தச் செய்தி க்ராண்டருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. அல்ஸ்கோனி தப்பித்து ஓடுகிறார். போலீசுக்கு அவரைத் தெரிந்துவிட்டது. க்ராண்டரைப் பற்றித் தெரியாது. ஆனால் அல்ஸ்கோனியோடு பிடிபட்டால்... எப்படிப்பட்ட முட்டாளாக இருந்திருக்கிறோம். பதினைந்தாயிரம் பவுண்டோடு காணாமல் போயிருக்க வேண்டும். க்ராண்டருக்குப் புது யோசனை பிறந்தது.

''மோட்டார் படகு எங்கே இருக்கிறது?'' என்றார் க்ராண்டர்.

''ஆமாம். அது இருக்கிறது'' சிவெட்டவசியா துறைமுகத்தில் இருக்கும் மோட்டார் படகை மறந்து விட்டார். அதை வைத்துதான் இத்தாலிக்குள் ஃபிரஞ்சுக் கரன்சியைக் கொண்டு வருவது வழக்கம். ''நான் மறந்து போய் விட்டேன், எனக்காக பலெர்மோவில் போலீஸ் காத்திருக்கும்போது நான் மோட்டார் படகை மான் டெகார்லோவுக்கு எடுத்துப்போவேன். நாம் இப்போதே சிவட்டவுசியாலுக்குப் போகலாம்.''

க்ராண்டர் தட்டிவிட்ட துப்பாக்கியை அல்ஸ்கோனி எடுத்தார். லோரெலி எழுந்து டானுக்கு அருகில் நின்றாள், பயத்தோடு அல்ஸ்கோனியைப் பார்த்தாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''மிக்லெம்மின் கார் அடிபட்டிருக்கிறதா, பார்'' அல்ஸ்கோனி க்ராண்டரிடம் சொன்னார். இந்த இருவரையும் நான் பார்த்துக் கொள்கிறேன்.''

க்ராண்டர் பென்ட்லேவுக்கு அருகே சென்றார். பின்பக்கத்தில் சிறிது நசுங்கியிருந்தது. மற்றபடி எந்த பாதிப்பும் இல்லை. கதவைத் திறந்து டிரைவர் இருக்கையில் உட்கார்ந்திருந்த க்ராண்டர் இன்ஜினை இயக்கினார், கியர் போட்டு காரைச் சிறிது தூரம் நகர்த்தினார். பிறகு இன்ஜினை நிறுத்திவிட்டு இறங்கி வந்தார்.

''அது சரியாய் இருக்கிறது''

அப்படியானால் அதைப் பயன்படுத்துவோம். அது பாதுகாப்பானது. அவர்கள் நம்மோடு வரட்டும். மூன்று பேரோடு இங்கிருந்து காரில் நான் வருவதாக போலீஸ் நினைக்காது. அந்தப் பெட்டிகளை எடுத்து இந்தக் காரில் வை. பிறகு கடிலாக் காரை சாலையிலிருந்து ஓரமாக விட்டு விடு. சீக்கிரம். டானையும் லோரெலியையும் அல்ஸ்கோனி கண்காணித்துக் கொண்டிருக்க க்ராண்டர் அந்தப் பெட்டிகளை பென்ட்லே காரின் டிக்கிக்கு மாற்றினார். தன்னுடைய மற்றும் அல்ஸ்கோனியின் சூட்கேஸ்களையும் அங்கேயே வைத்தார்.

காடிலாக் அருகே வந்தவர், பிரேக்கை விடுவித்தார். காரின் முன்பக்கமாக வந்து அழுத்தினார். பின் சக்கரங்கள் விலகி கீழே இறங்கி ஐம்பது முழப் பள்ளத்தில் விழுந்தது காடிலாக்.

''மிக்லெம், நீங்கள் ஓட்டலாம். நாம் வேகமாக சிவிட்டவசியாவுக்குப் போகிறோம். லோரெலி, நீ அவருக்குப் பக்கத்தில் உட்கார். யாராவது ஒருவர் ஏதாவது பிரச்சினை செய்தால் நான் சுட்டு விடுவேன். புரிகிறதா?''

''நீ அதிக தூரம் போக முடியாது. உன்னையே நீ ஏமாற்றிக் கொள்கிறாய்'' என்றார் டான்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

க்ராண்டரும் அதையே நினைத்தார்.

''காரில் ஏறலாம்'' என்று அல்ஸ்கோனி கட்டளையிட்டார்.

டானும் லோரெலியும் பென்ட்லே காரில் ஏறிக்கொண்டனர். மற்றவர்கள் பின் இருக்கையில். டான் இன்ஜினை இயக்கினார். காரைத் திருப்பி சியென்னாவை நோக்கிச் செலுத்தினார்.

அப்போது மணி ஒன்று அடிக்க பத்து நிமிடங்கள். துறைமுகத்திற்குச் செல்ல நூற்றி இருபது மைல் பயணம் செய்ய வேண்டும். சாலையில் ஆளிருக்கிறது. மூன்றரைக்குப் போய் விடலாம் என்பது அல்ஸ்கோனியின் திட்டம்.

''லொம்பார்டோ படகில் தூங்கிக்கொண்டிருப்பான். அவன் இல்லாவிட்டால் நாம் காத்திருக்க முடியாது. உன்னால் அதை இயக்க முடியுமா?''

''முயற்சி செய்கிறேன்'' என்றார் க்ராண்டர். சந்தேகத்தோடு ''பெரிய மோட்டார் படகை நான் ஓட்டியதில்லை. ஆனால் இன்ஜின்களைப் பற்றி எனக்குத் தெரியும்.''

''முட்டாள் மாதிரி பேசாதே. படகை மாலுமி மாதிரி செலுத்த வேண்டும். மோன்டே கார்லோவுக்குப் போக முடியுமா?''

''இல்லை. அதெல்லாம் எனக்குத் தெரியாது.''

அல்ஸ்கோனி ஒரு நிமிடம் யோசித்தார். லொம்பார்டோ இல்லாவிட்டால் எல்லாமே வீணாகும். அவன் இருப்பதும் நிச்சயமில்லை.

முன்னால் நகர்ந்து டானுடைய தோள்களில் அவர் தட்டினார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''உன்னால் படகு ஓட்ட முடியுமா? படகு மூலம் என்னை மோன்டை கார்லோவுக்குக் கொண்டுபோக முடியுமென்றால் சிவிட்டவெசிலாவில் உங்களை சுடமாட்டேன்.

''இது நல்லசெய்தி'' என்றார் டான். உங்களை மோன்டோ கார்லோவில் இறக்கிவிட்ட பிறகு நானும் லோரெலியும் படகோடு திரும்பலாம் என்று நீங்கள் ஒப்புக்கொண்டால் நான் படகு ஓட்டுகிறேன்.''

''நிச்சயமாக'' என்ற அல்ஸ்கோனி இருட்டில் சிரித்துக் கொண்டார். என்னை மோடோ கார்லோவில் இறக்கி விட்டீர்கள் என்பதை நீங்கள் போலீசில் சொல்லக்கூடாது.''

''சொல்லமாட்டோம்'' என்றார் டான். அல்ஸ்கோனி தன்னை விடுவிக்கமாட்டான் என்பது அவருக்குத் தெரியும்.

கடற்கரை வழியாக சிவிட்டவெசியாவை அடைந்த போது மணி மூன்று அடித்தது.

''கொஞ்சம் இரு. சில விஷயங்களைக் கவனிக்க வேண்டும்'' என்றார் அல்ஸ்கோனி.

டான் காரை ஓரமாக நிறுத்தினார்.

''துறைமுகத்தில் இருக்கும் காவலாளி ஏதாவது கேட்கலாம். பெரும்பான்மையான காவலாளிகளை எனக்குத் தெரியும். ஆனாலும் எனக்குப் பழக்கமில்லாதவன் இருக்கலாம். எதற்கும் துப்பாக்கியைத் தயாராக வைத்துக்கொள்'' என்றார் க்ராண்டரைப் பார்த்து நான் ஜன்னலைத் திறந்து காவலாளியோடு பேசுகிறேன். ஏதாவது பிரச்சினை வந்தால் அவனை சுட்டுவிடு. உன்னிடம் சைலன்சர் இருக்கிறதா?''

''இல்லை'' என்றார் க்ராண்டர்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''என் துப்பாக்கியில் இருக்கிறது. அதை என்னிடம் கொடுத்து விட்டு இதை நீ வைத்துக்கொள்.''

க்ராண்டர் தன் துப்பாக்கியைத் தேடினார். ''ஒன்றுக்கு மேற்பட்ட காவலாளிகள் இருக்கலாம்.''

''இந்த நேரத்தில் இருக்க மாட்டார்கள்.''

க்ராண்டர் துப்பாக்கியைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு ஒரு கையால் தோட்டாக்களை வெளியில் எடுத்துக் கொண்டிருந்தார்.

''துப்பாக்கியைக் கொடு. ஏன் என்னைக் காக்கவைக்கிறாய்?''

''அது பாக்கெட்டில் மாட்டிக் கொண்டுள்ளது.''

''முட்டாள், துப்பாக்கியை பாக்கெட்டில் வைக்கக் கூடாது.''

சிறிது நேரத்தில் யார் முட்டாள் என்பது தெரிந்துவிடும் என்று நினைத்துக் கொண்டே க்ராண்டர் துப்பாக்கியின் குழலில் இருந்த தோட்டாவையும் எடுத்தார். தோட்டா இல்லாத துப்பாக்கியை அல்ஸ்கோனியிடம் கொடுத்து விட்டு சைலன்சர் பொறுத்திய .45 துப்பாக்கியைப் பெற்றுக் கொண்டார்.

''நீங்கள் இருவரும் எதுவும் பேசக்கூடாது. ஏதாவது அசைந்தால் லோரெலியின் தலையில் ஓட்டை போடுவேன். இப்போது துறைமுகத்தின் வாசலுக்குப் போகலாம், நேராக, ரயில்வே பாதையைக் கடந்து.''

டான் கியரைப் போட்டார். சிவெட்டவெச்சியாவுக்கு வரும் வழியில் இவர்கள் இருவரையும் சமாளிப்பது எப்படி என்று யோசித்துக் கொண்டே வந்தார். அவர்களிடம் துப்பாக்கி இருக்கும் வரையில் எதுவும் செய்ய முடியாது. மோட்டார் படகில் ஏறியவுடன் வாய்ப்பு கிடைக்கும்

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

என்று நினைத்தார். க்ராண்டர் வேகமாகச் செயல்படு கிறான். அவனிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அல்ஸ்கோனியைத் தாக்கிவிடலாம் என்ற தைரியம் இருந்தது.

ரெயில்வே பாதையைக் கடப்பதற்காக வேகத்தைக் குறைத்தார் அவர். துறைமுகத்தின் நுழைவாயிலில் சிகப்பு மற்றும் வெள்ளைப் பட்டை வரையப்பட்ட குறுக்குக் கம்பி இருந்தது. அதன் முடிவில் காவலாளியின் அறை. கையில் துப்பாக்கியோடு காக்கி யூனிபார்ம் அணிந்த ஒருவன் கம்பிக்கு அருகே நின்று கண்களைக் கசக்கிக் கொண்டிருந்தான்.

"தயாராக இரு" என்றார் அல்ஸ்கோனி. "நான் நன்றாக சாய்ந்து உட்காருகிறேன். நீ ஜன்னல் வழியாக அவனைச் சுட வேண்டும்."

கம்பிக்குக் கீழே நுழைந்து காவலாளி காரருகே வந்தான். "பரவாயில்லை. இவனை எனக்குத் தெரியும்" என்று அல்ஸ் கோனி முனகினார். குரலை உயர்த்தி "பெல்லினியா? பல மாதங்களாக உன்னைப் பார்க்கவில்லையே. எப்படி இருக்கிறாய்?" என்றார்.

காவலாளி புன்னகைத்தான்.

"ஐயா, நீங்களா? ரோமுக்குப் போகிறீர்களா? நான் என்ன செய்ய வேண்டும்?"

"நாங்கள் ரோமுக்குப் போகிறோம். இவ்வளவு கிட்டத்தில் இருப்பதால் நண்பர்களுக்கு என் படகைக் காட்டலாம் என்று வந்தேன். லொம்பார்டோ இருக்கிறானா?"

"இல்லை ஐயா, அவன் இப்போது படகில் தூங்குவ தில்லை. மூன்று வாரங்களுக்கு முன் அவனுக்குத் திருமணம் ஆகிவிட்டது."

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

அல்ஸ்கோனியின் முகம் இறுகியது.

''பரவாயில்லை. நண்பர்களுக்குப் படகை மட்டும் காட்டிவிடுகிறேன்.''

''இல்லை ஐயா. துறைமுகம் மூடப்பட்டுவிட்டது. ஒரு மணி நேரத்திற்கு முன் போலீசிடமிருந்து யாரையும் உள்ளே விடக் கூடாது என்ற உத்தரவு வந்தது. யாரோ ஒரு கொள்ளைக்காரன் தப்பிக்கப்போகிறான்.''

அல்ஸ்கோனி சிரித்தார்.

''என்னைப் பார்த்தால் கொள்ளைக்காரன் மாதிரி இருக்கிறதா? எனக்கு அரைமணி நேரம் போதும்'' பாக்கெட்டில் கை விட்டு ஆயிரம் லைர் நோட்டு ஒன்றை எடுத்தார் அவர். ''என்னை ஞாபகப்படுத்துவதற்காக ஏதாவது வாங்கிக்கொள். என்னுடைய நண்பர்களைக் காக்க வைக்கக்கூடாது.''

''நன்றி ஐயா, சீக்கிரம் வந்துவிடுங்கள். உங்களை யாராவது பார்த்தால் எனக்குப் பிரச்சினையாகும்.''

கம்பிக்கருகே சென்ற காவலாளி அதைத் தூக்கினான். டான் காரைச் செலுத்தினார்.

''இடது பக்கம்போக வேண்டும்'' என்ற அல்ஸ்கோனி காவலாளியைப் பார்த்துக் கையாட்டினார்.

பெரியதாக இருந்த கிடங்கைக் கடந்தவுடன் ''இங்கே நிறுத்து. இன்ஜினை நிறுத்திவிடு. சாவியை என்னிடம் கொடு'' என்றார் அல்ஸ்கோனி.

டான் அப்படியே செய்தார்.

''நான் காரிலேயே இருக்கிறேன். இவர்களைப் பார்த்துக் கொள்கிறேன். நம்முடைய சூட்கேஸ்களையும் மரப் பெட்டி களையும் படகில் ஏற்றிவிடு.''

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

க்ராண்டர் காரிலிருந்து இறங்கினார். டிக்கியைத் திறந்து பெட்டிகளை எடுத்து படகில் சேர்த்தார். பிறகு சூட்கேஸ் களையும் படகில் சேர்ந்தார். பிறகு காருக்கு வந்தார்.

''இருவரும் வெளியே வாருங்கள்'' என்றார் அல்ஸ்கோனி. க்ராண்டர் விலகிக்கொண்டார், லோரெலி, டான் மற்றும் அல்ஸ்கோனி காரிலிருந்து இறங்குவதைப் பார்த்தார்.

''திரு.மிக்லெம், நீங்களும் க்ராண்டரும் படகில் ஏறிக்கொண்டு அதைத் தயார் செய்தால் நல்லது.''

டான் லோரெலியின் கையைப் பிடித்துக் கொண்டார்.

''நீ என்னோடு வருகிறாய்'' என்றார் டான். அல்ஸ்கோனியின் முகத்தில் ஆத்திரம் வெடித்தது.

''இல்லை. நீங்கள் மட்டும்தான் திரு.மிக்லெம். அவள் இங்கே இருக்கட்டும்.''

''அவள் நம்மோடு வராவிட்டால் நான் மோன்டோகார் லோவுக்கு அழைத்துச் செல்ல மாட்டேன்.''

''அவள் வரமாட்டாள்'' என்றார் அல்ஸ்கோனி. ''நீ சொன்னதைச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் உன்னைச் சுட்டுவிடுவேன்.''

''என்னைச் சுட்டுவிட்டால் மோன்டோகார்லோவுக்குப் போக முடியாது'' என்றார் டான். அல்ஸ்கோனி இருந்த நிலையில் சுட்டுவிடுவான் போலத்தெரிந்தது.

''இருங்கள்'' என்று சத்தம் போட்டார் க்ராண்டர். மூன்று பேரையும் நோக்கி தன்னுடைய .45 துப்பாக்கியைக் காட்டினார் அவர்.

தன்னை நோக்கி துப்பாக்கி இருப்பதைக் கண்ட அல்ஸ் கோனிக்கு அதிர்ச்சி.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''என்னை நோக்கிக் காட்டாதே'' என்றார்.

க்ராண்டரின் முகத்தில் ஒரு புன்னகை பூத்தது.

''போலீசாரிட்ம் உன்னைப்பற்றிய வர்ணனை இருக்கிறது என்பதை நீ என்னிடம் சொல்லியிருக்கக் கூடாது. இப்போது என்னுடைய முறை, உன்னை முட்டாள் என்று அழைக்கிறேன். அவர்களுக்கு என்னைப் பற்றித்தெரியாது. அவள் இந்தப் பயணத்தில் வரப் போகிறாள், ஆனால் நீ இல்லை. என்னிடம் பணம், ஒரு படகு, ஒரு மாலுமி, நல்ல வழி எல்லாமே இருக்கின்றன. நீ...''

அல்ஸ்கோனி .38 துப்பாக்கியை எடுத்து விசையை அழுத்தினார். உதடு விரிந்து பற்களில் கோரப் புன்னகை யோடு இருந்தவருக்கு அதிர்ச்சி. துப்பாக்கியில் தோட்டா இல்லை என்பதைத் தெரிந்து கொண்டவுடன் முகம் தொங்கிவிட்டது.

க்ராண்டர் அவரை மூன்று முறை சுட்டார். யாரோ மூன்று முறை கை தட்டுவது போல சத்தம் கேட்டது. அல்ஸ்கோனியின் கால்கள் மடங்கி, இரண்டு அடி முன்னே வந்து கல் பதிந்ததரையில் விழுந்தார். அவர் கையிலிருந்த .38 துப்பாக்கியும் கீழே விழுந்தது. டானும் லோரெலியும் அசையவில்லை.

அவர்களை நோக்கி துப்பாக்கி நீட்டப்பட்டது.

''படகில் ஏறுங்கள். சீக்கிரம்'' என்றார் க்ராண்டர்.

மேடையின் எல்லைவரை சென்ற டான் படகின் மேல் தளத்தில் குதித்தார். கைகளை நீட்டி லோரெலியைக் கீழே இறக்கிக் கொண்டார்.

க்ராண்டரும் ஏறிக்கொண்டார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''இன்ஜினை ஸ்டார்ட் செய்யுங்கள்'' என்றார் க்ராண்டர்.

டான் கீழே இறங்கி படகோட்டியின் இடத்திற்குச் சென்றார்.

லோரெலி க்ராண்டரிடம் கேட்டாள். ''என்னை என்ன செய்யப்போகிறாய்? அவன் கொல்லவந்தபோது ஏன் தடுத்தாய்?''

''நாம் ஒருவருக்கொருவர் உபயோகமாக இருக்கலாம் என்று முன்பே சொல்லியிருக்கிறேன். அப்போது அது உனக்கு சரிப்பட வில்லை. மோன்டோகார்லோ வரை உனக்கு அவகாசம் தருகிறேன். நீ மனதை மாற்றிக் கொள்ளலாம். அந்தப் பையில் பதினைந்தாயிரம் பவுண்டு இருக்கிறது. அந்தப் பெட்டிகளில் கரன்சிகளாக ஒரு பொக்கிஷம் இருக்கிறது என்று நினைக்கிறேன். நாம் இருவரும் புதிய வாழ்க்கையைத் தொடங்கலாம். யோசித்துப் பார்.'' துப்பாக்கியை காட்டி ''நீ படகோட்டும் இடத்திற்குப் போகலாம். நான் இங்கே இருக்கிறேன்'' என்றார் க்ராண்டர்.

டானுடைய தலையும் தோள்களும் வெளிப்பட்டன.

''என்னால் எதையும் பார்க்க முடியவில்லை. டார்ச்லைட் இருக்கிறதா?''

க்ராண்டர் பாக்கெட்டிலிருந்து டார்ச் லைட்டை எடுத்து டானிடம் கொடுப்பதற்காகக் குனிந்தார். திடீரென்று செயல்பட்ட லோரெலி அவரைத் தள்ளி விட்டாள். நிலை தடுமாறி க்ராண்டர் முன்பக்கமாக சரிந்தார். கீழே விழும் போதே அவருடைய துப்பாக்கி வெடித்தது. தோட்டா தரையைத் துளைத்துக்கொண்டு டானுக்கு அருகே பாய்ந்தது. படகோட்டி அறைக்குள் விழுந்த க்ராண்டரை டான் தாக்கினார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

டானுடைய இடது கை க்ராண்டரின் மணிக்கட்டைப் பிடித்தது; வலது கை கழுத்தை நெரித்தது. துப்பாக்கி இருந்த கையை தரையில் ஓங்கி அடித்தார். துப்பாக்கி மீண்டும் வெடித்தது. க்ராண்டரின் விரல்களைப் பிரிந்து துப்பாக்கி தூரத்தில் விழுந்தது.

சில விநாடிகளுக்கு இருவரும் மிருகங்களைப் போல சண்டையிட்டனர். தன்னுடைய கழுத்தைப் பிடித்திருந்த கையை அகற்றி க்ராண்டர் டானுடைய முகத்தில் குத்தினார். டான் பின் பக்கமாகச் சாய்த்தார்.

க்ராண்டர் துப்பாக்கியை நோக்கி நகர்ந்தார். டான் அவர்மீது விழுந்து தாடையில் ஓங்கி அடித்தார். க்ராண்டர் தள்ளாடினார். டான் எழுந்து நின்றார், க்ராண்டர் எழுந்து நிற்க முயற்சி செய்த போது மீண்டும் ஒருமுறை கை, தாடை சந்திப்பு நடந்தது. சுவரில் தலையை மோதிக்கொண்டு க்ராண்டர் கீழே விழுந்தார்.

டான் டார்ச்லைட்டைத் தேடினார். அதை எடுத்து விளக்கைப் போட்டார். க்ராண்டரைக் கவனித்தார். க்ராண்டருக்கு பிரக்ஞை இல்லை என்றவுடன் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு விலகினார்.

''உங்களுக்குக் காயம் இல்லையே'' என்றாள் லோரெலி. சில நிமிடங்களுக்கு இவன் நம்மைத் தொந்தரவு செய்யமாட்டான். டார்ச் லைட்டை லோரெலி பக்கமாகத் திருப்பினார். அவர். ''நல்ல திறமை. உனக்கு இது பழக்கமாகிவிட்டது. இரண்டாவது முறையாக என்னைக் காப்பாற்றியிருக்கிறாய். இதைப் பிடித்துக் கொள். நான் அவனைக் கட்டுகிறேன்'' என்று சொல்லி டார்ச் லைட்டை அவளிடம் கொடுத்தார்.

அவள் டார்ச் லைட்டை வாங்கிக்கொண்டாள். டான் துப்பாக்கியை மேல் தளத்தில் வைத்துவிட்டு தன்னுடைய

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

பட்டு டையால் க்ராண்டரின் கைகளில் பின்பக்கமாகக் கட்டினார்.

லோரெலி க்ராண்டரின் துப்பாக்கியை எடுத்தாள். டான் நிமிர்ந்தபோது துப்பாக்கி அவரைப் பார்த்தபடி இருந்தது.

''என்ன செய்கிறாய்?'' என்று கேட்டார் டான்.

''நீங்களும் அவனும் இங்கிருந்து வெளியேறுங்கள்'' என்றாள் கடுமையாக.

''நீ படகை எடுத்துப் போகிறாயா?''

''ஆமாம். சீக்கிரமாய் வெளியேறுங்கள்.''

''அவசரப்படாதே. உனக்கு உதவி செய்வதாகச் சொன்னேன், நிச்சயமாகச் செய்வேன். உன்னால் இந்தப் படகை ஓட்ட முடியுமா?''

''நிச்சியமாக முடியும். டஜன் முறை ஓட்டியிருக்கிறேன். உங்கள் உதவி எனக்குத் தேவையில்லை.''

''உனக்குப் பணம் வேண்டாமா?''

''பணமா?'' அவள் சிரித்தாள். எனக்குத் தேவையான பணம் இருக்கிறது. இதற்காகத்தான் நான் காத்திருந்தேன். அவனை வெளியே எடுத்துப் போடுங்கள். நான் புறப்பட வேண்டும்''

''நல்லது'' என்ற டான் க்ராண்டரை மேல்தளத்தில் ஏற்றினார். பிறகு மேடையில் ஏறினார் அங்கிருந்து க்ராண்டரை இழுத்துக் கொண்டார். க்ராண்டரைத் தரையில் கிடத்திவிட்டு லோரெலியைக் குனிந்து பார்த்தார்.

''நிச்சயமாக இந்தப் படகை ஓட்ட முடியுமா? என்னுடைய உதவி வேண்டாமா?''

அவள் தலையாட்டினாள்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in

''வேண்டாம். இந்த மோன்டோ கார்லோ பயணத்தை நான் பலமுறை செய்திருக்கிறேன்.''

''நல்லது. நான் செய்யக்கூடியது எதுவும் இல்லையா?''

அவரை ஏறிட்டுப் பார்த்தபோது அந்த முகத்தில் கனிவு தென்பட்டது.

''வேண்டாம். நான் சமாளித்துக்கொள்வேன். எனக்கு இது புதிய திருப்பம். நாம் மீண்டும் சந்திக்கப் போவதில்லை.''

''அப்படியெல்லாம் சொல்ல முடியாது. போலீஸ் படகுகள் வருகிறதா என்று பார். இவன் விழித்துக்கொண்ட பிறகு படகு பற்றிய வர்ணனையைக் கொடுத்துவிடுவான்.''

அவள் புன்னகைத்தாள்.

''அதற்குள் நான் வெகுதூரம் போய்விடுவேன். இந்தக் கரையில் இதுதான் மிகவேகமாகச் செல்லும் படகு. அவர்களால் என்னைப் பிடிக்க முடியாது. ஸ்டார்புஸ் கைப்பிடியை அவள் அசைத்தவுடன் இரண்டு இன்ஜின்களும் உறுமின. அவள் ''நன்றி, வருகிறேன்'' என்றாள்.

''போய் வா'' என்றார் டான். இன்ஜின் சத்தத்திற்கு மேலே அவருடைய குரல் ஒலித்தது. மேடையில் படகைக் கட்டியிருந்த கயிறை அவிழ்த்து விட்டார் அவர்.

படகு நகர்ந்தது. திருப்டிலைக் கொடுத்தவுடன் வேகம் அதிகமாகி கடலை நோக்கிப் பாய்ந்தது. அதன் பின்னால் வெள்ளை நுரையோடு தண்ணீர்த் தடயங்கள்.

அவள் கையாட்டினாள், டானும் கையசைத்தார்.

இரவு நேரத்து இருளில் மறையும் வரை அவர் அந்தப் படகையே பார்த்துக் கொண்டிருந்தார்.

tamilebooks.net www.tamilnesan1981.blogspot.in